உ

சிவமயம்

# மூலவிருட்சம்



இளவாலை

மூதறிஞர்

சைவப்புலவர் சு. செல்லத்துரை

அவர்களின்

அந்தியேட்டிதின வெளியீடு

2021-11-21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மூலவிருட்சம்

இளவாலை
மூதறிஞர்

## சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின்
## அந்தியேட்டிதின வெளியீடு
## 2021.11.21

வேலவளவு,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

"புனிதவாசம்"
பத்தாவத்தை,
இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் தந்தை சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் சிவனடி சேரும் இறுதிநேரம் உதிர்த்த வார்த்தைகள்,

**"நிறைவான என் வாழ்வில் எல்லோரும்**
**நிறைவாய் என்னைப் பார்த்துக் கொண்டீர்கள்**
**மகிழ்வுடன் விடைதந்து என்னை வழியனுப்பி**
**வையுங்கள் சிவனடி சேர"**

என மைந்தர் எமை வேண்டி நின்றீர்கள். மனமுடைந்தோம், அழுது நின்றோம், தொழுது நின்றோம் எமை தேற்றி ஆறுதல் வார்த்தை கூறி வாழ்வாங்கு மகிழ்வுடனே நாம் வாழ வாழ்த்துத் தந்து உங்கள் பாதக்கமலத்தை மைந்தர் நாம் இருவரும் பற்றி நிற்க அமைதியாய் பேரின்பப் பெரு வாழ்வுக்காய் விடை பெற்றுச் சென்றீர்கள். பெறற்கரிய பெரும் பேற்றைப் பெற்றோம் நாம்.

திருமந்திரபணி செய்து நின்றதனால் திருமூலர் குரு பூசைத் தினத்தன்று சிவனடி சேர்ந்தீர்களோ.

வாக்கும் வாழ்வும் ஒன்றாய்க்கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்த எங்கள் தந்தை சிவனடி சேரும் பேரின்பப் பெரு வாழ்வைப் பெறும் வேளை உடனிருந்தோம், பணிவிடை செய்தோம், தேவார பாராயணங்கள் ஓதினோம், இறுதி யாத்திரையை நிறைவாய் செய்தோம். வரம் பெற்றோம் நாம், சென்று வாருங்கள் எங்கள் தாயுடன் சேர்ந்து விண்ணிலிருந்து எமை ஆற்றுப்படுத்துங்கள். வழியனுப்பி வணங்குகின்றோம் நாம்.

உங்கள் ஆக்கங்களை நூலாக்கி உங்கள் பாதங் களில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**உங்கள் மைந்தர்கள்**


**செல்லத்துரை நாவரசன்** **செல்லத்துரை மாவிரதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

இளவாலை வடக்கில் பிறந்து வளர்ந்து
வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்த

# சைவப்புலவர் சு. செல்லத்துரை



தாய்மடியில்
1938 – 03 – 28

சிவனடியில்
2021 – 10 – 21

## திதி வெண்பா


சீர்பிலவ ஆண்டதனில் சார்ந்தமதி ஐப்பசியில்
சேர்அபர நல்துதியை யாம்திதியே – பாரில்
புனிதவாசர் செல்லத் துரைதாம் பிரிந்தே
தனிமுதல்வன் தாளடைந்த நாள்

திதி :- ஐப்பசிமாத அபரபக்க துதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மூலவிருட்சம்




தந்தை மகற்காற்றிய பேற்றினைப் பெற்றோம்
தாயன்பால் தக்கதனைத்தும் பெற்றோம்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த எம்பெற்றோர்
உள்ளத்துள் உறைகின்ற உயர்வினைப் பெற்றோம்நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எங்கள் குலவிருட்சம் சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் வானொலிக்கு வழங்கிய மற்றும் அவரது நூல்களில் வெளிவராத நற்சிந்தனைகள், சமயச் சொற்பொழிவுகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் முற்றுப்பெறாத சில ஆக்கங் களையும் அவரே தயாரித்து வைத்திருந்த அவரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும் எடுத்துத் தொகுத்து அவரது அந்தியேட்டி தின வெளியீடாக இந்த நூலில் வழங்குகின்றோம்.

எங்கள் தந்தை ஆண்டுதோறும் எங்கள் தாயின் நினைவாய் நூல்கள் வெளியிடுவது வழமை. இவ்வாண்டு தாயின் பதினோராம் ஆண்டு நிறைவாய் 'கொறோனாப்' பெருந்தொற்றின் அவலத்தில் எல்லோரும் அல்லலுறும் வேளை துன்ப நீக்கம் பெற ஓதுதற்காய் வெளியிடுவதற்கென்று அவர் தயாரித்து வைத்திருந்த "துயர் துடைக்கும் சைவத் திருமுறைப் பதிகங்கள்" எம் தந்தையின் அந்தியேட்டிதினத்தில் அவரின் ஏனைய ஆக்கங்களுடன் இணைத்து வெளியிடுகின்றோம்.

அத்தோடு அறிஞர் பலரின் பார்வையில் சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் நினைவுப் பகிர்வையும் நிறைவாய் இணைத்துள்ளோம்.

எங்கள் தந்தை இதுவரை வெளியிடாது வைத்திருந்த ஆக்கங்கள் எல்லாவற்றையும் தொகுத்து "மூலவிருட்சம்" எனும் நூலாய் வெளியிடுகின்றோம்.

**மைந்தர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சைவப்புலவர் செல்லத்துரை ஐயா அவர்களின் எழுத்துக் களிற் பொதிந்து நிறைந்துள்ள அறிவுக்கனதியும், அனுபவச் செறிவும் அவர் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட சைவசித்தாந்த மெய்யியலின் முகிழ்ப்பிலிருந்து எழுகோலம் பெறுகின்றன.

அவரின் வானொலிப் பேச்சுக்கள் சைவ நடைமுறை வாழ்வின் இங்கிதத்தையும் சீரமியம் சார்ந்த ஆற்றுப்படுத்தலை யும் ஊடு நிகழ்த்துகை உய்ப்பு நிலைகளையும் கொண்டவை.

அறிவுக்கையளிப்பை வினைத்திறன் படுத்தும் மொழி வளம் உரிய தனித்துவத்துடன் கட்டுரைகளில் விரிவெழுச்சி யுடன் நீடு நிலைக்கின்றன. அறிவு வளமும், ஆக்கவளமும் கட்டுரைகளிலே சமநிலை கொள்கின்றன.

ஆழ்ந்த வாசிப்புடன் வாழ்ந்த அவரின் புலமை வாழ்வும், நீண்டகால ஆசிரியத்துவத்துடன் இணைந்த கற்பித்தற் கலை நுட்பங்களும் கட்டுரைப் படையலுக்குத் தனித்துவத்தைக் கொடுக்கின்றன.

கல்வி நிலையில் பயன் தருகைப் பெறுமானத்தைக் கொண்டவையாக எழுத்தாக்கங்கள் அமைந்துள்ளன. இத் தொகுதியில் உள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் அறிவு, அனு பவம், செயல் வீச்சு ஆகிய முப்பரிமாணங்களுடன் நிரல் கொள் கின்றன.

அறிவுடன் வாழும் வாழ்த்தல் நயப்பு (OPTIMISM) எழுத்துக்கள் வாயிலாக மேலெழுச்சி கொள்ளும் வாழ்வியல் தரிசனமாகின்றது. எழுத்துக்கள் நல்வழிப் பரவலுடன் இணைந்த வாழ்க்கை நடைமுறையை நோக்கிய நேர் நகர்வாய் அமைந் துள்ளன.

உயர்ந்த நோக்கும் உள்ளொளி கொண்ட வாழ்வும் கட்டுரைகளில் செம்பரவலாகப் பதிவுற்றுள்ளன.

மொழித் தெரிவும் மொழியொழுங்கும் இலக்கணப் புலமையைக் குறித்துரைத்து நிற்கின்றன. இலக்கணச் செம்மை யுடன் கட்டுரைகள் வடிவமைக்கப்பட்டிருத்தல், இலக்கண அமை தியைக் கனிச்சுவையாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் எழுத்துக்கள் தனித்துவமும் தன்னிலை முகிழ்ப் பும் (ORIGINALITY) கொண்டவையாய் இருக்கும் நிலையில் "மூலவிருட்சம்" என்ற அறிகை அடையாளம் பொருத்தமான குறியீட்டுப் படுத்தலாக இருத்தலைச் சுட்டிக்காட்ட வேண்டி யுள்ளது. வெளிவராதவற்றைத் தேடிப் பதிப்பித்து ஆவணப் படுத்திய பணி, பயன்பேறு கொண்டதாகும். சைவப்புலவர் ஐயாவின் எழுத்துக்கள் கல்விப்பேறும் உளவியற்பேறும் கொண்டவை. படிப்போர் எழுத்து வழியான தன்னியல் நிறைவை எட்டுவதற்கு அவை வழிகாட்டுபவை. எழுத்தாக்கம் வழியாக உளவியற் பலத்தைக் கொடுத்தல் அவரின் நீண்டகாலக் கற்பித்தல் அனுபவத்தின் வெளிக்கிளம்பலாயிற்று.

படிப்போரிடத்துச் சமூக ஆற்றலை வளர்த்தலும், நேர் நிலைவினைப்பாடுகளை முகிழ்த்தெழச் செய்தலும் கல்வியின் பயன் ஒழுக்கமும் செயலூக்கமும் நிறைவித்தலும் என்பவை எழுத்தாக்கங்களின் செயல் நிலைத் தூண்டல்களாகவுள்ளன.

தகவல்களைக் கோவைப்படுத்தித் தருதலோடு நின்றுவிடாது, அவற்றிலிருந்து அறிவைப் பிறப்பிக்கும் விசையையும் எழுத்தாக்கம் கொண்டுள்ளது.

மரபுவழியான ஆசிரியத்துவத்தின் அறிவுவலிமையும், ஆற்றல் பெருக்கும் நிறைந்த எழுத்துக்கள் பகிர்வுக்குரிய நூலாக்க வடிவைப் பெற்றிருப்பது சமூகப் பயனும் கல்விப் பயனும் ஒன்றிணைந்து நிறைந்த செயற்பாடாகின்றது.

தெளிவான சிந்தனையும் செறிவான கருத்துவளமும் கொண்ட அந்த எழுத்துக்கள் சமகாலத்துக் கல்வித் தேவை யையும் வாழ்க்கைநெறி வழிகாட்டல் வேண்டலையும் நிறைவு செய்கின்றன.

மீண்டெழும் எழுத்துக்கள் அவரது நினைவுகளைப் புதுப் பித்த வண்ணமுள்ளன.

**பேராசிரியர் சபா. ஜெயராசா**
**வவுனியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. சமர்ப்பணம் ii
02. வெளியீட்டுரை iii
03. அணிந்துரை iv
04. துயர் துடைக்கும் சைவத்திருமுறைப் பதிகங்கள் 01
05. இளவாலை சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் வரலாற்றுக் குறிப்பு 23
06. சைவப்புலவர் சு. செல்லத்துரையின் வானொலிப் பேச்சுக்கள்
6.1. தமிழர் வாழ்வில் மஞ்சள் பயன்பாடு 34
6.2. தமிழர் வாழ்வில் தனித்திருத்தல் 37
6.3. தமிழர் வாழ்வில் சுத்தம் பேணல் 39
6.4. தமிழர் வாழ்வில் நம்பிக்கை 41
6.5. உள்ளம் பெருங்கோயில் 43
6.6. திருநாவுக்கரசரின் திருநல்லூர்த் திருமுறை 46
6.7. திருநாவுக்கரசரின் திருவாரூர் திருத்தலயாத்திரை 55
6.8. அப்பர் சுவாமிகள் அண்ணலார் திருவடிக்கீழ் அமர்தல் 63
6.9. திருவாசகத்தில் திருவைந்தெழுத்து 70
6.10. சைவசமய குரவர்களின் சிதம்பர தரிசனம் 76
6.11. மானுட ஆக்கை வடிவு சிதம்பரம் 83
6.12. சிவனின் அட்டவீரட்டச் செயலும் உண்மைப் பொருளும் 90
6.13. புலனடக்கம் 100
6.14. உடம்பினைவளர்க்கும் உபாயம் 108
3.15. குருவருள் 113
07. சைவப்புலவர் சு. செல்லத்துரையின் கட்டுரைகள்
7.1. யாழ்ப்பாணத்தவரின் இயற்கையோடு இயைந்த வாழ்வு (ஒரு நூறு ஆண்டுக்குமுன்) 120
7.2. திருவள்ளுவர் பார்வையில் செல்வம் 126
08. சைவப்புலவர் சு. செல்லத்துரையின் ஆய்வுக்கட்டுரை
8.1. சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கு 144
09. சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் அகவை நிறைவு அமுதவிழா நினைவுப் பகிர்வு - 08-04-2018 163
10. அறிஞர் பார்வையில் சைவப்புலவர் சு. செல்லத்துரை 171




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தந்தை, எங்கள் தாயின் பதினொராம் ஆண்டின் நினைவாய் வெளியிடுவதற்கென்று தயார் செய்து நாட்டின் கொறோனாப் பெருந்தொற்றின் காரணமாக வெளியிடாமல் இருந்த துயர்துடைக்கும் சைவத் திருமுறைப் பதிகங்களை எங்கள் தந்தையின் நினைவாக அவரது அந்தியேட்டி தினத்தில் அதனை திருத்தமேதுமின்றிப் பிரசுரிக்கின்றோம்.

மைந்தர்கள்

உ
சிவமயம்

# துயர் துடைக்கும் சைவத்திருமுறைப் பதிகங்கள்

# துன்பம் நீக்கும் பதிகங்கள்

எம் வாழ்வில் எத்தகைய துன்பம் வந்தாலும் எங்கள் நாயன்மார்கள் பாடித்தந்த திருமுறைப் பாடல்களை காலை மாலை பாடிப் பணிந்து துன்ப நீக்கம் பெறலாம். இன்று உலகமெல்லாம் கொறோனோவால் அவலப்பட்டுக் கொண் டிருக்கின்ற வேளையில் எல்லாருடைய அவலமும் நீங்க வேண்டுமென காலை மாலை பாராயணம் செய்து வழிபடுவதற்குரிய பதிகங்கள் கீழே தரப்படுகின்றன. இவை அன்று மட்டுமல்ல இன்றும் என்றும் பயன்தரவல்லன.

கலாபூஷணம்,
சைவப்புலவர் சு. செல்லத்துரை
இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்களை பதிகம்

வந்த இடர் நீங்க:

01) திருஞானசம்பந்தப் பெருமான் திருநெடுங்களப் பெருமானை வணங்கி உலகத்தவருக்கு வரக்கூடிய இடர்களை நீக்க வேண்டி இடர் நீக்கிய பதிகம்.

தலம் : திருநெடுங்களம் பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

01 மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

02 கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

03 நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

04 மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பான் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்றா ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

05 பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின்றா ணிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06 விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய வாதிதேவ னடியிணையே பரவும்
நிருத்தர்கீத ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

07 கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

08 குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர்கோனை யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

09 வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனுஞ்
சூழவெங்கு நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

10 வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

11 நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலகண்டப் பதிகம்

## குளிர் சுரம் நீங்க:

02) திருஞானசம்பந்தப் பெருமான் தன் அடியார்களுடன் திருச்செங்கோட்டுப் பெருமானை வணங்கச் சென்ற போது அங்கு ஏற்பட்ட குளிர் சுரத்தைத் திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டுப் பாடி நீக்கிய பதிகம்.

தலம் : பொது பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

01 அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு ம.்.தறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

02 காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

03 முலைத்தட மூழ்கிய போகங் களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்டவிரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

04 விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

06 மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

07 * * * * * * * * * * *

08 கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும் நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

09 நாற்ற மலர்மிசை நான்முக னாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய வடியு முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

10 சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

11 பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

**வெப்பு நோய் நீங்க:**

03) திருஞானசம்பந்தப் பெருமான் திருவாலவாய்ப் பெருமானை வணங்கிப் பாடிக் கூன் பாண்டியனுடைய வெப்பு நோயை நீக்கி பாடிய பதிகம். எந்த நோய் வரினும் இதைப் பாடி நீறணிந்தால் நோய் தீரும்.

தலம் : திருவாலவாய் பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

01 மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

02 வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

03 முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

04 காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

06 அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

07 எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் திருவால வாயான் திருநீறே.

08 இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே.

09 மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே.

10 குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே.

11 ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

**கிரக தோஷம் நீங்க:**

04) திருஞானசம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசு சுவாமிகளும் திருமறைக்காட்டில் (வேதாரணியத்தில்) இருந்த போது பாண்டி நாட்டுக்கு வருமாறு மங்கையர்கரசியார் அழைக்க, திருநாவுக்கரசர் "இப்பொழுது கிரக நிலை சரியில்லை அங்குள்ள சமணர்களும் கொடியவர்கள் ஆதலால் அங்கு செல்வது நல்லதல்ல" எனக் கூறிய போது "நாளும் கோளும் அடியார்க்கு நல்லனவே" எனக் கூறி திருஞானசம்பந்தர் பாடிய பதிகம்.

தலம் : பொது பண் : பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

01 வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

02 என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

04 மதிநுதல் மங்கையோடு வடவாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

05 நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

06 வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

07 செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

08 வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

09 பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

11 தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் பெற்ற பதிகம்

**வறுமை நீங்கிச் செல்வம் செழிக்க:**

05) திருஞானசம்பந்தப் பெருமான் தந்தையாரின் யாகத்திற்கு பொன் வேண்டி திருவாவடுதுறைப் பெருமானைப் பாடிப் பொற்கிழி பெற்ற பதிகம்.

தலம் : திருவாவடுதுறை பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

01 இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

02 வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

03 நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன்அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவோஎமை யாளுமா
நீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

04 தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதிள் எரியெழ முனிந்தவனே
இதுவோஎமை யாளுமா
நீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

05 கையது வீழினுங் கழிவுறினுஞ்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை யாளுமா
நீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

06 வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் அடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமா
நீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை யொருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

08 பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

09 உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

10 பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் அடியலால் அரற்றாதென்நாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவோஎமை யாளுமா
நீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

11 அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய்
விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர்
நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூலை நோய் நீக்கிய பதிகம்

**சூலை முதலிய நோய்கள் நீக்கும் பதிகம்:**

06) திருநாவுக்கரசு நாயனார் தனக்கு ஏற்பட்ட சூலை நோய் நீங்க வேண்டி திருவதிகை வீரட்டானத்தில் பாடி நோய் நீக்கம் பெற்ற பதிகம்.

தலம் : திருவதிகை வீரட்டானம் பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

01 கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

02 நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னீர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

03 பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

04 முன்னம்மடி யேன்அறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

05 காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

06 சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவலி லாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின கம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே.

08 வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினாற்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

09 பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

10 போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் பெற்ற பதிகம்

**இழந்த கண் பார்வை பெறுவதற்கு :**

07) சுந்தரமூர்த்தி நாயனார் தான் இழந்த கண் பார்வை மீண்டும் பெறுவதற்காகத் திருவாரூர்ப் பெருமானை வணங்கிப் பாடி கண் பெற்ற பதிகம்.

தலம் : திருவாரூர் பண் : செந்துருத்தி

திருச்சிற்றம்பலம்

01 மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே

02 விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன்
விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த தில்லை
கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே

03 அன்றில் முட்டா தடையுஞ் சோலை
ஆரூ ரகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி யவைபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் முட்டாப் பாடும் அடியார்
தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால்
வாழ்ந்து போதீரே

04 துருத்தி யுறைவீர் பழனம் பதியாச்
சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர்
மனமே யெனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால்
வாழ்ந்து போதீரே

05 செந்தண் பவளந் திகழுஞ் சோலை
இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே யாமா
றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் மடியார்
தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால்
வாழ்ந்து போதீரே

06 தினைத்தாள் அன்ன செங்கால் நாரை
சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப்
புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து
தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால்
வாழ்ந்து போதீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 ஆயம் பேடை அடையுஞ் சோலை
ஆரூ ரகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா
றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே

08 கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க்
கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை
இகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீர் அடிகேள்
பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால்
வாழ்ந்து போதீரே

09 பேயோ டேனும் பிரிவொன் றின்னா
தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ
கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே

10 செருந்தி செம்பொன் மலருஞ் சோலை
இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
இடமாக் கொண்டீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை
இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால்
வாழ்ந்து போதீரே

11 காரூர் கண்டத் தெண்டோள் முக்கண்
கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே
அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர்
வாழ்ந்து போதீரே


திருச்சிற்றம்பலம்

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலவிருட்சம்
## சைவப்புலவர் சு. செல்லத்துரை
## திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்கள்




## எங்கள் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலை

# சைவப்புலவர் சு. செல்லத்துரை வரலாற்றுக் குறிப்பு

## பெற்றோர்

தந்தை : மாவிட்டபுரம் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

தாய் : இளவாலை இளையகுட்டி பத்தினிப்பிள்ளை

பிறப்பு : 1938.03.28 - 2021.10.21

வாழ்வு : "புனிதவாசம்" பத்தாவத்தை, இளவாலை.

## குடும்பம்

| | | |
|---|---|---|
| வாழ்க்கைத்துணைவி | - | இணுவில் கிழக்கு சின்னையா சிவகாமசுந்தரி (1944.03.24 - 2010.07.03) |
| மூத்த மகன் | - | நாவரசன் முன்னாள் இலண்டன் ஐ.பி.சி. ஒலிபரப்பாளர். |
| மருமகள் | - | கோண்டாவில் தவபாலசிங்கம் சுரேகா (இலண்டன்) |
| பேரர் | - | நிலான் (இலண்டன் பல்கலைக்கழக மாணவன்) |
| | - | சுகான் (இலண்டன் பல்கலைக்கழக மாணவன்) |
| இளையமகன் | - | மாவிரதன் B.A. (முகாமைத்துவ சேவை அலுவலர்) |
| மருமகள் | - | ஏழாலை குலசிங்கம் பிரகாஜினி (வணிகக்கல்வி ஆசிரியர்) |
| பேர்த்தி | - | அட்சயா (மாணவி) |
| பேர்த்தி | - | சிவஹர்சா (மாணவி) |
| பேரன் | - | அபிலோசன் (மாணவன்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வி**

- இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் (1944 - 1954)
- 1954இல் சி.ப.த.பா. (எஸ்.எஸ்.ஸி.) முதலாம் பிரிவில் சித்தி.
- பலாலி ஆசிரிய கலாசாலை (1957 - 1958) பொதுப்பயிற்சி.
- க.பொ.த. (உ/தரம்) சித்தி - 1974
- சென்னை சைவசித்தாந்த மகாசமாசம் - சைவப்புலவர் - 1963
- கொழும்பு விவேகானந்த சபை சைவசமய உயர்தகமை தேர்வு - 1968 சிறப்புப்பரிசு

**உத்தியோகம்**

| | | |
|---|---|---|
| 1955 - 1956 | - வீரகேசரிப் பத்திரிகை ஒப்பு நோக்குனர் (புறூவ் றீடர்) | |
| 1959 | - ஆசிரியர், கொழும்பு / மாளிகாவத்தை டென் ஹாம் ஆங்கிலப் பாடசாலை. | |
| 1960 - 1968 | - ஆசிரியர், மன்னார் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | |
| 1969 - 1970 | - ஆசிரியர், யா / கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் | |
| 1971 | - ஆசிரியர், யா / மகாஜனக் கல்லூரி | |
| 1971 - 1974 | - முதலாம் தரத்தலைமை ஆசிரியர் - மாங்குளம் அ.த.க. பாடசாலை. | |
| 1974 - 1982 | - மூன்றாம் தர அதிபர் | யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம். |
| 1982 - 1990 | - இரண்டாந் தர அதிபர் | |
| 1990 - 1998 | - முதலாந்தர அதிபர் | |
| 1998.03.28 | - பதவி ஓய்வு | |

**சமூக சேவைகள்**

➢ இளவாலை, காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையம்
1952 - ஸ்தாபக தலைவர் - போஷகர்

➢ தெல்லிப்பழை வடமேற்கு கிராம அபிவிருத்தி சங்கம்
1974 - 1982 - செயலாளர்

➢ தெல்லிப்பழை வடமேற்கு சமாதான நீதிச்சபை
1982 - 1990 - செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலவிருட்சம்
சைவப்புலவர் சு. செல்லத்துரை
திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின்
வம்சவிருட்சங்கள்

மூத்தமகன் செல்லத்துரை நாவரசன் குடும்பம்



இளையமகன் செல்லத்துரை மாவிரதன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ இளவாலை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம்

2009 - உபதலைவர்

**கல்வி அபிவிருத்திப் புறக்கரும சேவை**

➢ மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

1961 - 1965 - செயலாளர்

➢ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

1998 - 2001 - செயலாளர்

➢ பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அதிபர் சங்கம்

1993 - 1998 - தலைவர்

➢ தெல்லிப்பழை கல்விக் கோட்ட ஆசிரியர் இடமாற்றச்சபை

1995 - 1998 - உறுப்பினர்

**கலை இலக்கியம்**

➢ இளவாலை இளங்குமரன் கலாமன்றம் (நாடகம்)

1960 - 1970 - தலைவர்

➢ மன்னார் கலாமன்றம்

1961 - 1963 - நாடக நெறியாளர்

➢ தெல்லிப்பழை கலை இலக்கியக்களம்.

1986 - 2009 - நாடகக்குழு உறுப்பினர்,
துணைத்தலைவர், தலைவர்.

➢ கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம்

1999 - 2009 - செயலாளர்

➢ ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

2008 - 2009 - செயற்குழு உறுப்பினர்

➢ கொழும்புத் தமிழ்ச் சங்கம்

2010 - 2011 - கௌரவ ஆட்சிக்குழு உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமய சேவை**

- மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கம்
  1960 - 1968 - செயலாளர்
- அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
  1964 - 2009 - செயற்குழு உறுப்பினர், பணியமைப்பாளர், உபதலைவர், செயலாளர், தேர்வுச்செயலாளர்.
- கீரிமலை சிவநெறிக் கழகம்
  1975 - 1982 - பணி அமைப்பாளர்
- யாழ். சைவபரிபாலன சபை
  2000 - 2004 - செயற்குழு உறுப்பினர், உபதலைவர்
- நாவலர் தர்மகர்த்தா சபை
  1998 - 2006 - உறுப்பினர் ஐவரில் ஒருவர்.
- ஒல்லுடை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை
  1980 - 2009 - செயலாளர், தலைவர், போஷகர்
- அகில இலங்கைத் திருமுறை மன்றம்
  1998 - 2006 - உபதலைவர்
- ஒல்லுடை அறநெறிப்பாடசாலை
  2000 - 2006 - அதிபர்

**பரீட்சகர்**

- அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
  2005 - 2016
- யாழ். சைவபரிபாலன சபை
  1998 - 2005
- ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்
  1998 - 2021
- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
  2008 - 2021
- ஐரோப்பிய சிவநெறிக்கழகம்
  2008 - 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலாக்கம்**

- காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும் - 1969
- சித்திரத்தேரில் சிவகாமியம்மன் - இசைப்பாடல் நூல் - 1978
- கோலங்கள் ஐந்து (நாடகம் - ஆசிரியர் ஐவரில் ஒருவர்) - 1993
- வாக்கும் வாழ்வும் (வானொலிப் பேச்சுக்கள்) - 1999
- கோமாதா (பசு பற்றிய கருத்துக் களஞ்சியம்) - 1999
- ஆனந்தமாலை (ஒல்லுடை வைரவர் வழிபாட்டுப் பக்திப் பாடல்) - 1999
- மங்கல மனையறம் (நாவரசன் + சுரேகா தம்பதிகள் திருமண வெளியீடு) - 1999
- வள்ளல் ஏழூர் - சிந்துநடைக் கூத்து
- சித்திரத் தேரில் வித்தக விநாயகர் - இசைப்பாடல் நூல் - 2000
- கல்வளை அந்தாதி உரைவிளக்கம் - 2002
- மங்கலத் திருமணம் (மாவிரதன் + பிரகாஜினி தம்பதிகள் திருமண வெளியீடு) - 2007
- காரைநகர் ஆண்டிக்கேணி ஐயனார் புராண உரை - 2007
- ஆத்மவிமோசனம் (அபரக்கிரியை) - 2007
- மங்கல தரிசனம் (பூர்வக்கிரியை) - 2007
- அரங்கப்படையல் (உரை, இசை, தாளலய, சிந்துநடை, நாட்டியநாடகங்கள், வில்லிசை) - 2008
- சிவநெறி (ஐரோப்பிய சிவநெறிக்கழகத் தேர்வுப்பாடநூல்) - 2009
- அண்ணா பொன் ஏடு (அண்ணா கோப்பி நிறுவன வரலாற்று நூல்) - 2009
- ஆன்ம விடுதலை வழிபாட்டு மலர் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2010
- வாழ்வாங்கு வாழ்தல் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2011
- திருமுறை அமுதம் - 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களின் வாழ்வியலும் நூலாக்கமும் - 2011
- சிவகாமி தமிழ் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2012
- இலக்கியத் தமிழ் இன்பம் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2013
- இன்பத்தமிழ் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2014
- கலையும் வாழ்வும் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2015
- வாடாமல்லிகை - அண்ணா தொழிலகம் இணுவில் - 2015
- பத்தினித் தெய்வம் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2016
- இறந்தபின் எங்கள் நிலை - வினா விடை
- நற்சிந்தனைகள் 50 - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2017
- நற்சிந்தனைகள் 50 - ஒலிப்பேழை - சிவகாமசுந்தரி செல்லத் துரை நினைவு - 2017
- வில்லிசைப் பாடல்கள் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2018
- திருமந்திர விருந்து 1 - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2019
- மெய்கண்ட சாத்திரம் - சிவகாமசுந்தரி செல்லத்துரை நினைவு நூல் - 2020
- பண்பாட்டு கோலங்கள் ஏன் எப்படி?
- கோமாதா குலம் காப்போம்

**மலராக்கம்**


- மெய்கண்டான் பொன்மலர் (மெய்கண்டான் வித்தியாலய பொன் விழா மலர்) - 1978
- காங்கேயன் கல்வி மலர் (காங்கேயன் கல்வி வட்டார கல்வி அபிவிருத்தி மற்றும் பாடசாலைகளின் வரலாறு - மலராசிரியரில் ஒருவர்) - 1985




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவப்புலவர் பொன்மலர்
1960 - 2010


நற்சிந்தனைகள்
50
சிவகாமசுந்தரி செல்லத்துரையின்
03.07.2017
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மெய்கண்டான் பவள மலர் (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய பவள விழா மலர்) - 1998
- நகுலேஸ்வரகுரு பவளமலர் (கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் பவள விழா மலர்) - 2000
- சைவப்புலவர் சங்க வரலாறும் புலவர் வரலாறும் - 2000
- வலி. வடக்குப் பிரதேச மலர் (வலிகாமம் வடக்கு பிரதேசம் பற்றிய வள ஆய்வு மலர் மலராசிரியரில் ஒருவர்) - 2000
- சித்தாந்த ஞானக்களஞ்சியம் (பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா நினைவு மலர் - மலராசிரியர் இருவரில் ஒருவர்) - 2002
- நித்திய கல்யாணி (காடிவளை இந்து இளைஞர் ச.ச. நிலைய பொன்விழா மலர்) - 2002
- கந்த பவளமலர் (யாழ் சைவபரிபாலனசபைத் தலைவர் கலாநிதி. வ. கந்தசாமி பவள விழா மலர்) - 2005
- பார்புகழும்பதி பன்னாலை (பன்னாலை க. திருநாவுக்கரசு பவளவிழா மலர்) - 2005
- சைவநாதம் - அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் பொன்விழா மலர் - 2010

**கௌரவ பட்டங்கள்**

- "கலைஞானகேசரி" - இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் - 2002
- "கலாபூஷணம்" - இலங்கை அரசு கலாசார அமைச்சு 2003
- "சித்தாந்தச்செல்வர்" காரைநகர் வீரகத்தி விநாயக ஆலயத் தினர் (க. வைத்தீஸ்வரக்குருக்கள்)
- "சிவநெறிப்புரவலர்" - 2வது உலக சேக்கிழார் மாநாடு - இந்துசமய அமைச்சு - 2005
- "கலைச்சுடர்" வலி வடக்குப் பிரதேச கலாமன்றம்
- "சமாசச் சான்றோர் விருது" புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம், சமூக முன்னேற்றச் சங்கங்களின் சமாசம் - 2013
- "சைவப்புலவர்மணி" - இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக் கழகம் - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "முதலமைச்சர் விருது" வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. - 2017

**கல்வி வளவாளர்**

- வலிகாமம் வலய தமிழ்மொழிக் கருத்தரங்குகள்
- வலிகாமம் வலய சைவசமய பாட கருத்தரங்குகள்
- யாழ். சைவபரிபாலன சபை வடமாகாண சைவசமய ஆசிரியர் கருத்தரங்குகள்.
- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அறநெறி ஆசிரியர் கருத்தரங்குகள்
- சைவசித்தாந்த வகுப்புகள், சைவப்புலவர் தேர்வு வழிகாட்டல் வகுப்புகள் நடத்துதல்

**நடுவர்**


- கல்விப்புலம் - தமிழ்தினப் பேச்சு, கவிதை, நாடகம், கூத்து, வில்லிசை
- சைவபரிபாலனசபை - பேச்சு, கட்டுரை
- வடஇலங்கை சங்கீதசபை - நாடக கலாவித்தகர் தேர்வு

**வானலை ஒலி, ஒளி பரப்பு**

- இலங்கை வானொலி - சைவநற்சிந்தனைகள், இலக்கியச் சொற்பொழிவுகள்.
- இலங்கை நேத்திரா தொலைக்காட்சி - நேர்காணல், கருத்தாடல்
- இலண்டன் ஐ.பி.சி. வானொலி - நற்சிந்தனை, சொற்பொழிவு, கருத்தாடல்
- இலண்டன் தமிழ் வானொலி - நேர்காணல்
- இலண்டன் வெற்றோன் தொலைக்காட்சி - நேர்காணல்
- இலண்டன் தீபம் தொலைக்காட்சி - நேர்காணல், கருத்தாடல்.
- இலங்கை வானொலி - திருமந்திர விளக்கவுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திட்டமிட்ட வாழ்வியலில் பட்டங்களை விரும்பாத - எழுதாத
சட்டத்தைக் கொண்டு வாழ்ந்தாலும் இட்டமுடன் பலர் தந்த
பட்டங்கள் வீட்டினிலே இருந்ததனால் அவற்றை இங்கே
கட்டமாய் இணைத்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறப்புச் சொற்பொழிவுகள்

- ➢ இலண்டன் உலக சைவ மாநாடு
- ➢ கொழும்பு 2வது உலக சேக்கிழார் மாநாடு
- ➢ மற்றும் நூல் வெளியீட்டுரை, நயப்புரை, விமர்சனம்
- ➢ நினைவுப் பேருரைகள்
- ➢ கொழும்புத் தமிழ்ச்சங்கச் சொற்பொழிவுகள்

### சைவக்கல்விச் சேவை

- திருவாவடுதுறை ஆதினம் கொழும்பு, இணுவிலில் நடத்துகின்ற சைவசித்தாந்தப் பயிற்சிமையம், திருமுறைப் பயிற்சி மையம் என்பவற்றில் விரிவுரையாளர் 2009 தொடக்கம் இறுதிவரை
- கொழும்பு வெள்ளவத்தை கிரியாபாபாஜி ஆரண்யத்தில் திருமந்திர விரிவுரையாளர் 2011 தொடக்கம் இறுதிவரை.
- திருமந்திர விரிவுரையாளர் - திருமந்திரப்பணி மன்றம், இணுவில்.

### நாடகப் பரிசுகள்

- ➢ உரைநாடகம், இசைநாடகம், நாட்டிய நாடகம், தாளலய நாடகம், சிறுவர் நாடகம், தெருக்கூத்து, சிந்துநடைக்கூத்து, வில்லுப்பாட்டு எழுத்தாக்கம், நெறியாள்கை, நடிப்பு.
- ➢ மன்னார் மாவட்ட சிறந்த நடிகர் ஐயோ அம்மான் - மன்னார் கலாமன்றம் - 1964
- ➢ இலங்கை கலைக்கழகம் முதற்பரிசு (திறந்த போட்டி) - ஆதவனே மன்னிப்பாய்

  நெறியாள்கை (மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம்) - 1965
- ➢ இலங்கை கலைக்கழகம் இரண்டாம் பரிசு - கலையால் அழிந்த கர்வம்

  நெறியாள்கை (கீரிமலை நகுலேஸ்வர ம.வித்தியாலயம்)
- ➢ யாழ். இலக்கியவட்டம் முதற்பரிசு - கோலங்கள் ஐந்து நாடக நூல் (ஐவரில் ஒருவர்)
- ➢ இலங்கை இலக்கியப் பெருமன்றம் முதற்பரிசு - அரங்கப் படையல் நாடகநூல் - 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றி நாடகங்களுள் சில**

- மன்னார் கலாமன்றம் - சிதைந்த சிலை, ஐயோ அம்மான், பசுமைப்புரட்சி முதலியன
- மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கம் - ஆதவனே மன்னிப் பாய், தீந்தமிழ்த்தீ, தணியாத தாகம், தென்னவன் பிரமராயன் முதலியன.
- மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி - மாணவர் நாடகங்கள், வில்லிசை முதலியன.
- இளவாலை இளங்குமரன் கலாமன்றம் - கண்ணீர், மண்ணாசை, வாழ்க்கைப்புயல் முதலான 25ற்கும் மேற்பட்ட நாடகங்கள்.
- கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் - கலையால் அழிந்த கர்வம்
- ஈழத்துச் சிதம்பரம் - மணியோசை
- மகாஜனக் கல்லூரி - மாயவன் செய்த மாயம்
- ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி - இன்னல் சுமந்த அண்ணல் (பெண்கள் மட்டும்)
- இளவாலை மெய்கண்டான் ம.வி. - கர்வபங்கம், காத்தவராயன், அருச்சுனன் சிவதரிசனம் முதலான 25ற்கும் மேற்பட்ட பலவகை நாடகங்கள்
- கொழும்பு மகளீர் கல்லூரி - சகுந்தலை, கைகேயி, தமயந்தி, அருச்சுனன் தவம்
  (மாணவிகள் மட்டும்) 2008

**கலைத்திறன்**

- நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்கள் மற்றும் கலைப் படைப்புகள்
- ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள்.
- கவியரங்கம், பட்டிமண்டபம், கருத்தரங்கம், மேடைப் பேச்சு, சமயச் சொற்பொழிவுகள்.
- பல்வகைக் கவிதை ஆக்கம்

**வெளிநாட்டுப் பயணங்கள்**

- 1964 தமிழ்நாடு சிதம்பரத்தில் நடைபெற்ற சென்னை சைவ சித்தாந்த மகாசமாச வைரவிழாவில் கலந்து கொண்டு சமய தீட்சையும் பெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1998 யூன் - சிங்கப்பூர் மகன் நாவரசன் திருமணப்பதிவு (1998.06.01) சிங்கப்பூர் சுற்றுலா.
- 2001 தமிழ்நாடு - தென்னிந்திய யாத்திரை, திருப்பதி, புட்டபத்தி தரிசனம்.
- 2004 மே - இலண்டன் சுற்றுலா - இலண்டன் சைவமாநாடு முதலான 24 நிகழ்ச்சிகளில் பங்குகொண்டமை.
- 2005 ஓகஸ்ட் - தமிழ்நாடு - விழாக்களில் கலந்து கொண்டமை.
- 2011 - நவம்பர் - இலண்டன் பயணம்.
- 2012 - தென்னிந்தியத் திருத்தல யாத்திரை
- 2013 - தென்னிந்தியத் திருத்தல யாத்திரை
- 2014 - இந்திய சிவத்தல யாத்திரைப் பயணம்
- 2015 - இந்திய சிவத்தல யாத்திரைப் பயணம்
- 2016 - இந்திய சிவத்தல யாத்திரைப் பயணம்
- 2017 - வட இந்திய திருத்தல, காசித் தீர்த்த யாத்திரை
- 2018 - மலேசிய திருத்தல யாத்திரைப் பயணம்.

✪ ✪ ✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் மஞ்சள் பயன்பாடு

❖ இப்பொழுது கொறோனா என்னும் கொடிய வைரஸ் நோய்த் தொற்று என்றுமில்லாதவாறு மனிதகுலத்தைக் கதிகலங்க வைக்கிறது.

❖ இந்தக் கொடிய கொறோனாத் தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்குச் சுகாதாரத்துறை சார்ந்த அறிஞர்கள் பல வழிமுறைகளை அவசர அவசரமாக அறிவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

❖ அவற்றுள் தனிமைப்படுத்தல், மஞ்சள் முதலான கிருமி நாசினிப் பயன்பாடு, கைகழுவுதல், சுத்தமாயிருத்தல், மக்கள் கூடும் இடங்களில் சமூக இடைவெளி பேணுதல், முகக்கவசம் அணிந்து செல்லல் முதலான நடைமுறை களைக் கட்டாயமாகக் கடைப்பிடித்தல் வேண்டுமெனச் சொல்லப்படுகிறது.

❖ நம்மைப் பாதுகாப்பதற்காகவும், நம்மைச் சார்ந்தவர்களைப் பாதுகாப்பதற்காகவும் நாம் ஒவ்வொருவரும் இதனை அலட்சியப்படுத்தாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

## மஞ்சள் பயன்பாடு

தமிழர்களாகிய சிறப்பாகச் சைவர்களாகிய நம் முன்னோர் வாழ்வில் இவை அன்றாடப் பழக்க வழக்கங்களாகவே இருந்து வந்துள்ளன. அந்நிய நாடுகளிலிருந்து வந்த நவநாகரிகப் பழக்கங்கள் என்ற பெயரால் நாம் இவற்றைக் கைவிட்டு விட்டதால் வந்த அவலம் இது எனலாம். நம்மவர் எதைச் செய்தாலும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், சுத்தம் சுகம் தரும் என்பதைக் கருதிச் செய்தார்கள். நம் வாழ்வில் மஞ்சள் பயன்பாடு மற்றும் பசும் சாணம், வேப்பிலை, மாவிலை, அறுகு, வாழையிலை என்பன அன்றாடப் பாவனையில் இருந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக மஞ்சள் எங்கள் புறச் சுத்தத்துக்கும் உணவுடன் கலந்த சுகவாழ்வுக்கும் இணைபிரியாததாக இருந்துள்ளது. மஞ்சள் புறச் சுத்தத்தைப் பேணும் கிருமி நாசினியாகப் பயன்படுத்தப்பட்டது. இப்போதுள்ள நிலைபோல் பலநூறு ரூபா கொடுத்து வாங்கும் சந்தைப் பொருளாக அன்றி வீட்டுத் தோட்டத்தில் விளையும் பயிராகவே இருந்துள்ளது. தோட்டத்தில் விளைந்துள்ள மஞ்சள் கிழங்கைப் பிடுங்கி வந்து அரைத்து நீருடன் கலந்து வீட்டுக்கும் முற்றத்துக்கும் வேப்பிலைக் கத்தையால் தெளிக்கும் வழக்கம் இருந்துள்ளது. மஞ்சளும் கிருமிநாசினி, வேப்பிலையும் கிருமிநாசினி.

வெள்ளி, செவ்வாய், விரதநாட்களிலும், வீட்டில் பலர் வந்து கூடுகின்ற மங்கல விழாக்காலங்களிலும் மஞ்சள் நீர் தெளித்தல் வழக்கம். அத்துடன் வீட்டில் யாராவது நோயுற்றிருக்கும் காலத்திலும் தினமும் மஞ்சள் நீர் தெளிப்பார்கள். இதன்மூலம் கிருமிகளை அழிக்கவும், மேலும் தொற்றாமலும் இருக்க முடிந்தது.

- ❖ மஞ்சள் மங்கலப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. பூசைக்குரிய தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றை மஞ்சள் நீரில் கழுவுதல் வழக்கமாயிருந்தது. இன்றும் திருமணவீட்டில் உடைக்கப்படும் தேங்காய்க்கு மஞ்சள் பூசுதலும், தாலிக்கயிற்றுக்கு மஞ்சள் பூசுதலும் நடைமுறையில் இருக்கிறது.
- ❖ இப்பொழுது பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் தாலிக்குப் பதிலாக பண்டைக் காலத்தில் தாலிக்கயிற்றில் மஞ்சள் துண்டைத் தொடுத்துக் கட்டும் வழக்கம் இருந்துள்ளது.
- ❖ சித்திரை வருடப்பிறப்பு முதலான மங்கல நாட்களில் முற்றத்தில் பொங்கும்போது பொங்கற்பானைக்கு மஞ்சள் இலை, மாவிலை கட்டல், வேண்டியவர்களுக்குக் கைவிசேசம் கொடுக்கும்போது வெற்றிலையில் பாக்கு, நெல், பூ, திருநீறு என்பவற்றுடன் மஞ்சள் துண்டும் வைத்துப் பணத்துடன் கொடுக்கும் வழக்கம் இன்றும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பெண்கள், சிறுவர்கள் மஞ்சளை அரைத்து முகத்திற்கும், கைகால்களுக்கும் பூசிக் குறிப்பிட்ட நேரம் ஊறவிட்டு நீராடும் வழக்கம் இன்றும் இருக்கிறது. உடல் அழகாயிருப்பதற்கும், கிருமித் தொற்றின்றித் தோல் தூய்மையுடன் மென்மை தருவதற்கும் இது உதவியாகிறது.

❖ மஞ்சள் மா - உணவு, கறி சமைக்கும் போது பயன்படுத்தப் படுகிறது. பிரதானமாகச் சொதிக்கு மஞ்சள்மா பயன் படுத்தப் படும் போது அது உண்ணும் உணவுடன் கலந்து உடலுள் சமிபாட்டு உறுப்புகளுக்குச் சென்று உடலின் உள்ளே தொற்று நீக்கியாகவும், சமிபாட்டுக்கு உதவியாகவும் பயன்படுகிறது.

❖ நம்மவர்கள் எதைச் செய்தாலும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உட்பொருளாகக் கொண்டே செய்தார்கள். அவற்றைக் கைவிட்டோம் அவலப் படுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் தனித்திருத்தல்

❖ கொறோனாத் தொற்றிலிருந்து நம்மைக் காக்கத் தனிமைப் படுத்தல், சமூக இடைவெளி பேணுதல் முக்கியமாக்கப் பட்டுள்ளது.

❖ நம் முன்னோர் தனிமைப்படுத்தலைக் கைக்கொண்டு வந்துள்ளனர். சாதாரணமாக ஒருவருக்குப் பக்கத்தில் இருக்கும்போது மற்றவரில் முட்டாமல் இருத்தல் நல்ல பழக்கமாக இருந்துள்ளது.

❖ அம்மை, பொக்குளிப்பான் முதலான நோய்கள் வந்தால் அவரை வீட்டில் தனி இடத்தில் வைத்திருத்தலும், அவருடன் மற்றவர்கள் பழகாதிருத்தலும் வழக்கம். வீட்டு வாசலில் வேப்பம் இலை கட்டுதல், அவருடைய படுக்கையில் வேப்பிலை பரவிப் படுக்க வைத்தல், மஞ்சள் நீரால் சுற்றாடல்களைக் கழுவுதல், தனியான பாத்திரங்களில் உணவளித்தல், குறிப்பிட்ட நாள்வரை அவர் வெளியில் வரா திருத்தல், அவர் பயன்படுத்தும் மலசலகூடத்தை உடனுக் குடன் கிருமிநாசினியிட்டுக் கழுவுதல், அவரை எவரும் எதிர்கொள்ளாதிருத்தல், வருத்தம் பார்க்கவென யாரும் வராதிருத்தல், அவருக்கெனப் பொருத்தமான மென்மையான உணவு தயாரித்துக் கொடுத்தல் முதலான வழிகளில் அவரைத் தனிமைப்படுத்தி வைக்கும் வழக்கம் இருந்தது.

❖ சாதாரண நோய்கள் வந்தபோதும் அவரை வீட்டில் தனிமைப்படுத்தி வைத்திருந்தே பராமரிக்கும் பழக்கம் இருந்தது.

❖ பெண்களின் மாதவிலக்குக் காலங்களில் அவர்களுடைய கர்ப்பப்பையிலிருந்து வெளியேறும் கழிவுத்திரவத்தில் அழுக்குக் கிருமிகள் மற்றவர்களைப் பாதிக்காவண்ணம் நான்கு நாட்கள் தனிமைப்படுத்தி வைக்கும் வழக்கம் இருந்துள்ளது.

❖ பொதுவாக துடக்குக் காத்தல் எனும் வழக்கம் இருந்துள்ளது. துடக்கு எனப்படுவது ஆசுசியமான உணர்வுடன் கூடிய தூய்மையின்மை எனப்படும். துடக்குக்கு உள்ளானவர்கள் குறிப்பிட்ட காலம்வரை சமூகத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து பழகாமல் தனித்திருக்கும் வழக்கம் இருந்துள்ளது. அதிகம் மக்கள் கூடுகின்ற கோயில்கள், விழாக்களுக்குப் போகாமல் தனித்திருக்கும் வழக்கமும் உள்ளது. துடக்கு என்பது முட்டாள்தனமான எண்ணம் எனும் உண்மை அறியாத செயல்களால் அவதிப்படுகின்றோம்.

❖ கொறோனா காலத்தில் வெளியே போகும்போதும், மீண்டும் வரும்போதும் கைகழுவுதல் வேண்டும். வெளியே போய் வந்தவுடன் உடைகளைத் தோய்த்து நீராடுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

❖ நம்மவர் வாழ்வில் செத்தவீட்டுக்குப் போய்வந்தபோதும், வைத்தியசாலைக்குப் போய்வந்தபோதும், அதிகம் மக்கள் கூடும் சந்தை முதலான இடங்களுக்குப் போய்வந்தபோதும் உடைகளைத் தோய்த்து நீராடித் தூய்மையான உடை அணிந்தே வீட்டினுள் செல்லும் வழக்கம் இருந்தது. இப்படியான வேளைகளில் கிணற்று வாளியில் தொடாமல் இன்னொருவர் அள்ளிக் கொடுக்கவே நீராடும் வழக்கம் உண்டு. இதெல்லாம் சுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட வழக்கங்கள் ஆகும். பலர் கூடும் இடங்களில் பலர் பலவிதமான நோயுடையவர்களாக நோய்காவிகளாக இருக்கக்கூடும். அவர்களிலிருந்து நம்மைக் காக்கவே - சுத்தம் பேணவே இந்த நற்பழக்கம் கடைப்பிடிக்கப் படுகின்றது.

❖ கொறோனாவின் பயத்தால் இந்த நற்பழக்கங்கள் புதுப்பிக்கப்படுவது வரவேற்கத்தக்கதே.

❖ "மூத்தோர் சொன்ன வார்த்தை அமுதம்" என்ற பொன் மொழியை மதித்து அவர்கள் வாழ்ந்து காட்டிய வழியில் வாழ்வோமானால் இன்றைய உலகின் பல அவலங்களைத் தவிர்த்து நலமாக வாழலாம்.

❖ நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதன் உட்பொருளை நன்குணர்ந்து நம் அன்றாட செயல்கள் அத்தனையிலும் நோய் அணுகா நடைமுறைகளைப் பேணி வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் சுத்தம் பேணல்

❖ "பக்திக்கடுத்தது பரிசுத்தம்" என்பது பழமொழி - இதன் பொருள் பக்திக்கு அடுத்தது என்றால் பக்திக்குப் பின் என்பதல்ல பக்திக்கு வேண்டியது பரிசுத்தம் என்பதாகும். பரிசுத்தம் உள்ள இடத்தில்த்தான் பக்திநிலை பெற வேண்டும். அதனால்தான் வழிபடும் இடமான கோயிலைச் சுத்தமாக வைத்திருக்கின்றோம். வீடுகூடக் கோயில்போல இருக்க வேண்டும் என்பார்கள்.

❖ கோயிலுக்குப் போகும்போது நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து செல்ல வேண்டும் என்பது விதி - இதில் முழுக்க முழுக்கச் சுத்தம் பேணுவதே முதன்மையாகிறது - சுத்தமான நிலையில்தான் மனதில் பக்தி உண்டாகும் என்பதைச் சொல்லாமலே தெரியும்.

❖ பூசைச் சாமான்களைக் கழுவிக் கொண்டுபோய் பயன் படுத்தும் வழக்கம் - பூக்களைக் கூடக் கழுவிக் கொடுத்தல் - கோயிலின் உள்ளே செல்லும்போது கால்கை கழுவிச் செல்லுதல் - வாய் கொப்பளித்துவிட்டுச் செல்லுதல் என்பதெல்லாம் சுத்தம் பேணுதலின் அடிப்படைப் பழக்கங் களே.

❖ கோயில் கூட்டுதல், கழுவுதல், மெழுகுதல் எல்லாம் சரியை வழிபாடுகளாகவே கைக்கொள்ளப்படுகின்றன. இதனை அப்பர் சுவாமிகள்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி

வணங்க வேண்டும் என்கின்றார். புலர்வதன் முன் என்றால் அதிகாலையில் என்பது பொருள். அலகிடுதல் என்றால் கூட்டுதல், மெழுகிடுதல் என்றால் கழுவுதல், பூமாலை புனைந்தேத்தி என்றால் பூக்களைப் பறித்துத் தூய்மைப் படுத்தி மாலை தொடுத்துக் கொடுத்து வணங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பூசையில் பயன்படுத்தப்படும் பன்னீர், சந்தனம், ஊதுபத்தி, சாம்பிராணி முதலான நறுமணப் பொருட்கள் எல்லாம் சுத்தம் பேணுதலையே அடிப்படையாகக் கொண்டன.

பலர் கூடும் இடத்தில் பலருடைய மூச்சுக் காற்று, வியர்வை என்பன மூலம் வரும் அழுக்குகளை, துர்நாற்றங்களை எல்லாம் தூய்மைப்படுத்தி மக்களின் மனங்களைக் குதூகலப்படுத்தி பக்தி உணர்வை உண்டாக்கப் பூசைப் பொருட்களின் நறுமணம் உபகாரமாக அமையும்.?

❖ பூசைக்கு முன் கோயிலைச் சுத்தமாக்குவது போலப் பூசைக்குப் பின்னும் சுத்தமாக்கும் வழக்கமும் இதற்கானதே. சுத்தமான இடத்தில்தான் சுகம் இருக்கும் என்பதே இதன் பொருள் ஆகும்.

❖ கோயிலுக்குள்ளே போனதும் ஒருவித நறுமணம் எம் மனதைக் கவர்ந்து குதூகலப்படுத்தும், கோயிலுக்குள்ளே ஆண்கள் உடல் முழுவதும் நிலத்தில் படும்படி அட்டாங்க நமஸ்காரம் செய்வதும், பிரதிஷ்டை செய்து வீதியில் உருண்டு வணங்குவதும் கோயிலின் தூய்மையால்தான் செய்ய முடிகிறது. பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்வதும் அடிஅழித்து வணங்குவதும் கூட கோயில் சுத்தத்தில்தான் தங்கியுள்ளது.

❖ கோயில் சுற்றுப்புறம் எல்லாம் சுத்தமாய் இருத்தலால்தான் கோயில் கிணற்று நீர் சுத்தமாய் இருக்கிறது. பக்கத்து வளவுகளுக்குள் இருக்கும் கிணறுகள் உவர்ப்பாயிருந் தாலும் கோயிற்கிணறுகள் தூய நீராயிருப்பதும் - கோயில் கிணற்று நீர் தீர்த்தமாகித் தீராநோய் தீர்க்கும் மருந்தாக இருப்பதற்கும் காரணம் தூய்மையே. உடல் உளத் தூய்மையுடன் தூய பக்தியுடன் கடவுளை வணங்குவதால் கடவுளுக்கு வார்த்த தீர்த்தமும், படைத்த பிரசாதமுமே உடல் உளப் பிணி தீர்க்கும் மருந்தாக மாறிவிடுகின்றன.

எனவே கொறோனாவை விரட்டுவதற்கும், தூய்மை பேணுதலும், மன அமைதி பேணுதலும், பயம் இன்மையும் இன்றியமையாதனவாகின்றன.

வீட்டிலிருந்து புறப்படும்போதும், வெளியில் செல்லும் இடங்களிலும் கைகழுவ வேண்டும் என்பது சுத்தம் பேண வேண்டும் என்பதேயாகும். நம் முன்னோர் வாழ்வுமுறையை நினைந்து நாமும் வாழ்வோமானால் கொறோனா என்ற பேச்சுக்கே இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் நம்பிக்கை

"நம்பினோர் கெடுவதில்லை, நான்கு மறைத்தீர்ப்பு"

என்பது மகாகவி பாரதியாரின் சத்தியவாக்கு.

எங்கள் வாழ்வுக்கு மூலாதாரமாயிருப்பது நம்பிக்கை யேயாகும். நாளைக்கும் நான் இருப்பேன் என்ற நம்பிக்கைதான் இன்றைக்கு என்னை வாழ வைத்திருக்கிறது. நாளையில் நம்பிக்கை இல்லையானால் வாழும் நாள் எல்லாம் துன்பியலா கவே போய்விடும்.

எங்கள் உடலுக்கும், உள்ளத்திற்கும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத தொடர்புண்டு. உடலுக்கு ஒரு ஊறு வந்தால் உளமாகிய மனம் தளர்ந்து வேதனைப்படுகிறது. மனதுக்கு ஒரு துன்பம் வந்தால் உடல் தளர்ந்து விடுகிறது. இதில் உள்ளமாகிய மனதுக்குத்தான் அதிக சக்தி உள்ளது. மனம் உறுதியாயிருந்தால் உடலுக்கு ஊறு வந்தாலும் மனம் தாங்கிக் கொள்ளும். உடலுக்கு வரும் தாக்கத்தால் உண்மையில் துன்பப்படுவது மனம்தான். மனம் உறுதியாய் இருந்தால் உடல் துன்பம் தெரியாது.

- ❖ கோயிலில் தீக்குளிப்பவன் இந்தத் தீ எனக்குச் சுடாது என்ற மனத்திடசங்கற்பத்துடன் தீக்குள் நடக்கின்றான். அது சுடவில்லை. சுட்டுப்போடுமே என்று அஞ்சுபவனுக்கு அது சுட்டுவிடும்.
- ❖ பனிக்கால இரவிலே நீராடினால் குளிரும். வீட்டுக்குள்ளேயே குளிருக்குப் போர்த்துக்கொண்டு படுப்போம். மார்கழி மாதத் திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து குளிராது என்ற துணிவுடன் நீராடும்போது குளிர்வதில்லை. காரணம் மனதின் நம்பிக்கைதான்.
- ❖ அதனால்தான் உளவியல் அறிஞர்கள் உள்ளத்தை வளமாக உறுதியாக வைத்துக்கொண்டால் ஒரு துன்பமும் எம்மை அணுகாது என்று கூறி உளவளப் பயிற்சிகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகின்றார்கள். உளவளம் உள்ளவர்களை எந்தத் துன்பமும் அணுகுவதில்லை. என்னால் முடியும் என்ற நம்பிக்கையுடன் எதைச் செய்தாலும் வெற்றி கிடைக்கும். உதாரணமாக முனிவர்கள் காட்டில் தன்னந்தனியே வெயிலிலும், மழையிலும், பனியிலும் பல்லாண்டு காலம் இருந்து தவம் செய்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நோயும் வருவதில்லை. எந்தக் கொடிய விலங்குகளும் அவர்களை அணுகுவதில்லை. விடம் கூட அவர்கள் உடம்பில் ஏறுவதில்லை. காரணம் மன உறுதி ஒன்றேதான்.

"மந்திரமும், தேவும் மருந்தும் குருவருளும்

மெய்யென்னில் மெய் பொய்யென்னில் பொய்"

என்பது பெரியோர் வாக்கு.

மந்திரத்தை நம்பினால்தான் அது சித்திக்கும். தெய்வத்தை நம்பிக்கையுடன் வழிபட்டால்தான் அருள் கிடைக்கும். மருந்தினையும் நோய் மாற்றும் என்ற நம்பிக்கையுடன் பாவித்தால்தான் நோய் மாறும். குருவினுடைய அருளும் குருவைப் போற்றினால்தான் சித்திக்கும். நம்பிக்கை இல்லையென்றால் மந்திரமோ, மருந்தோ, தெய்வமோ, குருவோ பயன் தரமாட்டா.

✪ ✪ ✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பெருங்கோயில்

எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளின் துணைகொண்டு திருமந்திரம் தந்த திருமூலர் சுவாமிகளின் திருவடிகளை வணங்குகின்றேன்.

சைவப் பெரியோர்களே! தங்களுக்கு என் அன்பு வணக்கம். இங்கு திருமூலர் திருமந்திர வாக்காகிய **"உள்ளம் பெருங் கோயில்"** என்பது பற்றிச் சிறிது பேச முன்வந்துள்ளேன்.

திருமூலர் சுவாமிகள் தந்த திவ்விய வாக்காகிய தமிழ் மந்திரமாம் திருமந்திரத்தில்,

**உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாயில்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே** (1823)

எனப் பாடுகின்றார். இது மந்திர வாக்கு ஆகும்.

எங்கும் நிறைந்தவராய், எல்லாம் வல்லவராய், எல்லாம் அறிபவராய் உள்ளவர் இறைவன். அவரைக் கடவுள் என்றும் சொல்வோம். எங்கள் உள்ளத்தைக் கடந்தவராயும், எங்கள் உள்ளத்தின் உள்ளே உள்ளவராயும் இருப்பதால் கட, உள் எனப் பெரியோர் சொல்லிவைத்தனர்.

கோயில் எனப்படுவது தலைவன் இருக்கும் இல்லம். ஆலயம் என்பது ஆ எனப்படும் உயிர் இறைவனுடன் லயப்படும் இணையும் இடம். இரண்டும் வெளிப்பார்வைக்கு ஒன்றுதான். திருமூலர் மந்திரத்தில் கோயிலைப் பெருங்கோயில் என்கின்றார். இதன் பொருள் கோயிலினுள்ளே இருக்கும் கருவறையாகிய மூலஸ்தானம் என்பதாகும். ஆலயம் எனப்படுவது மண்டபங்கள், வீதிகளுடன் கூடிய முழுக் கோயிலுமாகும்.

ஆதலால் எங்கள் முழு உடம்பு ஆலயம், உடம்பின் உள்ளே இருக்கும் உள்ளம் ஆகிய மனம் பெருங்கோயில் எனச் சொல்லப்படுகிறது. ஆகவே எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை நாம் எமது உடம்புக்குள் வைத்து மனதால் நினைந்து வழிபடவேண்டும் என்பதே திருமூலர் சுவாமிகளின் மந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு. எங்கள் உடம்பையும் மனதையும் கோயில் போலத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இங்கேயே இறைவனைக் கண்டு வழிபட வேண்டும்.

எங்கள் மனம்தான் கருவறை, உடம்புதான் முழுக்கோயில். கோயிலுக்கு உள்ளே செல்லும் கோபுரவாசல்தான் வாய், உடம்பின் உள்ளே இருக்கும் உயிர்தான் தெளிவாக அறிந்தவர்களுக்கு சிவலிங்கம். உடம்பினுள்ளே இருக்கும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து புலன்களும் தான் சிவ ஒளியைத் தரும் தூண்டாமணி விளக்குகள். எனவே எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை எங்கள் உடம்புக்குள்ளே மனதில் வைத்துப் புலன்களால் போற்றி வணங்க வேண்டும்.

இதனையே திருநாவுக்கரசு நாயனார் தனது திருவங்க மாலையில்

**"கண்காள் காண்மின்களோ,**

**வாயே வாழ்த்து கண்டாய்,**

**செவிகாள் கேண்மின்களோ,**

**நெஞ்சே நீ நினையாய்,**

**கைகாள் கூப்பித் தொழீர்"**

எனப் பாடுகின்றார். இவ்விதம் மனதுள் வைத்து வணங்கினால் இறைவனைக் காணலாம் என்பதை

**"தேடிக் கண்டுகொண்டேன் தேடொணாத் தேவனை**
**என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்"**

என்று தன் அனுபவத்தினையும் சொல்லக் காண்கின்றோம்.

இதே திருமந்திர வாக்கின் பொருளைத் தாயுமான சுவாமிகள் **"நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பு மஞ்சன நீர், பூசை கொள்ள வாராய் பராபரமே"** என்று இறைவனை அழைக்கின்றார். "என் மனம்தான் கோயில், என் நினைவுதான் சுகந்த தூபம், என் அன்புதான் அபிஷேக மஞ்சன நீர். நான் உனக்கு என் மனத்துள்ளே பூசை செய்வதற்குப் பராபரனே, இறைவனே எழுந்தருளி வா" என்று அழைப்பதைப் பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் சுவாமிகள் இறைவனை எங்கள் மனக்கோயிலில் எழுந்தருளச் செய்வதற்கு உபாயமும் கூறுகின்றார். அது **"சிவபெருமான் என்று பாடுமின், பாடிப்பணிமின், பணிந்தபின் கூடிய உள்ளத்தைக் கோயிலாக் கொள்வனே" என்பதாகும். "உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன், உடம்பினை இருந்து ஓம்புகின்றேன்"** என்பதும் மந்திரவாக்கு ஆகும்.

ஞானியர்கள், நாயன்மார்கள் எல்லாருமே **உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டவர்கள்தான்.**

தித்திக்கும் தேன்தமிழில் திருவாசகம் தந்த மாணிக்க வாசகர் **"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க"** என்றும் **"சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்"** என்றும் பலவாறு போற்றிப் பாடுவதைக் காண்கின்றோம்.

ஆதலால் எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை எங்கள் உடம்புக்குள்ளே, எங்கள் மனதுள் வைத்துப் பூசனை புரிந்து வழிபட்டு இறையருள் பெறுவோம்.

வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசரின்
# திருநல்லூர்த் திருமுறை

திருநாவுக்கரசு நாயனாரின் திருமுறைப் பதிகங்களினூடாக எங்கள் சைவசமய சாரமாகிய உண்மைகளை அறிவோம். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் திருநாவுக்கரசு நாயனாரின் பதிகங்கள் நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நான்காம் திருமுறையில் பண்சுமந்த பாடற்பதிகங்களாக 113 பதிகங்கள் உள. இவை கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, இந்தளம், சீகாமரம், குறிஞ்சி, காந்தார பஞ்சமம், பழம்தக்கராகம், பழம்பஞ்சுரம், திருநேரிசை, திருவிருத்தம் ஆகிய பண்களில் அமைந்துள்ளன.

ஐந்தாம் திருமுறை முழுவதும் திருக்குறுந்தொகை, தனித் திருக்குறுந்தொகை என 100 பதிகங்களாக அமைந்துள்ளன.

ஆறாம் திருமுறை 99 பதிகங்கள் முழுவதும் திருத்தாண்டகமாக உள்ளன. தமிழ் இலக்கியப் பரப்பில் திருத்தாண்டகம் எனும் செய்யுள் யாப்பு திருநாவுக்கரசு நாயனாராலேயே முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்டது என அறிஞர்கள் கூறுவர். இவையும் பெரியதிருத்தாண்டகம், புக்க திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம், திருவடித் திருத் தாண்டகம் முதலாகிய எட்டு வகைத் திருத்தாண்டகங்களாக உள்ளன. கடந்த தலைமுறை காலத்தில் ஆலயங்களில் தேவாரம் பாடும்போது திருத்தாண்டகத்தையே பாடும் வழக்கம் இருந்துள்ளது. உள்ளத்தை நெகிழவைக்கும் பண்ணமைந்த பாடல்களாக இருப்பதால் கேட்பவர்க்குப் பக்திப் பிரவாகத்தை உண்டு பண்ண வல்லனவாக இவை அமைந்திருப்பதே இதற்குக் காரணம் எனலாம்.

திருநாவுக்கரசு நாயனாரின் திருமுறைகளினூடாகப் பாடல்களின் பொருட்சிறப்பையும், பாடப்பட்ட தலங்களின் மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்களையும் பதிகங்கள் பாடப்பெற்ற வரலாற்றையும் அங்கு நடந்த அற்புதங்களையும் அறியலாம். அதனூடே எங்கள் சைவசமய சாரமாகிய உண்மைகளையும் உணர்ந்து பாடிப் பரவிப் பயன்பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநல்லூரிலே திருநாவுக்கரசருக்குத் திருவடி தீட்சை கொடுக்கப் பட்டபோது அவர் பாடிய திருநல்லூர் திருத் தாண்டகத்தை எடுத்துக்கொள்வோம்.

வேளாள குலத்தில் பிறந்து மருள்நீக்கியார் என்னும் இயற்பெயருடன் வளர்ந்து, சமணசமயத்தில் சேர்ந்து தருமசேனர் எனும் பட்டத்துடன் சமணகுருவாக இருந்த இவரை இவரின் அக்கா திலகவதியாரின் திருத்தொண்டின் மகிமையால், அவரின் வேண்டுதலுக்கிணங்கிய சிவபெருமான் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டார். அக்கா திலகவதியார் திருநீற்றுக் காப்பிட்டுத் திருவதிகை வீரட்டானப் பெருமானை வணங்க வைத்தார். சூலையின் கொடுமை தாங்காது வருந்தியவர் **"கூற்றாயினவாறு விலக்ககிலீர்"** எனும் பதிகம் பாட சிவபெருமான் **"இவன் முன்னமே முனியாகி எனையடையத் தவமிருந்தான்"** என இரங்கி சூலைநோயைப் போக்கித் **"திருநாவுக்கு அரசர்"** எனும் திருநாமமும் கொடுத்து அருள் புரிந்தார்.

அன்றுமுதல் சிவாலயந்தோறும் சென்று சரியை வழிபாடாகிய உழவாரத் தொண்டு செய்து பெருமானைப் பாடும் பணியையே பணியாகக் கொண்டார். சமண சமயத்தில் இருந்ததால் தன் உடல் மாசு நீக்க வேண்டித் திருத்தூங்கானை மாடம் சென்று

**பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்**
**என்னாவி காப்பாற் கிச்சை யுண்டேல் இருங்கூற்றகல**
**மின்னாரும் மூவிலைச்சூலம் என்மேற் பொறிமேவு கொண்டல்**
**துன்னார் கடந்தையுன் தூங்கானை மாடச்சுடர்க் கொழுந்தே**

என விண்ணப்பித்தார்.

புறச்சமயமாகிய பொய்மையே நிறைந்த சமணக் குழியில் வீழ்ந்து மாசுண்ட இந்த அழுக்குடலோடு வாழேன். தூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தே, பெருமானே என்னுடலில் உன் மூவிலைச் சூலத்தைப் பொறித்தருள வேண்டும் எனப் பாடிப் பணிந்தார். சிவனருளால் ஒரு சிவபூதம் வந்து அவர் மேனியில் சூல இடபக் குறிகளைப் பொறித்துச் சென்றது. அன்றுமுதல் உடலும் உள்ளமும் தூயவராகித் தொண்டு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலிலே சூலமும் இடபமும் பொறிக்கப்பட்டதால் உடலும் உள்ளமும் தூய்மை பெற்றவரான திருநாவுக்கரசர் சிவபெருமானிடம் திருவடித் தீட்சை பெற்று எனது உயிரையும் தூய்மையாக்கிக்கொள்ள வேண்டும் எனும் தவிப்புடன் ஆலயந்தோறும் தொண்டு செய்து வந்தார். உள்ளம் உருகத் திருத்தாண்டகங்களைப் பாடிப் பரவசராகித் தொழுவதால் இவரை சைவ அன்பர்கள் தாண்டகவேந்தர் எனப் பெருமையாக அழைத்து வழிபட்டனர்.

தாண்டக வேந்தர் தலயாத்திரை செய்து கோயில்தோறும் சரியைத் தொண்டு செய்து பாடிப்பணிந்து வரும்போது ஒருநாள் திருச்சத்திமுற்றத்துக்குச் சென்று வழிபட்டார். நின் திருவடிகளை என் சிரம்மேல் சூட்டும் நாள் என்னாளோ என இரங்கித் தொழுதார். **"நாவுக்கரசனே நீ நல்லூருக்கு வா"** என்று ஒரு அசரீரி கேட்டது. அவ்வாக்கைக் கேட்டலுமே உள்ளம் உருகி, உடல் புளகாங்கிதம் அடைந்து, மயிர்க்கூச்செறிந்து ஆனந்தப் பரவசமானார். நல்லூருக்கு விரைந்தார்.

திருநல்லூர்ச் சிவாலயம் பலவிதமான மகிமைகளை உடையது. தலச்சிறப்பு அற்புதமானது. அங்கு உள்ள லிங்கம் சுயம்புலிங்கம். தானாகவே தோன்றிய லிங்கம். அதில் சிவபெருமான் தாமிர வண்ணத்தில் உள்ளார். காலையில் சூரியன் தோன்றி மாலை மறைவதற்கு இடைப்பட்ட முப்பது நாழிகை காலத்தில் ஆறு நாழிகைக்கு ஒருமுறை வண்ணம் மாறுகின்றார். **"நிறங்கள் ஓர் ஐந்துடையாய்"** எனத் திருவாசகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய அற்புதத்தை அங்கு என்றும் காணலாம். இத்தலத்து இறைவர் பஞ்சவர்ணேஸ்வரர் என்ற காரணப் பெயரால் அழைக்கப்படுகின்றார். ஒவ்வொரு நாளும்

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 06.00 மணியிலிருந்து | 08.15 | வரை | தாமிர வண்ணத்திலும் |
| காலை | 08.16 " | 11.30 | " | இளஞ்சிவப்பு வண்ணதிலும் |
| மதியம் | 11.31 " | 02.30 | " | உருக்கிய தங்க வண்ணத்திலும் |
| பகல் | 02.31 " | 05.00 | " | நவரத்தினப்பச்சை வண்ணத்திலும் |
| மாலை | 05.01 " | 06.00 | " | கூறமுடியாத வண்ணத்திலும் |

காட்சி தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அற்புதக் காட்சியை இன்றும் காணலாம். நாம் கண்ணாரக் கண்டு மகிழ்ந்துள்ளோம்.

கயிலாயத்தில் நடந்த பார்வதி பரமேஸ்வரனுடைய திருக்கல்யாணக் காட்சியை அகத்தியருக்குக் காட்டிய இடமும் இந்தத் திருநல்லூர்த் தலம்தான். அதனால் இத்தலத்து இறைவன் கல்யாண சுந்தரேஸ்வரர் என அழைக்கப்படுகின்றார். இத் திருவுருவில் ஆவுடையில் பிரதான லிங்கத்தில் மற்றொரு சிறிய சிவலிங்க வடிவு உளது. வேறு எங்கும் காணமுடியாத அற்புதக் கோலம் இது.

இக்கருவறையில் சுதை அமைப்பில், அமர்ந்த கோலத்தில் பெருமானும் பெருமாட்டியும் வீற்றிருக்க ஒருபுறம் திருமாலும் நான்முகனும் உள்ளனர். கோயிலின் வாசலில் சப்த சாகரம் என்ற ஏழுகடல் நீரைக் கொண்ட ஏழு கிணறுகள் உள்ளன.

திருநாவுக்கரசர் தனக்குத் திருவடித் தீட்சை தருமாறு வேண்டியதற்கிணங்க நல்லூருக்கு வந்து பெருமானை வீழ்ந்து வணங்கியபோது பெருமான் அவருக்குத் திருவடி தீட்சை அளித்தார். இந்த அற்புதக் காட்சியைத் திருத்தொண்டர் புராணத்தில் தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான்

**நன்மைபெருகு அருள்நெறியே வந்து அணைந்து நல்லூரில்**
**மன்னு திருத்தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்**
**உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம்**
**சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.**

என்று பாடுகின்றார்.

சிவாலயத் தொண்டு செய்தலையே தன் தொண்டாகக் கொண்ட உழவாரப் படையாளியான திருநாவுக்கரசர் வீழ்ந்து வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில் உன்னுடைய நினைப் பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம் சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான் என்கின்றார்.

சிவபெருமானுடைய திருவடித் தீட்சை கிடைத்துவிட்டால் இப்பிறவிப் பிணியெல்லாம் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வு பெறலாம் என்பது எங்கள் சமய உண்மையாகும். மெய்கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரத்தில் ஒன்றான திருவருட்பயனில் உமாபதி சிவா சாரியார்

தாடலைபோல் கூடி அவைதான் நிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகமெனக் கொள்

என்பது இந்தத் திருவடித் தீட்சையாகும். தாள் தலை என்னும் இருசொற்கள் சேர்ந்து தாடலை என ஒரு சொல்லாவது போல இறைவனுடைய தாள்களான திருவடிகள் ஆன்மாவான சிவனடியானின் தலைமேல் வைத்தலாகிய திருவடித் தீட்சை கிடைத்துவிட்டால் அவர் சிவமாந்தன்மை பெறுவார் என்பது சாஸ்திர உண்மை.

மாணிக்கவாசக சுவாமிகளுக்குத் திருப்பெருந்துறையில் இறைவன் ஞானகுருவாக வந்து குருந்தமர நீழலில் திருவடித் தீட்சை கொடுத்தார். சுந்தரருக்கும் சித்த வட மடத்தில் ஒரு முதியவராக வந்து சுந்தரர் உறங்கும்போது தன் தாள்களை அவரின் தலைமேல் வைத்துத் திருவடித் தீட்சை கொடுத்த செய்திகளையெல்லாம் திருத்தொண்டர் புராணத்தில் காண லாம்.

திருநல்லூரில் திருநாவுக்கரசருக்குத் திருவடி சூட்டியதற்கு அடையாளமாக அங்கு வழிபடுபவர்களுக்கு வைணவ கோயில்களில் சடாரி சூட்டுவது போல சிவபெருமானின் திருவடியைத் தலைமேல் சூட்டுகின்றனர். அப்பொழுதுதான் நாம் மனமார நினைப்பது நடக்கும் என்ற நம்பிக்கை அடியார்களுக்கு உண்டு.

இலிங்கத்தில் சில துவாரங்கள் காணப்படுவதாகவும் பிருங்கி முனிவர் வண்டு வடிவில் வந்து பூசித்ததாகவும் சொல்லப்படுகிறது. சாலிக்கிராமத்தால் செய்த விநாயகர் சிலை அற்புதமாக உள்ளது.

அமர்நீதி நாயனாரைப் பெருமான் ஆட்கொண்டு அவர்தம் மனைவிக்கும் மகனுக்கும் முத்திப்பேறு அருளிய தலம் இது. இவர்களின் உருவச் சிலைகள் உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாடக்கோயில் திருநல்லூர் மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே" எனத் திருஞானசம்பந்தரும் பாடியுள்ளார்.

கோச்செங்கட் சோழன் கட்டிய யானை நுழையமுடியாத 70 மாடக் கோயில்களில் இதுவும் ஒன்று ஆகும்.

திருநல்லூர்ப் பெருமானின் பெயர் கல்யாணசுந்தரேஸ்வரர், இறைவி பெயர் கல்யாண சுந்தரி, தீர்த்தம் - சப்தசாகர தீர்த்தம், தலவிருட்சம் - வில்வம்.

திருநல்லூரிலே சிவபெருமான் தனக்குத் திருவடி சூட்டிய அற்புதத்தைத் திருநாவுக்கரசர் திருநல்லூர் திருத்தாண்டக மாகப் 11 பாடல்களில் பாடித் துதிக்கின்றார். அவர் ஆனந்த பரவசத்தில் பாடிய பாடல்கள் படிப்போரையும் ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. அதில் வரும் முதலாவது திருத் தாண்டகத்தில்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தாய்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தாய்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம் பெருமானார் நல்லவாறே.

எனப் பாடுகின்றார்.

நினைந்து உருகும் அடியாரை நையவைத்தார் எனத் தொடங்கி அவர் முடியிலுள்ள இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய் பில்கி நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானே எனப் போற்றிப் பாடக் காண்கின்றோம்.

இப்படியே ஒவ்வொரு பாடலின் ஈற்றடிகளிலும் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நாடேறு திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நல்லருளாற் திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நற்றவர் சேர் திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நாறுமலர்த் திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நலங்கிணரும் திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நன்றருளும் திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்
நாப்பரவும் திருவடியென் தலைமேல் வைத்தார் என்றும்

என்று என்று பாடல்கள் தோறும் ஈற்றடிகளில் சொல்லிச் சொல்லி நல்லூரெம் பெருமானார் நல்லவாறே எனத் திரும்பத் திரும்பப் பாடுவது சிவன் கொடுத்த நாவுக்கரசர் என்ற பட்டத்தின்படி செந்தமிழ் அவர் வாயில் தேனூறும் தித்திப்பாய்ப் பாய்வதைக் காணமுடிகிறது.

திருநாவுக்கரசர் திருநல்லூரிலிருந்து புறப்பட்டு வழியில் இருந்த சிவாலயங்கள் தோறும் உழவாரத் திருத்தொண்டு செய்து பெருமானைப் பாடிப் பரவிய வண்ணம் திங்களூர்ப் பெருமானை வணங்கச் சென்றார்.

திங்களூர், சந்திரன் தனக்குத் தக்கன் இட்ட சாபம் நீங்க வழிபட்ட தலம். தக்கன் தன் புத்திரிகள் 27 பேரையும் சந்திரனுக்கு மணம்முடித்துக் கொடுத்தான். அவர்கள் இருபத்தேழு பேர்களில் உரோகினி என்னும் பெண்ணுடனே அதிக விருப்பம்கொண்டு சந்திரன் இருந்ததால் மற்றைய பெண்கள் தக்கனிடம் முறையிட்டார்கள். கட்டிய மனைவியரைச் சரியாக அன்புகாட்டி நடத்தாத காரணத்தால் நீ நாளொரு வண்ணமாகத் தேய்ந்து அழிவாய் எனத் தக்கன் சாபமிட்டான். சந்திரன் கலைகள் படிப்படியாகக் குறைந்து பதினைந்து நாளில் முற்றாக அழியும் நிலை வந்தபோது திங்களூரில் உள்ள சிவாலயத்துக்கு வந்து வழிபாடாற்றிய போது சிவபெருமான் சந்திரனைத் தன் தலைமேல் வைத்து நீ படிப்படியாக வளர்வாய் என வரமளித்தார். சந்திரன் நாளொரு வண்ணம் இழந்த கலைகளை மீளப்பெற்றுப் பூரண சந்திரனானான். இந்தக் காட்சியையே பூரணை முதல் சந்திரன் தேய்வதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசை முதல் வளர்வதையும் நாம் இன்று காண்கின்றோம். 27 பெண்கள் என்பது 27 நட்சத்திரங்கள் ஆகும். இதில் உரோகினி நட்சத்திரம் எப்போதும் சந்திரனுக்குக் கிட்டவே இருப்பதைக் காணமுடியும். இந்தச் செயல் கட்டிய மனைவியரைக் கண்கலங்கவிட்டால் அழிவு வரும் என்னும் உண்மையை எமக்கு உணர்த்துகிறது.

திங்களூர்ச் சிவாலயம் நவக்கிரகங்களில் ஒன்றான சந்திரனை வழிபடும் நவக்கிரகக் கோயில் என இக்காலத்தில் வணங்கப்படுகிறது. சந்திரதோஷம் உள்ளவர்கள் அங்கு சென்று சிவனையும், சந்திரனையும் வணங்குவதால் மீட்சி பெறலாம் என்ற நம்பிக்கை உண்டு.

திருநாவுக்கரசர் திங்களூருக்குச் சென்றார். வீதிதோறும் ஆங்காங்கு திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல், திருநாவுக்கரசர் அன்னதான மடம், திருநாவுக்கரசர் அறச்சாலை எனப் பல தர்மசாலைகளைக் கண்டார்.

இங்கெல்லாம் என் பெயர் பொறிக்கப்பட்டிருக்கின்றதே என்ன காரணம் அறிய விரும்பினார். அங்கு நின்றவர்களிடம் இது பற்றி வினவினார். அவர்கள் திங்களூரில் அப்பூதியடிகள் எனும் பிராமணர் ஒருவர் இருப்பதாகவும், அவர் அடியார் வழிபாடாகிய சங்கம வழிபாடு உடையவரென்றும், திருநாவுக்கரசர் என்பவர் சமணத்திலிருந்து சூலை நோய் கொடுத்துச் சிவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பெருமானுக்கு உழவாரத்தொண்டு செய்து தேவாரம் பாடிப் பாடிப் பல அற்புதங்களை நிகழ்த்துவதாகவும் அறிந்து அவரையே தன் குருவாக நினைந்து தன் அறச் சாலைகட்கு மட்டுமன்றித் தன் புதல்வர்களுக்கும் மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்துள்ளார் எனவும் சொன்னார்கள்.

திருநாவுக்கரசர் ஆச்சரியமடைந்து அத்தகு சிவனடியாரைக் காணவிரும்பி அவர் வீடு சென்றார். இவர்தான் திருநாவுக்கரசர் என்பதையறிந்த அப்பூதியடிகள் தெய்வம் வீடுதேடி வந்ததே என்று வியந்து மனைவியுடனும் மக்களுடனும் வீழ்ந்து வணங்கிப் பாதபூசை செய்து வழிபட்டு தம்வீட்டில் அமுது செய்தருள வேண்டுமெனப் பணிந்து வேண்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த திருநாவுக்கரசரை வாழையிலை அரிந்து வரும்படி அனுப்பியபோது அவன் பாம்பு தீண்டி இறந்தான். மகன் இறந்ததற்கு வருந்தியபோதும் தன் குருநாதரான திருநாவுக் கரசருக்கு அமுதளித்தல் தடைப்படக்கூடாதே என நினைந்து அவனுடலைப் பாயால் மறைத்து வைத்துவிட்டு திருநாவுக் கரசரை அமுதுண்டருள வருக என அழைத்தார். அவர் இவர் களுக்குத் திருநீறு வழங்கும்போது மூத்த திருநாவுக்கரசரையும் அழையுங்கள் என்றார். அப்பூதியடிகள் நடந்ததைச் சொன்னார்.

அவனுடைய உடலை ஆலயத்துக்குக் கொண்டுவரச் செய்து திங்களூர்ச் சிவனை நினைந்து திருநாவுக்கரசர்

ஒன்று கொலாமவர் சிந்தை உயர்வரை
ஒன்று கொலாம் உயரும் மதிசூடுவர்
ஒன்று கொலாம் இருவெண்டலை கையது
ஒன்று கொலாமவர் ஊர்வதுதானே

எனத் தொடங்கிப் பாடல்தோறும் இரண்டு கொலாம், மூன்று கொலாம், நாலு கொலாம் எனத் தொடர்ந்து

பத்துக் கொலாம் அவர்பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக் கொலாம் அடியார் செய்கைதானே

எனப் பாடி வணங்கியதும் மூத்த திருநாவுக்கரசு நித்திரைவிட்டு எழுவதுபோல எழுந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். எல்லோரும் ஆனந்தப் பரவசமாகி அமுதுண்டு மகிழ்ந்தனர். திருநாவுக்கரசர் அவர்களுக்கு அருள்புரிந்து அப்பால் உள்ள சிவாலயங்களுக்குத் தொண்டு செய்யப் புறப்பட்டார்.

இச்செயல் ஆனது சங்கம வழிபாடாகிய அடியார் வழிபாட்டின் மகத்துவத்தை எமக்கு உணர்த்துகிறது.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசரின் திருவாரூர்த் திருத்தல யாத்திரை

திங்களூரில் அப்பூதி அடிகளால் போற்றப்பட்ட திருநாவுக்கரசர் அப்பால் பல தலங்களிலும் உழவாரத்தொண்டு செய்து வணங்கித் திருவாரூர்ப் புற்றிடல் கொண்ட பெருமானைத் தொழவிரும்பி அங்கு சென்றார். திருநாவுக்கரசர் வருகையை அறிந்த திருவாரூர் அன்பர்கள் "சமணர்கள் செய்த வஞ்சனைகள் எல்லாம் கடந்து கல்லே மிதப்பாகக் கடல் கடந்தேறிய திருநாவுக்கரசர் ஈண்டெழுந்தருளப் பெற்றோம்" எனப் பெருமகிழ்வெய்தி அப்பரடிகளை எதிர்கொண்டழைத்துப் போற்றினார்கள். தமக்கு அருள் சுரந்த இறைவனது பேரருட் பெருமையை எண்ணிய திருநாவுக்கரசர் இப்பெருமை எனக்கு எய்தற்பாலதோ, புற்றிடல் கொண்ட பெருமானின் அடியார்களுக்குச் செய்யும் தொண்டின் பெருமையாற் பேறு பெற்றேன் என வியந்து

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்
தாள்தொழாதே
உய்யெலாம் எண்றெண்ணி உறிதூக்கி உழிதந்தென்
உள்ளம்விட்டுக்
கொய்யுலாம் மலர்ச் சோலைக் குயில்கூவ மயிலாடும்
ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்தே கனியிருப்பக் காய்கவர்ந்த
கள்வனேனே

எனத் தன் செயலற்ற தன்மையைப் புலப்படுத்தும் பழமொழித் திருப்பதிகத்தை எடுத்து

முயல்விட்டுக் காக்கைப்பின் போனவாறே
அறமிருக்க மறம்விலைக்குக் கொண்டவாறே
பனிநீரால் பரவை செய்யப் பாவித்தேனே
எதன்போர்க்கு ஆதனாய் அகப்பட்டேனே
இருட்டறையில் மலடுகறந் தெய்த்தவாறே
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிழரில் பயிக்கம்புக்கு எய்தவாறே
தவம் இருக்க அவஞ்செய்து தருக்கினேனே
கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே

என்று பாடல் ஈற்றடிதோறும் சொல்லிச் சொல்லி உண்மைச் சமயமாம் சைவம் இருக்க அதைவிட்டுப் பொய்ச் சமயமாகிய சமணத்தில் சேர்ந்து இழிவுற்றேனே எனக் கழிவிரக்கம் கொண்டு பாடிப் பணிந்தார்.

**"திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்"** எனும் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத்தொகையில் போற்றப்பட்ட இத்தலம் பெரிய மாவட்டமாகவும், அம் மாவட்டத்தின் தலைநகராகவும் விளங்குகின்றது.

இலக்குமி ஆகிய திருமகள் பூசித்து வசிக்கும் தலமாதலின் திரு ஆரூர் எனப் பெயர் பெற்றது. பிறக்க முத்திதரும் தலம். பஞ்சபூதத் தலங்களில் திருவாரூர் பிருதுவியாகிய நிலத்திற்குரியது. சிவபெருமான் நடனமாடிய சப்தவிடங்கத் தலங்கள் ஏழினுள் முதன்மையானது திருவாரூரே. விடங்கம் என்றால் வி - டங்கள் - உழியால் செதுக்கப்படாது சுயம்புவாகத் தோன்றியவர் என்பது பொருள். வீதிவிடங்கன் ஐவகை நடனத்தில் திருவாரூரில் அஜபா நடனம் புரிகின்றார். திருவாரூர் தேரழகு என்பது உலக வழக்கு.

திருமுறைகளைத் தொகுத்தும், செப்பேடு செய்வித்தும் தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்தவர்களான அபயகுலசேகர சோழர், அநபாயசோழர் ஆகியோர் அரசோச்சிய இடம். சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடத் திருவாரூர்தியாகேசர் **"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"** என அடியெடுத்துக் கொடுத்த இடம்.

விறன்மிண்டர், நமிநந்தி, செருத்துணையார், தண்டியடிகள், கழற்சிங்கர் போன்ற நாயன்மார்கள் முத்தி பெற்ற தலம். சுந்தரர் பரவைநாச்சியாரை மணந்த இடம். சுந்தரர் கண்ணொளி இழந்து பின் மீண்டும் வலக்கண் ஒளிபெற்ற இடமும் திருவாரூரே. நம்பியாரூரராகிய சுந்தரரிடம் சேரமான் பெருமான் நட்புக் கொண்ட இடமும் இதுவே. தேவார முதலிகள் மூவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப்பாடி அருள்பெற்ற புனிதத்தலம். திருவாரூர் ஆலயத்துக்கு மூலட்டானம் என்றும் பூங்கோயில் என்றும் பெயர் உண்டு.

இங்குள்ள இறைவன் வன்மீகநாதர், புற்றிடங்கொண்டவர் - இறைவி கமலாம்பிகை அல்லியங்கோதை, தலவிருட்சம் பாதிரி, தீர்த்தம் கமலாலயம்.

சுந்தரர் திருமுதுகுன்றில் பெருமான் தனக்குத் தந்த பொன் முடிச்சை மணிமுத்தா நதியில் இட்டு இந்தக் கமலாலயக் குளத்தில் எடுத்த அற்புதம் இங்குதான் நடந்தது.

சோழவள நாட்டையாண்ட மனுநீதிகண்ட சோழன் என்பான் இத்திருவாரூரையே தலைநகராகக் கொண்டு செங்கோல் முறை தவறாது ஆட்சி செய்தான். அவனுடைய ஆட்சியில் தருமம் தழைத்தது. மனுநீதி ஓங்கியதும் இந்தத் திருவாரூரில்தான். சேக்கிழார் சுவாமிகள் திருவாரூர்ப் பெருமையைப் பாடும்போது மனுநீதிகண்ட சோழனின் அறந்திறம்பா ஆட்சியால் திருவாரூர் பெருமை பெற்றது என்கிறார்.

ஒரு நாட்டிற்குக் காவலனான மன்னன் உலகுயிர்களைக் காக்கும்போது, அக்காவலுக்கு இடையூறாய்த் தன்னாலும் தன் பரிவாரத்தாலும், கள்வராலும், பகைவராலும் மற்ற உயிர்களாலும் வருகின்ற ஐந்து வகையான அச்சங்களையும் நீக்கி அறம் தப்பாமல் ஆளவேண்டும்.

**மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்கும் காலை**
**தானதனக் கிடையூறு தன்னால் தன்பரிசனத்தால்**
**ஊனமிகு பகைத்திறத்தால் உயிர்கள் தம்மால்**
**ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ**

எனும் கூற்று இக்கால ஆட்சியாளர்க்கு நல்லதோர் அறிவுரையாக அமைவதைக் காணலாம்.

மனுநீதிகண்ட சோழன் இதனைப் பேச்சளவில் மட்டும் சொல்லவில்லை செயலிலும் காட்டினான். அவனுடைய மகன் தேரோட்டும்போது ஒரு பசுவின் இளங்கன்று தேர்ச்சில்லுட்பட்டு இறந்துவிட்டது. தாய்ப்பசு மாளிகையின் ஆராய்ச்சி மணியை அடித்து நீதி கேட்டது. பசு கன்றை இழந்து வருந்துவது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கொலை செய்த தன்மைந்தனை இழந்து வருந்துவதே நீதி என்று தானே தன்மைந்தனை அதே வீதியில் வைத்துத் தேரால் நெரித்தான்.

ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதும் ஓரான்
தருமந்தன் வழிச்செய்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழிஉற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோதான்

என்று சேக்கிழார் வியக்கின்றார். மன்னனின் அறந்திறம்பாத எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணிக்காக்கும் நீதிநெறி தவறாத செயல்கண்டு மழவிடைமேல் வீதிவிடங்கப் பெருமான் காட்சி கொடுத்து பசுவையும் கன்றையும், இளவரசனையும் உயிர் பெற்றெழச்செய்த பெருமைபெற்ற தலம் இத்திருவாரூராகும்.

திருவாரூருக்கு வந்த நாவுக்கரசர் வன்மீகநாதர்மேல் வண்டமிழ்ப் பதிகமாக ஆறு பதிகங்கள் பாடுகின்றார். புற்றிடல் கொண்டாராகிய பெருமான்மேல் தாண்டகவேந்தர் இரண்டாம் பதிகமாகப் போற்றித் திருத்தாண்டகம் பாடுகின்றார். சிவபூசை செய்வார் பெருமானுக்கு அபிஷேகம் செய்தபின் இந்தத் திருத்தாண்டகம் பாடும் வழக்கம் உண்டு. அத்தனை மகிமை உடையது இப்போற்றித் திருத்தாண்டகம்

கற்றவர்கள் உண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

என இத்திருத்தாண்டகப் பதிகத்தில் 108 தரம் போற்றி போற்றி எனப் பாடுகின்றார்.

பக்தர்கள் 108 மலர் கொண்டு ஒவ்வொரு போற்றிக்கும் ஒவ்வொரு மலரிட்டு வழிபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றறிந்தவர்கள் உண்ணும் கனியானவனே
உன் கழலை அடைந்தவர்க்கு நற்கதி தருபவனே
அனைத்தையும் துறந் தோர்க்கு ஆரமுதமானவனே
அடியேனின் அல்லலை அறுத்து ஆட்கொண்டவனே
மற்றொருவர் ஒப்புவமை கூறமுடியாத பெருமையனே
வானவரும் போற்றித் துதிக்கும் மருந்தானவனே போற்றி

எனப் பாடிப் பணிந்து ஒரு பதிகம் அல்ல ஆறு பதிகங்கள் பாடி வணங்கினார்.

தாண்டகவேந்தராகிய அப்பர் சுவாமிகள் திருவாரூர்ப் பெருமான்மீது பாடிய ஒரு திருத்தாண்டகத்தில் பெருமானுக்குச் சரியைத் தொண்டு செய்து உய்திபெற வேண்டும் என்பதைத் தன் நெஞ்சினை விழித்துப் பாடுகின்றார்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேற்றிப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீஎன்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே

நெஞ்சமே நீ நிலையான இறையின்பத்தைப் பெற வேண்டுமெனில் நித்தலும் எம்பிரானுடைய கோயிலுக்குப் போ. அங்கு விடிவதற்கு முன் கோயிலைக் கூட்டிக் கழுவி மெழுகிப் புனிதமாக்கு. நந்தவனத்தில் அப்பொழுதே அலர்ந்த பூக்களைப் பறித்தெடுத்து பூமாலை கட்டி. அம்மாலையைப் பெருமானுக்குச் சூட்டு. பெருமானைப் புகழ்ந்து பாடி ஆடு. தலையாரக் கும்பிடு. சங்கரா போற்றி போற்றி என்று சொல்லிக் கூத்தாடு. ஆரூரா ஆரூரா என்று வாயாரச் சொல்லிச் சொல்லி வழிபடு என்கிறார்.

தன் நெஞ்சுக்குச் சொல்வது போலத் தானே கோயிலுக்குத் தினமும் சென்று சரியைத்தொண்டுகள் செய்கின்றார். **"என் கடன் பணிசெய்து கிடப்பதே"** என்பதையே இலட்சியமாகக் கொண்டு சொல்லிலும் செயலிலும் மேற்கொண்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது திருவாரூரில் திருவாதிரைப் பெருவிழா நடை பெறுகின்றது. கண்கொள்ளாக் காட்சி. தேவரும் மூவரும் மண்ணவரும் விண்ணவரும் வந்து கூடிக் கண்டுகளிக்கின்றனர். அப்பர் சுவாமிகள் திருவாதிரை நாளில் வீதிவிடங்கப் பெருமான் திருவுலாப் போந்து அருளியது கண்டு மண்ணினிற் பிறந்த பயனாக கண்ணினால் நல்விழாப் பொலிவு கண்டேன் என்று ஆனந்தித்தார்.

திருவாதிரைவிழா நிறைவானதும் ஏனைய சிவாலயங்களைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருப்புகலூர்ப் பெருமானை வணங்குவதற்காக அரு கணைந்தார். அப்பொழுது திருப்புகலூரில் முருகநாயனார் திரு மடத்தில் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தப்பிள்ளையார் அடியார்களுடன் அப்பர் மூர்த்திகளை எதிர்கொண்டார். இரு வரும் ஒருவரை ஒருவர் வணங்கி மகிழ்ந்தனர். ஆளுடைய பிள்ளையார் அப்பரே திருவாரூரில் திருவாதிரை விழாப் பெருமையினை விரித்துரைப்பீராக என விண்ணப்பம் செய்தார். அப்பரடிகளும் வீதிவிடங்கப் பெருமானது திருவளர் ஆதிரை விழாவின் பெருமையினை இன்ன தன்மையினதென்று எவ்வாறு உரைசெய்வேன் என்று சொல்லி

**முத்து விதானம் மணிபொற் கவரி முறையாலே**
**பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே**
**வித்தக கோல வெண்டலை மாலை விரதிகள்**
**அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்**

என வரும் திருப்பதிகத்தைப் பாடிப் பரவினார். பதிகம் முழுவதும் **“ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்”** எனத் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரைப் பெருவிழாவின் பெருமை விரித்துரைக்கப்பெறுவதால் இது திருவாதிரைப் பதிகம் என வழங்கப் பெறுகின்றது.

இருவரும் தனித்தனி பல தலங்களையும் வணங்கிக் கொண்டு சில நாளில் வேதாரணியம் என்னும் திருமறைக்காட்டை வந்தடைந்தார்கள். திருக்கோயிலை வலம் வந்து பண்டை நாளில் வேதங்கள் இறைவனை வழிபட்டு அடைத்த திருக்கதவமைந்த திருவாயிலை அடைந்தார்கள். அவ்வூரவர் வேறொரு வாயில் அமைத்து வேதவனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானை வழிபட்டுவந்தனர். இச் செய்தியை உணர்ந்த திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை நோக்கி, **“அப்பரே நாம் எப்படியும் நேர்முகமாயுள்ள இத்திருவாயிலின் வழியே சென்று மறைக்காட்டிறைவரை வழிபடுதல் வேண்டும். ஆதலால் இத் திருக்கதவு திறக்கும்படி நீர் திருப்பதிகம் பாடியருளும்”** என வேண்டினார்.

ஆளுடைய பிள்ளையாரது விருப்பத்திற்கிசைந்த அப்பர்

**பண்ணிநேர் மொழியாள் உமை பங்கரோ**
**மண்ணினார் வலம் செய்மறைக் காடரோ**
**கண்ணினால் உமைக் காணக் கதவினைத்**
**திண்ணமாகத் திறந்தருள் செய்மினே**

என்ற திருப்பதிகத்தைப் பாடினார். நாவுக்கு அரசரது செந்தமிழ்ப் பாடல்களின் சுவை நலங்களைத் துய்க்க விரும்பிய மறைக்காட்டீசர் கதவம் திறக்கக் காலம் தாழ்த்தி அருளினார். அதனால் மனம் வருந்திய அப்பர் அப்பதிகத்தின் இறுதிப் பாடலில்

**அரக்கனை வாளால் அடர்த்திட்டநீர்**
**இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானீரே**
**சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக்காடரோ**
**சரக்க இக்கதவம் திறப்பிப்பினே**

எனப் பிணங்கிப் பாடினார். என்ன ஆச்சரியம் அக்கணமே கதவு திறந்தது. கூடிநின்ற அடியாரெல்லாம் அரோகரா என்று ஆர்ப்பரித்தார்கள். அப்பரும் ஆளுடைய பிள்ளையும் வீழ்ந்து வணங்கி அக்கதவினூடாகவே உள்ளே சென்று வலம்வந்து வணங்கிப் பதிகங்கள் பல பாடி மகிழ்ந்தார்கள்.

அப்பொழுது நாவுக்கரசர் ஞானசம்பந்தரை நோக்கி **“மறைக்காட்டீசர் திருவருளால் இத்திருக்கதவு நாள்தோறும் திறக்கப்பெற்றும் அடைக்கப்பெற்றும் வரும் நிலையில் இத்திருத்தலம் அடைந்திடும்படி நீர் பாடியருளும்”** என வேண்டிக்கொண்டார். அதற்கிணங்கிய ஆளுடைய பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறை மைந்த
இதுநன் கிறைவைத்தருள் செய்ய வெனக்குன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே

எனத் தொடங்கிப் பதிகம் பாடினார். கதவம் தானே மூடிக்கொண்டது.

அன்றுமுதல் திருமறைக்காட்டுக் கதவு இத்திருமுறைப் பாடல்களைப் பாடியே திறத்தலும் அடைத்தலும் ஆயிற்று. வடமொழி வேதத்தால் பூட்டப்பட்ட கதவு தென்மொழித் தமிழ் வேதமாகிய தேவாரத்தால் திறக்கப்பட்ட அற்புதத்தை யாவரும் எண்ணி எண்ணி மகிழ்ந்தனர். அப்பர் சுவாமிகளும் **"வடமொழியும் தென்தமிழும் ஆனான் கண்டாய்"** எனத் திருத் தாண்டகத்தில் பாடி இன்புற்றார்.

இதனை அடியொற்றியே இன்று எங்கள் சைவாலயங்களில் கும்பாபிஷேகத்தின்போது அப்பரின் **"பண்ணினேர் மொழியார்..."** எனத் தொடங்கும் பதிகம் பாடிக் கதவு திறக்கும் நிகழ்வு நடைபெறுகிறது. அப்பரது இப்பதிகம் இறுதிப்பாடலும் பாடி முடியவே கதவு திறந்தது போல இங்கும் பதிகம் முழுவதையும் பாடி முடித்துக் கதவு திறத்தலே முறையாகும்.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் சுவாமிகள் அண்ணலார் திருவடிக்கீழ் அமர்தல்

நைந்துருகு சிந்தையராகிய நாவுக்கரசர் திருப்புகலூர்ப் பெருமான் திருவடிகளை வணங்கி உழவாரத் தொண்டு செய்து உளம் மகிழ்ந்து இருந்தார். அவருக்கு அங்கு பார்க்கும் பொருள் அனைத்தும் பெருமானாகவே காணப்பட்டன. அக் காட்சியைத் தாண்டக வேந்தர் தனித் திருத்தாண்டகமாகவே பாடிப் பணிகின்றார்.

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

என்னை ஆட்கொண்டருளிய இறைவா, ஏறூர்ந்த செல்வா எதைப் பார்த்தாலும் நீயாகவே காணப்படுகின்றாய். என் அப்பன், என் அம்மை, என் ஐயன், என் மாமன், மாமி, மாதர்கள், பொருள் பண்டங்கள், என் குலம், ஊர்பேர், துய்ப்பன உய்ப்பன எல்லாவற்றிலும் என் துணைவனாகிய உன்னையே காண் கின்றேன்.

மருணீக்கியாராகப் பிறந்து வளர்ந்து சமணத்தில் தருமசேனராயிருந்த காலத்தில் இவ்வுலகில் காணப்பட்ட அனைத்தும் உண்மைப் பொருள்களாகவே காணப்பட்டன. அப்பொழுது அவருக்கிருந்த அறிவு பாசஞானம் ஆகும். சூலை நோய் கொடுத்து ஆட்கொண்ட பின் நான் வேறு இப்பாசப் பொருட்கள் வேறு எனும் பசுஞானம் ஏற்பட்டது. படிப்படியாக அவருக்கு ஏற்பட்ட துன்பங்களால், சுண்ணாம்பறையில் பூட்டப் பட்டமை, நஞ்சு கலந்த பாற்சோறு கொடுக்கப்பட்டமை, மத யானையை ஏவிக் கொல்ல முற்பட்டமை, கல்லுடன் கட்டிக் கடலில் போடப்பட்டமை ஆகிய இடர்கள் பட்டபின்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றாத் துணையாக எம்பெருமான் இருப்பதையும், அவன் நாமமே நற்றுணையாக இருப்பதையும் உணர்ந்து பின்தான் பசுஞானம் மாறி எல்லாம் சிவமே என்னும் பதிஞானம் வாய்க்கப் பெற்றது. அப்பதிஞானமே எல்லாம் நீயே எனப் பாடவைத்தது.

சைவசித்தாந்த தத்துவத்தின்படி ஆன்மா முதலில் நல்வினை தீவினைகட்கு ஆளாகி நல்வினைப் பயனாகிய இன்பத்தையும், தீவினைப் பயனாகிய துன்பத்தையும் நுகர்ந்து மீண்டும் மீண்டும் பற்றுமிகுதியாய் பிறந்து இறக்கும் அல்லற்படும். எப்போது இருவினையிலும் பற்றற்ற நிலை ஏற்படுகிறதோ அது இருவினை ஒப்பு எனப்படும். நல்வினை தீவினை இரண்டையுமே வெறுத்து இறைவன் திருவடியே துணை என்றாகிறதோ அன்றே மலபரிபாகம் எனும் பாசம் நீக்கம் ஏற்பட்டுத் திருவருட்சக்தி ஆன்மாவில் பதியும். அதுவே பதிஞானம் எனப்படும்.

அப்பர் சுவாமிகளுக்கு எல்லாம் சிவமாகக் காணும் துறவு நிலையாகிய பதிஞானம் வாய்க்கப்பெற்றதையே அவர் பாடிய - மேலே சொல்லிய **"அப்பன் நீ அம்மை நீ"** என்னும் திருத் தாண்டகம் உணர்த்தியது.

திருநாவுக்கரசரின் பற்றற்ற துறவு ஆகிய உள்ளத்து உறுதியை உலகத்தார்க்குத் தெளிவாகப் புலப்படுத்தத் திருவுளம் கொண்ட சிவபெருமான் சில திருவிளையாடல் களைச் செய்து காட்டுகின்றார். திருப்புகலூர்ப் பெருமானின் வீதியிலே அப்பர் பெருமான் உழவாரத் தொண்டு செய்யும்போது உழவாரம் புகுந்த இடமெல்லாம் பொன்னும் நவமணிகளும் விளங்கித் தோன்றும்படி செய்தார். ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் உரவோராகிய அப்பர் பெருமான் பொன்னும் மணிகளுமாகிய அவற்றையெல்லாம் சாதாரண பருக்கைக் கற்களோடு ஒப்பக்கருதி அவற்றை உழவாரத்தில் ஏந்தி அருகிலுள்ள குளத்தில் வீசி எறிந்தார்.

தேவலோகத்து அரம்பை, ஊர்வசி முதலிய அழகிய மாதர்கள் இவர்முன் வந்து பாடியும் ஆடியும் அடிகள் மேல் வாச மலர்களைத் தூவியும் அவரை அணைப்பவர் போல் நெருங்கியும் அவரை மயக்க முயன்றனர். சிவபெருமான் திருவடிகளையே நினைந்தவராய் ஒன்றிய மனத்துடன் என்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிசெய்து கிடப்பதே என்று தன் உழவாரப் பணியிலே ஈடுபட்டிருந்தார். தம்மை மயக்கி நிற்றற்குக் காரணமாக இருவினைகளை நோக்கி நான் சிவபெருமானுக்கு ஆட்பட்டேன் நும்மால் அலைக்கப்படும் எளிமை உடையேன் அல்லேன். நீவிர் என்னைத் துன்புறுத்தாதீர் என

பொய்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்கு
இல்லையே கிடந்ததுதான் யானேன் வானோர்
தம்மானைத் தலைமகனை அண்ணல் ஆரூர்
தடங்கடலைத் தொடர்ந்தோரை ஒடுங்கச்செய்யும்
எம்மான்தன் அடித்தொடர்வான் உழிதர்கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன்மின்னே

எனவரும் திருத்தாண்டகப் பதிகத்தை அருளிச் செய்தார். அடிகளது உறுதிப்பாட்டினை உணர்ந்த அரம்பையர்கள் தங்களால் செய்யத்தக்கது எதுவுமில்லை எனத் தெளிந்து திருநாவுக்கரசரை வணங்கிச் சென்றார்கள்.

இச்செய்தியைத் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள்

மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொழுகும் கைதங்கள் செய்திடவும்
பேதமிலா ஒருணர்வில் பெரியவரைப் பெயர்விக்க
யாதுமொரு செயலில்லாமையில் இறைஞ்சி எதிர்நின்றார்

எனப் பாடுகின்றார்.

பொறிவாயில் ஐந்தவித்தானாகிய இறைவனருளிய பொய்தீர் ஒழுக்கநெறி நின்று புலனைந்தும் வென்ற அப்பர் பெருமானது உள்ளத்திண்மையை இத்தகையது என்றுரைக்க முடியுமோ. திருப்புகலூர்ச் சிவபெருமானுக்கு திருத்தொண்டு புரிந்து மகிழும் திருநாவுக்கரசர் தம் அந்தக் கரணங்கள் புறத்தே செல்லாது உள்ளே ஒருங்கப்பெற்று இறைவன் திருவடிவினைத் தலைப்படும் நிலையை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலூர்ப் பெருமான் தன்னுடைய அடியவனாகிய எளியேனை இனித்தன் திருவடியின்கண் இருத்தி அருள் புரிவான் எனும் முன்னுணர்ச்சி மூளப்பெற்று பல திருத்தாண்டகங்களைப் பாடிப் போற்றினார். இச்செய்தி

**தன்னைச் சரணென்று தாளடைந்தேன் தன் அடியடையப்**
**புன்னைப் பொழில் புகலூர் அண்ணல் செய்வன கேள்மின்களோ**
**என்னைப் பிறப்பறுத்து என்வினை கட்டறுத்து ஏழ்நரகத்து**
**என்னைக் கிடக்க ஒட்டான் சிவலோகத் திருந்திடுமே**

என வரும் அப்பர் திருவிருத்தத்தால் இனிது புலனாகக் காணலாம்.

இங்ஙனம் இறைவன் தம்மைத் தன் திருவடிக்கீழ் விரைவில் சேர்த்துக்கொள்வான் என்னும் முன்னுணர்வு மூளப்பெற்ற ஆளுடைய அரசர் புகலூர்ப் பெருமானை நோக்கி **"புண்ணியத்தின் உருவாக விளங்கும் எம்பெருமானே உன்னுடைய திருவடிக்கே எளியேனும் வருகின்றேன்"** என நெஞ்சம் கசிந்துருகும் நிலையில் திருப்புகலூர்த் திருத்தாண்டகம் பாடுகின்றார்.

**எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ**
**எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்**
**கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்**
**கழலடியே கைதொழுது காணினல்லால்**
**ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்**
**ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்**
**புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணியனே**

எனவரும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றி நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக் கீழ் எய்தி இன்புற்றார். இச்செய்தியைச் சேக்கிழார் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞான வடிவேளாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார்

எனப் பாடுகின்றார்.

சித்திரைச் சதயநாளில் தன் 81 ஆவது வயதில் இறைவன் திருவடி சேர்ந்த அப்பர் பெருமான் வாழ்க்கையும் அவர் அருளிச் செய்த அருட்பதிகங்களும் எங்களுக்கு நல்ல வழிகாட்டுதலாகும்.

புறத்திலே உழவாரத் தொண்டு செய்துகொண்டு அகத்திலே எம்பெருமான் கோலத்தைக் கண்டு வழிபட்டவர் அப்பர் பெருமான்.

திருப்பூவணத்தில் தான் கண்ட எம்பெருமானின் கோலத்தைத் திருப்பூவணத் திருத்தாண்டகத்திலே

வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண்குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனாற்கே

எனத் தன் உள்ளக்கிளியில் உருவெழுதி அகக் காட்சியில் கண்ட கோலத்தை எமக்குப் புறக்காட்சியில் காட்டுகின்றார்.

முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்

என்று திருமூலர் திருமந்திரத்தில் சொல்வதுபோல அப்பர் சுவாமிகளின் அகக்காட்சி இத்திருத்தாண்டக மூலம் எமக்குப் புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமய நெறிப்படி புற ஆலய வழிபாடு அகவழிபாட்டுக்கு இட்டுச் செல்லவல்லது. அகவழிபாட்டின் மூலமே இறை ஞானத்தைப் பெறலாம் என்பதை அவரது தனித்திரு நேரிசையிலே

உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிர் எனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே

என்கின்றார். உடம்பாகிய வீட்டிலே உள்ளமாகிய தகளி யிலே இறை உணர்வாகிய நெய்யை நிறைத்து உயிர் ஆகிய திரியை இட்டு ஞானம் எனும் தீயால் விளக்கேற்றினால் அவ்வொளியில் இறைவனைக் காணலாம் என்கின்றார்.

அதேபோன்று இன்னுமோர் தனிநேரிசையிலே

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலாய் நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

என்கின்றார்.

உடலே கோயில் மனமே அடியார்
வாய்மையே தூய்மை இதயமே இலிங்கம்
அன்பே நெய்யும்பாலாய் அபிஷேகம் செய்து
ஈசனார்க்குப் பூசனைசெய்து வழிபடுவேன்

என்பது கொண்டும் அப்பர் எம்மை அகவழிபாட்டுக்கு வழிப்படுத்துகின்றார்.

எமது கருவி கரணங்கள் ஒடுங்கி இருவினை ஒப்பு ஏற்பட்டு மலபரிபாகம் ஏற்பட்டாலே ஞானம் ஆகிய திருவடிப்பேறு கிட்டும். யோகிகள், அடியார்கள் அனைவர்க்கும் புலன்களை அடக்குதலே முடியாத காரியமாயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரம் தந்த சிவயோகியாகிய திருமூலர்

அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கின் அசேதன மாமென்று
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே

என்கின்றார். அஞ்சாகிய புலன்களை அடக்க வேண்டும் என்று அனைவரும் தவம் இருக்க அஞ்சும் அடக்கா அறிவு அறிந்தேனே என்னும் திருமூலர் அந்த அறிவு எது என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை.

அப்பர் சுவாமிகளோ தான் பாடிய திருவங்கமாலையில் எங்கள் கருவிகரணங்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் இடத்தில் நிறுத்திப் புலன்களை அடக்கிக் காட்டுகின்றார்.

தலையே தலைவனை வணங்கிறில்
கண்காள் கடல்நஞ்சுண்ட கண்டனைக் கண்டுநில்
செவிகாள் சிவன்திறம் எப்போதும் கேட்டுநில்
வாயே நீ பிரானை வாழ்த்தி நில்
நெஞ்சே நீ நின்மலனை நினைந்து நில்
கைகாள் பரமனைக் கூப்பித்தொழுது நில்
ஆக்கையே அரனைப் பூக்கையால் அட்டிப்போற்றி நில்
கால்களே கோலக் கோபுரக்கோகரணத்தை வலம் வாருங்கள்

இப்படி ஒவ்வோர் கருவிகரணங்களும் அங்கங்கு இலயித்து நிற்க

தேடிக்கண்டு கொண்டேன் தேடொனாத் தேவனை
என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்

எனத் தன் அகத்துள்ளே தான் சிவனைக் கண்டதனைச் சொல்லி எம்மை வழிப்படுத்துகின்றார்.

நாடும் நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தபின்
கூடிய உள்ளத்தைக் கோயிலாக் கொள்வனே

எனத் திருமூலர் சொன்ன திருமந்திரத்துக்கு இலக்கியமாகத் திருநாவுக்கரசர் வாழ்ந்து காட்டிச் சிவகதி சேர்ந்தார். நாமும் அவ்வழி வாழ்ந்து நற்கதி சேர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் திருவைந்தெழுத்து

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம் ஐம்பத்தொரு பதிகங்களையும் அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்களையும் உடையது. திருவாசகத்தின் முதற்பதிகம் சிவபுராணம். அதன் முதல் தொடக்கம் **"நமச்சிவாய வாழ்க"** என்பது. அது சிவபெருமானின் மந்திரநாமம் ஆகும். திருவாசகம் என்னும் நூலின் மங்கல வாழ்த்தாக அமைவது சிவபுராணம் என்று பெரியோர் கூறுவர்.

மங்கல வாழ்த்து எனப்படுவது, நூல் செய்யத் தொடங்கும் போது அதன் ஆசிரியர், அந்த நூல் தடையின்றி இனிதே நிறைவேற வேண்டுமெனத் தான் வழிபடு கடவுளையோ அல்லது அந்த நூலுக்கு ஏற்புடைய கடவுளையோ வாழ்த்திப் பாடி வணங்கித் தொடங்குதல் ஆகும். அதுவும் ஞானநூல் செய்வோர்க்கு இது இன்றியமையாதது என்பர். வாழ்த்தின் உள்ளுறையாக வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் என்பன அடங்கி இருக்கும். இதனை இலக்கணகாரர்

**"வழிபடு தெய்வ வணக்கம் கூறி**
**மங்கல மொழிமுதல் வகுத்துக் கொண்ட**
**இலக்கண இலக்கியம் இடுக்கணின்றி**
**இனிதுமுடியும் என்மனார் புலவர்"**

என்பர்.

இதற்கு அமைவாக மாணிக்கவாசக சுவாமிகள் தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமானுக்கே வணக்கம் கூறுகின்றார். இங்கு அவர் வழிபடுகடவுளும் நூலுக்கு ஏற்புடைக் கடவுளும் சிவபெரு மானாகவே இருப்பது தனிச்சிறப்பு ஆகும்.

மங்கல மொழி முதலாக வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு இணங்க நமச்சிவாய என மங்கல எழுத்தாகிய "ந" வில் தொடங்குகின்றார். "ந" என்பது ஒரு எழுத்து மட்டுமல்ல அது சொல்லும் ஆகும். இங்கு திருவாசகமும் திருவைந்தெழுத்தும் என்னும் எங்கள் சிந்தனைக்கு அமைவாக "ந" என்பது திருவாசகத்தின் முதல் எழுத்தாகவும் நமசிவாய எனும் திருவைந்தெழுத்தின் முதல் எழுத்தாகவும் இருக்கும் ஞான இரகசியத்தை நாம் உணர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முதலில் வாழ்த்துக் கூறும்பொழுது சிவபெருமானுடைய நாமமாகிய **"நமச்சிவாய வாழ்க"** என்றும் அவருடைய மந்திரத் திருமேனியாகிய **"நமசிவாய"** வாழ்க என்றும் பொருள் கொள்ளமுடியும்.

**"நமச்சிவாய"** என்பது சிவபெருமானின் நாமம் **"நமசிவாய"** என்பது சிவபெருமானுக்குரிய மந்திரம்.

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலாத சிவபெருமான் நமச்சிவாய என்னும் நாமத்தையும், நமசிவாய எனும் மந்திர உருத்தையும் உடையவர் என்பது இங்கு பெறப்படும்.

பெருமானுடைய நாமத்தை விழித்து வாழ்த்தியவுடனே அவருடைய திருமேனி மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அகக் கண்ணில் காட்சியளிக்கிறது. உடனே **"நாதன்தாள் வாழ்க"** எனப் பெருமானுடைய திருவடிகளுக்கு வாழ்த்துக் கூறுகின்றார்.

நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க என்றவர் தொடர்ந்து **"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"** என்கின்றார். சிவபெருமானுடைய திருவடிகளை இமைப் பொழுதும் தவறாமல் தன் உள்ளத்தில் நினைபவரே **"சிவனடியார்"** எனப்படுவர். அவருக்கே சிவபெருமான் அகத்தில் காட்சி கொடுப்பார். அவர்களே எங்கும் நிறைந்திருக்கும் சிவபெருமானை என்னேரமும் கண்டு கொண்டு இருப்பர். அவர் சிவமயமாய் இருப்பர்.

சிவபுராண மங்கல வாழ்த்தில் வருபொருள் உரைத்தல் என்பது இருவிதமாகச் சொல்லப்படுவதை நோக்கலாம். ஒன்று நூல் அமைப்பு மற்றையது நூற்பயன்.

நூல் அமைப்பு 658 பாடல்களைக் கொண்டது. இதனை நமச்சிவாய வாழ்க எனத் தொடங்கி **வாழ்க** என **ஆறு** தரமும், வேந்தனடி வெல்க எனத் தொடங்கி **ஐந்து** தரம் **வெல்க** எனவும், ஈசனடி போற்றி எனத் தொடங்கி **எட்டுத்** தரம் **போற்றி** எனவும் கூறி இருப்பதைக் கொண்டு **658** பாடல்களை உடையது இந் நூல் என்பதை உள்ளுறையாக உணர்த்தும் அருமைப் பாட்டையும் நயந்து வியக்க முடிகிறது.

மங்கல வாழ்த்தில் நூற்பயனையும் சொல்லக் காணலாம் என்தபற்கேற்பச் சிவபுராணத்தின் நிறைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

எனச் சொல்வதைக் கொண்டு திருவாசகத்தைப், பொருளுணர்ந்து சொல்லுவார் சிவனடி சேர்வர் என நூற்பயனையும் சொல்வதைக் காணலாம்.

இந்த நூற்பயன் உண்மை மாணிக்க வாசகருக்கே சித்தித்தது என்னும் இரகசியத்தையும் அவரின் வரலாறு கொண்டு காணமுடிகிறது. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகப் பாடல் 658 ஐயும் பொருளுணர்ந்து தில்லையிலே பாடினார். அதனைத் தில்லைப் பெருமானே ஒரு வேதியராக வந்திருந்து கேட்டு எழுதினார். அது மறுநாள் தில்லைப் பெருமானின் திருவடியின் கீழ் இருப்பதைப் பூசைக்கு வந்த தில்லைவாழ் அந்தணர்கள் கண்டுடெடுத்தார்கள். அதன் பொருளைத் தமக்கு உரைக்குமாறு கேட்டார்கள். சொல்ல முடியாது காட்டுகிறேன் பாருங்கள் எனக் கூறி, தில்லையம் பலத்துட் சென்று ஆடும் பெருமான் திருவடியில் இரண்டறக் கலந்தார்.

இந்த உண்மையை **"சிவபுராண நிறைவிலே சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வர்"** எனும் மாணிக்கவாசகரின் வாக்கே அவர் வாழ்வில் பலித்ததையும், இதுவே திருவாசக நூற்பயன் என்பதையும் எண்ணி மகிழ முடிகிறது.

பஞ்சாட்சரப் பதிகம் பாடிய ஞானசம்பந்தப் பெருமான்

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்நெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்பதைக் கொண்டு நாதன் நாமம் **நமச்சிவாய** என்பதையும் அது வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆகும் என்பதையும் அதனைக் காதலாகி உள்ளம் கசிந்து கண்ணீர் மல்கப் பாட வேண்டும் என்பதையும் அப்படிப் பாடினால் நன்னெறி ஆகிய முத்திப்பேறு கிடைக்கும் என்பதையும் அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் இக் கூற்றுக்கு இலக்கியமாகத் தன் திருவாசகத்தில் நமச்சிவாய எனத் தொடங்கிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடிச் சிவபெருமானின் திருவடிப் பேறெய்தியதை உணரமுடிகிறது.

திருவைந்தெழுத்து **மந்திர நாயகம்** எனப் போற்றப்படும். மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் நாயகமாக இருப்பதை உமாபதி சிவாசாரியார் தன் திருவருட்பயனில்

**அருள் நூலும், ஆரணமும் அல்லாதும் ஐந்தின்**
**பொருள்நூல் தெரியப்புகின்**

என்பார். இதன் பொருள் சைவ ஆகமங்களும் வேதங்களும் உபநிடதம் முதலிய ஞான நூல்களும் ஐந்தெழுத்தின் பொருளுணர்த்தும் நூல்களாம். இவ்வைந்தெழுத்தை ஆராயின் அவைகள் எல்லாம் இதில் அடங்குதல் புலப்படும் என்பதாகும். ஆகவே மாணிக்கவாசக சுவாமிகள் தனது ஞான நூலாகிய திருவாசகத்தை மந்திரநாயகமாகிய ஐந்தெழுத்தின் முதல் எழுத்தில் தொடங்கிய இரகசியம் நாம் உணர்ந்து போற்றத் தக்கது.

இனி, சிவபெருமான் தில்லை மன்றிலே ஐந்தெழுத்தின் மந்திரத் திருமேனி கொண்டு ஐந்தொழில் ஆடல் புரிகிறார் எனும் உண்மையையும் உணரமுடியும். உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த சாத்திரம் இதனை

**"ஆடும்படி கேள்நல் அம்பலத்தான் ஐயனே**
**நாடும் திருவடியிலே நகரம் - கூடும்**
**மகரம் உதரம் வளர்தோள் சிகரம்**
**பகரும் முகம் வாமுடியப்பார்"** என்கின்றது.

நகரத்தைத் திருவடியாகவும், மகரத்தை வயிறாகவும், சிகரத்தைத் தோளாகவும், வகரத்தை முகமாகவும், ய வை முடியாகவும் மந்திரத் திருமேனி கொண்டு ஆடுகின்றார் என்பது பெறப்படும்.

(ந - திருவடி, ம - வயிறு, சி - தோள், வ - முகம், ய - முடி)

திருவைந்தெழுத்தினை அவரவர் பக்குவ நிலைக்கேற்ப நமசிவாய என்றும் சிவாயநம வென்றும் இருவிதமாகவும் ஓதலாம். நமசிவாய என்பது தூல பஞ்சாட்சரம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம் என்றும் சொல்லப்படும். உலகநலம் வேண்டுவோர் தூல பஞ்சாட்சரத்தையும், முத்திப் பேறு வேண்டுவோர் சூக்கும பஞ்சாட்சரத்தையும் ஓதுவர்.

மாணிக்கவாசக சுவாமிகள் உலகத் துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதற்காகத் திருச்சதகத்தில்

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறம் எனைப் போக்கல்கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய ஜெயஜெய போற்றி போற்றி

எனப் பாடுகின்றார். இறையருள் சித்தித்தபோது திருவேசறவில்.

நானேயோ தவம் செய்தேன்
சிவாய நமவெனப் பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென துள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாகும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே

எனப் பாடுவதிலிருந்து சிவாயநம என்பதே முத்தி பஞ்சாட்சரம் என்பதை உணர்கிறோம். தூல பஞ்சாட்சரம் ஆகிய நமசிவாய ஊனகடனம் என்றும், சூக்கும பஞ்சாட்சரம் ஆகிய சிவாயநம ஞானகடனம் என்றும் சொல்லப்படுவதை இங்கு நாம் தெரிந்து கொள்ளலாம்.

சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தையோ முத்திக்கரை சேர்க்கும் தோணியாகக் கொண்டு திருவருள் பெற்றேன் என மாணிக்கவாசக சுவாமிகள் திருச்சதகத்தில் குறிப்பிடக் காணலாம்.

நான் பிறவியாகிய கடலில் வீழ்ந்து துன்பமாகிய திரைகளால் தள்ளுண்டு பற்றுக்கோடு ஒன்றுமில்லாமல், பெண்ணாசை என்னும் காற்றால் கலக்குண்டு, ஆசையாகிய சுறாவின் வாயில் அகப்பட்டு இனிநான் தப்ப வழிதான் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தவித்தவேளை பெருமானே திருவைந்தெழுத்தையே புணையாக (கரைசேர்க்கும் தெப்பமாக) பிடித்துக்கிடந்தேன். உன்னையே அடைக்கலமாகக் கொண்ட எனக்கு முத்திக் கரையைக் காட்டி ஆட்கொண்டாய் எனப் பாடுகின்றார்.

தனியனேன் பெரும்பிறப் பெறவத்து எவ்வத்
தடத்திரையால் எற்றுண்டு பற்றொன்றின்றிக்
கனியைனேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறாவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமாறு என்றென் றெண்ணி
ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்தமில்லா மல்லற் கரைகாட்டி
ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே

என்பது திருவாசகத்தில் திருச்சதகம்.

"தோத்திரத்திற்குத் திருவாசகம், மந்திரத்திற்குத் திருவைந் தெழுத்து" எனும் ஆன்றோர் வாக்குக்கேற்ப திருவாசகத்தைத் தோத்திரமாகவும், திருவைந்தெழுத்தை மந்திரமாகவும் ஓதி உய்தி பெறுவோம்.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய குரவர்களின் சிதம்பர தரிசனம்

சைவசமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வருமே எங்கள் சைவசமயத்தை காத்து மறு மலர்ச்சி ஏற்படுத்தியவர்கள். இவர்கள் தங்கள் திருப்பதிகங் களாலும், தலயாத்திரைகளினாலும், சைவசமய வாழ்விய லாலும், செய்த அற்புதங்களினாலும் சைவத்தை மேலோங்கச் செய்தார்கள்.

நால்வரும் சிதம்பர தரிசனம் செய்து பதிகங்களைப் பாடிப் பக்தியை மேம்படுத்தினார்கள். கோயில் என்றாலே சைவர்களுக்குச் சிதம்பரம்தான் நினைவுக்கு வரும். 51 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த சிதம்பரம் கோயில் மிகவும் விசாலமானது. நான்கு திசைகளிலும் 135 அடி உயரமான அற்புதச் சிற்பவேலைப்பாடுகள் அமைந்த இராசகோபுரங்கள் கெம்பீரமாகக் காட்சி அளிக்கின்றன. இங்கு தரிசனம் செய்ய வந்த சமயகுரவர்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு திக்குக் கோபுர வாசல்களினூடாக வந்து வழிபாடாற்றி இருப்பது தனிச்சிறப்பு ஆகும்.

**தெற்குக் கோபுரவாசல் வழியாகத் திருஞானசம்பந்தரும்**
**மேற்குக் கோபுரவாசல் வழியாகத் திருநாவுக்கரசரும்**
**வடக்குக் கோபுரவாசல் வழியாகச் சுந்தரரும்**
**கிழக்குக் கோபுரவாசல் வழியாக மாணிக்கவாசகரும்**

சென்று வழிபாடாற்றிப் பதிகங்கள் பாடியதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆலயம் அமைந்துள்ள ஊர் தில்லை எனவும் சொல்லப்படும். முற்காலத்தில் தில்லை மரங்கள் நிறைந்த காடாக இருந்ததால் **"தில்லைவனம்"** எனச் சொல்லப்பட்டது. இப்பொழுது தில்லை, பூலோக கயிலாயம், சிதாகாசத்தலம், பெரும்பற்றப் புலியூர், ஞானாகாசம், புண்டரீகபுரம் எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

பஞ்சபூதத் திருத்தலங்களில் இது ஆகாசத்தலம். அதனால் சித் + ஆகாசம் = சிதாகாசம் என்றும் ஞான ஆகாசம் என்றும் பெயர்கள் வந்தன. புலிக்கால் முனிவரான வியாக்கிரபாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அதீத பக்தி கொண்டு பூசிதம் செய்த தலமாதலால்”பெரும்பற்றப் புலியூர் எனப்படுகிறது.

இறைவன் - நடராசர், இறைவி - சிவகாமசுந்தரி, தலமரம் - தில்லை, ஆல், தீர்த்தம் - சிவகங்கை ஆகும். திருஞான சம்பந்தர் இரண்டு பதிகங்களும், திருநாவுக்கரசர் எட்டுப் பதிகங்களும், சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு பதிகமுமாகப் 11 தேவாரப் பதிகங்கள் உள. மாணிக்கவாசகர் இருபத்தைந்து பதிகங்களில் திருவாசகம் பாடியுள்ளார். தில்லை பாதி, திருவாசகம் பாதி என்பது பழமொழி. இது தில்லைவாழ் அந்தணர்களுக்கு உரிமையுடைய கோயில்.

எல்லாக் கோயில்களிலும் அர்த்தசாமப் பூசை வழிபாடு முடிந்தவுடன் சிலைகள் அனைத்தும் இந்த மூலத்தான இலிங்கத்தில் வந்து ஒடுங்குவதால் திருமூலட்டானம் என்று பெயர். அதனால் இங்கு அர்த்தயாமவழிபாடு மிகச் சிறப்புடைய தாகும். இந்தக் கோயிலுக்குள் ஐந்து சபைகள் உள்ளன. அவை

1. சிற்றம்பலம்
2. பொன்னம்பலம்
3. பேரம்பலம்
4. நிருத்தசபை
5. இராசசபை என்பனவாகும்.

1. **சிற்றம்பலத்தில்** நடராசப் பெருமான் தெற்கு நோக்கி நடனக் கோலத்துடன் காட்சி கொடுக்கிறார். சித் என்றால் ஞானம் அம்பலம் என்றால் வெளி. ஆகவே சிற்றம்பலம் என்பது ஞானவெளியெனப் பொருள்படும். மேலே பொன்னால் வேயப்பட்டுள்ளது. உயர்ந்த பகுதி பக்க வாசல்வழியாக ஐந்து படிகள் ஏறிச்செல்ல வேண்டும். இது பஞ்சாக்கரப்படி எனப்படும். இப்படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் உள்ளன. மெய்கண்டசாத்திரங்களில் ஒன்றை இப்படியில் வைத்தபோது இப்படிகளில் உள்ள யானை அதைத் தன் துதிக்கையால் எடுத்து நடராசப் பெருமான் திருவடிகளில் வைத்தது. அதனால் அந்த நூல் திருக்களிற்றுப் படியார் எனப் பெயர் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசரின் வலதுபுறம் சிதம்பரகமியம் உள்ளது. இங்கு பொன்னாலான வில்வதளங்கள் தொடுகின்றன. நடரா சருக்குத் தீபாராதனை முடிந்ததும் சிவாசாரியார் இதற்குத் தீபம் காட்டுவார். இத்தலம் ஆகாயத்தலம் ஆதலால் ஞான வெளியைக் காணலாம். இதுவே சிதம்பர இரகசியம் ஆகும். இடதுபுறம் சிவகாமி அம்மையார் நடராசரின் திரு நடனத்தைப் பார்த்தவண்ணம் நிற்கிறார்.

2. **பொன்னம்பலம்** என்னும் கனகசபை சிற்றம்பலத்தின் முன்பக்கம் உளது. இங்கு நடராசருக்கு அபிஷேகம் செய்யப்படும் இடம். ஒவ்வொரு நாளும் ஸ்படிகலிங்கத்திற்கு ஆறுகாலப் பூசையும், இரண்டாவது சாமத்தில் ரத்ன சபா பதிக்கு அபிஷேகமும் நடைபெறுகிறது. பொன்னால் வேயப்பட்டுள்ளதால் இது பொன்னம்பலம் எனப்படுகிறது.
3. **பேரம்பலம்** எனப்படும் தேவசபை பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளி உள்ள இடம்.
4. **நிருத்தசபை** நடராசரின் கொடிமரத்துக்குத் தென்புறம் உள்ளது. நடராசர் **ஊர்த்துவ** தாண்டவம் செய்த இடம் இது.
5. **இராசசபை** - இதுதான் ஆயிரங்கால் மண்டபம் ஆனி உத்தரத்திலும் மார்கழித் திருவாதிரையிலும் நடைபெறும் ஒன்பதாம் நாள் திருவிழாவில் நடராசப் பெருமான் திருத்தேரில் எழுந்தருளி நான்கு வீதிகளிலும் உலாவந்த பின்னர் இரவில் இந்த இராசசபையில் வீற்றிருந்து விடியற் காலம் அபிஷேகம் கொண்டருளப்பெற்றுப் பத்தாம் நாள் பிற்பகலில் பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்குக் காட்சி யளித்து பெருமான் முன்னாகவும் பெருமாட்டி பின்னாகவும் மாறி மாறி நடனம் ஆடிச் சிற்றம்பலத்துக்கு எழுந்தருளம் நிகழ்வு இச்சபையில்தான் நடக்கிறது.

மாணிக்கவாசக சுவாமிகள் ஈழத்துப் புத்தர்களுடன் வாதிட்டு வென்று அவர்களை ஊமைகளாக்கியதும் மன்னனின் ஊமைப் பெண்ணைப் பேசவைத்ததும் இச்சபையில்தான்.

சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணம் பாடுதற்கு **"உலகெலாம்"** என அடியெடுத்துக் கொடுத்துப் பாடச் செய்து ஒரு சித்திரைத் திருவாதிரை தொடக்கம் அடுத்த வருடச் சித்திரைத் திருவாதிரை வரையில் அரங்கேற்றம் நிகழ்ந்ததும் இச்சபையில்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபூதத் தலங்களில் சிதம்பரம் ஆகாயத்தலமாகவும் நடராசர் நடனமாடும் பஞ்சசபைகளில் பொற்சபையாக விளங்குவதும், முத்தித் தலங்களில் தரிசிக்க முத்தி தருவதும் ஆறு ஆதாரத் தலங்களில் அநாகதம் எனப்படும் இதயத் தானமாக விளங்குவதும், இறைவன் ஆடிய ஏழு வகைத் தாண்டவங்களில் ஆனந்தத் தாண்டவம் ஆடிய சபையாவதும் இச்சிதம்பரம்தான்.

நடராசப் பெருமானுக்கு விஷேட அபிஷேகங்கள் வருடத்தில் ஆறு முறை நடைபெறுகின்றன. அவை சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், ஆவணிப் பூர்வபக்கச் சதுர்த்தசி, புரட்டாதிப் பூர்வபக்கச் சதுர்த்தசி, மார்கழித் திருவாதிரை, மார்கழிப் பூர்வபக்கச் சதுர்த்தசி என்பனவாகும்.

இங்கு மூலட்டானக் கோயில், திருச்சிற்றம்பலம் என்னும் இரு இடங்களில் இறைவனும் இறைவியும் எழுந்தருளி இருக்கின்றனர். சிவகங்கைத் தீர்த்தத்துக்கு வலது பக்கத்தில் சிவகாமசுந்தரிக்குத் தனிக் கோயில் உள்ளது.

உமாபதி சிவாசாரியார், திருநீலகண்ட நாயனார் அவதரித்ததும், மாணிக்கவாசக சுவாமிகள், மறைஞான சம்பந்தர், திருநாளைப்போவார் முத்தி அடைந்ததும் இத்தலத்தில்தான்.

திருஞானசம்பந்தர் சிதம்பர தரிசனம் செய்து தன்னை மறந்த பரவசராகிப் பதிகம் பாடினார். தனது பதிகத்தில்

**செல்வநெடுமாடம் சென்று சேணோங்கி**
**செல்வமதிதோய செல்வம் பலமேய**
**செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய**
**செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே**

எனப் பொருட்செல்வமும் அருட்செல்வமும் பொலிந்து விளங்கும் தில்லைப்பதியில் எழுந்தருளி இருக்கும் பெருமானை வணங்கக் கிடைத்ததே பெறுதற்கரிய பெருஞ்செல்வம் என விளக்குகின்றார்.

அப்பர் பெருமான் தில்லைப்பதியின் மேலைவாயில் வழியாக உட்புகுந்து சிவமே நிலவிய திருவீதியைத் தொழுது வலங் கொண்டு எழுநிலைக் கோபுரத்தை இறைஞ்சிப் பொன் மாளிகையினை வலம்வந்து கனகசபையினைக் கண்டு மன்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் அண்ணலார் திருமுன் அணைந்தார். அப்பொழுது கூத்தப்பிரான் அப்பரை நோக்கி **"என்று வந்தாய்"** என வினவும் அருள்நோக்கத்துடன் காட்சி கொடுத்தருளினார். மன்றாடும் ஐயன் திருக்கூத்தை எதிர்கொண்டு ஆர்வமுறக் கும்பிட்டுக் **"கருநட்ட கண்டனை"** எனும் திருவிருத்தம் பாடிப் போற்றினார். கூத்தப்பிரான் தம்மை நோக்கி என்று வந்தாய் என வினவிய அருட்குறிப்பினை

**ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லை**
**கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காய்ச்**
**சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்**
**என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே**

என இத்திருப்பதிகத்தின்கண் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இறைவன் என்று வந்தாய் என வினவிய வினாவுக்கு விடை கூறுவதுபோல

**பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி**
**எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழ வேண்டாம்**
**முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடுகின்ற**
**அத்தாவுன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே**

என வரும் திருநேரிசை பாடித் துதித்தார். தில்லைத் திருமுன்றிலும் திருவீதிகளிலும் உழவாரத் தொண்டு செய்து வழிபட்டார். **"அன்னம்பாலிக்கும்"** என்னும் திருக்குறுந்தொகை பாடி மகிழ்கின்றார்.

**அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை**
**என்அன்பு ஆலிக்கும்மாறு கண்டு இன்புற**
**இன்னும் பாலிக்குமோ இப்பிறவியே**

தில்லைச் சிற்றம்பலத்தில் எந்நாளும் அன்னம் பாலிக்கின்றது. பொன்னும் பாலிக்கின்றது. என் அன்பும் பாலிக்கின்றது. இந்த அருள் வெள்ளத்துள் திளைத்து இன்புற எனக்கு இன்னும் பிறவி பாலிக்குமோ என்று ஏங்குகின்றார்.

அம்பலவன் ஆடல் கண்ட ஆனந்தத்துடன் மேலும் ஒரு திருவிருத்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனயிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

எனப் பாடி மகிழ்ந்தார்.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை எனத் தொடங்கும் பெரிய திருத்தாண்டகமும் பாடி இன்புற்றார்.

வடக்குக் கோபுரவாயில் வழியாகச் சிதம்பரத் திருக் கோயிலினுள்ளே சென்ற சுந்தரர் பெருமதில் சூழ்ந்த செம்பொன் மாளிகையின் நடுவே மேருமலை போன்று ஒளியுடன் விளங்கும் பேரம்பலத்தை வலம் செய்து வணங்கினார். ஞானமயமாய் உள்ள திருச்சிற்றம்பலத்தின் முன்னுள்ள திருவணுகத் திருவாயிலை அடைந்தார். உலகெலாம் இன்புற மன்றுளே கூத்து இயற்றும் கூத்தப் பெருமானைக் கண்டு அன்பு மீதூரத் தலைமீது குவித்த கையினராய் திருக்களிற்றுப் படியின் முன்னே வீழ்ந்து வணங்கினார்.

தன்னுடைய ஐம்பொறிகளின் அறிவெலாம் கண்களாகிய ஒரு பொறியிலே அடங்கவும், அந்தக்கரணங்கள் நான்கும் சிந்தையில் அடங்கவும், முக்குணமும் சாத்வீக குணத்தில் அடங்கவும் எம்பெருமான் ஆடுகின்ற எல்லையற்ற ஆனந்த நடனத்தைக் கண்டு பேரின்ப வெள்ளத்துள் திழைத்து மகிழ்ந்தார். இக்காட்சியினைச் சேக்கிழார் சுவாமிகள் திருத் தொண்டர் புராணத்திலே

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில்
தனிப் பெருங்கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திழைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

என்று பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் எம்பெருமானால் திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்டு உத்தரகோசமங்கை, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், சீர்காழி, திருவாரூர் ஆகிய தலங்களில் பெருமானை வழிபட்டு மாணிக்க வாசகங்களைப் பாடி வணங்கி ஈற்றில் சிதம்பரத்துக்கு வந்து அங்கேயே ஒரு பர்ணசாலை அமைத்துத் தினமும் பெருமானை வணங்கிப் பாடி மகிழ்ந்திருந்தார். கூத்தப்பெருமான் மீது 25 திருவாசகப் பதிகங்களைப் பாடி அழுது தொழுது ஆனந்தங் கொண்டு இருந்தார்.

ஒருநாள் ஒரு வேதியர் வந்து அவர் பாடிய திருவாசகப் பாடல்களைக் கேட்டு ஏட்டில் எழுதிச் சென்றார். மறுநாள் அந்த ஏட்டுக்கட்டு நடராசப் பெருமான் திருவடிகளின் கீழே இருப்பதைக் கண்ட தீட்சிதர்கள் அவரை வணங்கி இந்த அதிசயத்தைக் கூறி எம்பெருமானே வேதியராக வந்து தான் பாட எழுதிய இத்திருவாசகப் பொருளைத் தமக்கு உரைக்க வேண்டும் எனக் கேட்டு நின்றனர்.

மாணிக்கவாசக சுவாமிகள் இத்திருவாசகப் பொருள் தில்லை நடராசரேயாவார். காட்டுகின்றேன் காணுங்கள் எனக் கூறி கைகாட்டிய வண்ணம் உள்ளே சென்று நடராசப் பெருமானுடன் இரண்டறக் கலந்துவிட்டார். இச்செய்தியைத் திருவாதவூரடிகள் புராணத்தில் கடவுள் மாமுனிவர்

**செய்காட்டும் கமுகடவித் தில்லையுள் ளார் பொருள்கேட்ப**
**கைகாட்டித் தன்னுருவம் காட்டாமல் மறைந்தாரைப்**
**பைகட்டும் பேரரவப் புணியுடையார் தமக்கன்பு**
**மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராயினார்**

எனக் கூறுகின்றார்.

தரிசிக்க முத்திதரும் சிதம்பரம் இன்றும் பூலோக கயிலாயமாக அடியார்க்கு ஆனந்தம் தரும் திவ்ய தலமாகயிருத்தலைக் காணலாம்.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்

சைவசமயத்தவரால் கோயில் எனச் சிறப்பிக்கப்படும் தனிப் பெருங்கோயில் சிதம்பரம். பாரத புண்ணிய பூமியில் நாயன்மார் அவதரித்த செந்தமிழ் நாட்டில் உள்ள இத்தலம் சமய குரவர் களால் பாடல்பெற்ற அற்புதத் திருத்தலமாகும். இந்தச் சிவத் தலத்தில் சிவகாமி அம்மையார் பார்த்து நிற்க சிதம்பர நடராசப் பெருமான் நித்திய சதானந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டிருக் கின்றார். இந்தத் தெய்வீகத் தலம் சைவ சித்தாந்த தத்து வங்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கியதாகச் சைவ சித்தாந் தத் திருக்கோயிலாகத் திகழ்கிறது. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்பதற்கிணங்க அண்டமாகிய பிரபஞ்சத்தையும், பிண்டமாகிய நமது மனித உடலையும் ஒன்றுபடுத்தும் அற்புத இரகசியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

காலத்தால் முந்தியதும், தோத்திரமும் சாத்திரமுமாக விளங்குவதுமான திருமூலர் திருமந்திரத்தில்

**மானுடன் ஆக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுடன் ஆக்கை வடிவு சிதம்பரம்**
**மானுடன் ஆக்கை வடிவு சதாசிவம்**
**மானுடன் ஆக்கை வடிவு திருக்கூத்தே** (1726)

எனச் சொல்லுகின்றார்.

மனித உடம்பு சிவலிங்க வடிவம் ஆகும். மனித உடம்பு சிதம்பரம் என்னும் கோயிலாகும். மனித உடம்பு சிவமும் சக்தியும் சேர்ந்த சதாசிவம் ஆகும். மனித உடம்பின் ஒவ்வோர் அசைவும் தில்லைச் சிற்றம்பல திருநடனமே ஆகும். பிண்டம் உடம்பு. அது பிண்டலிங்கம் எனப்படும். மனித உடம்பு சிவலிங்க வடிவம் கொண்டது. தலை ஆவுடையாருடன் இணைந்த பாகம். உடம்பு ஆவுடையார். எனவே உடம்பு சிவலிங்க வடிவம் ஆகும். சிதம்பரம் என்றால் கோயில் என்பது பொருள். உடம்பு இறைவனுடைய கோயில். எனவே சிவலிங்க வடிவம் ஆகும். அது உருவான சதாசிவத்தால் அறிவும் ஆற்றலும் பெறுகிற உடம்பு சக்தியும் சிவமும் சேர்ந்த சதாசிவம். உடலின் அசைவு ஒவ்வொன்றும் ஒரு நடனம் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாலும் உடலின் அசைவினாலேதான் உயிர் உடலுடன் இருப்பதாலும் உடம்பு திருக்கூத்து எனப்பட்டது. இவ்வுண் மையை இன்னுமோர் மந்திரத்தில் திருமூலர்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே (1823)

என்கின்றார்.

உள்ளமாகிய மனம் கருவறை. ஊனுடம்பு மண்டபங்களுடன் கூடிய ஆலயம். ஆருயிர்களுக்கு அருளை வாரி வழங்குகின்ற வள்ளலாகிய பரம்பொருளைச் சென்று வழிபட வெளிவாசல் கோபுரவாசல் வாய். அறிவு விளக்கம் பெற்று அறியாமை இருளகன்று தெள்ளத் தெளிவான மனநிலை வாய்க்கப் பெற்றவர்க்கு உயிரே வழிபட்டு வணங்கத்தக்க சிவலிங்கம். உடலில் பொருந்தியுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களும் கோயிலின் ஐந்து பெரிய அழகிய மணிவிளக்குகள்.

கோயிலின் அமைப்பைப் பார்க்குமிடத்து ஒரு ஞானி படுத்திருக்கும் உடல் அமைப்புப் போல இருப்பதை ஒப்பீடு செய்து பார்க்கலாம். அவரின் தலைதான் கோயிலின் கருவறை. தலைக்குள்தான் உடலை இயக்குகின்ற மைய நரம்புத் தொகுதியாகிய மூளை இருக்கிறது. அதுபோல கருவறையுள் தான் உலகை இயக்குகின்ற மூலமூர்த்தி இருக்கின்றார். தலைக்குக் கீழ் கழுத்து ஆகிய கண்டம் போல அர்த்த மண்டபம் என்னும் அந்தராள மண்டபம் இருக்கிறது. தலையாகிய கருவறையிலும் ஒடுங்கிய தாயும், ஒலிபிறக்கும் தன்மையுடையதாயும் இருக்கும். அந்தராள மண்டபத்தில் நின்றுதான் பூசைகளின் மந்திரநாதம் பிறக்கிறது.

அடுத்து அகன்ற மார்பறை போன்ற அமைப்பில் மகா மண்டபம் இருக்கிறது. உடலை இயக்கும் இதயம் இருப்பது போல மகாமண்டபத்தில்தான் உயிரினம் அனைத்திற்கும் எழுந்தருளி வந்து அருள்புரியும் எழுந்தருளி மூர்த்தி இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து உடலில் இருப்பது தொப்புழ்த்தானமான வயிற்றறை, தொப்புழ்த்தானமான ஸ்தம்ப மண்டபம் நந்தி பலிபீடங்களுடன் இருக்கிறது. கருவிலே இருக்கும் காலத்தில் குழந்தைக்கு ஊட்டமளித்து உயிர்பிரியும் இறுதிநேரம் வரை இயங்குகின்ற தொப்புழ்க் கொடி போல உயிர்களை வாழ்வித்து அருள்பாலிக்கும் கொடித்தம்பத்துடன் கூடிய தம்ப மண்டபம் விளங்குகிறது. நிமிர்ந்து படுத்திருக்கும் ஞானியின் பாதங்கள் போல உயர்ந்து விளங்குகிறது கோபுரவாசல். உடலுக்கு அன்னமய கோசம், மனோமய கோசம், பிராணமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என ஐந்து கோசங்களாய உறைகள் ஒன்றையொன்று சூழ்ந்து உடலாக இருப்பது போலக் கோயிலைச் சுற்றி ஐந்து பிரகாரங்கள் ஆகிய வீதிகள் இருக்கின்றன. எனவே கோயில் போலவே நமது உடலும் அமைந்திருக்கும் அற்புதமாகிய கோயிலில் உள்ளது எல்லாம் பிண்டமாகிய நமது உடலில் அமைந்திருப்பதை யுணர்ந்து உள்ளத்தின் உள்ளேயே இறைவனைக் காண வேண்டுமென அருளாளர்கள் பாடி வைத்துள்ளார்கள். தாயுமான சுவாமிகள்

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்

அன்பு மஞ்சனநீர் பூசைகொள்ள

வாராய் பராபரமே - எனத் தனது பராபரக் கண்ணியில் பரம்பொருளைப் போற்றி அழைக்கின்றார்.

மானுடர் ஆக்கை கோயில் எனப் பொதுவாகக் கண்டோம். இனி மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம் எனும் நுட்பத்தைக் காண்போம்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்றபடி பிண்டமாகிய உடலின் நடுவில் இதயம் இருப்பதுபோல அண்டமாகிய உலகின் காந்தக் கோட்டின் நடுவில் சிதம்பரம் இருக்கிறது. இதயம் எந்நேரமும் துடித்துக்கொண்டிருந்து உடலை இயங்கச் செய்வதுபோல சிதம்பரத்தில் நடராசர் ஆனந்த நடனம் ஆடிக் கொண்டே இருக்கிறார். இதயம் இயங்காவிட்டால் உடல் செயலற்றுவிடும். நடராசர் ஆடாவிட்டால் உலகம் இயங்காது. அப்பர் சுவாமிகள் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" எனப் பாடுவதுபோல நடராசர் சிதம்பரத்தில் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிக்கொண்டே நம்மையும் ஆட்டுகின்றார். அண்டத்தில் அவர் ஆடும் திருக்கூத்துத்தான் பிண்டத்திலும் நமது உடலினுள்ளும் நடக்கிறது. இதனை ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கலாம்.

- ❖ மனித உடலில் சுகதேகியாயுள்ள ஒருவர் நிமிடத்துக்குள் பதினைந்து முறை சுவாசிக்கின்றார். அதன்படி ஒரு நாளைக்கு நிமிடத்துக்குப் 15 தரப்படி 24 மணித்தியாலத் துக்கு (15× 60 x 24) 21,600 தரம் சுவாசம் நிகழ்கிறது. சிதம் பரத்தின் கூரைக்கு 21,600 பொன் ஓடுகள் கொண்டு வேயப்பட்டுள்ளமை என்ன பொருத்தம்.
- ❖ மனித உடல் 72,000 நாடிகள் கொண்டிணைக்கப்பட்டுள்ளது. சிதம்பரக் கூரைப் பொன்தகடுகள் 72,000 தங்க ஆணிகளால் பொருத்தப்பட்டுள்ளது.
- ❖ மனித உடலில் நெஞ்சறையில் சற்று இடதுபுறமாக இதயம் உள்ளது. அதேபோலப் பொன்னம்பலத்தின் வாயிலுக்குச் சற்று இடதுபுறமாக நடராசர் உள்ளார்.
- ❖ மனித உடலில் இதயம் எந்நேரமும் இயங்கிக்கொண்டு இருக்கிறது. பொன்னம்பலத்தில் நடராசர் எந்நேரமும் ஆடிக் கொண்டிருக்கின்றார்.
- ❖ மனித உடலில் உள்ள உயிர் இறைவனை அடைய பஞ்சாட்சரம் ஆகிய ஐந்தெழுத்தே படிநிலையாகவுள்ளது. பொன்னம்பலத்தில் ஏறப் பஞ்சாக்கரப் படிகள் ஐந்து உள்ளன.
- ❖ மனித வாழ்வை நான்கு வேதங்கள் வழிப்படுத்துகின்றன. கனகசபையை நான்கு தூண்கள் தாங்கிக்கொண்டு இருக் கின்றன.
- ❖ மனித வாழ்வை 28 சிவாகமங்கள் நெறிப்படுத்துகின்றன. பொன்னம்பலத்தில் 28 சிறு தூண்கள் உள்ளன.
- ❖ மனித வாழ்வை 64 கலைகள் வளப்படுத்துகின்றன. பொன் னம்பலத்தின் 28 தூண்களும் 64 பலகைகளால் பொருத்தப் பட்டுள்ளன.
- ❖ மனித உயிரை 9 நவசக்திகள் வாழ்விக்கின்றன. பொன்னம் பலத்தின் ஸ்தூபியில் 9 கலசங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மனித உடலுக்கு 9 வாயில்கள் உள்ளன. பொன்னம்பலத்துக்கும் 9 வாயில்கள் உள்ளன.

❖ மனித உடல் உருவமாகவும் உடலை இயக்கும் உயிர் அருவமாகவும் உடலும் உயிரும் சேர்ந்து இயங்குதல் அருவுருமாகவும் உள்ளன. சிதம்பரத்தில் நடராசர் உருவமாயும், சிதம்பர இரகசியம் அருவமாயும், மூலட்டானராகிய சிவலிங்கம் அருவுருவமாயும் அமைந்துள்ளன.

இத்தனை அதி அற்புதமான அமைப்புகளையும் முன் வைத்தே திருமூலர் தன் மந்திரத்தில்

மானுட ஆக்கைவடிவு சிதம்பரம் என்று சொன்னது எத்தனை பொருத்தம்.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் எங்கள் உடம்பினுள்ளும் உறைகின்றான். அவனை எங்களுக்குள்ளே காணலாம் என்பது அருளாளர்களின் வாக்கு. மானுட ஆக்கை வடிவு சிதம்பரம் என்று சொன்ன திருமூலர் இன்னோர் மந்திரத்தில்

**உடம்பால் அழியில் உயிரால் அழிவர்**
**திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பினை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பினை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே** (322)

என்கின்றார்.

உடம்பு அழிந்தால் உயிரும் அந்த உடலைவிட்டு நீங்கி விடும். பிறகு உயிருக்கு உறுதுணையான மெய்ஞ்ஞானமாகிய பரம்பொருள் சிந்தனையில் அவர்களால் ஈடுபடவும் முடியாது. எனவே உடம்பை அழியாது காத்திருக்கும் வழியைக் காண உடம்பை, அதிலுள்ள உயிரைக் காப்பதற்காகக் காப்பாற்றி வளர்த்து வரலானேன் என்கின்றார். மேலும் இந்த உடம்பை முன்னெல்லாம் இழுக்கென்று பாவச்சுமை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அப்படி நினைத்துக் கொண்டிருந்த நான் இந்த உடம்பினுக்குள்ளே மெய்ப்பொருளாகிய இறைவனைக் கண்டேன். உடம்பினுக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டு இருக்கின்றான் என்ற உண்மையை அறிந்தபின் இந்த உடம்பைப் பேணிப் பாதுகாத்து வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே

எனப் பாடியுள்ளார். எமக்குள்ளேயே நாம் இறைவனைக் காண வேண்டும் என்பதை

முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்கள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்

எனவும் பாடுகின்றார்.

இதனையே திருநாவுக்கரசு சுவாமிகளும் தனது திருவங்கமாலையில்

தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்

எனக்கண்டு பாடி ஆனந்தப்படுகின்றார்.

ஆதலால் நாம் எமது உடம்பு சிவன் இருக்கும் கோயில் என்பதை உணர்ந்து கோயிலை எவ்வளவு புனிதமாக வைத் திருக்கின்றோமோ அதேபோல எமது உடம்பையும் உள்ளும் புறமும் புனிதமாக வைத்திருக்க வேண்டும். அற நூலார் சொன்ன தீய செயல்களை விலக்கி நல்ல செயல்களைச் செய்து வாழவேண்டும்.

திருமூலர் சுவாமிகள் திருமந்திரம் அட்டாங்கயோகம் எனும் பகுதியில் செய்யக்கூடாத பாவச் செயல்கள் எவை, செய்ய வேண்டிய புண்ணியச் செயல்கள் எவை என்பதை வரை யறுத்துக் கூறுகின்றார். விலக்க வேண்டிய பாவச் செயல்களை இயமம் என்றும், செய்ய வேண்டிய புண்ணியச் செயல்களை நியமம் என்றும் கூறுகின்றார். இயமம் எனும் விலக்கப்பட வேண்டிய செயல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துணர்வான் மாசிலான் கள்காமம்
இல்லான் நியமத்திடை நின்றானே

என்கின்றார்.

கொலை, பொய், களவு, தீயகுணம், அடக்கமின்மை, பக்கம் சார்தல், ஈயாமை, குற்றம் செய்தல், காமம், கள்ளுண்ணல் முதலான தீய செயல்களைச் செய்யக் கூடாது. அதேவேளை செய்ய வேண்டியவை

தவம், செபம், சந்தோஷம், ஆத்திகம், தானம்
சிவன் தன் பிரதமே, சித்தாந்தக் கேள்வி
மகம், சிவபூசை, ஒன்மதி சொல் ஈரைந்து
நிவம்பல செய்யின் நிய மத்தனாமே

இங்கு பத்துப் புண்ணியச் செயல்களைச் சொல்கின்றார். தவம், செபம், மகிழ்வு, தெய்வநம்பிக்கை, கொடை, சிவ விரதம், முப்பொருள் உண்மை கேட்டல், யாகம் செய்தல், சிவபூசை, சோதி தரிசனம் எனச் சொல்லப்பட்ட பத்துப் புண்ணியச் செயல்களையும் செய்தல் வேண்டும்.

விலக்கியவற்றைச் செய்யாது ஒழித்தலும், விதித்தவற்றைச் செய்தலுமே இயம நியமங்கள் எனப்படுகின்றன. ஆதலால் நாம் இவற்றைக் கடைப்பிடித்து எங்கள் உடல் சிவன் இருக்கும் கோயில் என்பதையுணர்ந்து நற்கதி அடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனின் அட்டவீரட்டச் செயலும் உண்மைப் பொருளும்

சைவசமய உண்மைகளையும், வழிபாட்டு முறைகளையும், வாழ்வியல் முறைமைகளையும் நாம் அறிந்து கடைப்பிடித்து வாழ்வதற்கு வாய்ப்பாக எமது சைவசித்தாந்த மெய்கண்ட சாஸ்திரங்களும், சைவத் திருமுறைகளும், புராணங்களும் உள்ளன. சைவசித்தாந்த சாஸ்திரங்கள் மூலம் சைவசமய உண்மைகளை அறியலாம். சைவத் திருமுறைகள் மூலம் வழிபாட்டு முறைகளை அறியலாம். சைவப் புராணங்கள் மூலம் வாழும் முறையை அறியலாம்.

இவற்றில் புராணங்களே வாழ்க்கை முறைகளை வெளிப்படையாகக் காட்டுவன. வெளிப்பார்வைக்கு அவை கதைகள் போலத் தெரிந்தாலும் அவற்றின் உட்பொருளாகச் சமய தத்துவங்கள் இருப்பதை அறிஞர்கள் மூலம் ஆராய்ந்து அறிந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் பாயிரத்திலே இந்த உண்மையைக் கூறிவைத்துள்ளார்.

**பிறையணி சடைமுடிப் பிரான்தன் கதைகள்**
**இறையுமோர் மறுவில யாவும் உண்மையே**
**மறைபல சான்றுள வாய்மையே அவை**
**அறிஞர்கள் நாடியே அவற்றைக் காண்கவே**

என்பது அவர் கூற்று. இளம்பிறைச் சந்திரனுக்கு அடைக்கலம் கொடுத்துத் தன் சடைமுடியில் அணிந்துள்ள சிவபெருமானைப் பற்றிய கதைகளில் ஓர் இறையளவு சிறிய பிழைகளும் இல்லை. எல்லாம் உண்மையே. அதற்கு வேதங்களே சாட்சியாக உள்ளன. அதனை அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்து கடைப்பிடித்து வாழவேண்டும் என்பது அவர் கூற்று.

எங்கள் பன்னிரு சைவத் திருமுறைகளில் காலத்தால் முந்திய திருமுறைகளான திருமூலர் தந்த திருமந்திரம் சாத்திரமாகவும் தோத்திரமாகவும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது தந்திரங்களாக உள்ள இத் திருமந்திரத்தில் இரண்டாம் தந்திரத்தில் சில புராணக் கதைகளைக் குறிப்பிட்டு அக்கதைகளின் உண்மைப் பொருள்களை விளங்க வைக்கின்றார்.

முதலாவதாக அகத்தியம் என்னும் தலைப்பிலான புராணக் கதைகளையும், அதன் உண்மை விளக்கத்தையும் காட்டு கின்றார். அகத்தியம் என்பது அகத்திய முனிவர் பற்றிய புராணக் கதையையும், அகத்து இயம் எனப் பிரிந்து அகமாகிய உள்ளத்தினுள்ளே உள்ள நாதமாகிய ஞான ஒளிபற்றியதான உண்மையையும் உய்த்துணர வைக்கின்றார்.

**நடுவு நில்லா திவ்வுலகம் சரிந்து**
**கெடுகின்றது எம்பெருமா னென்ன ஈசன்**
**நடுவுள அங்கி அகத்திய நீபோய்**
**முடுகிற வையத்து முன்னில் என்றானே**

என்பது மந்திரம்.

**இதற்குரிய புராணக்கதை:**

பரமேஸ்வரனுக்கும் பார்வதிக்கும் கயிலாயத்திலே திருமணம் நடந்தது. அத்திருமணத்தைக் காணவெனத் தேவர்களும், முனிவர்களும், ஞானிகளும் மற்றும் சிவ கணங்களும் அங்கு கூடின. அதனால் பாரம் பொறுக்காமல் வடகையிலை தாழ்ந்தது. அச்சம் கொண்ட தேவர்கள் சிவனிடம் **"எம்பெருமானே இவ்வுலகம் நடுவு நில்லாமல் சரிந்து கெடுகின்றதே காத்தருள வேண்டும்"** என்று வேண்டினர். சிவபெருமான் அவர்களின் நடுவுள் நின்ற அருந்தவ ஞானியும், சகல கலை ஞானங்களைம் உணர்ந்தவருமாகிய அகத்தியரை அழைத்து அகத்திய நீ தெற்கிற்குச் செல், சரிந்து கெடுகின்ற இவ்வுலகத்தைச் சமன் செய் என்று அனுப்பிவைத்தார். அகத்தியர் தென்னாட்டுப் பொதிய மலைக்குச் சென்றார். அவருடைய தவஞானக் கனதியால் பூமி சமனானது. சிவபெருமான் தனது திருமணக் காட்சியை அகத்தியருக்குக் காட்டியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதன் உண்மைப்பொருள்:**

அக்கினி கலையாகிய நாதத்தைத் தினமும் ஒளிவடிவில் சாதனை செய்யும் சாதகனே அகத்தியன். அதாவது அகத்தில் தினமும் தீயை வளர்க்கும் அகத்தீயன் அகத்தியன். மூலாதாரத்திலுள்ள குண்டலினி என்னும் நாத ஒளியை மூலாதாரச் சக்கரங்களினூடாக மேலே எழுப்பி உச்சியில் உள்ள பிரமாந்திரத்தில் நிறுத்திச் சிவ ஒளியைத் தரிசிக்க வேண்டும். இவ்வுலகோர் அதைவிடுத்து நாத ஒளியைக் கீழே செலுத்தி உலக இன்பங்களில் மூழ்கி வாணாளை வீணாளாக் காமல் ஞான சாதகர்களாக்க வேண்டும் என்பதே உட்பொருள் ஆகும்.

திருமூலர் இரண்டாம் தந்திரத்தில் இரண்டாவதாகப் பதி வலியில் வீரட்டம் எட்டு என்னும் தலைப்பில் பதி ஆகிய இறைவன் தனது வலிமையாகிய வீரத்தால் வெற்றி கொண்ட எட்டு நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார்.

**திருக்கோவலூரில் அந்தகாசுரனை வதம் செய்ததும்**

**திருப்பறியலூரில் தக்கன் யாகத்தைத் தகர்த்ததும்**

**திருக்கண்டியூரில் பிரமன் தலை கொய்ததும்**

**திருவிற்குடியில் அந்தகாசுரனை வதம் செய்ததும்**

**திருவதிகையில் முப்புரங்களை எரித்ததும்**

**திருவழுவூரில் யானைத் தோலை உரித்ததும்**

**திருக்கடவூரில் காலனைக் காலால் உதைத்ததும்**

**திருக்குறுக்கையில் மன்மதனைத் தகனம் செய்ததுமாகிய**

எட்டு வீரச் செயல்களும் அட்ட வீரட்டம் எனவும் இச் செயல் கள் நிகழ்ந்த இடங்கள் அட்டவீரட்டச் செயல்கள் எனவும் புராணம் கூறும்.

இறைவன் கருணையே வடிவானவன். அவன் ஆன்மாக்களை உய்விப்பதற்காக அறநெறி தவறாதவர்களை அறக்கருணை யால் ஆட்கொள்வார். அறநெறி தவறியவர்களை மறக் கருணையால் தண்டித்துக் கொடியவர்களை அடியவர்களாக்கு வார். இச் செயல் பெற்றார் தம் மக்களில் நல்ல பிள்ளைகளை அன்பினாலும், தீநெறிச் செல்லும் பிள்ளைகளைக் கண்டித்தும் தண்டித்தும் திருத்துவது போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைதாய் பெற்றதத்தம் புதல்வர்கள் தம்சொலாற்றில்
வந்திடாவிடின் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இருவர் என்கை பார்த்திடில் பரிவேயாகும்
இந்தநீர் முறைமை அன்றோ ஈசனார் முனிவு தானும்

எனச் சிவஞானசித்தியார் கூறுகின்றது.

பெற்றார் தம் சொல் கேளாத பிள்ளைகளைக் கண்டித்தும் தண்டித்தும், தடுத்து வைத்தும் திருத்துவார்கள். இது பிள்ளைகள் மேல் கொண்ட வெறுப்பினால் அல்ல அன்பினாலே தான். இதனை மறக்கருணை என்பர். மறக்கருணை என்பது தண்டித்துத் திருத்தும் கருணையாகும்.

இறைவனும் இதேபோலத்தான் அறநெறி விட்டு மறநெறி சென்ற எட்டுப் பேரை வென்ற செயலே அட்டவீரட்டச் செயல் எனப்படுகிறது. எட்டுப் பேரும் அசுரர்கள். அவர்கள் மனித மனங்களில் இருக்கும் தீய குணங்களின் வடிவமாக உருவகிக்கப்பட்டுள்ளார்கள்.

முதலாவதாக அந்தகாசுரனைத் திருக்கோவலூரில் வதஞ் செய்த செய்தியைத் திருமூலர் சொல்கிறார்

கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத்து உயிர்களை எல்லாம்
வருத்தம் செய்தான் என்று வானவர் வேண்ட
குருத்துயர் சூலங் கைக்கொண்டு கொன்றானே (339)

இருள் வடிவான - அறியாமையே உருவானவன் அந்தகாசுரன் என்னும் அசுரன். அவன் சிவனை நோக்கிப் பெருந்தவம் செய்து அழியாவரம் பெற்றவன். தன் வரவலிமை கொண்டு எல்லாரையும் வருத்தினான். தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். சிவனையும் எதிர்த்தான். சிவபெருமான் தன் திரிசூலத்தால் அவனை அழித்தார். என்பது புராணக்கதை.

**இதன் உட்பொருள்:**

ஆன்மாவைப் பீடித்துள்ள இருள் மலமாகிய ஆணவம் ஆன்மாவின் அறிவை மயக்கிக் குருடாக்கிவிட்டது. அந்தகன் - குருடன். சிவபெருமான் தனது முத்தலைச் சூலமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தைக் கொண்டு ஆணவ இருளை நீக்கினார் என்பதாகும். இதற்குரிய சிவத்தலம் திருக்கோவலூர் ஆகும்.

அடுத்துக் கூறப்படுவது : திருக்கண்டியூரில் பிரமன் தலை கொய்த செயல். இதனைக் கூறும் மந்திரம்.

**எங்கும் பரந்தும் இருநிலம் தாங்கியும்**
**தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்**
**பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற**
**அங்கு அச்சுதனை உதிரங் கொண்டானே** (341)

படைத்தல் தொழிலைச் செய்யும் ஐந்து தலையுடைய பிரமன், தனக்கும் ஐந்து தலை, அழித்தல் தொழிலைச் செய்யும் சிவனுக்கும் ஐந்து தலை, தான் படைத்ததைத்தானே சிவன் அழிக்கின்றார். நான் படைக்காவிட்டால் சிவன் எதை அழிப்பார். ஆதலால் தான்தானே முழுமுதல் கடவுள் என்று கர்வம் கொண்டான். சிவபெருமான் தன் மனத்திலிருந்து வைரவரை உண்டாக்கி பிரமனின் ஐந்தாவது தலையைக் கொய்து, ஏனைய விஷ்ணு முதலிய தேவர்களது இரத்தத்தையும் பிச்சையாக ஏற்று அவர்களது கர்வத்தை அடக்கினார்.

**இதன் உட்பொருள்:**

சீவர்களது அறியாமையாகிய ஆணவ அகந்தையை அடக்கி அவர்களைப் பக்குவப்படுத்தி உலக இன்பத்தில் அவர்களுக்கு உண்டாகும் கவர்ச்சியை நீக்கி இறை இன்பத்தில் ஈடு படுத்துதல் என்பதாகும்.

இனிவருவது திருப்பறியலூரில் தக்கன் யாகம் தகர்த்த செய்தியாகும். இதனைக் கூறும் மந்திரம்

**கொலையிற் பிழைத்த பிரசாபதியைத்**
**தலையைத் தடிந்திட்டுத் தான் அங்கியிட்டு**
**நிலையுலகுக்கிவன் வேண்டுமென் றெண்ணித்**
**தலையை அரிந்திட்டுச் சந்திசெய்தானே**

என்பதாகும். இதன் புராணக்கதை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மாவின் மூத்த மகன் தக்கன். இவன் தவம் செய்து மிகப் பெரும் வரங்கள் பல பெற்றவன். உமாதேவியைத் தனக்கு மகளாகப் பிறக்க வேண்டுமென்று வரம் பெற்றான். அதனால் உமாதேவியார் தக்கனுக்கு மகளாகப் பிறந்து தாட்சாயணி என்னும் பெயருடன் வளர்ந்தார். சிவனை அடைய வேண்டுமென்று கன்னிமைப் பருவத்தில் தவம் இருந்தார். சிவன் வந்து கூட்டிச் சென்றுவிட்டார். இதனை அறிந்த தக்கன் தனக்குத் தெரியாமல் தன் மகளைக் கூட்டிச் சென்ற சிவனிடம் போய்க் கண்டிக்க வேண்டுமெனக் கயிலாயம் போனான். அங்கு நந்தியம்பெருமான் அவனைத் திருப்பி அனுப்பிவிட்டார். மேலும் கோபங்கொண்டு தக்கன் சிவனை நிந்தித்து ஒரு பெரிய யாகம் செய்தான். தேவர்கள் முனிவர்கள் யாவரும் தக்கனுக்குப் பயந்து அந்த யாகத்தில் பங்கு கொண்டார்கள். ததீசி முனிவர் மட்டும் இது சிவத்துரோகம் யாகமும் அழிந்து இதில் பங்கு பற்றுவோரும் தண்டிக்கப்படுவர் என்று சாபமிட்டுச் சென்றார்.

சிவன் தனது கோபத்திலிருந்து தோன்றிய வீரபத்திரரும் பத்திரகாளியும் யாகத்தைச் சிதைத்துத் தக்கன் தலையை வெட்டி அக்கினிக் குண்டத்தில் இட்டுத் தக்கனுக்கு ஓர் ஆட்டுத் தலையை ஒட்டிவிட்டு ஏனையோரையும் தண்டித்தார்கள். இந்த யாகத்தில் பங்குகொண்ட தேவர்கள் 108 யுககாலம் சூரன் முதலியோரால் தண்டிக்கப்பட்டனர்.

இந்தக் கதை சிவநிந்தை செய்தவர்கள் யாராயிருந்தாலும் அதற்குரிய தண்டனையைப் பெறுவர் என்ற உண்மையை உணர்த்துகின்றது.

அடுத்து வருவது திருவிற்குடியில் சலந்தராசுரனை வதம் செய்த செய்தி. இதற்குரிய மந்திரம்

எங்கும் கலந்தும் என் உள்ளத்து எழுகின்ற
அங்க முதல்வன் அருமறை ஓதிதன்
பொங்கும் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விற்குறித்து ஆழிசெய்தானே (342)

எங்கும் நிறைந்தவனாய் என் உள்ளத்துள் எழுகின்றவனும் வேதத்தையும், வேதாந்தங்களையும் அருளிச் செய்தவனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் தன்னை எதிர்த்த கலந்தராசுரனைத் திருவிற்குடியில் சக்கரப்படை கொண்டு அழித்தான்.

சலம் என்றால் நீர். நீரை முகமாகவுடைய சலந்தராசுரன் என்பவன் தவம் செய்து தான் எந்தவித ஆயுதத்தாலும் அழியாத வரம் பெற்றான். அந்த அகந்தையால் சிவனையே எதிர்த்துப் போரிட்டான். சிவபெருமான் தனது காலினால் பூமியில் ஒரு வட்டத்தைக் கீறி அதனைச் சக்கராயுதமாக வரச் செய்து சலந்தராசுரனை வதம் செய்தார்.

**இதன் உட்பொருள்:**

தனக்கு வரந்தந்த சிவனையே எதிர்த்த நன்றிகெட்ட துரோகத் தனத்தை அழித்தமை மூலாதாரத்து மூண்டெழு கனலாகிய நாத ஒளியை கீழ்நோக்க விடாமல் மேல் எழுப்பிச் சகஸ்ரதளத்தில் சிவ ஒளியைக் காணச் செய்தல் என்பதாகும்.

அடுத்துக் கூறப்படுவது திருவதிகையில் திரிபுர தகனம் செய்யப்பட்ட செய்தி.

அப்பணி செஞ்சடை அழிபுரா தனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் செற்றமை யாரறிவாரே (343)

என்பது மந்திரம்.

தாராக்கன், கமலாக்கன், வித்தியுன்மாரி என்னும் மூன்று அசுரர்கள் இரும்பு, வெள்ளி, பொன் மலைகளாகி உலகினரை வருத்தி வந்தனர். இவர்களைச் சிவபெருமான் தனது புன்னகையால் எரித்து நீறாக்கினார்.

மனித உயிர்களை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் பீடித்து மயக்கம் செய்து திருவருள் வழிச்சென்று முத்தியின்பம் பெறவிடாமல் பிறந்தும் இறந்தும் துன்பத்தில் உழலச் செய்கின்றன. அந்த மும்மலங்களையும் சிவபெருமான் தன் ஞான ஒளியால் அழித்தலையே இத் திரிபுர தகனம் குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவழுவூரில் சிவபெருமான் கரிய மதயானைத் தோலை உரித்துப் போர்த்த செய்தி அடுத்துக் கூறப்படுகின்றது.

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி உரி அரனாவது உணர்கிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள் எழுந்தன்று கொலையே (344)

தாருகாவனத்து முனிவர்கள் சிவனை மறந்து யாகங்களைச் செய்து உலகியல் இன்பத்தில் திழைத்திருந்தனர். இவர்களுக்கு நல்லறிவு புகட்டுவதற்காகச் சிவபெருமான் அழகிய பிச்சாடனராகவும், மகாவிஷ்ணு அழகிய மோகினியாகவும் வேடந்தாங்கி, அங்கு சென்றனர். பிச்சாடனரின் அழகில் மயங்கிய முனிபத்தினிகள் பிச்சாடனரின் பின்னால் சென்றனர். மோகினியின் அழகில் மயங்கிய முனிவர்கள் மோகினியின் பின் சென்றனர். இரு பகுதியும் சந்தித்தபோது தங்கள் இழிநிலை கண்டு வெட்கித் தலை குனிந்தனர். தங்களை அவமானப் படுத்திய சிவனுக்குப் பாடம் புகட்ட வேண்டுமென்று ஒரு யாகம் செய்து அதிலிருந்து மதங்கொண்ட கரிய யானை ஒன்றை வரச்செய்து சிவனைக் கொல்லும்படி ஏவினர். சிவன் அந்த யானையை உரித்து அதன் தோலைத் தன்மீது போர்த்துக் கொண்டார். என்பது கதை.

**இதன் உட்பொருள் :**

யாக குண்டத்தில் வெளிப்படும் அக்கினி சிவமேயாகும் என்பதை அறியாத அறியாமையாகிய இருளைச் சிவன் தன் ஞான ஒளியால் அழித்தார் என்பதாகும். சிவன் ஒளியின் முன் ஏனைய ஒளிகள் விளங்காது ஒழியும் என்பதே இதன் உட்பொருளாகும்.

அடுத்த மந்திரம்

திருக்கடவூரில் காலனைக் காலால் உதைத்தல்.

மூலத்துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தாங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே (345)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகண்டு முனிவர் என்பவர் தவம் செய்து பதினாறே வயதுவரை வாழத்தக்க ஓர் உத்தம புத்திரனைப்பெற்றார். மார்க்கண்டேயர் எனப் பெயரும் வைத்து வளர்த்தனர். அவன் தந்தையுடன் தினமும் திருக்கடவூர் அமுதகடேஸ்வரர் கோயிலுக்குப் போய்ப் பக்தி சிரத்தையுடன் சிவபூசை வழிபாடு செய்து உத்தம புத்திரனாக வளர்ந்து வந்தான். பதினாறு வயது நிறைவானபோது தந்தையும் தாயும் கவலையுற்று இருந்ததைக் கண்ட மார்க்கண்டேயர் கவலையின் காரணத்தைக் கேட்டறிந்தார். நீங்கள் கவலையை விடுங்கள். என்னைக் காக்கச் சிவபெருமான் இருக்கின்றார் அஞ்சாதீர் என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குப் போய்ச் சிவலிங்க பூசை செய்து கொண்டிருந்தார்.

காலக் கணக்குப் பிசகாது யமதர்மராசன் மார்க்கண்டேயரின் உயிரை எடுக்க அங்கு சென்றான். அவரின் கிட்டப் போக முடியாதவாறு சிவாக்கினி அவனைச் சுட்டது. கடமைதவறாத இயமன் தூர நின்று பாசக்கயிற்றை எறிந்தான். மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டார். அவன் சிவலிங் கத்தையும் சேர்த்துப் பாசக்கயிற்றால் இழுத்தான். சிவலிங்கத் திலிருந்து சிவன் தோன்றிக் காலனைக் காலால் உதைத்தார். அவன் வீழ்ந்தான்.

**இதன் உட்பொருள் :**

சிவனை வணங்கிச் சிவபூசை செய்பவனை வேறு எந்தச் சக்தியாலும் எதுவும் செய்யமுடியாது என்பதாகும். எமது உடலுள் மூலாதாரத்து மூண்டெழு கனலைச் சுழுமுனை உச்சியில் வைத்துத் தியானித்து இருப்பார்க்கு இறப்பு இல்லை. மார்க்கண்டேயர் என்றும் பதினாறு வயதுடனே இருப்பதைப் போலக் காலத்தை வென்று இருப்பர். என்பதாகும்.

அடுத்து வரும் மந்திரம் திருக்குறுக்கையில் மன்மதனை எரித்த செய்தியின் உட்பொருள் கூறுகின்றது.

**இருந்த மனத்தை இசைய இருத்தி**
**பொருந்தி இலிங்க வழியது போக்கி**
**திருந்திய காமன் செயலழித் தங்கன்**
**அருந்தவ யோகம் குறுக்கை அமர்ந்ததே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் சிவநிந்தையான தக்கன் யாகத்தில் பங்குபற்றிய பாவத்தால் 108 யுககாலம் அசுரரால் துன்புற்றனர். ஆற்றாது சிவனை வேண்டுதல் செய்தபோது அவர் இரங்கி உங்களுக்கு ஒரு புதல்வனைத் தருவோம். அவன் அசுரரை அழித்து உங்களைக் காப்பான் எனக் கூறிவிட்டுத் தியானத்தில் இருந்துவிட்டார். சிவனின் தியானம் கலைந்தால்தானே புத்திரன் பிறப்பான் எனக்கருதிய தேவர்கள் மன்மதனை அழைத்துச் சிவன்மீது மலர் அம்பு தொடுக்கச் செய்தனர். தியானம் கலைந்த சிவனின் நெற்றிக்கண் பார்வையால் மன்மதன் நீறானான்.

**இதன் உட்பொருள் :**

உலக உயிர்கள் காம இன்பத்தின் வயப்பட்டுச் சிவனை மறந்து உலக இன்பத்தில் மூழ்கிப் பிறந்து இறந்து உழலாமல் கவனத்தைச் சிவனிடம் செலுத்த வேண்டும். சிவனோடு மனதைச் செலுத்திக் காமத்தை வெல்லுதலே காமதகனம் ஆகும்.

ஆகவே புராணம் கூறும் அட்டவீரட்டச் செயல்கள் எட்டுமே ஆன்மாவைப் பீடித்துள்ள மும்மல பந்தங்களை நீக்கிச் சிவகதியில் சேர்க்கும் உட்பொருளையே உணர்த்துகின்றன.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனடக்கம்

நாம் வாழும் உலக விவகாரங்களை நாம் நமது புலன்களைக் கொண்டு அறிகின்றோம். அறிவது நமது உடல் அல்ல. இந்த உடலுள் இருக்கும் உயிரே அறிகின்றது. இது ஓரறிவு உயிர்கள் முதல் ஆறு அறிவு உயிர்களாகிய மனிதர் வரை எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும். இறைவன் உடலைப் படைக்கும் பொழுதே அந்த உடலுள் இருக்கும் உயிர் அறிவதற்குரிய அறிகருவிகளாகிய பொறிகளையும் உடலில் பொருத்திவிடுகின்றான். அவ்விதம் பொருத்தப் பட்டுள்ள அறிகருவிகளே எமது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளுமாகும். இவற்றின் செயற் பாடுகளையே புலன்கள் என்கின்றோம்.

மெய்யாகிய உடல்மூலம் தொட்டு உணர்கின்றோம். இதனை ஊறு என்போம். வாயாகிய பொறியின் மூலம் சுவைத்து அறிகின்றோம். கண்ணாகிய பொறியின் மூலம் பார்த்தும், மூக்கின் மூலம் மணந்தும், செவியின் மூலம் கேட்டும் அறிகின்றோம். இது எப்படி நிகழ்கிறது என்பது சுவையான செய்தியாகும்.

இந்த உலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களின் பரிணாமத்தால் உருவானது. எமது உடலும் பஞ்ச பூதங்களால் ஆனதுதான். ஆதலால்தான் இந்த உலகத்துக்கும் எமது உடலுக்கும் இடைவிடாத நெருங்கிய தொடர்பு இருக் கின்றது. உடலில் உள்ள அறிகருவிகளாகிய புலன்கள் எந் நேரமும் உலகுடன் தொடர்பு பட்டுக்கொண்டே இருக்கின்றன. அறிதலுக்கென்றே புலன்களுடன் பூதங்கள் இணைக்கப் பட்டுள்ளன.

கண் பார்க்கின்றது. அது பார்ப்பதற்கு அதனுடைய புலன் எனும் தன்மாத்திரையாகிய ஒளி உதவுகின்றது. இந்த ஒளி தீயில் இருக்கிறது.

காது கேட்கிறது. அது கேட்பதற்குரிய புலன் எனும் தன்மாத்திரை ஆகிய ஓசை உதவுகிறது.

இந்த ஓசை ஆகாயத்தில் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கு மணந்து அறிகின்றது. மூக்கு மணப்பதற்குரிய தன்மாத்திரையாகிய புலன் எனும் நாற்றம் உதவுகிறது. இந்த நாற்றம் நிலத்தில் இருக்கிறது.

நாக்கு சுவைத்து அறிகிறது. நாக்குச் சுவைப்பதற்குரிய புலன் ஆகிய தன்மாத்திரை நீரில் இருக்கிறது.

தோல் தொட்டு அதாவது ஸ்பரிசித்து அறிகிறது. தோல் தொட்டு அறிவதற்குரிய தன்மாத்திரையாகிய புலன் எனும் ஊறு எனும் பரிசம் காற்றில் இருக்கிறது.

எனவே பஞ்சபூதங்களின் மூலக்கூறுகள் எங்கள் உடலில் உள்ள அறிகருவிகளாய பொறிபுலன்களில் பொருத்தப் பட்டிருக்கும் நுட்பத்தை நாம் அறிய முடிகிறது.

நிலத்தின் குணம் - மணம் ஆகிய நாற்றம்
நீரின் குணம் - சுவை
தீயின் குணம் - ஒளி
காற்றின் குணம் - பரிசம்
ஆகாயத்தின் குணம் - ஒலி

நிலத்தின் மூலக்கூறு ஆகிய நாற்றம் மூக்கு நுனியிலும், நீரின் மூலக்கூறு ஆகிய சுவை நாவின் நுனியிலும், தீயின் மூலக்கூறு ஆகிய ஒளி கண்ணின் மணியிலும், காற்றின் மூலக்கூறு ஆகிய பரிசம் தோல்புரையிலும், ஆகாயத்தின் மூலக்கூறு ஆகிய ஒலி எனும் ஓசை செவிப்பறையிலும் பொருத்தப்பட்டு இருப்பதைக் காண்கின்றோம். புலன்களுக் கிடமான பொறிகளைக் கண்களால் காண முடியும். பொறிகளின் தன்மாத்திரைகளான புலன்களைக் கண்களால் காண முடியாது. இவற்றைத் தொகுத்து நோக்கினால்

நிலத்தின் குணமாகிய நாற்றம் மூக்கு நுனியிலும்
நீரின் குணமாகிய சுவை நாக்கு நுனியிலும்
தீயின் குணமாகிய ஒளி கண் மணியிலும்
காற்றின் குணமாகிய பரிசம் தோல் புரையிலும்
ஆகாயத்தின் குணமாகிய ஒலி செவிப் பறையிலும்

பொருத்தப்பட்டிருப்பதை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் எந்நேரமும் புலன்களுக்கும் பூதங்களுக்குமான தொடர்பு இருந்துகொண்டு இருக்கிறது. இத் தொடர்புகளைத் தடைசெய்தல்தான் புலனடக்கம் எனப்படுகிறது.

பஞ்சபூதங்களாலான உலகில் பஞ்சபூதங்களாலான உடலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அவற்றின் தொடர்பை இலகுவில் தடை செய்துவிட முடிவதில்லை.

கண் பார்த்துக்கொண்டுதான் இருக்கும். காது கேட்டுக் கொண்டுதான் இருக்கும். மூக்கு மணந்துகொண்டுதான் இருக்கும். நா சுவைத்துக் கொண்டுதான் இருக்கும். தோல் உணர்ந்துகொண்டுதான் இருக்கும். இவற்றை அறிகின்ற உயிர் இந்த உடம்பினுள் இருக்கும்வரை இவை நிகழ்ந்து கொண்டு தான் இருக்கும். உயிர் உடலைவிட்டு வெளியேறினால் இவையெல்லாம் வெறும் சடமாகிவிடும். ஆதலால் இவற்றை இயங்காமல் செய்தாலும் இவை சடமாகிவிடும்.

புறக்கருவிகளாகிய மெய், வாய், கண், மூக்குச், செவி என்பவை மட்டுமல்ல அந்தக்கரணங்கள் எனும் அகக்கருவி களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவையும் அறிதலைச் செய்துகொண்டிருக்கின்றன. புறக் கருவிகள் கொடுக்கின்ற அறிவை அகக்கருவிகள் செயற்படுத்திக் கொண்டு இருக்கின்றன. எனவே புலன் அடக்கம் செய்யும்போது அந்தக்கரணங்களையும் அடக்க வேண்டும். மனம்தான் இவை எல்லாவற்றையும் இணைத்துக் கொண்டிருக்கின்றது.

எனவே புலனடக்கம் பற்றி எமது தத்துவஞானிகள் அருளாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிதல் மூலம் நாம் தெளிவு பெறலாம்.

பெரும் சித்தரான திருமூலர் சுவாமிகள் தனது திருமந்திரத்தில் 2033 ஆவது பாடலில்

**அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்**
**அஞ்சும் அடக்கும் அமரரும் இங்கில்லை**
**அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்று**
**அஞ்சும் அடக்க அறிவறிந்தேனே**

என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது,

புலனடக்கம் வேண்டும். எனவே புலன்களை அடக்குங்கள் அடக்குங்கள் என்று ஓயாது கூறுகிறவர்கள் அறிவற்ற மூடர்கள். ஐம்புலன்களையும் அடக்கியவர்கள் வானுலகத் தேவர்களிலும் கூட யாரும் இல்லை. ஐம்புலன்களையும் அடக்கிவிட்டால் பிறகு உடம்பு உணர்வேதும் இல்லாத, உணர்ச்சியற்ற மரக்கட்டை சடம்போல ஆகிவிடும் என்பதால் ஐம்புலன்களையும் அடக்கா மலே சிவனருளைப் பெறும் ஞானம் நான் பெற்றேன். அடக்கா அறிவு என்பது புலனை அடக்காமலே அப்புலன்களைச் சிவசிந்தனையில் செலுத்தும் ஞானம் கைவரப் பெற்றேன் என்கிறார்.

இதனை இன்னுமோர் மந்திரத்தில் மிக எளிதான உவமை மூலம் விளக்குகின்றார்.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்**

என்பது மந்திரம்.

சிறந்த மரத்தினால் செய்யப்பட்ட அழகிய யானை உருவைப் பார்க்கின்றபோது உண்மையான யானையைப் பார்ப்பது போன்ற உணர்வு உண்டாகின்றதேயன்றி அது செய்யக் காரணமான மரம் பற்றிய நினைவு மனத்தில் வருவதில்லை. யானை உருவமானது மரத்தை மறைத்தது. ஆனால் அது மரம் என்று உணர்ந்து அதன் வகைகளை எண்ண முற்படும்போது யானை மறைந்துபோகிறது. மரமே மனதில் நிற்கிறது. யானையானது மரத்தில் மறைந்தது, இதுபோலவே இந்த உலகையும் இதில் இயங்கும் ஐம்பெரும் பூதங்களையும் கண்டு, அதில் இலயித்திருக்கும் ஆன்மாக் களின் அறிவில் இவற்றையெல்லாம் இயக்கி அருளும் பரம்பொருளைப் பற்றிய எண்ணம் உண்டாவதில்லை. இதுவே பார்முதல் பூதம் பரத்தை மறைத்த நிலை. ஆனால் பார்முதல் பூதம் அனைத்துக்கும் காரணமான அவற்றை இயக்கும் பரம்பொருள் நினைவு மனத்தைப் பற்றிவிட்டால் அந்தப் பரநினைவில் பார்முதல் பூதம் மறைந்து போகும். இதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்முதல் பூதம் பரத்தில் மறைந்தது என்பதன் விளக்கம். எனவே புலன்களுடான மனத்தை உலகவிவகாரங்களில் செலுத்தாமல் பரம்பொருளினிடத்தே செலுத்தவேண்டும்.

இறைவன் குணங்குறிகள் எதுவுமற்ற சொரூபத்தை யுடையவர்.

ஊரிலான் குணங்குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒருமுன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரப்போக்கிலான் மேனியான் தனக்கு
நேரிலான் உயிர்க்கடவுளா யென்னுளே நின்றான்

என இறைவன் சொரூபத்தைக் கந்தபுராணத்தில் இறைவனுக்கு ஊரும் இல்லைப் பேரும் இல்லைக் குணமும் இல்லைக் குறியுமில்லை அவனுக்கு முன்னுமில்லைப் பின்னுமில்லை ஒரு சார்புமில்லை வரல் போக்குமில்லை தனக்கு மேலுமில்லை நேருமில்லை உயிர்க்கடவுளாய் என்னுளே நின்றான் என்கிறார்.

ஆதலால் எந்தவகையாலும் அறியமுடியாது புலன்களால் அறியமுடியாது. எனவேதான் எமது சைவஞானிகள் இறைவனுக்குக் குறி குணங்கள் உள்ள தடத்தலட்சணத்தை வகுத்தனர். புலன்களை இறையறிவில் செலுத்துவதற்கு உபகாரமான இறையுருவில் செலுத்திப் பழக வேண்டும். அவ்விதம் செலுத்தினால் புலனறிவின் மூலம் இறையருளைப் பெறலாம். இதனைத் தன் அனுபவ ஞானத்தால் அறிந்த அப்பர் சுவாமிகள் தான் பாடிய திருவங்கமாலை மூலம் எமது புலன்களை ஒவ்வோர் திருவுருவில் செலுத்தி வழிபட வழிப்படுத்துகின்றார்.

❖ கண்காள் காண்மின்களோ கடல்நஞ்சுண்ட கண்டன்தனை எண்தோள் வீசிநின்று ஆடும் பிரான்தனை கண்காள் காண்மின்களோ என்று கண்களை இறைவன் திருவுருவில் லயிக்கச் செய்கிறார்.

❖ செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்மிறை செம்பவள எரிபோல் மேனி பிரான்திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ என்று சிவன் புகழைக் கேட்க வைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மூக்கே நீமுரலாய் முதுகாட்டுறை முக்கண்ணனை வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய் என்கின்றார்.

❖ வாயே வாழ்த்து கண்டாய் மதயானை உரிபோர்த்து பேவாழ் காட்டகத் தாடும் பிரான் தன்னை வாயே வாழ்த்து கண்டாய் என வாழ்த்த வைக்கின்றார்.

❖ நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன்சடை நின்மலனை மஞ்சாடும் மலைமங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய் என நினைக்க வைக்கின்றார்.

❖ கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவிநின்று பைவாய் பாம்பரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர் என்று கைகளைக் கூப்பித்தொழ வைக்கின்றார்.

❖ ஆக்கையால் பயனென் அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கையால் பயனென் என்று பூவிட்டுத் தொழவைக்கின்றார்.

❖ கால்களால் பயனென் கறைக் கண்டனுறை கோயில் கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயனென் என்று கால்களைக் கோயில் வலம் வரச் செய்கின்றார்.

இவ்விதம் ஒவ்வொரு புலன்களையும் உறுப்புக்களையும் இறைவன் திருவுருவில் இலயிக்கச் செய்ததால் எங்கும் நிறைந்துள்ள இறைவனைத் தனக்குள்ளே காண்கின்றார்.

❖ தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன் என்கின்றார்.

ஐந்தும் அடக்கா அறிவறிந்தேனே எனத் திருமூலர் திருமந்திரத்தில் சொன்ன ஐந்தையும் அடக்கா அறிவு அவற்றை இறை சொரூபத்தில் ஆங்காங்கு லயிக்கச் செய்து

**முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்.**

என்று மற்றோர் மந்திரத்தில் சொன்னபடி அகத்தில் இறைவனைக் காணும் அற்புத வழியைக் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்றதோர் அனுபவத்தைத் தில்லையிலே சுந்தரர் கண்ட காட்சியைத் தெய்வப்புலவர் சேக்கிழார் காட்டுகின்றார். அவர்,

ஐம்புலன்களையும் கண்ணின்வழி இறைவனிடம் செலுத்தி அந்தக்கரணங்கள் நான்கையும் சிந்தையின்வழி செலுத்தி முக்குணங்களையும் சாத்வீக குணத்தின்வழி செலுத்திப் பெருமான் தில்லையில் ஆடும் ஆனந்த நடனத்தைக் கண்டு அளவிலாப் பேரானந்தம் கொண்டார் எனக் காட்டுவதை

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்வீகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின் பத்தில் திழைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

என்னும் இப்பெரிய புராணப் பாடலிலே காண்கின்றோம்.

ஆதலால் புலன்களை அடக்க முடியவில்லையே அடக்க முடியவில்லையே என்று விரக்தியுறாமல் திருமூலர் சுவாமிகள் சொன்ன வழியில் புலன்களை இறைவனிடம் செலுத்தி அப்பர் சுவாமிகள் கண்ட இறையனுபவத்தையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் புலன்களை ஒருமுகப்படுத்திக் கண்ட பேரானந்த அனுபவத்தையும் உணர்ந்து இறையின்பம் காண முயற்சிப் போம்.

அப்பர் கூறுவதுபோல

ஞானத்தால் தொழுவார் சிவ ஞானிகள்
ஞானத்தால் தொழுவேனுனை நானயேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தால் உனைநானும் தொழுவனே

என்பது போலவும் தொழு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே.

வாணாளை வீணாளாக்காமல் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் இறைவனைத் தொழுது உய்தி பெறுவோம்.

"கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே"

என மந்திரம் கூறுவதுபோல உணர்ந்து உய்தி பெறுவோம்.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடம்பினை வளர்க்கும் உபாயம்
## அல்லது
# புலால் மறுத்தல்

இறைவன் எங்கும் உள்ளவர், எல்லாம் அறிபவர், எல்லாம் *வல்லவர். இறைவனைக் கோயிலில் எழுந்தருளச் செய்து* அவரது அருளை வேண்டி வழிபடுகின்றோம். தன்னை வணங்குவதற்காக,

**வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை**
**சூழ்த்த மாமலர் கொண்டு துதிக்கின்றோம்**

வாயாலே வாழ்த்தி மனதாலே நினைந்து உடலாலே வழிபடுகின்றோம். மனம், வாக்கு, காயம் என்கின்ற திரிகரணங்களும் இறைவழிபாட்டுக்கு உரியன. இவை மூன்றும் எங்கள் உடம்புக்குள்ளேதான் இருக்கின்றன. எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் எங்களுக்குள்ளும் இருக்கின்றான். திருமூலர்

**"உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்பினை இருந்து ஓம்புகின்றேனே"**

என்றும்

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"**

என்றும் எங்கள் உடம்பினை இறைவன் இருக்கும் கோயில் என்றும் சொல்கிறார். திருநாவுக்கரசு நாயனார்

**"தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டுகொண்டேன்"**

என்றும் தாயுமான சுவாமிகள்

**"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்**
**அன்பு மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் கூறுவதிலிருந்து எமது உடலைக் கோயிலாகக் கொண்டு இறைவன் இருக்கின்றான் என்பதை அறிகிறோம்.

கோயில் புனிதமான இடம். அதுபோல எமது உடலையும் புனிதமாக வைத்திருக்க வேண்டும். புற உடலையும் உடையையும் நீர்கொண்டு கழுவிச் சுத்தமாக வைத்திருக் கலாம். உடம்பின் உள்ளே உள்ள அழுக்குகளையும் சுத்தமாக்க வேண்டும். உடம்பினுள்ளே எம்மை அறியாமலே பஞ்சமா பாதகங்கள் ஆகிய அழுக்குகள் சேர்ந்து விடுகின்றன. இதனைத் திருமூலர் சுவாமிகள்

**"கொலையே களவு கள் காமம் பொய் கூறல்**
**மலையான பாவங்கள்"**

என்று கூறுகின்றார். பிற உயிர்களைக் கொல்லுதல், பிறர் பொருளைக் களவெடுத்தல், மது அருந்துதல், பிறபெண்களை இச்சித்தல், பொய் கூறுதல் ஆகிய இந்த ஐந்தும் மலைபோன்ற பாவங்கள். உள்ளத்தில் அழுக்கு இல்லாமல் புனிதமாக இருப்பதற்கு இந்தப் பஞ்சமா பாதகங்களையும் விலக்கி வாழ வேண்டும்.

உலகில் ஓர் அறிவு உள்ள புல் பூண்டு முதலாக ஆறு அறிவு உள்ள மனிதர் ஈறாக எண்ணிலா உயிர்கள் வாழ் கின்றன. இவற்றில் மனிதனுக்குத்தான் ஆறாவது அறிவான, எதையும் நல்லதோ கெட்டதோ என்பதைப் பகுத்து அறியக் கூடிய மனம் எனும் பகுத்தறிவு உண்டு. ஆதலால் மனிதர் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் உபகாரிகளாக வாழ வேண்டும். பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தமக்கு வரும் துன்பம் போலக் காணுதல்தான் பகுத்தறிவு என்னும் மனத்தின் பயன்.

உலகப் பொதுமறையான திருக்குறளைத் தந்த திருவள்ளுவர்

**"அறிவினால் ஆகுவதுண்டோ பிறின்நோய்**
**தன்நோய் போல் போற்றக்கடை"**

என்கின்றார். பிற உயிர்களுக்கு வரும் நோயைத் தனக்கு வந்த நோய்போல மதிக்கவில்லையானால் அறிவினால் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டோ, அறிவின் பயன் பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தனக்கு வந்த துன்பமாக மதிக்க வேண்டும்.

பஞ்சமா பாதகங்களில் முதலாவது பாதகம் கொலை. பிற உயிர்களைக் கொல்லுதல் மகாபாதகம் ஆகும். அதிலும் தன்னுடைய உடம்பினை வளர்ப்பதற்காகப் பிற உயிர்களைக் கொன்று அவற்றின் உடலை உண்ணுதலே புலால் உண்ணல் ஆகும். உயிர் நீங்கிய உடம்பு புலால் எனப்படும். புலாலை உண்போர் புலையர் ஆவர்.

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்"

என்பது வள்ளுவர் வாக்கு. கொல்லாதவனாயும், புலாலை உண்ணாதவனாயும் இருப்பவனை இந்த உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழும் என்பது வள்ளுவர் வாக்கு.

திருவள்ளுவர் தந்த திருக்குறளில் கொல்லாமை என்று ஓர் அதிகாரத்தையும், புலால் மறுத்தல் என்று ஓர் அதிகாரத்தையும் வகுத்து இருபது குறள்களில் அறிவுரை கூறுகின்றார்.

இறைவனின் அருளை வேண்டித் தொழும் மனிதர்கள் தசையை வளர்ப்பதற்குப் பிற உயிர்களைக் கொன்று அவற்றின் தசையை உண்பவர்க்கு அருள் எப்படிக் கிடைக்கும். கொன்ற பாவமும், அதனைத் தின்ற பாவமும் அல்லவா கிடைக்கும். நாங்கள் கொல்லவில்லையே விற்பவர்களிடம் வாங்கி உண்பதால் எப்படிப் பாவம் வரும் என்பீராகில் நீங்கள் வாங்குவதால்தானே விற்பவர் கொன்று விற்கிறார். ஆதலால் இருபழியும் உண்பவர்க்குத்தானே வரும் என்கின்றார்.

புலால் என்பது பிறிதோர் உயிரின் புண்ணல்லவோ. பிற உயிரின் புண்ணை உண்ணலாமா, உயிர் நீங்கிய பிணத்தை அடக்கம் செய்யும் இடம் பிரேதக்குழி அல்லவா. நீங்கள் உங்கள் வயிற்றைப் பிற பிராணிகளின் பிரேதக்குழி ஆக்கலாமா?

ஆயிரம் யாகங்களைச் செய்வதிலும் பார்க்க ஓர் உயிரைக் கொல்லாதிருத்தல் மேலானது. தன்னுடைய உயிரை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி வந்தாலும் பிற உயிரைக் கொல்லும் செயலைச் செய்யக் கூடாது. கொல்லாமையை விரதமாகக் கொள்ள வேண்டும்.

தாயுமான சுவாமிகள் கொல்லாமையை விரதமாகக் கொண்டவர்.

**"கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க**

**எல்லார்க்கும் சொல்லுவ தென் இச்சை பராபரமே"** என்றும்

**"ஊன் உண்பார் வீட்டில் நான் உண்பதில்லை"** என்றும்

ஒவ்வொருவரும் விரதம் பூணவேண்டும் என்கின்றார்.

சிலர் உடலைத் தைரியமாக வைத்துக்கொள்வதற்கு வேண்டிய சத்துக்கள் புலால் உணவில்தான் இருக்கின்றன அதனால்தான் புலால் உண்கிறோம் என்கின்றார்கள். அது தவறு. உடலுக்கு வேண்டிய உயிர்ச்சத்துக்கள், மாப்பொருள், புரதம், தாதுப்பொருட்கள் எல்லாமே மரக்கறி உணவில் இருக்கின்றன. மனிதருடைய உடல் அமைப்பே மரக்கறி உணவுக்கு ஏற்ற வகையில்தான் உள்ளது.

புலால் உண்ணிகளுடைய பற்கள் கிழிக்கக்கூடிய கூர்ப் பற்களாக இருக்கின்றன. அவற்றின் குடலும், வயிறும் ஒடுக்கமாகவே இருக்கும்.

நாய், பூனை, புலி, சிங்கம் முதலான மாமிச உண்ணிகளையும் மாடு, ஆடு, எருமை, யானை முதலான தாவர உண்ணிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வுண்மை தெரியும். மனிதன் தாவர உண்ணியாகவே படைக்கப்பட்டிருக்கின்றான்.

தாவர உணவாகிய சைவ உணவு உண்பவர்களிலும் பார்க்க மாமிச உணவுண்போர் தைரியசாலிகள் என்பது எந்த வகையிலும் பொருந்தாது.

கொலைகளை மேற்கொள்வோர் ஈற்றில் என்ன கதி அடைவார்கள் என்பதைத் திருமூலர் திருமந்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக்கார் வலிக்கயிற்றால் கட்டி
செல்லிடு நில் என்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தானே" என்கிறார்.

கொல் வெட்டு குத்து என்று வெறிகொண்டு திரியும் விலங்குகள் போன்ற குணமுடைய கொடியவர்களை வலிமை பொருந்தியவனான இயமனின் தூதுவர்கள் வலிமையான பாசக்கயிறு கொண்டு கட்டிக் கொண்டுபோய் செல், நில் என்று அதட்டி மிரட்டி பற்றி எரியும் நரகத் தீயில் கிட நில் என்று தள்ளி விழுத்தி வதைப்பார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

புலால் உண்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பதையும் வேறொரு மந்திரத்தில்

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்கள்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகிடை
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பார்களே என்கிறார்.

தீயதான புலால் உணவை விரும்பி உண்ணும் கீழ்மக்களை எமதூதர்கள் பலரும் காணப் பற்றி இழுத்துக் கொண்டுபோய் அவர்கள் உடலைக் கரையான் போல அரித்துக் கொல்லப் பற்றி எரியும் நரக நெருப்பில் மல்லாந்து படுக்கத் தள்ளிப் புரட்டி எடுப்பார்கள் என்பதை அறிந்து புலால் உண்ணாமல் வாழவேண்டும்.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவருள்

இந்தப் பிரபஞ்சத்தில் எண்ணில்லாத உயிர்கள் வாழ் கின்றன. உயிர்கள் இறைவனால் படைக்கப்பட்டனவல்ல. இந்த உயிர்கள் வாழ்வதற்குரிய உடலும் உலகமும்தான் இறைவனால் படைக்கப்பட்டவை. உயிர்கள் எண்ணில்லாதன. அவைக்குப் புலன் அறிவே அன்றி உண்மை அறிவு இல்லை. உயிர்கள் அறிவிக்க அறிவனவாகும். இந்த உண்மையை சிவப்பிரகாசம் என்னும் மெய்கண்ட சாத்திரம்

**எண்ணரியாதாய் நித்தமாய் இருள் மலத்தில் அழுந்தி**
**இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை**
**அண்ணல் அருளால் நண்ணி அவை அவராய் அதனால்**
**அலகில் இகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்**
**புண்ணிய பாவம் புரிந்து போக்குவரவு உடைத்தாய்ப்**
**புணரும் இருள்மலபாகம் பொருந்தியக்கால்**
**உண்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்**
**உற்றிடுதல் பசுவருக்கம் என உரைப்போர் உணர்ந்தோர்**

எனக் கூறுகின்றது. இதன் பொருள் :

உயிர்கள் எண்ணிக்கையால் அளந்து கூறமுடியாதவை. அழியாமல் நிலைத்திருப்பவை. அறியாமை இருளாய ஆணவ மலத்தில் அழுந்தி தான் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஈடான உடலை இறையருளால் பெற்று, அதன் மூலம் அளவில்லாத போகங்களை நுகர்ந்து புண்ணிய பாவம் இரண்டும் செய்து, பிறந்து இறந்து அறியாமையும் மலபாகமும் பொருந்தி வரும்போது உள்ளத்தில் நிலவும் அருள் ஒளியினால் அறியாமை நீங்கி இறைவன் திருவடிகளை அடையக் கூடியது ஆகும். இந்த உயிரே பசு எனவும், ஆன்மா எனவும் அழைக்கப்படும்.

நாம் ஒவ்வொருவரும் நான் யார்? நான் ஏன் பிறந்தேன்? ஏன் வாழ்கின்றேன்? எங்கிருந்து வந்தேன்? இனி எங்கு செல்லப் போகின்றேன்? இந்த வாழ்வின் பயன் என்ன? என்பதைச் சிந்திக்க வேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் நான் ஆர், என் உள்ளமார், ஞானங்கள் ஆர், என்னை யார் அறிவார் என்று தன்னைத்தானே வினவுகின்றார். அப்பர் சுவாமிகள் வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறெங்ஙனே போமாறேதோ, என்றும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார் என்றும் தம்மைத்தாமே வினவியதால் இறை யருளால் அதற்கு விடையறிந்து நற்கதி பெற்றனர்.

நாவலர் பெருமான் எங்கள் எல்லார்க்கும் புரியும் மொழியில் "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற்பொருட்டேயாகும்" எனக்கூறி வழிப்படுத்துகின்றார்.

உலக இன்பதுன்பங்களில் மூழ்கி மயங்கிச் செய்வதறியாது திகைத்து நிற்கும் எமக்கு. நாம் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறவேண்டும் என எம்மை ஊக்குவிக்கின்றார்.

இவ்விதம் தன்னைத்தான் விசாரணை செய்து இறை வழிபாட்டில் ஈடுபட்டவர்களே அருளாளர்களாகிய எமது சமய குரவர்களும், நாயன்மார்களும் ஆவர். இந்த அருளாளர் வரிசையில் மாணிக்கவாசக சுவாமிகளின் வாழ்விலிருந்து இந்த உண்மையை நாம் அறிவோம்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாந் திருமுறை யாகத் திகழும் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் தந்தவர் இவர். இவை அன்பினால் ஓதுவார், கேட்பார் ஆகிய அனைவருள்ளத்தையும் உருக்க வல்லன. முன்னைத்தவத்தின் பயனாக முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே குருவாக வந்து ஆட்கொண்ட பெருமைக்குரியவர். பழுதிலா செந் தமிழாகிய மணிவார்த்தைகளால் இறைவனது பொருள்சேர் புகழை விரித்துரைத்துப் போற்றிப் பாடியமையால் மாணிக்க வாசகர் எனப் போற்றப்படுபவர் இவர்.

செந்தமிழ்ப் பாண்டிநாட்டிலே சிவபெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருவாதவூரிலே அதுமாத்யப் பிராமண குலத்திலே முன்னைத் தவத்தின் பயனாக வந்து பிறந்து ஊர்ப்பெயரையே திருவாதவூரெனும் தன் பெயராகக் கொண்டு வளர்ந்தார். பதினாறு வயதிற்குள்ளாகவே அறிவு நூல்கள் அனைத்தையும் கற்றுணர்ந்தார். இவ்வுண்மையைத் திருவாதவூரடிகள் புராணம் பாடிய கடவுள் மாமுனிவர் **"எக்கலையும் கற்றுணர்ந்தார் ஈரெட்டாண்டு அகவையினில்"** எனக் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகில் வாழ்வோர் மூன்று வகையில் அடங்குவர். முற்பிறப்பில் சரியை கிரியை யோகம் கைக்கொண்டு ஞானம் எய்துதற்குத் தகுதியுடையோராய்ப் பிறந்தோர் சாமுத்தர் எனப்படுவார்கள். அவர்கள் இப்பிறப்பில் ஞான நூல்களைக் கற்க வேண்டியதில்லை. கல்லாமலே ஞானம் பெறுவர். ஞானசம்பந்தர், மெய்கண்டார் முதலானோர் சாமுத்தர்களே.

முற்பிறப்பில் சரியை கிரியை மேற்கொண்டோர் வைநாயிகர் எனப்படுவர். அவர்கள் ஞானநூல்களைக் கற்பதில் விருப்ப முடையோராயும், கடவுள் வழிபாட்டிலும், புண்ணியச் செயல் களிலும் விருப்புடையோராய் இருப்பர்.

மூன்றாம் பிரிவினர் முற்பிறப்பில் தவம் செபம் எதுவும் இல்லாமல் சாதாரண விலங்கு வாழ்க்கை வாழ்வோராய்ப் பிறப்பர். இவர்கள் பிராகிருதர் எனப்படுவர். பிராகிருதர் இந்த உலக இன்பமே மெய்யானது என்று எண்ணி ஞான நாட்டம் அற்றோராய் இருப்பர்.

மாணிக்கவாசக சுவாமிகள் பிறப்பிலேயே சாமுத்தராய்ப் பிறந்ததால் பதினாறு வயதுக்குள்ளாகவே சகல கலைகளை யும் கல்லாதுணர்ந்தார். அதனால் பாண்டிய மன்னன் தன் பாண்டிய நாட்டுக்கு முதலமைச்சராக்கித் **“தென்னவன் பிரம ராயன்”** எனப் பட்டமும் சூட்டி அரச நிர்வாகத்தை அவரிடம் ஒப்புவித்தார்.

அவருக்கு எண்ணமெல்லாம் சிவனிடம் இருந்தாலும் அரச நிர்வாகத்தையும் திறம்படச் செய்தார். கூத்தாடுபவர் கொள்கை வேறு கோலம் வேறாவது போலத் தான் ஏற்ற முதன் மந்திரிக்கேற்ற கோலத்துடன் பணி செய்தாலும் கொள்கை யளவில் உள்ளத்தில் சிவனையே நினைந்து தக்க ஞான குருவைத் தேடுவதிலேயே நாட்டமாயிருந்தார். யாரவது பெரி யோரைக் கண்டால் ஞான விசாரணைக்குரிய வினாக்களைக் கேட்பாராம். அவருடைய இந்தக் கொள்கையைத் திருவாத வூரடிகள் புராணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்கட விலங்கு தன்னால் வயங்கெழு வினவின்மேவும்
நற்கனி கொள்ளவேண்டி நயந்துகல் எறிவார்போல
சற்குரு உளனோ என்று வினவுவார்

என்று சொல்லப்படுகிறது. முள் நிறைந்த விளாமரத்தில் விளாம்பழம் பறிக்க வேண்டும். முள்மரம் ஆனபடியால் ஏறிப் பறிக்கமுடியாது. மரத்தில் குரங்கு இருக்கிறது. குரங்குக்குக் கல்லால் எறிந்தால் செய்வதைத் திருப்பிச் செய்யும் இயல்புடைய குரங்கு பதிலுக்கு விளாங்கனியைப் பறித்து எறியும். இலகுவாக அக்கனியைப் பெற்றுக்கொள்ளலாம். அதுபோலப் பெரியார்களைக் கண்டால் வினாக்களைத் தொடுப்பார். தான் எதிர்பார்த்த விடை கிடைத்தால் அவரையே குருவாகக் கொள்ளலாம் என்பது அவரது எண்ணம்.

அரசபடைக்குக் குதிரைகள் வாங்கப் பணத்துடன் சென்ற திருவாதவூரர் வழியிலே திருப்பெருந்துறையிலே ஒரு சோலையிலே சிவநாம ஒலி கேட்டு அங்கு சென்று பார்க்கிறார் குருந்தமர நீழலில் ஒரு குருநாதரும் சீடர்களும் இருந்து சிவநாமத்தை ஓதுவதைக் காண்கிறார். வழமைபோல அங்கிருந்த குருநாதரிடம் கையிலே இருக்கும் ஏடு என்ன என்று கேட்கிறார். அவர் இது சிவஞானபோதம் என்கிறார். சிவம் என்றால் என்ன ஞானம் என்றால் என்ன போதம் என்றால் என்ன என்று ஒன்றுக்கு மூன்று கேள்விகளைக் கேட்கிறார்.

அவர் சிவம் என்றால் - நித்த, முத்த, சுத்த, சித்தமாகிய பரம்பொருள்

ஞானம் என்றால் - அதனைச் சந்தேக விபரீதமறத் தேர்தல்

போதம் என்றால் - தேர்ந்ததனைத் தெளிதல்

என்று விடை சொல்கிறார். தன்னை மறந்து இவரல்லவோ எனக்கேற்ற ஞானகுரு என்று அவரது காலிலே விழுந்து தன்னைச் சீடனாக ஏற்று ஆட்கொள்ள வேண்டும் என்று தொழுகின்றார். குருவும் இவருக்குத் திருவடி தீட்சை கொடுத்து ஆட்கொள்கின்றார். தான் கொண்டுபோன பொன் பொருள் எல்லாவற்றையும் குருவிடம் கொடுத்துத் தன்னையும் ஒப்படைத்துவிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவ ஆன்மாவைச் சிவன் குருவாக வந்து ஆட்கொள்வான் என்னும் சைவசித்தாந்தக் கொள்கை இங்கு உண்மையாகிறது. திருவாதவூரராக தென்னவன் பிரமராயன் எனும் பட்டத்துடன் முதலமைச்சராயிருந்தவர் இப்போது மாணிக்கவாசகர் ஆகிறார்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

என்று சிவநாமத்தைப் பாடிப் பணிகின்றார். தன்னைச் சிவபெருமானே குருவாகி வந்து ஆட்கொண்டதைத் தான் பாடிய திருவாசகத்தில் சொல்லிச் சொல்லி ஆனந்தம் கொள்கின்றார்.

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமை என்றும்
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க என்றும்
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே என்றும்
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி என்றும்
என்னையும் ஒருவன் ஆக்கி இருள் கழல்
சென்னியில் வைத்த சேவடி போற்றி என்றும்
அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே
கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே என்றும்

வாயார மனமாரப் பாடிப்பாடி ஆனந்தங் கொள்கின்றார்.

ஒரு பக்குவ ஆன்மாவைச் சிவபெருமான் குருவாகி வந்து ஆட்கொண்டு முத்தி அருள்வான் என்னும் சைவசிந்தாந்தக் கொள்கைக்கு மாணிக்கவாசக சுவாமிகளின் வாழ்க்கையே தக்க சான்றாகும்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் சைவ இலக்கியங்களாகும். இச்சைவ இலக்கியங்களுக்கு இலக்கணங்களாய் அமைந்தவை மெய்கண்ட சாத்திரங்கள். அதிலும் சிறப்பாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த சாத்திரங்களின் முடிமணியாகத் திகழும் சிவஞான போதமேயாகும்.

**சிவஞானபோத சூத்திரங்கள் பன்னிரண்டு**

**சைவத்திருமுறைகள் பன்னிரண்டு**

சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரத்துக்கு சைவத் திருமுறைகளின் எட்டாம் திருமுறையாய் அமைந்த திருவாச கமும் திருவாசகத்தைத் தந்த மாணிக்கவாசகர் வாழ்க்கையும் இலக்கியமாகும். சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம் பக்குவ ஆன்மாவை இறைவனே குருவாகி வந்து ஆட்கொள்ளும் முறை மையைச் சொல்கிறது.

அச்சூத்திரம் -

**"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென**
**தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்தவிட்டு**
**அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"**

என்பதாகும்.

**இதன் பொருள் :**

ஆன்மா முந்திய பிறவிகளில் செய்துவந்த சரியை கிரியை யோகம் ஆகிய தவவிசேடத்தால் இதுவரை தனக்குள் நின்று அறிவித்து வந்த தமது முதல்வனாகிய சிவனே இப்போது குருவடிவு கொண்டு மானிட வடிவில் வந்தருளி சிவதீட்சை செய்து அந்த ஆன்மாவை நோக்கி நீ ஐம்பொறிகளாகிய வேடருள் அகப்பட்டு வளர்ந்து உனது பெருமையை அறியாமல் மயங்கித் துன்புற்றால் அந்தப் பெருமை இன்னதாகும் என்று உணர்த்தியருள குருமூர்த்தி அறிவித்தபடி ஆன்மா ஐம்புல வேடரை விட்டு நீங்கி இறைவனோடு அந்நியம் ஆகாத தன்மையில் நிலைபெற்று அவன் திருவடிகளை அடையும்.

இந்தச் செய்தியைச் சிவஞானபோதத்தின் வழிநூலாகிய சிவஞானசித்தியாரில் ஒரு கதைபோல சுவைபடக் கூறுகின்றார். பாடல் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவன்தன் மகன் வேடரிடத்தே தங்கிவளர்ந்து
அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன் நீஎன்று அவரிற்பிரித்து
பெருமையோடும் தானாக்கிப் பேணுமாபோல்
துன்னிய ஐம்புல வேடர் சுழலிற்பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிரை
மன்னும் அருட்குருவாகி வந்து அவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பர்

**இதன் பொருள் :**

ஓர் அரசகுமாரன் வழிதவறி வேடுவர் சேரியில் அகப்பட்டு வேடுவனாகவே வாழ்கின்றான். அவனைத் தேடித்திரிந்த அரசன் அவனைக் கண்டுபிடித்து, நீ என்மகன், இராசகுமாரன் என்னுடன் வா என்று வேடுவரிடமிருந்து பிரித்துக் கொண்டு வந்து தன்னைப்போல நாடாள வைத்தான். அதுபோல ஐந்து புலன் களாகிய வேடுவரின் நடுவில் அகப்பட்டுத் துணைவனைக் காணாமையால் துன்புற்று தவிக்கின்ற அனாதியான பக்குவ உயிரை சிவபெருமான் குருவாகி வந்து ஐம்புலன் வழிச் செல்லாது தடுத்து பாசங்களின் நின்றும் நீக்கி தன்னைப் போலச் சிவமாந்தன்மை கொடுத்து ஆட்கொண்டு முத்தி அருள்வார்.

குருவருள் பற்றிய இச் சித்தாந்த சாத்திரக் கொள்கைக்கு முற்று முழுதான எடுத்துக்காட்டாக மாணிக்கவாசக சுவாமி களின் வரலாற்றைக் காண்கின்றோம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல்தானே

எனும் திருமூலர் திருமந்திரத்துக்கு மாணிக்கவாசகர் சிறந்ததோர் உதாரணமாவார்.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தவரின் இயற்கையோடு இயைந்த வாழ்வு
## (ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்)

ஏர்

❖ "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு" நம் முன்னோர் கண்ட உண்மை.

உலகம் வலம் இடமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அது போல இவ்வுலகில் உள்ள அனைத்தும் வலம் இடமாகவே சுற்றுகின்றன.

❖ உலகு வாழ் உணவு கொடுப்பவன் கமக்காரன். அவனுடைய முக்கியமான தொழிற்கருவி ஏர் - அதாவது கலப்பை. ஏரில் எருது பூட்டி வலமாகச் சுழன்று சால்கட்டி உழுது நிலத்தைப் பண்படுத்திப் பயிர் விளைவிப்பான். அவன் விளைவித்த உணவு கொண்டு இவ்வுலக உயிர்கள், மனிதர் உண்டு வாழ்வர். அதனால் பூமி திருத்திப் புகுபொருள் கொண்டு தாமும் உண்டு தமை அடைந்தோர்க்கும் இல்லையென்னாமல் ஈந்து உவப்பவன் உழவன். உண்டி கொடுத் தோர் உயிர் கொடுத்தோரே எனச் சங்கப்புலவர் போற்றுவது உழவரைத்தான்.

❖ உழவுத்தொழில் செய்பவர் உழவர், கமக்காரர், வேளாளர், விவசாயிகள் எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர். வேளாண்மை செய்பவர் வேளாளர் - வேளாண்மை எனப் படுவது பயிர் விளைவித்தல் என்றும் இல்லார்க்கு ஈபவர் என்றும் இருபொருள் தரும். இதனை வள்ளுவர்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு

என்பார் - தாளாற்றுதல் என்றால் இடையறாது பாடுபட்டு உழைத்தல். அப்படி உழைத்த பொருளை இல்லாதார்க்கு ஈதல் வேளாண்மை ஆகும். ஆகவே வேளாண்மை எனப் படுவது பயிர் விளைவித்தலையும், விளை பொருளை இல்லார்க்கு ஈதலையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வேளாண்மை செய்வோர் வேளாளர் எனப்பட்டனர். வேளாண்மை செய்வோரிடம் தான் விளைபொருள் எல்லாம் இருக்கும். மற்றத் தொழில் செய்வோரெல்லாம் வேளாள ரிடம் வந்துதான் தமக்குத் தேவையான விளைபொருளை (உணவுப் பொருளை)ப் பெறுவார்கள். அதனால் வேளாண்மை செய்வோர் உயர்ந்தோராயினர். ஆதலால் வேளாளர் என்பது ஓர் உயர்ந்த சாதிப் பெயராய் மதிப்புப் பெற்றது.

**வேளாண்மை**

நம் முன்னோர் வேளாண்மைத் தொழிலையே தமது வாழ்க் கைத் தொழிலாக்கி இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார் கள்.

**சாதி அமைப்பு**

தொழிலின் பெயரால்தான் அத்தொழிலைச் செய்பவர்கள் அழைக்கப்பட்டார்கள். மனிதவாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தத்தமக்கு வாய்ப்பான ஏதோ ஒரு தொழிலை மேற்கொண்டனர். எல்லாத் தொழிலும் எல்லார்க் கும் தேவைப்பட்டது.

உதாரணமாக

**வேளாளர்**

வேளாண்மை செய்து உணவு உற்பத்தி செய்பவர் வேளாளர் எனப்பட்டனர்.

**தச்சன்**

வீடு கட்டுவதற்கு தொழிற் கருவிகள் செய்பவன் தச்சன் எனப்பட்டான். தைப்பவன் தைச்சன். மரத்தில் செய்பவர் மரத்தச்சர்,

**கொல்லர்**

இரும்பில் தைப்பவர் இரும்புச் தச்சர் அல்லது கொல்லர். பொன்னில் தைப்பவர் பொற்தச்சர் அல்லது பொற் கொல்லர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளர்

பள்ளமான வயலில் நின்று வேலை செய்பவர் பள்ளர் என்றும்

பறையர்

பறைமேளம் அடிப்பவர் பறையர் என்றும்

நட்டுவர்

நட்டுவ மேளம் அடிப்பவர் நட்டுவர் என்றும்

கோவிலார்

கோயில் தொண்டு செய்பவர் கோவிலார் (கோவியர்) என்றும்

வண்ணார்

வண்ணமுறத் துணி வெளுப்பவர் வண்ணார் என்றும்

கரையார்

கடற்கரையில் மீன்பிடிப்போர் கரையார் என்றும்

ஐயர்

ஐயன் ஆகிய இறைவனுக்கப் பூசை செய்பவர் ஐயர் என்றும் அழைக்கப்பட்டனர்.

வேளாளர்

- எல்லார்க்கும் எல்லா தொழில் உதவியும் தேவைப்பட்டது. ஆனால் வேளாளனுக்கு இவர்கள் எல்லார் உதவியும் தேவைப்பட்டது. இவர்கள் எல்லோரும் உணவுப்பொருள் பெற வேளாளனிடமே போகவேண்டி ஏற்பட்டது. அதனால் மனித குலத்துக்குக் குடும்பத் தலைவர் போல வேளாளனே தலைவனாக மதிக்கப்பட்டான். மற்றத் தொழில் செய்வோரின் உதவியின்றி வேளாளனும் தொழில் செய்ய முடியாது. வேளாளனில்லாமல் மற்றவர்களும் உணவுப் பொருள் பெற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ உடல் இயங்குவதற்கு மற்றைய கை, கால் முதலாம் உறுப்புகள் எல்லாம் தேவை. அந்தந்த உறுப்புகள் எல்லாம் இயங்குவதற்கு உடலின் ஆதரவு தேவை.

அதேபோல வேளாளன் என்ற உடல் இயங்க ஏனைய தொழிலாளர் ஆகிய உறுப்புகளும் தொழிலாளராகிய உறுப்புகள் இயங்க வேளாளராகிய உடலும் இயைந்தன.

இங்கு பெருமை சிறுமை இல்லை. உறுப்பின்றி உடலில்லை, உடலின்றி உறுப்பில்லை.

எனவே **"தொழிலால் வந்த சாதிப்பெயர் என்பது பொய்த் தோற்றமே. பெருமை சிறுமை கற்பிப்பது அறியாமையாகும்".**

❖ உடம்பு எல்லா உறுப்புகளுக்கும் ஊட்டச்சத்தைக் கொடுத்து இயங்கவைக்க அவை ஒன்று சேர்ந்து உடம்பை இயங்க வைப்பது போல மற்றத் தொழில் செய்பவர்கள் வேளாண்மை செய்பவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேளாண்மை செய்வோன் அவர்களுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்து எல்லோரும் வாழ உதவுவான்.

## வேளாண்மை

❖ வேளாண்மை இரு இடங்களில் நடைபெறும். வீட்டில் விலங்கு வேளாண்மை, விளைநிலத்தில் பயிர் வேளாண்மை. இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமாகிப் பயன்தரும்.

❖ வீட்டுவளவில் மா, பலா, வாழை, தோடை, எலுமிச்சை, கொய்யா, மாதுளை முதலாம் செய்பயிர்களும், பனை, தென்னை, புளி, வேம்பு, இலுப்பை, வேலிப்பூவரசு முதலாம் வான் பயிர்களும் வளரும். ஆடு, மாடு, கோழி முதலாம் உயிரினங்களும் வளரும்.

❖ விளைநிலத்தில் நெல், வரகு, தினை, குரக்கன், மரவள்ளி, அவரை, பயறு, எள், பாகல், கத்தரி, வெண்டி முதலாம் காய் கறிப்பயிர்களும் வளரும்.

## விலங்கு வேளாண்மை

வளவில் ஆடு, மாடு, கோழி முதலாம் விலங்குகள் வளரும். ஆடு, மாடு கட்டுவதற்கென வளவின் ஒரு பக்கத்தில் தொட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடில் வைத்து கட்டி வளர்க்கப்படும். வளவிலுள்ள இலை குழைகள் அவற்றுக்கு உணவாகும். அதேவேளை சமையல் செய்யும்போது எஞ்சிய காய்கறிக் கழிவுகளும், கஞ்சி, கழுநீர், தவிடு என்பனவும் உணவாகும். அத்துடன் விளைநிலத்தில் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் களைப் புல், வைக்கோல், குரக்கன் ஒட்டு, தினை ஒட்டு, வரகுவைக் கோல், பயற்றங் கொடி, மரவள்ளி இலை முதலாம் விளை நிலக்கழிவுகளும் உணவாகும்.

நெல்வைக்கோல், குரக்கன் ஒட்டு, தினை ஒட்டு, வரகுவைக் கோல் என்பவற்றைக் காயவிட்டு வளவில் கொணர்ந்து பட்டடை யாக அடுக்கி வைத்து ஆடு, மாடுகளுக்குத் தேவைப்படும்போது உணவாகக் கொடுக்கப்படும்.

**சேதனப்பசளை**

வளவில் நிற்கும் பலவகை மரங்களிலிருந்து காலத்துக்குக் காலம் சொரியும் சருகுகளைத் தினமும் கூட்டியள்ளி ஓரிடத்தில் குப்பையாகக் குவித்து அவற்றுடன் ஆடுமாடு தின்று கழித்த வற்றையும், மாட்டுச்சாணி, ஆட்டுப்பிழுக்கை என்பவற்றையும் அவற்றின் மேல் தினமும் குவித்து வைப்பார்கள். அவையெல் லாம் நாளடைவில் உக்கிச் சேதனப் பசளையாகிவிடும்.

விளைநிலத்தில் பயிர் செய்யும்போது இந்தச் சேதனப் பசளையைப் போட்டு உழுதும் கொத்தியும் நிலத்தைப் பண்படுத்துவர்.

விளைநிலக் கழிவுகள் விலங்குகளுக்கு உணவாகும். விலங் குகளின் கழிவுகள் விளைநிலத்துக்கு பசளையாகும். இயற் கைப் பசளையால் பயிர்கள் செழித்து வளர்ந்து பூரண விளைவு தரும்.

**விலங்கின வருவாய்**

பசுமாடுகள் பால் தரும். வீட்டில் உள்ளவர்களுக்குப் பசுப் பாலும், தயிரும், மோரும், நெய்யும் பூரண சத்துணவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றுக் குட்டிகள் வளர்ந்ததும் பசுக்கன்றால் பட்டி பெருகும். விலையாகிப் பணம் தரும் நாம்பன் கன்று.

ஆட்டுப்பால் சிறந்த மூலிகையான உணவாகும். ஆட்டுக் குட்டி மறிக்குட்டிகளால் பட்டி பெருகும். கிடாய்க் குட்டிகள் வளர்ந்து விலையாகிப் பணம் தரும்.

மாட்டில் பசுக்கன்றும், ஆட்டில் கிடாய்க் குட்டியும் அதிக வருவாய் தரும்.

கோழி வளர்ப்பு ஒரு சிரமும் இல்லை. வீட்டில், வளவில் உள்ள கழிவுகளைத் தின்று வளரும். கோழியிடும் முட்டைகள் அடைவைத்துக் காலத்துக்குக் காலம் குஞ்சு பொரிக்க வைத்தால் கோழிப்பண்ணை பெருகும். சேவல், கோழிகள் விலையாகிப் பணம் தரும். கோழிகளுக்குக் கூடுகள் தேவை யில்லை. இரவில் வளவு மரங்களில் படுத்துறங்கும். கோழி முட்டை பூரண சத்துள்ள உணவாகும்.

**பயிர்வேளாண்மை**

வருடம் ஒருமுறை ஆவணி, புரட்டாதியில் மாரிகாலத்தில் நெல் விதைக்கப்படும் வீட்டில் சேர்க்கப்பட்ட சேதனப்பசளை உரமாகும். வீட்டில் வளர்க்கப்படும் எருது மாடுகளைப் பூட்டி ஏர் கலப்பை கொண்டு உழுது நிலத்தைப் பண்படுத்தி நெல் விதைக்கப்படும் நெல் வளர்கையில் அதற்குள் இருந்து பிடுங் கப்படும் களைப்புல் ஆடுமாடுகளுக்கு உணவாகும். மாரிமழை வெள்ளத்தில் நெல் வளர்ந்து விளைவு தரும்.

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவயம்

# திருவள்ளுவர் பார்வையில் செல்வம்

**கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை**
**ஓய்வு நிலை அதிபர் - இளவாலை.**

## அறிமுகம்

திருக்குறள் தமிழில் எழுந்த நூல்களுக்கெல்லாம் தலையாயது; மனிதர்கள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய விழுமியக் கருத்துக்கள் யாவற்றையும் ஒருங்கே கூறும் நூல். இன, மத, மொழி, தேச பேதங்கடந்து எக்காலத்துக்கும் எவ்விடத்துக்கும் பொருத்தமான கருத்துக்களஞ்சியமாக விளங்குகின்ற நூல். அதனால் உலகப் பொதுநூல் எனப் போற்றப்படுகின்றது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையும் பெருமையும் உடையது.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் உத்தியில் குறள் வெண்பா யாப்பில் ஏழுசீர்கள் கொண்ட இரண்டு அடிகளில் ஓதுதற்கு எளிதாய் உணர்வதற்கு அரிதாய் உள்ளது.

உலகில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு அதிக பதிப்புக்களைக் கண்ட நூல்கள் வரிசையில் முன்வைத்து எண்ணப்படத்தக்கது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களில் 133 அதிகாரங்களில், அதிகாரத்துக்குப் பத்துப் பாக்களாய் 1330 குறள் வெண்பாக்களை உடையது. திருக்குறளில் சொல்லப்படாத கருத்துக்களே இல்லை எனலாம்.

கூறப்பட்ட கருத்துக்களால் மட்டுமல்ல கூறும் முறைமை யாலும் சிறப்புற்று விளங்குகின்றது. உவமானம் உவமேயம் முதலான இலக்கிய அணிகளாலும், உடன்பாடாகவும் எதிர் மறையாகவும் கருத்துக்களைச் சொல்லும் விதத்தாலும் உலக இலக்கியத் தரத்துக்குரியதாய் காலத்தை வென்று நிற்பதாய் அமைந்துள்ளது. திருக்குறள் உள்ளவரை தமிழ் வாழும். தமிழ் உள்ளவரை திருக்குறள் வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வம்**

மனிதன் மனநிறைவுடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு எவையெல்லாம் தேவையோ அவை எல்லாம் செல்வங்களே. வள்ளுவர் பார்வையில் செல்வம் எனும் நோக்கில் பார்க்கும் போது, செல்வம் எனும் பெயரில் அதிகாரம் எதையும் வள்ளுவர் வகுத்துக் கூறவில்லை. ஆனால் செல்வம் பற்றி வெவ் வேறு இடங்களில் கூறியுள்ளார். செல்வம் என்பது பொதுவில் பொருட் செல்வத்தையே குறிக்கும் எனினும் வள்ளுவர் செல்வம் எனும் சொல் கொண்டு பல விதப்பொருள் தரும் குறள்கள் பலவற்றைக் கூறுகின்றார்.

- ❖ செல்வம் எனும் சொல் பொருட் செல்வத்தையே குறிக்கும் குறள்களையும்
- ❖ பொருள் என்னும் சொல் செல்வத்தை உணர்த்தும் குறள்களையும்
- ❖ செல்வம் எனும் சொல் வேறுபிற செல்வங்களைக் குறிக்கும் குறள்களையும்
- ❖ எதிர் மறையாகச் செல்வம் இன்மையைக்கூறி செல்வத்தின் அருமை பெருமைகளை உணர்த்தும் குறள்களையும் வள்ளுவர் பார்வையில் காணமுடிகிறது.

செல்வம் நிலையில்லாதது. செல்வம் எனும் தமிழ்ச் சொல்லே செல்வோம் செல்வோம் எனத் தன்மைப் பன்மையில் சொல்லும் போது நாம் உங்களுடன் தொடர்ந்து இருக்க மாட்டோம் சென்றுவிடுவோம் எனும் பொருளில் நிலையாமையை உணர்த்துவதையும், செல்வம் இன்மையைக் குறிக்கும் சொல்லான தரித்திரம் எனும் சொல்லும் தரித்து இரம், தரித்து இரம் எனச் சொல்லும் போது உங்களுடன் தரித்து இருக்க மாட்டோம் போய்விடுவோம் எனும் பொருளில் நிலையாமையை உணர்த்துவதையும் காணும்போது தமிழ்ச் சொற்களின் பன்முகப் பொருள் தரும் அருமைப் பாட்டையும் அறிந்து இன்புற முடிகின்றது.

**வள்ளுவர் பார்வையில் செல்வம்**

பொருட் செல்வத்தைக் குறிக்கும் செல்வம் எனும் சொல் வரும் இடங்களைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறன்வலியுறுத்தல் எனும் 4ஆம் அதிகாரத்தில் 31 ஆவது குறள்:

"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

என்னும் குறளில், அறம் சிறப்பையும் அளிக்கும் செல்வத்தையும் அளிக்கும் ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறு யாது? எனும் வினா மூலம் அறத்தால் வரும் செல்வத்தால் தான் சிறப்பு வரும் என்கிறார். இதே அதிகாரத்தில் அறத்தான் வருவதே இன்பம் எனக் கூறுவதன் மூலம் அறத்தால் வரும் செல்வம் தான் இன்பத்தைத் தரும் என்றும் ஏனைய வழிகளில் வரும் செல்வம் துன்பத்தைத் தருவதுடன் புகழையும் கெடுத்துவிடும் என்கிறார். இங்கு அறத்தை வலியுறுத்த வந்த வள்ளுவர் அறத்தால் வரும் செல்வத்தையும் அதனால் வரும் சிறப்பையும் சிறப்பால் வரும் இன்பத்தையும் கூறுவதைக் காணமுடிகிறது.

18 வெ·.காமை எனும் அதிகாரத்தில் 178 ஆவது குறள்:

"அ·.காமை செல்வத்திற்கு யாதெனில் வெ·.காமை
வேண்டும் பிறன்கைப் பொருள்"

எனும் குறளில் ஒருவனுடைய செல்வத்திற்குக் குறைவு நேராதிருக்க வழி எது என்றால் அவன் பிறனுடைய செல்வத்தைக் கவர நினைத்தால் அவனுடைய செல்வத்திற்கும் குறைவு வரும். ஆதலால் தன் செல்வத்தைக் காக்க வேண்டுமானால் பிறர் பொருளை விரும்பாதிருக்க வேண்டும் என்கிறார். இங்கு செல்வம் எனும் சொல்லும் பொருள் எனும் சொல்லும் பொருட் செல்வத் தையே குறித்து வந்துள்ளமையையும் காணமுடிகிறது. பிறர் பொருளை விரும்பாமையும் ஒரு செல்வமே என்பதையும் உய்த் துணர வைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 ஒப்புரவறிதல் எனும் அதிகாரத்தில் 216 ஆவது குறள்:

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் **செல்வம்**
நயன் உடையான் கண்படின்"

ஒப்புரவாகிய பெருந்தன்மை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அஃது ஊரின் நடுவே உள்ள பயன்மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது. என்பதன் மூலம் ஒப்புரவு பற்றிச் சொல்லவந்தவர் ஒப்புரவாளனிடம் வந்த செல்வம் எல்லார்க்கும் பயன்தரும் என்பதை உவமை மூலம் உணர்த்துகின்றார். இதன் மூலம் எல்லார்க்கும் பயன்படுவது தான் செல்வத்தின் உண்மைப் பயன் என்பதை உணர வைக்கின்றார்.

அதே ஒப்புரவறிதல் எனும் அதிகாரத்தில் 217ஆவது குறள்:

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் **செல்வம்**
பெருந்தகையான் கண் படின்"

ஒப்புரவாகிய பெருந்தன்மை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அது எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன்படத்தவறாத மரம் போன்றது என்பதன் மூலம் மூலிகைமரம் எப்படி வேர் முதல் இலைகள் காய் கனி எல்லாம் மருந்தாகி நோய் தீர்த்து இன்பம் தருமோ அதுபோல் பொருள் இல்லாமல் துன்புறுவோர்க் கெல்லாம் தக்கார் கைப்பட்ட செல்வம் அவர் வறுமையை நீக்கும் என செல்வத்தின் பயன் கூறுகின்றார்.

25 அருள் உடைமை என்னும் அதிகாரத்தில் 241 ஆவது குறள்:

"அருட் **செல்வம் செல்வத்துட் செல்வம்** பொருட்**செல்வம்**
பூரியார் கண்ணும் உள"

பொருள்கள் ஆகிய செல்வங்கள் இழிந்தவர்களிடத்திலும் உள்ளன: உயர்ந்தவர்களிடத்தில் மட்டும் உள்ள அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும். ஆதலால் பொருட் செல்வத்தை விட அருட் செல்வமே உயர்ந்தது எனவும் செல்வம் எனப்படுவது பொருட் செல்வத்தை மட்டுமல்ல அருள் செல்வத்தையும் குறிக்கும் என உணர முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32 இன்னா செய்யாமை எனும் அதிகாரத்தில் 311 ஆவது குறள்:

"சிறப்பு ஈனும் **செல்வம்** பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

சிறப்பைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும் பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம். எவ்வளவுதான் பெரும் செல்வம் உடையவராய் இருந்தாலும் பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மேல். ஆகவே செல்வம் உடைமையால் கர்வம் கொண்டு எவருக்கும் துன்பம் செய்யக் கூடாது என்பது பெற்றாம்.

34 நிலையாமை என்னும் அதிகாரத்தில் 332 ஆவது குறள்:

"கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ் **செல்வம்**
போக்கும் அது விளிந்தற்று"

பெரிய செல்வம் வந்து சேர்தல் கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது. அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது. ஆகவே செல்வம் நிலைத்து நிற்காது என்பதை உவமை முகத்தால் உணர்த்துகின்றார்.

34 நிலையாமை என்னும் அதிகாரத்தில் 333 ஆவது குறள்:

"அற்கா இயல்பிற்றுச் **செல்வம்** அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்"

செல்வம் நிலைக்காத இயல்பை உடையது. அத்தகைய செல்வத்தைப் பெற்றால், பெற்ற அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும். ஆகவே செல்வத்தைத் தேடி வைத்திருப்பதால் பயனில்லை, செல்வம் கிடைத்தபோதே நிலையான அறத்தைச் செய்தல் வேண்டும். செல்வத்தின் பயன் அதனை அறமாக மாற்றுதலே யாகும் என்பதை அறியலாம். செல்வம் நிலையில்லாதது அறமே என்றும் நிலையானது என்பதை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37 அவாஅறுத்தல் எனும் அதிகாரத்தில் 363 ஆவது குறள்:

"வேண்டாமைஅன்ன விழுச்**செல்வம்**ஈண்டுஇல்லை
யாண்டும் அ∴து ஒப்பதுஇல்."

அவா அறுத்த நிலைமை போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை. வேறு எங்கும் அதற்கு நிகரான ஒன்றுமில்லை. பொருட் செல்வத்தை விட பிறர் பொருளை விரும்பாமையாகிய பற்றற்ற செல்வம் வேறு ஒன்றும் இல்லை. இதனையே "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று முன்னோர் சொல்லி வைத்தனர்.

38 ஊழ் என்னும் அதிகாரத்தில் 375 ஆவது குறள்:

"நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் **செல்வம்** செயற்கு"

செல்வத்தை ஈட்டும் முயற்சிக்கு ஊழ்வகையால் நல்லவை எல்லாம் தீயன ஆதலும் உண்டு. தீயவை நல்லவை ஆதலும் உண்டு. பொருள் செய்ய வேண்டும் என்று எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அது வீணாவதும் உண்டு, சிலவேளை நல்ல முயற்சி செய்யாமலே செல்வம் சேர்வதும் உண்டு. இதெல்லாம் முன்வினைப் பயனேயாகும். இதனையே "அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி எடுத்தகருமங்கள் ஆகா" என்றனர் சான்றோர்.

**பொருட்பால்**

40 கல்வி எனும் அதிகாரத்தில் 400 ஆவது குறள்:

"கேடு இல் விழுச் **செல்வம்** கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை"

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல. பலவித செல்வங்கள் இருந்தலும் கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் வேறு எதுவும் இல்லை. அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் என்றபடி கல்வி அறிவு உடையவர்க்கே சென்ற இடமெல்லாம் சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42 கேள்வி எனும் அதிகாரத்தில் 411 ஆவது குறள்:

"**செல்வத்துள் செல்வம்** செவிச் **செல்வம்** அச் **செல்வம்**
**செல்வத்**துள் எல்லாம் தலை"

செவியால் கேட்டறியும் செல்வம் செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும். அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும். வேறு எச் செல்வத்தை செய்தாலும் பெருமுயற்சி செய்ய வேண்டும். அவை நிலையில்லாமல் அழிந்தும் போகும். செவிச் செல்வம் எனும் கேள்விச் செல்வம் எவ்வித முயற்சியும் இல்லாமல் சும்மா இருக்கச் செவிவழியே வரும் அறிவுச் செல்வமாகும். இதனாலேதான் "கற்றிலனாயினும் கேட்க" என்றனர் நம் சான்றோர்.

44 குற்றம் கடிதல் எனும் அதிகாரத்தில் 437 ஆவது குறள்:

"செயற்பால செய்யாது இவறியான் **செல்வம்**
உயற்பாலது இன்றிக் கெடும்"

செய்யத்தக்க நன்மைகளைச் செய்யாமல் பொருளைச் சேர்த்து வைத்திருப்பவனுடைய செல்வம் உய்யுந்தன்மை இல்லாமல் அழியும். கிடைத்த செல்வத்தைக் கொண்டு நல்லன செய்யாதவனுடைய செல்வம் வீணே அழியும். ஆதலால் செல்வம் கிடைத்தபோதே உய்திதரக் கூடியதான அறங்களைச் செய்தல் வேண்டும்.

53 சுற்றம் தழாஅல் எனும் அதிகாரத்தில் 524 ஆவது குறள்:

"சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் **செல்வம்** தான்
பெற்றத்தால் பெற்ற பயன்"

சுற்றத்தாரால் சுற்றப்படும் படியாக அவர்களைத் தழுவி அன்பாக வாழ்தல் ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் பெற்ற பயன் ஆகும். தன்னைச் சுற்றி உள்ள சுற்றத்தார் நண்பர்களின் தேவை அறிந்து கொடுத்தலே செல்வம் பெற்றதன் பேறு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56 கொடுங்கோன்மை எனும் அதிகாரத்தில் 555 ஆவது குறள்:

"அல்லற்பட்டு அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

முறை செய்யாதவனுடைய செல்வத்தைத் தேய்த்து, அழிக்கவல்ல படை அவனால் பலர் துன்பப்பட்டுத் துன்பம் பொறுக்க முடியாமல் அழுத கண்ணீர் அன்றோ.

நீதி நெறி நில்லாத கொடுங்கோலனுடைய செல்வம் அவனால் துன்பப்படுத்தப்படுபவர்களுடைய கண்ணீரால் அழியும் இதனையே அறவோர் "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" என்றனர்.

57 வெருவந்த செய்யாமை எனும் அதிகாரத்தில் 565 ஆவது குறள்:

"அருஞ் செவ்வி இன்னா முகத்தான் பெருஞ் செல்வம்
பேஎய் கண்டன்னது உடைத்து"

எளிதில் காணமுடியாத அருமையும் இனிமையற்ற முகமும் உடையவனது பெரிய செல்வம் பேய்கண்டு காத்திருப்பதைப் போன்ற தன்மை உடையது. செல்வத்தின் செழிப்பைக் காட்டாதவனுடைய செல்வம் பூதம் காத்த பொன் போலப் பயனற்றுப்போகும்.

இதே அதிகாரத்தில் 566 ஆவது குறள்:

"கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும்"

கடுஞ்சொல் உடையவனாய்க் கண்ணோட்டம் (கருணை) இல்லாதவனாய் உள்ளவனுடைய பெரிய செல்வம் நீடித்தல் இல்லாமல் அப்பொழுதே கெடும். செல்வத்துப் பயன் ஈதல் என்பதை மறந்து தன் செல்வத்தை யாராவது கேட்டு விடு வார்களோ என்று என்னேரமும் யாரும் தன்னை அணுக முடியாத படி கடுமையாக, இரக்கம் இல்லாதவனாக இருப்பவனுடைய செல்வம் நிலைக்காது பயனின்றிக் கெடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74 நாடு எனும் அதிகாரத்தில் 731 ஆவது குறள்:

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இல்லாச்
செல்வரும் சேர்வது நாடு"

குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

நிறைவான நாடு எனப்படுவது. குறையாத பொருளும் குறைவில்லாச் செல்வரும், தக்காரும் சேர்ந்திருப்பதேயாகும்.

74 அதே அதிகாரத்தில் 738 ஆவது குறள்:

"பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவ் ஐந்து"

நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர். நாட்டிற்கு அழகு சேர்க்கும் ஐந்தனுள் செல்வமும் ஒன்று. செல்வமே மற்றையவைக்கு மூலமானது.

76 பொருள் செயல்வகை எனும் அதிகாரத்தில் 752 ஆவது குறள்:

"இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு"

பொருள் இல்லாதவரை வேறு நன்மை உடையவராக இருந்தாலும் எல்லாரும் இகழ்வர். செல்வரை வேறு நன்மை இல்லாவிட்டாலும் எல்லாரும் சிறப்புச் செய்வர்.

"இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய் வேண்டாள் செல்லாது அவன் வாயில் சொல்" என்பது அறவோர் வாக்கு.

அதே 76 அதிகாரத்தில் 757 ஆவது குறள்:

"அருள் என்னும் அன்பு ஈன்குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினால் பெறப்பட்ட அருள் என்று கூறப்படும் குழந்தை பொருள் என்று கூறப்படும் செல்வமுள்ள செவிலித்தாயால் வளர்வ தாகும். அருள்வளர்வதற்கும் செல்வமே இன்றியமையததாகும். செல்வத்தின் பயன் அருளே ஆகும்.

84 பேதைமை எனும் அதிகாரத்தில் 837 ஆவது குறள்:

“எதிலார் ஆர தமர் பசிப்பர் பேதை
பெரும் **செல்வம்** உற்றக்கடை”

பேதை பெருஞ் செல்வம் அடைந்தபோது அவனோடு தொடர்வில்லாத அயலார் நிறைய நன்மைபெற, அவனுடைய சுற்றத்தார் பசியால் வருந்துவர்.

கல்வி அறிவில்லாத மூடனுக்குப் பெருஞ் செல்வம் சேர்ந்தால் அதனால் அவனுடைய சுற்றத்தார் பயன்பெற மாட்டார்கள். பிறர் அவனறியாமல் பொருளைக் கவர்ந்து பயன்பெறுவர்.

94 சூது எனும் அதிகாரத்தில் 937 ஆவது குறள்:

“பழகிய **செல்வ**மும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்”

சூதாடும் இடத்தில் ஒருவனுடைய காலம் கழியுமானால் அது அவனுடைய பழைமையாய் வந்த செல்வத்தையும் இயல்பான நற்பண்பையும் கெடுக்கும். சூதும் வாதும் வேதனை செய்யும் என்பது உண்மையே.

94 சூது எனும் அதிகாரத்தில் 939 ஆவது குறள்:

“உடை, **செல்வம்**, ஊன், ஒளி, கல்வி என்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்”

சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால் புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் ஒதுங்கும். உலகமே அவனை ஒதுக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட்டுத் தேடிய செல்வம் எல்லாம் கணப்பொழுதில் பறிபோகும். உலகம் இழித்துரைக்கும்.

100 பண்புடைமை எனும் அதிகாரத்தில் 1000 ஆவது குறள்:

"பண்பு இலான் பெற்ற பெருஞ் **செல்வம்** நன்பால்
கலந் தீமையால் திரிந்தற்று"

பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம் வைத்த கலத்தின் தீமையால் நல்லபால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும்.

நற்குண நற்செயல் இல்லாதவன் பெற்ற செல்வம் பயனின்றித் தீச்செயலுக்கே செலவாகி அழியும்.

101 நன்றிஇல்செல்வம் எனும் அதிகாரத்தில் 1007 ஆவது குறள்:

"அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் **செல்வம்** மிகுநலம்
பெற்றாள் தமியள் மூத்தற்று"

பொருள் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவாதவனுடைய செல்வம், மிக்க அழகுபெற்றவள் தனியாக வாழ்ந்து முதுமையுற்றாற் போன்றது.

வறியார்க்கு ஈயாத செல்வம் தனக்கும் பயனின்றிப் பிறர்க்கும் பயனின்றி வீணே அழிந்து விடும்.

101 நன்றிஇல்செல்வம் எனும் அதிகாரத்தில் 1008 ஆவது குறள்:

"நச்சப்படாதவன் **செல்வம்** நடுஊருள்
நச்சு மரம் பழுத்தற்று"

பிறர்க்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப் படாதவனுடைய செல்வம் ஊர் நடுவில் நச்சுமரம் பழுத்தால் போன்றது.

நடுவூருள் பழுத்த நச்சுமரம் எவர்க்கும் பயனின்றி வீணே அழிதல் போல பிறர்க்கு ஈய மாட்டாதவனுடைய செல்வம் வீணேகிடந்து அழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101 நன்றிஇல்செல்வம் எனும் அதிகாரத்தில் 1010 ஆவது குறள்:

"சீருடைச் செல்வர் சிறிதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து"

புகழ் பொருந்திய செல்வர் உற்ற சிறிய வறுமை உலகத்தைக் காக்கவல்ல மேகம் வறுமை மிகுந்தாற் போன்ற தன்மை உடையது.

மாரி வளங்குன்றினால் உலகு வறிதாகும். அதுபோல புகழ் மிக்க பெரியோரின் சிறிய வறுமை கூட ஏழைகட்கு மேலும் துன்பத்தைத் தரும்.

## வள்ளுவர் பார்வையில் பொருட் செல்வம்

25 அருளுடைமை எனும் அதிகாரத்தில் 247 ஆவது குறள்:

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம்இல்லை **பொருள்** இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாதி யாங்கு"

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதது போல உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம். இவ்வுலக இன்பத்திற்குப் பொருள் காரணமானாற் போல அவ்வுலக இன்பத்திற்கு அருள் காரணமாகும்.

7 புதல்வரைப் பெறுதல் எனும் அதிகாரத்தில் 63 ஆவது குறள்:

"தம்**பொருள்** என்ப தம்மக்கள் அவர்**பொருள்**
தம்தம் வினையான் வரும்"

தம்முடைய மக்களே தம்முடைய பொருள்கள் என்று அறிஞர் கூறுவர், மக்களாகிய அவர்தம் பொருள்கள் அவர வருடைய வினையின் பயனாய் வந்து சேரும். நம் மக்களே பெருஞ் செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74 நாடு எனும் அதிகாரத்தில் 732 ஆவது குறள்:

"பெரும் பொருளால் பெட்டக்கது ஆகி அருங் கேட்டால்
ஆற்ற விளைவது நாடு"

மிக்க பொருள் வளம் உடையதாய் எல்லாரும் விரும்பத்தக்கதாய் கேடு இல்லாததாய் மிகுதியாக விளை பொருள் தருவதே நாடாகும். செல்வ வளத்தால் பிறதேசத்த வராலும் விரும்பப்படும் நாடே சிறந்த நாடு ஆகும்.

76 பொருள் செயல்வகை எனும் அதிகாரத்தில் 751 ஆவது குறள்:

"பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்"

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராக செய்வதாகிய பொருள் அல்லாமல் சிறப்புடைய பொருள் வேறு இல்லை. பொருள் சேர்ந்த இடத்தைப் பெருமைப்படுத்தும்.

76 பொருள் செயல்வகை எனும் அதிகாரத்தில் 754 ஆவது குறள்:

"அறன் எனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து
தீது இன்றி வந்த பொருள்"

சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும் இன்பத்தையும் கொடுக்கும். நல்வழியில் செய்தபொருளே அற வழியில் இன்பத்தைத் தரும். தீயவழியில் சேர்த பொருள் துன்பத்தையே தரும்.

76 பொருள் செயல்வகை எனும் அதிகாரத்தில் 759 ஆவது குறள்:

"செய்க பொருளை சென்றுநர் செருக்கறுக்கும்
எஃகு அதனின் கூரியது இல்"

ஒருவன் பொருளை ஈட்ட வேண்டும் அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள் அதைவிடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மையானது வேறு இல்லை. செல்வம் இருந்தால் எத்தகைய பகையையும் வெல்லலாம்.

101 நன்றிஇல் செல்வம் அதிகாரத்தில் 1005 ஆவது குறள்:

"கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல்."

பிறர்க்குக் கொடுத்து உதவுவதும் தான் நுகர்வதும் இல்லாதவர்க்கு மேன்மேலும் பெருகிய பல கோடிப் பொருள் உண்டானாலும் பயன் இல்லை. பொருளின் பயன் அனுபவிப்பதும் பிறர்க்கு ஈவதும் தான்.

101 நன்றிஇல் செல்வம் அதிகாரத்தில் 1009 ஆவது குறள்:

"அன்பு ஒரீஇத் தன்செற்று அறம் நோக்காது ஈட்டிய
ஒண்**பொருள்** கொள்வார் பிறர்"

பிறரிடம் செலுத்தும் அன்பையும் விட்டு, தன்னையும் வருத்தி, அறத்தையும் போற்றாமல் சேர்த்து வைத்த பெரும் பொருளைப் பெற்று நுகர்பவர் மற்றவரே. பொன்காந்த பூதம் போலத் தனக்குதவாமல் பிறரால் கவரப்படும்.

## வள்ளுவர் பார்வையில் அருட் செல்வம்

**அறத்துப்பால்**

25 அருள் உடைமை எனும் அதிகாரத்தில் 241 ஆவது குறள்:

"**அருட் செல்வம்** செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம்
பூரியார் கண்ணும் உள"

பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன. அருளாகிய செல்வம் உயர்ந்தவரிடத்தில் மட்டுமே உண்டு. உயர்ந்தவரிடத்தில் மட்டும் உள்ள அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளுவர் பார்வையில் செவிச் செல்வம்

**பொருட்பால்**

42 கேள்வி எனும் அதிகாரத்தில் 411 ஆவது குறள்:

"செல்வத்துள் செல்வம் **செவிச் செல்வம்** அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

செவியால் கேட்டறியும் செல்வம் செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும். அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும். அது எதனாலும் அழியாது. கல்விச் செல்வம் முதலிய அனைத்தையும் தரும்.

## வள்ளுவர் பார்வையில் கல்விச் செல்வம்

**பொருட்பால்**

40 கல்வி எனும் அதிகபாரத்தில் 400 ஆவது குறள்:

"கேடுஇல் விழுச் **செல்வம் கல்வி** ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை"

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வங்கள் அல்ல. கல்விச் செல்வத்தால் ஏனைய செல்வங்களைப் பெறலாம். எக்காலத்தும் எதனாலும் அழியாமல் நிலைத்து இருக்கும்.

## வள்ளுவர் பார்வையில் நன்மக்கட் செல்வம்

**அறத்துப்பால்**

7 மக்கட்பேறு எனும் அதிகாரத்தில் 61ஆவது குறள்:

"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவு அறிந்த
**மக்கட் பேறு** அல்ல பிற"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறத்தகுந்த பேறுகளில் அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத்தவிர மற்றப் பேறுகளை நாம் மதிப்பதில்லை. நன்மக்களே நம்மை மட்டுமன்றி நம் சந்ததியையே வாழவைப்பவர்கள். நம் இம்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் உதவுவார்கள். ஆதலால் நன்மக்களிலும் மேலான செல்வம் வேறு எதுவுமே இல்லை.

## வள்ளுவர் பார்வையில்
## அவா இன்மையாகிய விழுச்செல்வம்

37 அவாஅறுத்தல் எனும் அதிகாரத்தில் 363 ஆவது குறள்:

"வேண்டாமை அன்ன **விழுச் செல்வம்**ஈண்டு இல்லை
யாண்டும் அ∴து ஒப்பதுஇல்"

அவா அற்ற நிலைமை போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை. வேறு எங்கும் அதற்கு நிகரான ஒன்று இல்லை. அவா இன்மையால் மனதில் திருப்தி உண்டாகும், போதும் என்ற மனம் உண்டாகும். அதுவே பொன் செய்யும் மருந்தாகும்.

## வள்ளுவர் பார்வையில் புகழ்ச் செல்வம்

**அறத்துப்பால்**

24 புகழ் எனும் அதிகாரத்தில் 231 ஆவது குறள்:

"ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

வறியவர்களுக்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப்புகழ் இல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை. இவ்வாழ்வின் பயன் புகழுடன் வாழ்தலே. அப்புகழைத்தருவது ஈதல் எனும் பண்பேயாகும். புகழ்ச் செல்வமே எக்காலத்தும் அழியாத செல்வமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

"வள்ளுவர் பார்வையில் செல்வம்" எனும் இந்த ஆய்வுக்கட்டுரை வள்ளுவர் தந்த திருக்குறள்களில் செல்வம் என்னும் பொருள்பட வந்துள்ள குறள்களைத் தொகுத்து எழுதப்பட்டுள்ளது.

மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் செல்வம் தான். எனினும் வள்ளுவர் தான் வகுத்த 133 அதிகாரங்களில் **"செல்வம்"** என அதிகாரம் எதனையும் வகுத்துத் தரவில்லை. ஆயினும் தனது குறள்கள்களில் ஆங்காங்கே மனிதனுக்குத் தேவையான செல்வங்களை உடன்பாட்டு முறையிலும், ஒப்பீட்டு முறையிலும், எதிர்மறை முறையிலும் கூறியுள்ளார்.

அவ்விதம் கூறப்பட்டனவாகிய செல்வம் எனும் சொல்லால் குறிக்கும் குறள்களையும், செல்வம் எனும் பொருள்படக் கூறும் குறள்களையும், வேறு பல செல்வங்களையும் குறிப்பால் உணர்த்தும் குறள்களையும் தொகுத்து இக்கட்டுரை எழுதப்பட்டுளது.

அந்தவகையில்

1. **வள்ளுவர் பார்வையில் செல்வம்**
2. **வள்ளுவர் பார்வையில் பொருட் செல்வம்**
3. **வள்ளுவர் பார்வையில் அருட் செல்வம்**
4. **வள்ளுவர் பார்வையில் கல்விச் செல்வம்**
5. **வள்ளுவர் பார்வையில் நன்மக்கட் செல்வம்**
6. **வள்ளுவர் பார்வையில் அவா இன்மையாகிய செல்வம்**
7. **வள்ளுவர் பார்வையில் புகழ்ச் செல்வம்**

எனும் ஏழு உபதலைப்புக்களில் இக்கட்டுரை அமைக்கப் பட்டுள்ளது. விரிவு அஞ்சி சுருக்கமாகவே விளக்கம் தரப் பட்டுள்ளது. திருவள்ளுவர் கருத்துக்களே கூறப்பட்டுள்ளன.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துணை நூல் :-**

திருக்குறள் மூலமும், மு.வரதராசனார் உரையும் - இந்து கலாசார அமைச்சு வெளியீடு

**அடிக்குறிப்புக்கள் :-**

ஒவ்வொரு தலைப்புக்கும் எடுத்தாளப்பட்ட குறள்களுடனே அக்குறள் இடம்பெறும் அதிகாரம், குறள் இலக்கம் என்பன தரப்பட்டுள்ளன.

குறள் பொருள் : மு. வரதராசனாருடையவை.
குறள் விளக்கம் கட்டுரை : ஆசிரியருடையதாகும்.

✪ ✪ ✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கு

## (சைவ வினாவிடையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு)

**1. ஆய்வுச் சுருக்கம் :**

சைவ சித்தாந்த சாத்திரங்கள் நூற்பா வடிவிலும் பல வகையான செய்யுள்கள் வடிவிலும் இருப்பதால் அவற்றைத் தமிழ்ப் புலமையாளர்களேயன்றிச் சாதாரண மொழி அறிவுடையோரால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

காலத்துக்குக் காலம் பல்வேறு விதமான விளக்கவுரைகள் எழுதப்பட்ட போதும் அவ்வுரைகளையே படித்து அறிவதும் சிரமமாகவே இருக்கின்றது.

சைவ ஆதீனங்களும் மற்றும் பல்கலைக் கழகங்கள் முதலான நிறுவனங்களும் புலமையாளரை மையப்படுத்தியே சைவசித்தாந்தக் கல்வியை நடைமுறைப்படுத்துகின்றன.

சைவசித்தாந்தம் பேசுவதற்கு அல்லது எழுதுவதற்கு மட்டுமான சைவ தத்துவம் அல்ல. அது சைவ வாழ்வியலுக்குரிய தத்துவம். ஆதலால் சைவ வாழ்வு வாழ்பவரால்தான் அதனை மற்றவர்களுக்குப் பயன்படும்படி செய்ய முடியும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் சைவ சித்தாந்த வாழ்வு வாழ்ந்ததுடன் தன் மாணவ பரம்பரையையே சைவ சித்தாந்த வாழ்வு வாழவைத்தவர்.

நாவலர் பெருமான் சைவசமய நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார். மாணவர்க்கும், வளர்ந்தோர்க்கும் ஒருங்கே பயன்தரத்தக்கதாக எழுதி வெளியிட்ட முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகள் சைவசித்தாந்தத்தை அறிய விரும்புபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஏற்ற எளிய நடையில் எழுதப்பட்டவை. முதலாம் சைவ வினாவிடையின் விரிவே இரண்டாம் சைவ வினாவிடையாகும்.

இரண்டாம் சைவ வினா விடையின் முதல் மூன்று இயல்களான பதி இயல், பசு இயல், பாச இயல் ஆகிய மூன்று இயல்களும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்கள் பற்றிய சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்களை எளிமைப்படுத்தி வினா விடையாக எழுதப்பட்டுள்ளன. இவை முப்பொருள் உண்மையை விளக்குகின்றன.

இக்கட்டுரையின் அளவு (சுருக்கம்) கருதி குறிப்பிட்ட மூன்று இயல்களிலும் சொல்லப்பட்ட வினா விடைகளுக்குரிய மூலங்கள் எந்தெந்தச் சைவசித்தாந்த சாத்திரங்களில் இடம் பெற்றிருக்கின்றன என்பதையும், அவை எவ்விதம் வினா விடையாகத் தரப்பட்டன என்பதையும் ஆய்வு செய்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**2. அறிமுகம் :**

“வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்” என்பது திருமந்திரம். எமது சைவசமய முதனூல்களாக் கொள்ளப் படுபவை வடமொழியில் வேத சிவாகமங்களும் தமிழில் பன்னிரு திருமுறைகள் மெய்கண்டசாத்திரங்கள் என்பனவுமாகும்.

“வேதாந்தத்துச்சியிற் பழுத்த சைவ சித்தாந்தச் செழுங்கனி” என்பது அருளாளர் வாக்கு. வேதத்தின் அந்தமாக இருப்பது வேத ஞான காண்டப் பகுதியாகிய உபநிடதங்கள். உபநிடதம் எனப்படுவது குருவின் அருகில் இருந்து கேட்கப்பட்டது எனப் பொருள் தரும். ஞான குரு சீடனுக்குச் செய்த உபதேசங்களே சைவ சித்தாந்தத்தின் மூலமாயுள்ளன.

உபநிடதங்களில் சொல்லப்பட்ட சைவ சித்தாந்தச் சிந்தனைகள் அடுத்த கட்டத்தில் சிவாகமங்களாகி அக் கருத்துக்கள் தமிழில் பன்னிரு திருமுறைகளின் உட்பொருளாகி சைவ இலக்கியங்களாக மலர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.7ஆம் நூற்றாண்டு தொடக்கம் மலர்ந்த பன்னிரு சைவத் திருமுறைகளின் உட்பொருளாக வியாபித்திருந்த சைவ சித்தாந்தக் கருத்துக்கள் 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் தமிழில் மெய்கண்ட சாத்திரங்களாக மலர்ந்தன.

சைவத் திருமுறைகளின் உட்கிடையாக இருந்த சைவசித்தாந்தக் கருத்துக்களை உய்த்துணர்வதில் ஏற்பட்ட தெளிவின்மையாலும், சைவசித்தாந்தத்துக்குப் புறம்பான பல சமய தத்துவங்கள் வந்து கலந்து மயக்கத்தைச் செய்ததாலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை 13ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது.

திருக்கயிலாய பரம்பரையில் வந்த புறச் சந்தானா சாரியர்களால் சைவ சித்தாந்தக் கருப்பொருளாய முப்பொருள் உண்மை தமிழில் தர்க்க நியாய முறைப்படி திட்ப நுட்பமாக மெய்கண்ட சாத்திரங்களாகச் செய்யப்பட்டன. இப்பணியில் முதல்வரான மெய்கண்டார் சிவஞானபோதத்தை 12 சூத்திரங் களும் 81 உதாரண வெண்பாக்களும் கொண்டு செய்தார். இதுவும் சாமானியர்களால் அறிதற்கரிதாக இருந்ததால் மெய் கண்டாரின் மாணாக்கரான அருணந்திசிவாசாரியார் அதனை 328 விருத்தங்களில் சுபக்கமாகச் செய்தார். அவர் வழிவந்த மாணவராகிய உமாபதிசிவாசாரியார் 100 விருத்தங்களில் சிவப் பிரகாசமாகவும், 100 குறள் வெண்பாக்களில் திருவருட் பயனாகவும் செய்தார். இவ்வழியில் மெய்கண்டசாத்திரங்கள் பதினான்கு கிடைத்தன.

காலத்துக்குக் காலம் எளிமைப்படுத்தப்பட்டு வந்தாலும் இவை தமிழ்ப்புலமையாளரால் அறியப்படத்தக்கனவாகவே இருந்தன. சைவ ஆதீனங்கள் காலத்துக்குக் காலம் பலவித உரை விளக்கங்களைச் செய்துவந்தபோதும் தமிழில் மொழி யறிவு குறைந்தவர்களுக்கு முழுப்பயன் தரவில்லை. இக்குறை பாட்டை நீக்குவதற்காகவே நாவலர் பெருமான் இதனை எளிமைப்படுத்தி வினா விடைகளாகத் தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் போதனைக்கு மட்டும் உள்ள தத்துவம் அல்ல அது சாதனைக்கும் உரியது. சாதனையாகக் கொண்டால் தான் உண்மைப் பயன்தரும் என்பது தெளிவு.

## 3. விடயப்பரப்பு :

### 3.1. நாவலர் பெருமானின் சைவ வாழ்வு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஈழத்துச் சைவ சித்தாந்த மரபில் வந்தவர். ஈழத்துச் சைவ சித்தாந்த மரபு நாமறிந்த வரையில் திருநெல்வேலி ஞானப்பிரகாசரில் தொடங்கு கின்றது. இவர் சமய வாழ்வு வாழ்ந்தவர். சைவ சித்தாந்த விளக்கம் செய்த ஈழத்து முதல் தமிழ் அறிஞர். 16, 17ஆம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்தவர். பசுக்கொலைக்கு அஞ்சிப் பரதேசம் போனவர் எனப் போற்றப்படுபவர். வடமொழியிலும் தமிழிலும் பல சைவசித்தாந்த விளக்க நூல்களை எழுதியவர். காசியில் துறவு பூண்டு சிதம்பரத்தில் குளம் வெட்டி, மடம் கட்டிச் சைவ முனிவராகத்திகழ்ந்தவர்.

இவருடைய மரபில் 19ஆம் நூற்றாண்டில் (1822 - 1879) தோன்றி வாழ்ந்தவர்தான் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். இவரும் தழிழுக்கும் சைவத்துக்கும் செயற்கரும் பன்முகப் பணிகள் செய்து அதன்படி வாழ்ந்து காட்டியவர், இவர் வேதசிவாகம சித்தாந்த மரபை வளர்த்தவர். தன் பின்னும் இவ்வழியில் பல மாணாக்கர்களை உருவாக்கி இன்றுவரை நாவலர் மரபை நிலை பெறவைத்தவர்.

ஒவ்வொருவரும் தத்தம் சமயம் இதுவென்றும்
அச்சமயக் கடவுள் இவரென்றும்
அவர்அருள்புரியும் முறைஇது வென்றும்
அவரைவழிபடும்முறை இதுவென்றும்
தெளிந்து அதன்படிவாழ வேண்டும்

எனக் கூறி அதன்படி சைவசமய வாழ்வு வாழ்ந்து காட்டியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமய வாழ்வு சைவசித்தாந்த பரிபாஷையில் எழில்ஞான பூசை எனப்படும். இதனைச் சிவஞான சித்தியார்

ஞானநூல்தனை ஓதல்ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவன்அடி அடைவிக்கும் எழில் ஞானபூசை.....

எனச் சிவஞானசித்தியார் விளக்கம் தருகின்றது. நாவலர் பெருமான் இவ்வகையில் தன் வாழ்வை எழில் ஞான பூசையாகவே வாழ்ந்து காட்டினார்.

## 3.2. நாவலர் பெருமானின் நூலாக்கப்பணி

இவருடைய சமய நூலாக்கப் பணிகளால் சைவத்தின் உயர்வை உலகம் அறிந்தது. சைவ மக்கள் சிவாகம அறிவும் ஒழுக்கமும் உள்ளவர் ஆயினர், சைவசமயக் கல்வி, சைவசமய ஒழுக்கம், சைவ அறிவு ஆகிய மூன்றும் வளரத் தலைப்பட்டன.

நாவலர் பெருமான் எழுதிப்பதிப்பித்த சைவசமய நூல்களில் சைவ வினாவிடைகள், பால பாடங்கள், பெரியபுராண சூசனம், சைவ அனுட்டானவிதி, யாழ்ப்பாணச் சமய நிலை, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்பன பிரதானமானவை.

செய்யுள் வடிவில் இருந்தவற்றை வசன நடையில் எழுதிப் பதிப்பித்தவற்றுள் பெரியபுராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடல் புராண வசனம், சிவாலய தரிசனவிதி, கொலை மறுத்தல் ஆகியவை அடங்கும்.

உரை எழுதிப் பதிப்பித்த நூல்களில் கோயிற் புராணம், சைவ சமய நெறி, பெரியபுராணம் (ஒருபகுதி) திருமுருகாற்றுப்படை என்பன அடங்கும்.

அத்தோடு கிறிஸ்தவ மத கண்டனங்களும் அடங்கும். இவையெல்லாம் சைவசமய உண்மைகளை அறிந்து அதன்படி வாழ உதவின என்பது வெளிப்படையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.3. நாவலரின் சைவ வினாவிடைகள்.**

சைவ மக்களுக்கு மெய்கண்ட சாத்திரங்கள் சைவத் திருமுறைகள் புராணங்கள் என்பவற்றிலுள்ள உண்மைக் கருத்துக்களையெல்லாம் இலகுவான வினாவிடையாக எழுதித் தந்த நாவலரின் ஆற்றல் வியக்கத்தக்கது. முதலாம் சைவ வினாவிடை 135 வினாக்களையும் விடைகளையும் கொண்டது. இரண்டாம் சைவ வினாவிடை 418 வினா விடைகளைக் கொண்டது. பெரியவர்களுக்கானது. சைவவினாவிடை ஒன்றின் விரிவாகவே இரண்டாம் சைவ வினாவிடை அமைந்துள்ளது.

ஆதலால் இரண்டாம் சைவ வினாவிடையில் இடம் பெறும் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் சிந்தனைகளே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

14 மெய்கண்ட சாத்திரங்களிலே வினா வெண்பா என்பதும் உண்மை விளக்கம் என்பதும் உபநிடதங்கள் போல் மாணாக்கன் வினாவுக்குக் குருமூர்த்தி விடைபகர்வ தாகவே அமைந்தவை. அவற்றை அடியொற்றியும் தான் வாழ்ந்த காலத்துத் தமிழ் மக்களின் மொழித்திறனுக்கு ஏற்பவும் நாவலர் பெருமான் சைவ வினாவிடையை இலகுவான வசன நடையிலேயே எழுதிப் பதிப்பித்தார். வினா விடைகள் இலகுவானவையாகத் தெரிந்த போதிலும் அவற்றின் உட்பொருள் சிந்திப்பவர்க்கு ஆழமான விசாலமான சைவ சித்தாந்த அறிவைத் தரவல்லன.

நல்ல விதைகளை நிலத்தில் போட்டு விட்டால் அவை உரிய பருவகாலத்தில் முளைத்து விளைவுதருவது போலப் பிள்ளைப்பருவத்தில் இச் சைவ சித்தாந்த வினா விடைகளை மனதில் பதித்துவிட்டால் பிள்ளைகள் பெரியவராகும் போது இக்கருத்துக்கள் மனதில் விளைந்து பூரண அறிவு விளக்கத்தைத் தரும் எனும் நாவலர் பெருமானின் உத்தி எண்ணி எண்ணி வியந்து போற்றுதலுக்குரியது.

சுருங்கச் சொன்னதை விரிவாக்கிச் சொல்வது இலகு. ஆனால் விரிவாக அதுவும் தர்க்க முறைப்படி சொல்லப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவற்றை இரத்தினச் சுருக்கமாகச் சொல்வது பேரறிஞர்க் கன்றிச் சாதாரண அறிவுடையோரால் ஆகக்கூடியதல்ல. சைவ வினா விடை மூலம் நாவலர் தரும் சைவ சித்தாந்த ஞானம் வியக்கத்தக்கது அல்லவா?

இரண்டாம் சைவ வினாவிடை பதி இயலில் தொடங்கி அன்பியல் வரை 16 இயல்களில் சைவ சமய வாழ்வியல் உண்மைகளை விபரிக்கின்றது. இங்கு முப்பொருள் பற்றிய பதி இயல், பசு இயல், பாச இயல் எனும் மூன்று இயல்களுமே சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றன.

**3.4. பதி இயல்**

உலகத்துக்குக் கருத்தாயார் எனத் தொடங்கி மகேஸ்வர வடிவங்கள் எவை என்பதுவரை 23 வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் உள்ளன. இவற்றுள்,

1) உலகத்துக்குக் கருத்தா யாவர்?
   சிவபெருமான்.
2) சிவபெருமான் எப்படிப்பட்டவர்?
   என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், இயல்பாகவே பாசங்களில் நீங்கியவர், என்றும் மகிழ்ச்சி உடையவர், தன்வயமுடையவர்.
3) சிவபெருமான் செய்யும் தொழில்கள் எவை?
   படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்துமாம்.
4) சக்தியாவது யார்?
   அக்கினியோடு சூடு போலச் சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமை.

இவற்றுக்கும் இது போன்று தொடர்ந்து வரும் வினாக்களுக்கும் மூலம் எங்கிருக்கிறது என்று பார்த்தால் சிவஞான போதத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞான போதத்தின் பிரமாண இயலின் முதற் சூத்திரம்

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

**இதன் பொருள் :**

அவன் அவள் அது என்று சொல்லப்படும். உலகத் தொகுதி தோன்றுதல், நிலைபெறுதல் ஒடுங்குதலாகிய முத் தொழில் உடைமையால் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டு, சங்கார காலத்தில் சங்கரிக்கும் கடவுளிடத்தில் ஒடுங்கும். ஒடுக்கப்பட்ட ஆன்மாக்களின் ஆணவ மலம் பரிபாகப் படாமை யால் மீண்டும் அக்கடவுளிடத்தில் அவை தோன்றும். ஆகவே உலகத்துக்குக் கருத்தா கடவுளே.

இதனையே சிவஞானபோதத்தின் வழி நூலாகிய சிவஞான சித்தியார்

ஒருவனோடொருத்தி ஒன்றென்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்
தான் முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே

**இதன் பொருள் :**

ஒருவன் ஒருத்தி ஒன்று என்று கூறப்படும் சேதன, அசேதனப் பிரபஞ்சம் எல்லாம், தோன்றும் முறையில் தோன்றி, நின்று ஒடுங்குதலும் உடைமையால், அவற்றைத் தோற்றுவித்து நிலைபெறச் செய்து ஒடுக்கும் கருத்தா ஒருவன் வேண்டப்படும். அக்கருத்தா தனக்கொரு முதல்வன் இன்றித்தானே எவற்றிற்கும் நிமித்த காரணனும், சங்கார காரணனுமாகிய இயல்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத் தொடர்பற்றுள்ள மெய்ஞ்ஞானமாகிய சக்தி வடிவத்தைக் கொண்டு நின்று அம் முத்தொழில்களையும் செய்தருளுவார்.

இதேபோன்று தொடர்ந்துவரும் பகுதிக்கும் அடுத்துவரும் சூத்திரங்களே இடமாக இருப்பதைக் காணலாம்.

### 3.5. பசு இயல் :

24) ஆன்மாக்களாவார் யார்?

நித்தியமாய் வியாபகமாய் சேதனமாய் பாசத்தடையுடை யோராய் சார்ந்ததன் வண்ணமாய், சரீரம் தோறும் வெவ்வேறாய் வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்போராய் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையோராய்த் தமக்கு ஒரு தலைவனை உடையோராய் இருப்பர்.

எனும் வினாவுக்குரிய மூலம் சிவப்பிரகாசத் தின் 19ம் பாடலில் இருப்பதைக் காணலாம்.

எண்ணரிதாய் நித்தமாய்
இருண்மலத்தில் அழுத்தி
இருவினையின் தன்மைகளுக்
கீடான யாக்கை
அண்ணல் அருளால் நண்ணி
அவை அவரால் அதனால்
அலகில் நிகழ் போகங்கள்
அருந்தும் ஆற்றால்
புண்ணியபாவம் புரிந்து
போக்குவரவுடைத்தாய்
புணருமிருண் மலபாகம்
பொருந்தியக்கால் அருளால்
உண்ணிலவும் இருளகற்றியாவும்
உற்றிடு நல்
பசுவர்க்கம் எனவுரைப்பர்
உணர்ந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளக்கம்:

ஆன்மாக்கள் அளவு கடந்தனவாய் ஒரு காலத்திலும் அழியாததாய், ஆணவமலத்தினாலே மறைப்புண்டு கிடந்து, அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்குரிய உடலை இறைவன் கருணையால் பெற்று. அவ்வுடம்பென்னத் தோன்றாது பிரிந்து நின்று அவ்வுடம்புகளாலே புண்ணிய பாவம் புரிந்து அதனாலே பிறந்தும் இறந்தும், இருவினை ஒப்பு ஏற்பட்டபோது இறைவன் அருளால் ஆணவத்தில் நீங்கி இறைபாதம் சேரும்.

இங்கு சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் நாவலர் பெருமானின் விடையில் இரத்தினச் சுருக்கமாக இருப்பதைக் காணலாம்.

28) ஆன்மாக்கள் எப்படிப் பிறந்து இறந்து உழலும்?

நல்வினை, தீவினை என்னும் இருவினைக்கும் ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்தையும், உடையவைகளாய்ப் பிறந்து இறந்து உழலும்.

29) நால்வகைத் தோற்றங்களாவன எவை?

| | | |
|---|---|---|
| 1. அண்டசம் | - | முட்டை |
| 2. சுவேதசம் | - | வியர்வை |
| 3. உற்பிச்சம் | - | வித்துவேர் |
| 4. சராயுசம் | - | கருப்பை |

இவற்றில் தோன்றுவன.

30) எழுவகைப் பிறப்புக்களாவன யாவை?

| | | |
|---|---|---|
| 1. தேவர் | - | 11 இலட்சம் |
| 2. மனிதர் | - | 9 இலட்சம் |
| 3. விலங்கு | - | 10 இலட்சம் |
| 4. பறவை | - | 10 இலட்சம் |
| 5. ஊர்வன | - | 15 இலட்சம் |
| 6. நீர்வாழ்வன | - | 10 இலட்சம் |
| 7. தாவரம் | - | 19 இலட்சம் |

ஆக மொத்தம் 84 நூறாயிரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்குரிய மூலம் சிவப்பிரகாசம் 47ஆவது பாடலில் இருப்பதைக் காணலாம்.

தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள்பாரில்
துறைந்து வரும் உற்பீசம் சராயுசங்கள்நான்கின்
ஊற்றமிகுதாபரங்கள் பத்தொன்பதென்றும்
ஊர்வ பதினைந் தமரர் பதினொன்றோடுலவா
மாற்றருநீர் உறைவன நற்பறவைகள் நாற்காலி
மன்னியிடும் பப்பத்து மானிடர் ஒன்பதின்மர்
ஏற்றியொரு தொகையதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்கு நூறாயிரமென்றெடுத்தே

இங்கு அடிக்கோடிட்ட இடங்களே அங்கு விடையாக உள்ளதைக் காணலாம்.

25) ஆன்மாக்கள் எடுக்கும் சரீரம் எத்தனை வகைப்படும்?
தூல சரீரம், சூக்குமசரீரம் என இருவகைப்படும்.

36) ஆன்மாக்கள் வினைகளைச் செய்வதற்கும், வினைப் பயன்களை அனுபவிப்பதற்கும் இடம் எவை?
இருவினைகளைச் செய்வதற்கும், இருவினைப்பயன்களை அனுபவிப்பதற்கும் இடம் பூமி. நல்வினைப்பயனை அனுபவித்தற்கு இடம் சுவர்க்கம் முதலிய மேலுலகங்கள். தீவினைப் பயனை அனுபவித்தற்குரிய இடம் 28 கோடி நரகங்கள்.

37) பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?
நல்வினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு, பூதாசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு சுவர்க்கத்தில் இன்பத்தை அனுபவிக்கும்,தீவினை செய்த ஆன்மாக்கள் தூல சரீரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டவுடனே, சூக்கும சரீரத்தோடு பூதசாரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக் கொண்டு நரகத்திலே போய் அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அனுபவிக்கும். இப்படியன்றித் தூலசரீரத்தை விட்டவுடனே பூமியிலே யோனிவாய்ப்பட்டு மற்றொரு தூலசரீரத்தை எடுப்பதும் உண்டு.

38) சுவர்க்கத்திலே இன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?

தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியிலே வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

39) நரகத்திலே துன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?

தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து முன்புதாவரங்களாயும் பின் நீர்வாழ்வன வாயும் பின்பு ஊர்வனவாயும் பின்பு பறவைகளாயும் பின்பு விலங்குகளாயும் பிறந்து பின்பு முன்செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

இவ்வினாவிடைகளுடைய மூலத்தை பின் வரும் சிவஞானசித்தியார் பாடலில் காணலாம்.

126.

பூதான சரீரம்போனால் புரிஅட்டகாயம் தானே
யாதனா சரீரமாகி இன்பதுன்பங்கள் எல்லாம்
நாதனார்ஆணை உய்க்கநரகொடு சுவர்க்கம் துய்த்து
தீதிலா அணுவாய்யோனி சேர்ந்திரும் சீவன்எல்லாம்.

(பூதானசரீரம் - தூலசரீரம், அட்டகாயம் - சூக்கும சரீரம்)
(சுவர்க்கத்தில் பூதசார சரீரம், நரகத்தில் யாதனா சரீரம்)

இந்தத்தூல உடம்பு நீங்கிய பொழுது சூக்கும உடம்பு அந்த உடம்போடு உடன் போகாது, மத்திவரை அது உயிரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெற்று இருக்கும். அந்தச் சூக்கும உடம்பில் நின்று வினைப்பயனை அனுபவிப்பதற்கு உரிய வெவ்வேறு உடம்புகள் உயிர்க்கு உண்டாகும். ஆகவே உயிர்கள் எல்லாம் அந்தச் சூக்கும உடம்போடு இறைவன் ஆணைப்படி சுவர்க்கம் அல்லது நரகத்திற்குச் சென்று, அந்தந்த உலகத்திற்கு உரியனவாகிய தூல உடம்புகளைப் பெற்று இன்பதுன்பங்களை அனுபவிக்கும். அதன் பிறகு எஞ்சிய சஞ்சித வினைப்பயனை அனுபவிக்கும் பொருட்டு மண்ணுலகத்தில் தாயின் கருப்பையில் வந்து விழும்.

அடுத்த பாடலில் சித்தியாரில்,

127.

உடல்விடா யோனிபற்றி உதிக்கினும் உதிக்கும் ஒன்றில்
படர்வுறாது உறும்பாவத்தால் பாடாணம் போல்கிடந்து
கடனதாம் காலம் சென்றால் கடுநரகதனில் வீந்துஅங்கு
இடர்உறும் உருவம் கன்மத்து அளவினில் எடுக்கும்அன்றே

**இதன் பொருள் :**

அந்தந்த வினைகளது வன்மை மென்மைகளுக்கு ஏற்ப பூத சரீரம் ஆகிய இந்த உடல் போன போது யாதனா சரீரத்தை எடுக்காது மற்றும் ஒரு பூத சரீரத்தை எடுப்பதும் உண்டு. யாதனா சரீரம் போன பொழுது, பூத சரீரத்தை எடுக்காமல் மற்றுமோர் யாதனா சரீரத்தை எடுப்பதும் உண்டு. யாதனா சரீரம் போன பொழுது பூத சரீரத்தை எடுக்காமல் மற்றுமோர் யாதனா சரீரத்தை எடுப்பதும் உண்டு. ஆதலால் இந்த உடம்பினை விட்டு இடைவிடாது பிறிதொரு உடம்பினை எடுப்பதும் ஒரு உடம்பிலும் தங்காமல், மிகுந்த பாவம் செய்த காரணத்தால் சூக்கும தேகத்துடன் கல்போல் கிடந்து அக்கால எல்லை நீங்கும் பொழுது, உயிர் கொடிய நரகத்தில் விழுந்து, அங்கு துன்புற்று இந்த உலகத்துக்கு வந்து பிறப்பதும் உண்டு.

இந்தச் செய்திகளையெல்லாம் நாவலர் பெருமான் சுருக்கமாகத் தெளிவாகத் தந்திருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40) எழுவகைப் பிறப்பினுள்ளும் எந்தப்பிறப்பு அருமையுடையது?

பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்திஇன்பம் பெறுதற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமையுடையது.

இதன் மூலத்தைச் சித்தியாரின் 181ஆம் பாடலில் காணலாம்.

வாழ்வுஎனும் மையல்விட்டு
வறுமையாம் சிறுமைதப்பி
தாழ்வுஎனும் தன்மையோடும்
சைவமாம் சமயம்சாரும்
ஊழ்பெறல் அரிதுசால
உயர்சிவ ஞானத்தாலே
போழ்இன மதியினானைப்
போற்றுவார் அருள்பெற்றாரே

**இதன் பொருள் :**

உத்தம குலத்தில் பிறந்தாலும் இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் என்பவற்றால் உண்டாகும் அகங்காரம் ஒழிந்தும், வறுமையால் செல்வர்பின் சென்று தாழ்ந்து நிற்கும் சிறுமை ஒழிந்தும், இருப்பது அரிது. பணிவு உடையவராய் சைவ சமயத்தைச் சேரும் புண்ணியப்பேறு மிகவும் அரிது ஆகும். சைவ சமயத்தில் பிறந்தும் உயர்ந்த சைவ சித்தாந்த நெறியைப் பொருந்திச் சிவபெருமானை வழிபடல் பெறுவார் ஆணவத்தின் நின்றும் நீங்கி அவர் அருள் பெற்று முத்திப்பேறு அடைவர்.

இவ்வுண்மை மேலே விடையாகத் தரப்பட்டிருப்பதைக் காணலாம்.

**3.6. பாச இயல்**

48) பாசமாவன யாவை?

ஆன்மாக்களைப் பந்தித்து நிற்பவைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49) பாசம் எத்தனை வகைப்படும்?

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி

50) ஆணவமாவது யாது?

அநாதியே செம்பிற் களிம்பு போல உடன் கலந்து நிற்பதாய், அறிவை மறைத்து தம்கால எல்லையில் நீங்குவதாய் இருப்பதும்.

57) மாயாகாரியங்கள் எவை?

தனு, கரணம்,புவனம், போகம்

இவற்றுக்குரிய மூலம் சிவப்பிரகாசம் 32ஆம் பாடலில் இருப்பதைக் காணலாம்.

மோகமிக உயிர்கள்தோறும் உடனாய் நிற்கும்
மூலஆணவம் ஒன்று முயங்கிநின்று
பாகமிகஉதவு திரோதாயி ஒன்று
பகர்மாயை ஒன்றுபடர் கன்மம்மொன்று
தேகமுறு கரணமொடு புவனபோகச்
செயலாரும் மாமாயைத் திரட்சி ஒன்றென்று
ஆகமலம் ஐந்தென்பர் ஐயம் மாறா
அருவான்ப தரிதென்பர் அறிந்துளோரே

இதன் பொருள் :

அறியாமை மிக உண்டாகும்படி ஆன்மாக்கள் தோறும் சகசமுமாய் அநாதியுமாய் இருக்கும்ஆணவமலம் ஒன்று முயங்கி நின்று பாகம் மிக உதவும்திரோதாயி ஒன்று,மாயை ஒன்று கன்மம் ஒன்று கரண புவன போகங்களைத் தரும் மாமாயை என்று ஐந்துமாம்.

51) கன்மமாவன யாவை?

ஆன்மாக்கள் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலே செய்த புண்ணிய பாவங்கள். இவை எடுத்த பிறப்பிலே செய்யப்பட்ட போது ஆகாமியம் எனப் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும். பிறவிதோறும் இப்படி ஈட்டப்பட்டு பக்குவம் படும் வரையும் புத்தித்தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும்போது சஞ்சிதம் எனப்பெயர் பெறும். இச் சஞ்சித கன்மங்களுள்ளே பக்குவப்பட்டவை மேல் எடுக்கும் உடம்பையும். அது கொண்டு அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்களையும் தந்து பயன்படும் பொழுது பிராரத்தம் எனப் பெயர் பெறும்.

இவ்வினாவிடைக்குரிய மூலத்தை சிவஞான சித்தியார் 102ஆம் பாடலில் காணலாம்.

மேலைக்கு வித்தும் ஆகி விளைந்தவை உணவுமாகி
ஞாலத்து வருமாபோல நாம் செய்யும் வினைகள் எல்லாம்
ஏலத்தான் பலமாச் செய்யும் இதம் அகிதங்கட்கெல்லாம்
மூலத்ததாகி என்றும் வந்திடும் முறைமையோடே

(வித்து - ஆகாமியம், விளைவு - பிராரத்தம், விளைவுவரை இருப்பது - சஞ்சிதம்)

சிவஞான சித்தியார் 102ஆம் பாடலின் பொருள்.

உலகத்தில் உணவின் பொருட்டு விளைந்த பொருட்கள் உணவுமாய் மேலும் வித்துமாய் வருதல் போல, நாம் செய்தோம் என்னும் முனைப்பால் செய்யப்படும் முயற்சியும். எக்காலத்திலும் செயல்வகையால் வினைக்கு ஈடாய்வரும் அனுபவத்தைத் தரும். அந்த அனுபவத்தை வினையின் பயன் என்று கருதாது, நான் செய்தேன் என்னும் கருத்துவகையால் கருதிச் செய்கின்றபோது, நல்வினை தீவினை எனப்படும் ஆகாமிய வினையை அது உண்டாக்கும். வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். அவற்றுள் ஆகாமியம் என்பது நல்வினை, தீவினை என்னும் முயற்சியைக் குறிக்கும். சஞ்சிதம் என்பது அந்த முயற்சி பயனுக்கு வராமல் கட்டுப்பட்டு இருப்பதைக் குறிக்கும். கட்டுப்பட்டுக் கிடக்கும் இடம் செய்தவனது புத்திதத்துவமும் மாயையும் ஆகும். பிராரத்தம் என்பது அந்த முயற்சியின் பயனை அனுபவித்தலைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52) மாயை எத்தனை வகைப்படும்?

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்று வகைப்படும். இவைகளுள்ளே சுத்தமாயை, அசுத்தமாயை இரண்டும் நித்தியம். பிரகிருதி மாயை அசுத்தமாயையினின்றும் தோன்றியதாதலால் அநித்தியம்.

53) சுத்தமாயை யாவது எது?

நித்தியமாய் வியாபகமாய் அருவமாய்ச் சடமாய் சொல் வடிவமும் சுத்தமாகிய பொருள் வடிவும் தோன்றுதற்கு முதற்காரணமாய் மயக்கம் செய்யாததாய் இருப்பது.

54) அசுத்தமாயை யாவது யாது?

நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், சடமாய், பிரளய காலத்திலே ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறை விடமாய் ஆன்மாக்களுக்குச் சுத்தா சுத்தமும், அசுத்தமும் ஆகிய தனுகரண புவன போகங்கள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் மயக்கம் செய்வதாய் இருப்பது.

இவ்வினா விடைகளுக்கு மூலமாய் இருப்பது சிவஞான சித்தியார் 143 ஆம் பாடல் இதோ

நித்தமாய் அருவாய் ஏக
நிலையதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்
வியாபியாய் அமலனுக் கோர்
சத்தியாய் புவனபோகம்
தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யும் அன்றே

இப்பாடலின் கருத்து மாயையின் இலக்கணம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்பாடலின் கருத்து:**

உலகத்திற்கு முதற்காரணம் எனப்படும் அசுத்த மாயையின் இலக்கணம் என்ன என்றால், மாயை உற்பத்தி இல்லாதது ஆதலால் நித்தம் ஆனது. கண்ணுக்குத் தோன்றாமையால் அருவமானது. வித்து ஆதியும் அறிவு இல்லாததால் சடம் ஆகியும், எந்த இடத்திலும் ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களைக் கொடுப்பதால் வியாபகமாயும், இறைவனின் வியாபகத்துக்குள் அடங்குவதால் அவனுக்கு ஒருவைப்புச் சக்தியாயும். புவனமும், போகமும் தனுவும் கரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிவதால் ஒரு மலமாகவும், உயிர்க்கு விபரீத உணர்வினைச் செய்வதால் மயக்கமாகவும் உள்ள இலக்கணங்களை உடையது எனக் கூறப்படுவதில் இருந்து நாவலரின் விடையின் அருமைப் பாட்டைப் புரிந்து கொள்ளலாம்.

**4. நிறைவுரை.**

நாவலர் பெருமானின் இரண்டாம் சைவ வினாவிடையில் 418 வினாக்களும் விடைகளும் இருந்தபோதும் இக்கட்டுரையின் அளவு வரையறுக்கப்பட்டிருக்கும் காரணத்தால் அவற்றில் ஒரு சிலவற்றையே ஆய்வு செய்ய முடிந்துளது. அதுவும் சைவ சித்தாந்தத்தின் மூலமாகிய பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையினை பதி இயல், பசு இயல், பாச இயல் எனும் மூன்று இயல்களில் நாவலர் பெருமான் தந்துள்ள வினாவிடைகளில் முக்கியமானவைக்குரிய மூலங்கள் சைவசித்தாந்த சாத்திரங் களில் இருந்து எடுத்துக்காட்டப்பட்டுளன.

அவற்றுக்குரிய பாடல்களைத்தந்து அப்பாடல்களின் உட்கிடை வினாவிடையாக நாவலர் பெருமானின் இரண்டாம் சைவ வினாவிடையில் இடம்பெற்றிருப்பதனைச் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

இதன் மூலம் சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கை அறியமுடிகிறது. அத்துடன் மாணவர் களும் மற்றவர்களும் சைவசித்தாந்தத்தை இலகுவாகப் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சைவ வாழ்வு வாழ்வதற்கு சைவ வினாவிடையைப் படிக்க வேண்டும் என்பது உய்த்துணர வைக்கப்பட்டுள்ளது.

## 5. அடிக்குறிப்பு.

1) மெய்கண்டதேவர்
13ஆம் நூற்றாண்டு
சிவஞானபோதம்
சைவசித்தாந்தப் பெருமன்றப்பதிப்பு
1994

2) அருணந்திசிவாசாரியார்.
13ஆம் நூற்றாண்டு
வைத்தியநாதன். கு
சிவஞானசித்தியார் தெளிவுரை
திருவாவடுதுறை ஆதீனம்
1999

3) உமாபதிசிவாசாரியார்
13ஆம் நூற்றாண்டு
சிவப்பிரகாசம்
சைவசித்தாந்தப் பெருமன்றப்பதிப்பு
1994

4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
சைவவினாவிடை இரண்டாம் புத்தகம்
சைவபரிபாலனசபை யாழ்ப்பாணம்
வெளியீடு
2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80ஆவது அகவை நிறைவு விழாவில் எம் தந்தை
## 2018-04-08



மூலவிருட்சமாய் ஆழ வேரூன்றி
விழுதுகள் பரப்பி நிமிர்ந்து நிற்கும் - எங்கள்
குலவிருட்சம் பரந்து நிழல்தந்து பாரெங்கும்
நிறைந்து விளங்கும் நிலைகண்டோம் அமுதவிழாவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய் கண்டானுக்கு மெய்கண்டானில் அமுதவிழா

**(சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் 80 ஆவது அகவை நிறைவு அமுதவிழா நினைவுப் பகிர்வு 08.04.2018)**

காலைக் கதிரவன் மகிழ்வுடன் உதயமாகி கதிர்களைப் பரப்பி ஒளிவீச, ஆன்மீகக் கதிர்கள் எங்கும் செறிந்து நிறைந்து மண்டபம் தெய்வீக ஒளிவீச, தெல்லிப்பழை கலை இலக்கியக் களமும், திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்தப் பயிற்சி மையமும் இணைந்து நடாத்திய, கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் எண்பதாவது ஆண்டு பூர்த்தி அமுதவிழாவும் அவரது மனைவி அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரையின் பவளவிழா நினைவும், வில்லிசைப் பாடல்கள் நூல் வெளியீடும் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் 08.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் திருவுருவப்படத்திற்கு தீபம் ஏற்றி, மலர் அஞ்சலி செய்து நிகழ்ச்சி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து செல்விகள் மாவிரதன் அட்சயா, சிவஹர்சா சகோதரிகளின் திருமுறை யோதல் நிகழ்வு இடம்பெற்றது. சபையில் வீற்றிருந்த கௌரவ விருந்தினர்கள், பெரியோர்கள், அறிஞர்பெருமக்கள் மற்றும் அழைப்பை ஏற்று வருகை தந்திருந்த சபையினர் அனை வரையும் சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் இளைய மகன் மாவிரதன் வரவேற்றுப் பேசினார்.

இணுவில் சித்தாந்த பயிற்சி மையத்தைச் சேர்ந்த சித்தாந்தரத்தினம் சிவஸ்ரீ சி.குமாரராசாக்குருக்கள் அவர்கள் ஆசியுரை வழங்கினார். பதிஞானம், பசுஞானம், பாசஞானம் பற்றிய இலகு முறையிலான விளக்கங்களுடன் அவரது ஆசியுரை அமைந்தது. பாசஞானம் பற்றிக் குறிப்பிடும் போது சைவப்புலவர் செல்லத்துரை அவர்களுக்கு வேட்டி வழங்கினார்.

பசுஞானம் பற்றிக் குறிப்பிடும்போது, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் ஆன்மாவிடம் உள்ளது. மும்மலங்களையும் நெல்லுக்கு ஒப்பீடு செய்தார். நெல்லில் உள்ள உமி ஆணவம், நெல் முளைத்தல் கன்மம், நெல்லில் உள்ள தவிடு மாயை இவை சேர்ந்ததுதான் ஆன்மா. ஒரு நெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல விளைச்சலைத் தந்தால் 468 நெல்மணிகளைத் தரும் என்ற செய்தியையும் சொல்லி அரிசியால் அமுதவிழா நாயகனை ஆசீர்வாதம் செய்தார். பதிஞான ஆசியாக உருத்திராட்சம், விபூதி, பஞ்சாடசரம் வழங்கினார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் கணேசானந்தன் வாழ்த்துரை வழங்கினார். சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் உயர்வுக்கு தனது அயராத உழைப்பை நல்கியவர். இலங்கை பூராவும் அறியப்பட்ட தமிழ் அறிஞர். நாவன்மை மிக்கவர். பாடசாலையும், குடும்பமும் ஒன்றென்ற அர்ப்பணிப்புடன் சேவை யாற்றியவர். மறைந்த துணைவியாரின் ஞாபகார்த்தமாக வருடா வருடம் நூல்கள் வெளியிட்டுவரும் சிறந்த எழுத்தாளர். சிறந்த மனிதர் என தனது வாழ்த்துரையில் புகழாரம் சூட்டினார்.

அச்சுவேலி குமாரசாமிக்குருக்களின் பூட்டனார் சிவஸ்ரீ. வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி வாசிக்கப் பட்டது.

விழாவின் தலைவர் தெல்லிப்பழை கலை இலக்கியக்களத்தின் செயலாளர், இலக்கியவித்தகர். திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் தலைமையுரை வழங் கினார்கள். கலாகேசரி. கலாபூஷணம், சைவப்புலவர். செல்லத் துரை அவர்கள் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்தபோது கணித விழாக்கள், விஞ்ஞான விழாக்கள் என பல்துறை விழாக்கள் இந்த மண்பத்தில் நடை பெற்றன. அவை மறக்கமுடியாத நிகழ்வுகள். இவருடைய ஆசிரியத்தன்மை எங்களுக்கு வரவில்லையே என்ற ஆதங்கம் என்போன்ற பலருக்கு உண்டு. யாழ்மாவட்டத்தில் முதன் முதலாக “ஆசிரியதினம்” நடைபெற்றபோது “சிறந்த அதிபர்” விருது பெற்ற பெருமைக்குரியவர்.

இவர் சிறந்த ஆசிரியர், ஆளுமைமிக்க அதிபர், பெருமைக்குரிய எழுத்தாளர், கவிஞர். கடமை பெரிதென காலம்பார்க்காது செயற்பட்டவர். தனது கணவரின் பாடசாலை தனது பாடசாலை என இவரின் துணைவியார் உழைத்தது எங்களுக்கு ஆச்சரியம். பக்கத்திலிருக்கும் பூக்காடுகளை எங்களுக்கு தெரிவதில்லை. கூத்தும் கலையும் விழாக்களாக நடந்த நமது குடாநாட்டில், அவற்றை ஏட்டில் பார்க்கும் இன்றைய இளைஞர்களுக்கு இந்த விழா நல்ல உதாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தச் சிந்துக்கு சொந்தக்காரன், மந்திரத் தமிழ் சொல்லின் வித்தை தெரிந்தவன். இவர் பாட்டெழுத இவரின் மனைவி பாடி ஒத்துழைத்திருக்கிறார். இவரின் மகன் நாவரசன் ஐந்து வயதிலே காரைக்கால் சிவகாமி அம்மன் ஆலயத்தில் வில்லிசை பாடினார். எந்த மனதிலே விழுமியங்கள் இருக் கிறதோ அங்கு அமைதி இருக்கும் என்பதற்கு சைவப்புலவர் செல்லத்துரை சிறந்த உதாரணம் என்று தனது தலைமை யுரையை வழங்கினார்.

சைவப்புலவர் செல்லத்துரையின் மூத்தமகன் நாவரசன் அறிமுகத் திருமுகம் வழங்கினார். ஐ.பி.சி. வானொலியில் பிரசவக்களம் என்ற நிகழ்சியின் நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்து புலம்பெயர் தேசமெங்கும் அறிமுகமான கவிஞர் நாவரசன் தந்தையின் அமுதவிழாவுக்காக இலண்டனிலிருந்து வருகைதந்து விழாவினை தொகுத்து வழங்கினார். தனது அறிமுகத் திருமுகத்தை கவிதை வடிவிலே கணீர் என்ற குரலில் அழகாக தெளிவாக வழங்கினார். "என் தந்தைக்கும் தாய், எனக்கும் தாய், என் தம்பிக்கும் தாய் மெய்கண்டான் கல்வித்தாய்" என்று தான்படித்த பாடசாலையான மெய் கண்டான் மகாவித்தியாலயத்துக்கு கவிதையில் புகழாரம் சூட்டியதை சபையோர் கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் நினை வாக சைவப்புலவர். செல்லத்துரை அவர்கள் எழுதிய வில்லசைப் பாடல்களின் தொகுப்பு எட்டாவது நினைவு நூலாக தெல்லிப்பழை கலை இலக்கியக்கள வெளியீடாக அரங் கேறியது. அதன் வெளியீட்டுரையை கீழைத்தேய கல்விக் கல்லூரியின் இயக்குனர் பண்டிதர். ம. ந. கடம்பேசுவரன் அவர் கள் நிகழ்த்தினார்கள். "இந்நூல்வெளியீடு வித்தியாசமானது. வில்லிசை ஏட்டில் எழுதாக் கவிதை. நாட்டார் பாடல்களின் ஒரு பகுதி. கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் சிறந்த ஊடகம். இன்று வில்லிசையும், நாட்டார் பாடலும் அழியும் நிலையில் உள்ளன.

தென்பாண்டிநாடு வில்லசையின் தோற்றுவாய். சிறு தெய்வ வழிபாட்டின் மூலம்தான் எங்களிடத்து வில்லிசை தோற்றம் பெற்றது. தன்னானே என்பது வில்லிசையின் தலைவாசல். வில்லிசையில் சைகை இரண்டு வகைப்படும். இயல்பாகவே கையசைத்து சைகை செய்வது ஒருவகை, மொழிக்கூடாக சைகை செய்வது இன்னொருவகை. வில்லிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களுக்கு அடையாளமான நூலாக இந்நூல் விளங்குகிறது.'' என வில்லிசைக்கு விளக்கம் கூறிய கடம்பேசுவரன் நூலிலுள்ள நூலாசிரியரின் சில வில்லிசை மெட்டுக்களைபாடிக்காட்டி நூலாசிரியரின் தனித்துவத்தை எடுத்துக் காட்டியது சிறப்பு.

ஏழாலை சைவசித்தாந்த ஆய்வு மையத்தின் இயக்குனர். சைவப்புலவர். கு.ரஜீபன் M.A அவர்கள் ''வில்லிசைப் பாடல்கள்'' நூலுக்கான நயவுரையை நிகழ்த்தினார். கார்மேகப் பொழிமழையாய் கவிபுனையும் சைவப்புலவன் செல்லத்துரை தாள் போற்றி என கம்பீரக்குரலில் அழகாக தனது நயவுரையை தொடங்கினார். ''தமிழில் வில்லிசையின் வகிபாகத்தை என்னால் இரண்டு வகையாகப் பார்க்க முடிகிறது. ஒன்று தமிழ்க் கவிதையில் வில்லிசையின் வகிபாகம். இன்னொன்று செல்லத் துரையின் வில்லிசையின் வகிபாகம்.

இந்தியாவின் தென்மாவட்டங்களில் சிறு தெய்வங்களின் வரலாறுகளை கடத்தும் சிறந்த ஊடகமாக வில்லிசை விளங்குகிறது. சிலப்பதிகாரத்தில் வில்லிசையின் இரு கூறுகள் காணப்படுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரங்களில் வில்லிசை வடிவம் உண்டு. திருவாசகத்திலும் வில்லிசை வடிவம் உண்டு. ''சிங்கம் ஒன்று புறப்பட்டதே.. என்ற தற்காலச் சினிமாப்பாடல் வில்லிசை மெட்டாகும்.

14ம் நூற்றாண்டில்தான் வில்லிசை முழுவடிவம் பெறு கிறது. சோழர் காலத்தில் வில்லிசை இடம்பெற்றதற்கான தரவுகள் காணப்படுகின்றன. புராண, இதிகாச செய்திகளைப் பரப்பும் ஊடகமாக வில்லிசை இருந்துள்ளது. தமிழ் நாட்டி லிருந்துதான் வில்லிசை நமக்கு கிடைத்திருக்கின்றது. தமிழ் நாட்டிலிருந்த சாத்தனூர் பிச்சைக்குடி என்பவர்தான் முதன் முதலில் வில்லிசைக்கு ஆர்மோனியத்தைப் பாவித்தார். மரபுக் கவிதை முறையில் இருந்து வில்லிசை வடிவத்தில் வந்தது வில்லிசையாகும்.

நூலாசிரியரின் வகிபாகம் என்ன? முதலில் புலவரின் பின்புலம் என்னவென்று பார்த்தோமானால் மரபுரீதியான சிறந்த கவிதைகளை வடிப்பது அவரின் சிறப்பு. நாட்டார் பாடல்களை வில்லிசையாக வடிப்பதும் புலவரின் இன்னொரு சிறப்பு. புலவர் ஒரு இரசிகனாக இருந்து ஆக்கங்களை உருவாக்கியுள்ளார் என்பது வெளிப்படையகத் தெரிகிறது. தமிழ்ப்புலமை, சமயப் புலமை, சித்தாந்த புலமை, நாடகப்புலமை, நாட்டிய நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமை, வில்லிசைப் புலமை என பல்முகப்பரிமாணம் பெற்ற வராதலால்தான் அவர் புலவர்.

வில்லிசையை "கதை கூறரங்கு" என பல்கலைக்கழகம் எடுத்துக் கூறுகின்றது. புராண இதிகாசங்கள் மட்டுமல்லாது இன்றைய பிரச்சனைகளை வில்லிசையில் பாடி ஆசிரியர் வில்லிசை மரபை உடைத்துள்ளார் என்பதனை இந்நூலை வாசிக்கும் வாசகன் தெரிந்து கொள்வான். இவரின் கவிதைக் கோட்பாடு வித்தியாசமானது. அது கவிதையும் வசனமும் கலந்தது.

வில்லிசையின் பாரம்பரியத்தை தொலைத்து நிற்கும் இன்றைய நிலையில் இந்நூல் வில்லிசைக்கான மரபை வெளிப் படுத்தும் அடையாளமாக வெளிவந்திருக்கிறது. எதிர்காலத்தில் மாணவர்களுக்கு வில்லிசையின் ஓர் அடையாளமாக இந்நூல் விளங்கும் என தனது நயவுரையை திறம்பட எடுத்துரைத்தார் சைவப்புலவர். றஜீபன் அவர்கள்.

தொடர்ந்து "வில்லிசைப் பாடல்கள்" நூல்வெளியீடு இடம்பெற்றது. கொழும்பு விவேகானந்தசபையை சேர்ந்த திரு. ஜெகதீஸ்வரன் அவர்கள் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கௌரவ விருந்தினர்கள் ஆசிரியரிடமிருந்து பிரதிகளை பெற்றுக்காள்ள சபையில் உள்ளோருக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்தில் அங்கு இசையாசிரியராக கடமையாற்றியவர் இசைக்கலாவித்தகர் ந.சிறிராம்குமார் அவர்கள். செல்லத்துரை அவர்களின் பல ஆக்கங்களுக்கு இசையமைத்து உதவியவர்.

ஓய்வுநிலைப் பிரதி அதிபரான அவர் பேசும்போது ஒரு ஆடவனின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பார்கள் அது சைவப்புலவர் செல்லத்துரையின் வாழ்வில் நிஜம். அவரது துணைவியாரே இவரின் வெற்றிகளுக்கு காரணமாக திகழ்ந்துள்ளார். என்று கூறிய இசையாசிரியர் சைவப்புலவர். செல்லத்துரையையும், அவரது துணைவியார் அமரர். சிவகாமசுந்தரி செல்லத்துரையையும் இணைத்து அருமையான பாடல் ஒன்றை இசைவடிவில் தனது காந்தக் குரலால் பாடி சபையோரை அமைதியாக இரசிக்க வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடசாலையிலேயே கற்று பின்னர் இங்கேயே அதிபரான பெருமைக்குரியவரின் மாணவன் நான். சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் தமிழர்கள் வாழும் உலகநாடுகள் எங்கும் சென்று சைவப்பிரசங்கங்கள் செய்து சமயம் வளர்த்த பெருமைக்குரியவர். கிராமியப் பாடசாலைகளில் கற்றவர்கள் தான் அதிகமாக பெரும் பதவிகளில் இருக்கிறார்கள். பெரிய பாடசாலைகளைவிட சிறிய கிராமமப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு தம்மை உயர்த்திக் கொள்ளும் சந்தர்ப் பங்கள் அதிகமாக கிடைக்கின்றன.

ஒருபுறம் சென்ஹென்றீஸ் கல்லூரி, மறுபுறம் இளவாலை புனித கன்னியர்மடம் என இருபெரும் பாடசாலை களுக்கு நடுவில் மெய்கண்டான் வித்தியாலயத்தை வளர்த்து எடுத்தவர். வலிகாமம் வடக்கு எங்கும் சைக்கிளில் சென்று சைவமும், தமிழும் வளர்த்தவர். அவரை சயிக்கிளில் கூட்டிச் சென்ற பெருமை எனக்குண்டு. எதைக் கூறினாரோ அதை செய்துகாட்டி முன்மாதரியாக வாழ்ந்தவர் என வடமாகாண சபையின் நிதித்துறைப் பிரதிப் பிரதம செயலாளர் திரு. செ. உ. சந்திரகுமாரன் அவர்கள் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

அடுத்து கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டது. திருவாவடுதுறை சைவசித்தாந்த பயிற்சி மையத்தினர் (கொழும்பு) சைவப் புலவருக்கு மலர்க்கிரீடம் சூட்டி, மலர்மாலை, சந்தணமாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா பாடி வழங்கி மிகச்சிறப்பான கௌரவத்தினை வழங்கினர். தொடர்ந்து பல மன்றங்கள், நிறுவனங்கள், சபைகள் என கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நாடகம் மற்றும் இலக்கியத்துறைக்கு சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் ஆற்றிய சேவையை பாராட்டி வட மாகாணசபையினால் முதலமைச்சர் விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டது.முதலமைச்சர் விருது வழங்கும் வைபவம் நடைபெற்றபோது செல்லத்துரை அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததால் தெல்லிப்பழை கலாசாரப் பிரிவினர் இக்கௌரவத்தை வழங்கினர். வடமாகாணசபையின் நிதித் துறைப் பிரதிப் பிரதம செயலாளர் திரு.செ.உ.சந்திரகுமாரன் அவர்கள் முதலமைச்சர் விருதை வழங்கிக் கௌரவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80ஆவது அகவை நிறைவு அமுதவிழாவில்
## மைந்தர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது வருடங்களாக சைவசித்தாந்த பரப்புரை செய்த பெருமைக்குரியவர் சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள். அவர் வாக்கும் வாழ்வும் ஒன்றாக கொண்டு வாழ்பவர் என திருவாவடுதுறை சைவசித்தாந்த பயிற்சி மையத்தின் (கொழும்பு) இயக்குனர் சைவப்புலவர். சித்தாந்த செம்மணி செ.நவநீதகுமார் அவர்கள் தனதுரையில் எடுத்துரைத்தார்.

சைவப்புலவர் செல்லத்துரை அவர்களிடமிருந்து நான் நிறையக் கற்றுள்ளேன். அவருக்கு இந்த மேடையில் கிடைக்கின்ற கௌரவங்களைப் பார்த்து நெகிழ்ந்து போகிறோம். சிவநெறிப்புலவர், சிவஞானச்செல்வர், கலாபூஷணம் செல்லத் துரை அவர்கள் 67 ஆக்கங்களை உருவாக்கியுள்ளார். 1952ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டுவரை இளவாலை காடிவளை இந்து இளைஞர் சங்க போஷகராக இருந்து வருகிறார். சைவப் புலவர். செல்லத்துரை அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்க வேண்டும் என திருவாவடுதுறை சைவசித்தாந்த பயிற்சி மையத்தின் (கொழும்பு) செயலாளர் சைவப்புலவர். சித்தாந்தரத்தினம். சா.பொன்னுத்துரை M.A அவர்கள் தனது வாழ்த்துரையில் தெரி வித்தார்.

சுகவாழ்க்கைப் பேரவையின் செயலாளர், சுகநலக் கல்வியாளர் கா. வைத்தீஸ்வரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது, "சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் சுக வாழ்க்கைப் பேரவையின் தலைவராக விளங்குகிறார். மெய்கண்டானில் இருபது வருடங்கள் அதிபராக இருந்தது அவரின் ஆளுமைப் பண்புக்கு சான்று. யாவரையும் அர வணைத்தல், கல்வி ஊட்டல், அனைவரையும் ஒருங் கிணைத்தல் போன்றவை சைவப்புலவரின் சிறப்பு பண்புகள். எந்த விழாவானாலும் தலைமை வகிப்பது அவரின் தலைமைப் பண்பு" எனக்குறிப்பிட்டார்.

ஏற்புரை வழங்குவதற்காக ஒலிவாங்கி அருகில் வந்த சைவப்புலவர். செல்லத்துரை அவர்கள் அன்பினால் கட்டுண்டு பேசமுடியாது நா தழுதழுத்து, கண்கலங்கினார். பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ஏற்புரை வழங்கினார்.

"எனது அன்பான மனைவியை இழந்து நின்றபோது என்னால் அத்துயரத்தில் இருந்து மீண்டுவர முடியவில்லை. அப்போது எனக்கு இருவர் பக்கபலமாய் இருந்து கைகொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவினர். ஒருவர் சுகவாழ்க்கைப் பேரவையின் செயலாளர் அருமை நண்பர் கா.வைத்தீஸ்வரன். அவர் என்னை எழுதுங்கள் என்று தூண்டியபடியே இருந்தார். இன்னொருவர் தெல்லிப்பழை கலை இலக்கியகளத்தின் செயலாளர் திருமதி. கோகிலா மகேந்திரன். அவர் நான் எழுதியவற்றை வெளியிடுங்கள் என்று வற்புறுத்திக் கொண்டிருந்தார். அத்தோடு நில்லாது எனது எழுத்துக்கள் அனைத்தையும் தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தினூடாக வெளியீடு செய்ய உதவினார்.

நான் இந்த மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் படித்த காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர் சுப்பையா ஆசிரியர் அவர்கள். அவர் அன்றே என்னை புலவர் என்றழைத்தார். அது பலித்து நிஜமாகிவிட்டது. மெய்கண்டான் எனக்கு களமாக இருந்து கைகொடுத்துள்ளது.

வில்லிசைப் பாடல்களை நூலுருவாக்க காரணமாக இருந்தவர், ஏழாலை சைவசித்தாந்த ஆய்வு மையத்தின் இயக்குனர். சைவப்புலவர். கு.ரஜீபன் M.A அவர்கள் ஆகும். சைவசித்தாந்த பயிற்சி மையத்தினர் இந்த விழாவை சிறப்புறச் செய்து முடித்துள்ளனர். அதற்கு தெல்லிப்பழை கலை இலக்கியகளத்தினர் கைகொடுத்து உதவியுள்ளனர்." அடுத்த தலைமுறைக்கு வழிவிடுங்கள் என்ற அன்பான வேண்டு கோளோடு அவரது ஏற்புரை இனிது நிறைவுற்றது.


அவரது வில்லிசைப் பாடல்கள் நூலிலிருக்கும் "மங்கையர் மாண்பு" என்ற வில்லிசையை மெய்கண்டான் பழைய மாணவிகள் திறம்பட மேடையேற்றி சபையோரின் கரகோசங்களைப் பெற்றனர். அடுத்தவர் நலனை நினைப்பவர் தமக்கு ஆயுள் முழுவதும் சுபதினம் என்பதுபோல அமுதவிழா அரங்கேறிய அன்றைய தினம் சுபமே கழிந்தது.

**கலாபூசணம், மேழிக்குமரன்**
**வவுனியா**

✪✪✪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சைவப்புலவர் சு.செல்லத்துரை**

தாய்மடியில் 28.03.1938

சிவனடியில் 21.10.2021

திதி :- ஐப்பசிமாத அபரபக்கத் துதியை

"தோன்றாத் துணையாய் தொட்டதெல்லாம் துலங்க
ஆன்றோனாய் அறவழிவாழும் சான்றோனாய் – எமை
ஆற்றுப்படுத்திடும் ஆண்டவனாய் – எம்வாழ்வின்
வேராகிநின்றவர் ஊற்றாகி ஊரிலும் உலகிலும்
உவகையுடன் நாம் வாழ வித்திட்டு நின்றவர்
விடைபெற்றுச் சென்றார் சிவனுள் உறைவதற்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிஞர் பார்வையில்

# சைவப்புலவர்
# சு. செல்லத்துரை

**28-03-1938 - 21-10-2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) "சைவசமய நெறிநின்ற சான்றாளன்"
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

2) "ஏழைகளுக்கு எழுத்தறிவித்தவர்"
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

3) "ஞான குரு"
சிவஸ்ரீ குமாரராஜக் குருக்கள் - இணுவில்

4) "செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனை உரை"
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

5) "சிவலோகத்தில் சைவப்புலவர்"
ஒல்லுடை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை

6) "ஞானத்தின் திருவுருவம்"
ஏழாலை கருணாகரப் பிள்ளையார் மடாலய பரிபாலனசபை

7) "சைவசமயத்தின் முதுசம்"
இந்துக்குருமார் அமைப்பு - கொழும்பு

8) "சைவமும் தமிழும் வளர்த்த மூதறிஞர்"
நீதியரசர் விக்னேஸ்வரன்

9) "சைவத்தமிழ்ச் சான்றோன்"
திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் - இலங்கை.

10) "நாம் பெற்றபேறு"
திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் - இணுவில்

11) "திருமந்திரப் பணிமனையில் நம் குருநாதர்"
திருமந்திரப் பயிற்சி மையம் - இணுவில்

12) "திருமந்திரப் பணிமன்ற தாபகத் தலைவரின் பன்முக ஆளுமை"
திருமந்திரப் பணிமன்றம் - கொழும்பு

13) "சைவசமயத்தின் பேரிழப்பு"
அருள்நெறித் திருக்கூட்டம் - மலேசியா

14) "கலையுலகம் ஈடுசெய்ய முடியாத இழப்பு"
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

15) "அறிவின் பரிமாற்றம்"
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16) "பற்றித் தொடரும் நினைவுகள்"
தெல்லிப்பழை கலை இலக்கியக்களம்

17) "சைவத்திற்கும் தமிழிற்கும் உழைத்த சைவச்சான்றோன்"
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

18) "சைவப்புலவராக சைவத்தமிழ் காவலராக வாழ்ந்து வழிகாட்டியவர்"
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

19) "நடமாடிய பல்கலை வித்தகர்"
ஆரியதிராவிட பாசாபிவிருத்திச் சங்கம்

20) "கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்தவர்"
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

21) "தமிழ்ச் செழுமையைப் பேணிய பெருந்தகை"
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்

22) "ஆசிரியப் பணியின் அகச்சான்று"
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

23) "சைவப்புலவர் என்ற சொல்லின் இலக்கணமாய்த் திகழ்ந்தவர்"
ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை

24) "சைவ வாழ்வியல் நெறியும் சைவப்புலவரும்"
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்

25) "நெஞ்சார்ந்த அஞ்சலிகள்"
வாழ்வகம் - சுன்னாகம்.

26) "ஊரும் பாரும் போற்றும் பல்துறை ஆழுமை கொண்ட பண்பாளன்"
இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்

27) "மெய் கண்ட ஒளி"
இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

28) "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன்"
கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்

29) "ஏழை மாணவர்களின் கல்வியை ஒளிர்வித்த சூரியன் மறைந்தது"
திராட்சையூர் விடுப்பு

30) "தமது வாழ்க்கையை சைவத்துக்கும் தமிழுக்கும் உரிய தவமாகவும், செய்தியாகவும் வழங்கியவர்"
பேராசிரியர் சபாஜெயராசா - வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) "தமிழ்ச் சங்கச் சான்றோன்"

காப்பியக் கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் - கொழும்பு

32) "புலவர் செல்லத்துரை அவர்களின் சொல்லையும் செயலையும் பின்பற்றுவோம்"

உடுவை எஸ். தில்லைநடராசா

33) "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த புண்ணியவாளன்"

சித்தாந்தரத்தினம் வே. கனகசபாபதி - ஏழாலை

34) "மாசறு மனிதன் - எங்கள் ஆசான்"

கவிஞர் கு. வீரா - இணுவில்.

35) "ஒல்லுடை மண்ணின் கலங்கரைவிளக்கம்"

திருமதி. சாந்தி நாவுக்கரசன் - கொழும்பு.

36) "தேவர் குலம் சென்றாயோ"

தமிழ்மணி கே. வெள்ளைச்சாமி - கண்டி

37) "சைவத்தொண்டு செய்த ஆளுமைமிக்க சாதனையாளன்"

திரு. க. இராசேந்திரம் - இளவாலை.

38) "பன்முக ஆளுமைப் பண்பாளன்"

திரு. செ.உ. சந்திரகுமாரன் - வயாவிளான்

39) "வாக்கும் வாழ்வுமாய்"

சைவப்புவலர் ச. முகுந்தன் - இணுவில்.

40) "தமிழ் வளர்த்த செல்லத்துரை என்னும் சைவப்புலவன்"

இளங்குமரன் கலாமன்றம் - காடிவளை

41) "தொண்டு நிறுவனங்களின் தீபஒளி"

சைவசித்தாந்தத்துறை - யாழ் பல்கலைக்கழகம்

42) "வறிய மாணவரை உயர வைத்தவர்"

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி

43) "நடமாடும் நூலகம்"

இந்துக்கற்கைகள் பீடம் - யாழ் பல்கலைக்கழகம்.

44) "இளவாலையின் ஓர் அடையாளம்"

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்

45) "வணக்கப்பா"

சுந்தரலிங்கம் சிவசங்கரன் - திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்




ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

(முதலாவது குருமஹா சந்நிதானம்)

ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.


22/10/2021

## "சைவசமய நெறி நின்ற சான்றாளன்"

சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் மறைவு சைவத் தமிழ் மக்களுக்கு ஓர் பேரிழப்பாகும். சைவசமய நெறி நின்று தானும் வாழ்ந்து அனைவரும் வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். நல் அதிபராக, சீரான உடை, நேரான பேச்சு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தை நீண்டகாலமாக நெறிப்படுத்தி சைவ மகாநாடுகள், சைவக் கருத்தரங்குகள், பல சைவப்புலவர்களை உருவாக்கி சைவசமய மக்களை நெறிப் படுத்தியவர். இவருடைய மறைவு அனைவருக்கும் மன வேதனையைத் தந்துள்ளது. திரு. செல்லத்துரை அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt. Revd. Dr. Justin B Gnanapragasam*
***Bishop of Jaffna***

**Bishop's House,**
**P.O. Box No. 02**
**Jaffna - Sri Lanka**
**Tel: +94(0) 21 222 2649 (O)**
**+94(0) 21 222 2161 (R)**
**Email: gnanamjb48@gmail.com**

# "ஏழைகளுக்கு எழுத்தறிவித்தவர்"

சைவ புலவர் செல்லத்துரை அவர்களின் திடீர் மரணத்தை அறிந்து நான் அதிர்ச்சி அடைந்தேன். வேறு இடத்தில் நான் இருந்ததன் நிமித்தமாக அவரது இறுதி சடங்கில் பங்குபற்ற முடியாமல் போனது எனக்கு வருத்தம் அளிக்கின்றது. எனவே அவரது பிரிவால் துயருறும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவுகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து நிற்கின்றேன்.

செல்லத்துரை மாஸ்டர் என்றால் மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகும். மெய்கண்டான் மகா வித்தியாலயம் என்றால் செல்லத்துரை மாஸ்டர் ஆகும். அந்த அளவிற்கு இப்பாடசாலை யோடு அவரது வாழ்வு ஒன்றித்து இருந்தது என்றால் மிகை ஆகாது. தன்னிடம் வருகின்ற வசதிபடைத்த பிள்ளைகள் ஆயினும், ஏழை பிள்ளைகள் ஆயினும் எல்லோரையும் அரவணைத்து கல்வி என்ற செல்வத்தைத் தாராளமாக வழங்கியுள்ளார்.

போர்க்கால சூழ்நிலையிலும் இடம்பெயர்வு காலங்களிலும் சைவப்புலவர் செல்லத்துரை மாஸ்டர் அவர்கள் மனம் சோராது சமூகப் பணியையும் சமயப் பணியையும் கல்விப் பணியையும் எல்லோருக்கும் வாரி வழங்கியுள்ளார். இவரோடு நான் கிட்டத்தட்ட இருபத்தி ஆறு ஆண்டுகள் பழகி இருக்கின்றேன். பழகுவதற்கு மிகவும் இனியவர், பண்பாளர், இரக்கமுள்ளவர், பிள்ளைகளுக்காக தன்னை அர்ப்பணம் செய்தவர் என்று பல பண்புகளை இவர் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தார். இவர் வழங்குகின்ற பல சைவ பேருரைகளை நான் மிகவும் ஆர்வமாக கேட்டு இருக்கின்றேன். இவர் தமது அற்புதமான, அழுத்தம் திருத்தமான, கருத்தாழமுள்ள வார்த்தைகளின் ஊடாக இறைவனின் அன்பை எல்லோரிடமும் பகிர்ந்து இருக்கின்றார்.

இவரின் வாழ்விற்காக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு இவரின் அர்ப்பண வாழ்வு மேலும் பல ஆசிரியர்களை பாடசாலை மாணவர்களுக்கு சமூகத்திற்கும் பெற்றுத்தர வேண்டும் என்று வேண்டி நிற்கின்றேன்." நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராக இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்", என்ற இயேசுவின் வார்த்தைக்கு தமது கடமைகளில் தவறாது பொறுப்புடன் வாழ்ந்து, உருக் கொடுத்த இவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள

+ B Gnanapragasam

பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்

யாழ். ஆயர்.ஆயர் இல்லம்.

Rt. Revd. Dr. Justin B Gnanapragasam × Bishop of Jaffna ×

*I have come that they may have life, and have it to the full. Jn. 10:10*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானகுரு"

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"
(சிவஞானபோத 8ம் நூற்பா)

சிவ வணக்கம்,

இளவாலை - இணுவில் சைவப்புலவர் செல்லத்துரை ஐயா அவர்கள் இவ்வுலகு நீத்த செய்திகேட்டபோது முதலில் இச்சமூகமும் நாமும் அவரிடம் இன்னும் நிறைய கற்கும் ஆவலில் இருக்கும் போது இடைநடுவில் எமைவிட்டு பயணப்பட்டு விட்டாரே எனும் எண்ணமே முதலில் தோன்றியது. அந்தளவிற்கு வாழ்ந்து வழிகாட்டும் அற்புத ஆசானாக திகழ்ந்தவர்கள் அவர்கள். தனது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் மற்றவர்களுக்கான முன்னுதாரணமானவராக தன்னை நிலைநிறுத்தி வாழ்ந்து காட்டியவர்கள். பல்வகையான நூல்களை இந்த சைவத்துக்கும் தமிழுக்கும் உவந்தளித்த பெரு மகனார். ஈழத்தமிழ் சமூகத்தின் சைவ சமயப் பணியில், தமிழ்ப் பணியில், கல்விப்பணியில் பல்லாண்டு காலம் பல சவால்களைக் கடந்து இன்னோரன்ன பல பணிகளை ஆற்றிய பெருமகனார். ஆசிரியப் பணியை அகச் சான்றுடன் ஆத்மார்த்தமாக இச்சமூகத்துக் காய் அர்ப்பணித்த ஆளுமையாளர்.

முத்தாய்ப்பாக திருவாவடுதுறை ஆதீனத்தின் ஒழுங்கமை வில் நடைபெறும் சைவசித்தாந்த நேர்முகப்பயிற்சி மையத்தின் கொழும்புக் கிளையின் இணுவில் உபகிளை முதல்வராக பொறுப் பேற்று இணுவில் கந்தசாமிகோயில் இளந்தொண்டர் சபையில் நடை பெற்ற பயிற்சி மையத்தில் நாங்களும் சைவசித்தாந்த இரத்தினமாக மிளிர்வதற்கு அதற்கான பயிற்சி வழங்கி பட்டைதீட்டியதில் பெரும் பங்காற்றியவர். அன்பும், பண்பும், எளிமையும் கொண்டு சமய வாழ் வியலின் மெய்யியலை புலப்படுத்தி குருவாய் எமை ஆற்றுப் படுத்தியவர்.

திருமந்திர விற்பன்னர், திருமுறையின் காதலர், சைவ சித்தாந்த மெய்யியலை வாழ்வியலாகக் கொண்டவர். வெள்ளை யாடை, பிரகாசித்த முகத்துடன், திருநீற்றுப் பூச்சும், குறுநகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுமாக எப்போதும் சிவப்பரம் பொருளைச் சிந்தித்து நேர்மறை எண்ணத்துடன் வாழ்ந்த நெறியாளர்.

அவரது இழப்பு அவரது குடும்பத்தையும் தாண்டி இந்த தமிழ்ச்சைவச் சமூகத்துக்கு பேரிழப்பாகும். இன்னும் அவருக்காக பல மாணவர்கள் காத்திருக்கிறார்கள். பல நூல்கள் காத்திருக்கின்றன. பல வகுப்பறைகளும், அரங்கங்களும் காத்திருக்கின்றன. ஆயினும் என்செய்வோம். பட்டினத்தார் பாடிய ஒரு பாடலை எங்கள் செல்லத் துரை ஆசிரியர் அடிக்கடி எங்கள் வகுப்பில் முன்வைப்பார். அதுதான் இப்போது எண்ணும் போதெல்லாம் நினைவில் வருகிறது.

**"வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் வினைதான் ஒழிந்தால்**
**தினைப்போதளவும் நில்லாது கண்டாய் சிவன் பாதம் நினை**
**நினைப்போரை மேவு நினையாரைநீங்கி இந்நெறியினின்றால்**
**உனைப்போலொருவன் உண்டோமனமே எனக்கு உற்றாரே"**

எனும் பாடலை அவர் குரலில் கேட்கும் தோறும் வாழ் வியலின் மெய்நிலையும் சிவபக்தியும் எம்நெஞ்சில் ஊற்றெடுக்கும். இத்தகைய ஞானாசிரியரை இன்று நாங்கள் இழந்து தவிக்கிறோம். எனினும் சிவாயுச்சியப் பேறில் அவர் என்றும் சிவானந்தத்தில் திளைத்திருக்கும் பேறுபெற்றார் என்பது மெய்நிலை. அவர் எங் களுக்கு கற்றுத்தந்தபடி வாழ்ந்தார் என்பதன் வெளிப்பாடே சிவனருள் பெற்ற அந்த சீலரது உயர்வினைத்திறனாகும்.

இறைநிழலில் இளைப்பாறும் அவருக்கு எங்கள் பிரார்த்தனை கள் அவர் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆறுதல்கள். அந்த ஞானகுருவின் வழிகாட்டலுடன் அவரது உப தேசங்களையும் சுமந்து ஆன்மீக வழியில் எங்கள் மானுடவாழ்வு தொடர்ந்து பயணப்படும்.....

"கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க".

பிரார்த்தனையுடன்...

**சிவஸ்ரீ குமாரராஜக் குருக்கள்**

**இணுவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
T.P No : 021 - 3213151
E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com
திகதி: 31/10/2021.
Fax:- 021 2241909
தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN
E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511

# "செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனை உரை"

ஈழத்து சைவ வரலாற்றில் சைவப் புலவர்களின் பங்களிப்பு தனித்துவமானது. 21ஆம் நூற்றாண்டில் சைவப் புலவர்களுக்கு எல்லாம் தலையான தலைவனாக விளங்கியவர் மூதறிஞர் அமரர் திரு.சு.செல்லத்துரை அவர்கள். அன்னாரின் பிரிவு சைவ உல கிற்கு பெரும் இழப்பு ஆகும். அறிவு, ஆற்றல், ஆளுமை அனை வரையும் அரவணைக்கும் பண்புகள் என அவரைப்பற்றி அடுக்கிக் கொண்டு போகலாம். நடமாடும் சைவக் களஞ்சியமாக எம் மத்தி யில் விளங்கினார். கடைசிவரை தனது கொள்கையில் இருந்து விலகாது சிறப்புடன் செயற்பட்டார். தனது அறிவை பிறருக்கு வழங்குவதில் ஆர்வம் காட்டினார். உயிர் பிரியும் வரை பல மாணவர்களுக்கு வகுப்புக்களை நடாத்தி தொண்டு செய்தார். இத்தகைய தூய தொண்டரை இனிமேல் நாம் எங்கே சந்திப்போம்.

50 ஆண்டுகளுக்கு முன் உடுவில் திறந்தவெளி அரங்கில் 10 வயது சிறுவனாக இவரைக் கண்டேன். அன்று முதல் இவர் மீது என்னை அறியாமலே மதிப்பும் மரியாதையும் தொடர்ந்தது. உடுவில் கிராமசபை திறந்தவெளி அரங்கில் இவர் பழக்கிய நாடகம் அரங்கேறியது. அதே அரங்கில் அன்னை தங்கம்மா அப்பாகுட்டி பழக்கிய வன்தொண்டர் எனும் நாடகமும் அரங் கேறியது. மகாஜனக் கல்லூரி ஆசிரியர் உடுவில் செல்லத்துரை அவர்களின் நாடகமும் போட்டியிட்டது. அந்தப் பசுமையான நினைவுகள் இன்றும் மறக்க முடியவில்லை.

சைவப்புலவர் அவர்கள் சிவகாமசுந்தரி அம்மையாரைத் திருமணம் செய்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். அம்மையாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினர்கள் எங்கள் குடும்பத்துடன் நீண்ட தொடர்பு உடைய வர்கள். அதனால் எல்லா நன்மை தீமைகளிலும் சைவப் புலவர் குடும்பம் எங்கள் இல்லத்திற்கு வருகை தருவார்கள். இப் பாரிய அன்புத் தொடர்பு இன்றுவரை எமக்கு உண்டு.

நான் ஆன்மீக சொற்பொழிவாற்றத் தொடங்கிய காலத்தில் சைவப்புலவர் அவர்கள் என்னை ஊக்குவித்தார்கள். காரைக்கால் சிவன் கோயிலில் சிறியேனுக்கும் பாராட்டுரை வழங்கினார். சில ஆண்டுகளுக்கு முன்பு சிவத்தமிழ் விருது சைவப்புலவர் அவர் களுக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வழங்கி கௌரவித்தது. அத்தினத்தில் புலவர் அவர்கள் தனது பாரியார் இன்று இருந்திருந் தால் எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பார் என வருந்தினார். சைவப் புலவரின் பாரியார் இறந்தநாள் முதல் மிகுந்த கவலையோடு அவர் வாழ்ந்ததை நான் அறிவேன். அவ்வளவு தூரம் இனிய இல்லற வாழ்வினை பேணிய தம்பதிகள் என்பதை அனைவரும் உணர் வார்கள்.

சைவப்புலவர் அவர்கள் கடந்த தை மாதம் முதல் எமது தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வெளியிட்ட திரு விளையாடற்புராண நூலை சரிபார்த்து அச்சுப்பிழையின்றி வெளி யிட உதவினார். ஆவணி மாதம் வெளியிட்ட நூலை அவரிடம் கொடுப்பதற்கு அவர் வசித்த வீட்டிற்கு சென்றேன். நீண்டநேரம் உரையாடினார். வாசல்வரை வந்து வழியனுப்பினார். அடுத்த புத்தகத்தின் பிரதியை ஆயத்தம் செய்யுங்கள் என்று கூறினார். என்ன ஆச்சரியம் திடீரென சுகயீனமுற்று வைத்தியசாலைக்கு சென்று இவ் வையகத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டார். சைவ உல கிற்கு புலவரின் இழப்பு பேரதிர்ச்சியைத் தந்தது. என் செய்வது இறைவன் நியதியை யார் வெல்வது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவிதேவஸ்தானம்
சிவபூமி அறக்கட்டளை
உபதலைவர்
அகில இலங்கை இந்து
மாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை

அருள்மிகு ஒல்லுடை ஞானவயிரவர்

ஆலய பரிபாலன சபை

இளவாலை

பதிவு இல: HA / 5 / JA / 178 ........................

# "சிவலோகத்தில் சைவப்புலவர்"

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய எனும் பஞ்சாட்சர மந்திரம் ஒலிக்கிறது. குளிர்மையும் அழகும் பனிமலை மீது படர்ந்து சிவ மந்திரங்கள் தவழ்ந்து பக்திப் பெருக்குடன் சிவயோகம் காட்சியளிக்கிறது. சிவலோகக் கதவு திறக்கிறது. பூமாரி பொழிய பாமாலை இசைக்க அன்பரே! என்னடியவரே! மண்ணுலகில் மகத்தான இறை பணியாற்றி விண்ணுலக பெருவாழ்வு காணவரும் சைவப் புலவரே! கலாபூஷணமே செல்லத்துரை அன்பரே வருக! வருக! என ஓசைஒலிக்க சிவபதம் நோக்கி நடக்கிறார் செல்லத்துரை அன்பர்......

யார் இவர்? சிவலோகத்தில் இவருக்கேன் இத்தனை வரவேற்பு. ஆம், சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளையின் சாதாரண குடும்பத்தில் ஏக புதல்வனாய் பிறந்து சைவமும், தமிழும் கற்றுத் தெளிந்து, கற்பவை கற்றபின் அதற்குத் தக வாழ்வில் நின்று சைவப்பணி, தமிழ்ப்பணி, அறப்பணி, சமூகப்பணியுடன், கல்விப் பணியும் ஆற்றிய, வாக்கும் வாழ்வும் ஒன்றாகிய செயல் வீரன்.

இளவாலை கிராமத்தில் காடிவளை எனும் சிற்றூரின் காவல் தெய்வமாக உறைந்தருளும் ஒல்லுடை ஞானவைரவர் ஆலயத்தின் ஒவ்வொரு கட்டுமாணக் கற்களும் இவர் புகழ் பாடும். அன்பமர் ஒல்லுடை ஐயனைப் போற்றி அவரையே குல தெய்வமாக வரித்து நற்றுணையாக நமசிவாயத்தை துதித்து அழகுற ஆலயம் அமைக்க முன்னின்று உழைத்து மூர்த்தி, தலம், தீர்த்தம் முழுமையடையச் செய்து முப்போதும் அடிய வர்கள் எப்போதும் குறைவில்லா சிவசிந்தனையை மனத்திருத்த வழி செய்த தொண்டன். "ஒல்லுடை ஞான வயிரவரே உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி தஞ்சமையா" என்ற ஆனந்த மாலையை இயற்றி ஆலயத்தை வலம் வந்து வழிபடும் ஒழுங்கில் நித்திய பாராயணத்துக்குரியதாக வழிகாட்டியமை போற்றுதற்குரியது.

சொற்பொழிவுத் தொடர்கள் நிகழ்த்தி நேற்றைய சிறுவர் களாய் இன்றைய தலைவர்களாய் இலங்கும் காடிவளைக் கிராமத்து இளைய தலைமுறைக்கு ஆன்மீக வழிகாட்டிய அறிவுச் சூரியன் பிள்ளையார் கதை, கந்தபுராண படிப்பு போன்ற வற்றை ஆலயத்தில் நிகழ்த்தி எல்லாரும் பயனுறச் செய்து வழிகாட்டியாக விளங்கியவர். அலங்கார உற்சவம், நவராத்திரி காலங்களில் சிறுவர்களையும் இளையோரையும் சைவச் சொற் பொழிவு ஆற்ற ஊக்குவித்து பரிசளித்து ஏற்றம் காண உதவியவர். தேவாரப் பாராயணங்கள் மனனம் செய்து ஒப்பு விக்கவும், கூட்டுப் பிரார்த்தனை நிகழ்த்தவும், பூமாலை, தோரணங்கள் கட்டிப் பழகவும், கோலமிடவும், விரத அனுஸ் டானங்களையும், ஆலய வழிபாட்டு முறைகளையும் முறைப்படி அனுஸ்டிக்கவும், ஆசாரசீலராய் வாழ்வில் மிளிரவும் பல வகையில் அறிவூட்டிய சிவச்செல்வன்.

முத்தமிழையும் வித்தையாகக் கற்று இயல்துறை, நாடகத்துறையில் படைப்புக்கள் பல படைத்து, இந்து இளைஞர் சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்பி பல அரங்கங்களை நடாத்திய பெருமையை உடையவர். "நித்திய கல்யாணி" எனும் நூல் வெளியிட உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. நுண்மதி பாலர் பாடசாலை, அறநெறிப் பாடசாலை ஆகிய வற்றுக்கு அத்திவாரமாகி சோர்விலா சமூகப் பணி பற்பல செல்லத்துரை ஐயன் புரிந்துள்ளார். "சன்னிதி முருகனை தரிசிக்கப் போறோம்" என்ற சிந்துநடைக் கூத்து இயற்றி அறநெறிப் பாடசாலை மாணவர்களை பயிற்றுவித்து பிரதேச சபை மூலம் நடாத்தப்பட்ட போட்டியில் முதலிடம் பெறச் செய்து ஊருக்கு பெருமை சேர்த்தவர்.

இளவயது முதல் ஒல்லுடை ஞானவைரவர் ஆலயத்தின் செயலாளராகவும் பின்னர் போசகராகவும் சேவையாற்றி ஆலயத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு, தொண்டு மனப்பான்மை, தலைமைத்துவப் பண்பு, சமூக விழுமியங்கள் அத்தனையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ரச் செய்து சித்தம் சிவன்பால் வைத்த சீராளன் செல்லத் துரை ஐயா என்றால் மிகையில்லை.

இப்போது சொல்லுங்கள் சிவலோகத்தின் கதவுகள் அன்பர் செல்லத்துரைக்காய் திறந்ததில் வியப்பேதும் உண்டோ?

தோன்றில் புகழோடு தோன்ற வேண்டும். மகன் தந்தைக்கு ஆற்றுமுதவி இவன் யார்பிள்ளை என உலகம் வியக்க வேண்டும். பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனடி சேர வேண்டும். பஞ்சமா பாதகங்கள் விட்டு ஒழிய வேண்டும், தந்தை தாய் பேண வேண்டும், தர்மம் செய்ய வேண்டும், மூத்தோரை மதிக்க வேண்டும் என்ற சைவப்புலவரின் சொற்பொழிவு வரிகள் காற்றில் மிதந்து ஒல்லுடை வீதியை என்றும் வலம் வந்து கொண்டிருக்கும். பெருமகனார் தம் மனைவி சிவகாமசுந்தரியுடன் இணைந்து ஆற்றிய நற்பணிகள் எம் ஊர் மக்கள் மனதில் என்றென்றும் நிறைந்திருக்கும். இவர்கள் நிறைவான வாழ்வை வாழ்ந்து எம் ஊர் மக்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக விளங் கியுள்ளனர். நம் எதிர்கால சந்ததி அன்னாரின் எண்ணங்களை எண்ணிய கதிக்கு யாதுமோர் குறைவிலாது பின்பற்றுவார்கள். அதையெல்லாம் பெண்ணின் நல்லாள் அவர்தம் மனைவி சிவகாமசுந்தரியுடன் இணைந்து சிவலோகத்தில் ஆடலரசன் அடியின் கீழ் இருந்து கண்குளிரப் பார்த்து மகிழ்வார் என்பது திண்ணம்.

**ஒல்லுடை ஞானவைரவர் ஆலய**
**பரிபாலன சபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஞானத்தின் திருவுருவம்”

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித் துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்கொன்றை செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பை கண்களிப்பக் கண்டார்கள்.

இப்பாடலில், மதுரைக்கு வந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை மங்கையற்கரசியாரும் குலச்சிறையாரும் மடத்திலே கண்கள் களிக்கும் படியாக கண்டு மகிழ்ந்த அனுபவத்தைக் காண்கிறோம்.

இத்தகையதொரு மகிழ்வான அனுபவத்தையே அமரர் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களை ஏழாலை கருணா கரப்பிள்ளையார் மடாலயத்தில் முதன் முதலாக கண்டபோது நாமும் பெற்றோம்.

அன்னாரது நூல் ஆக்கங்கள் ஆன்மீகக் கட்டுரைகள் மூலமாக அவரைப்பற்றி முன்னரே அறிந்திருந்தும் நேரில் அறி முகமாகும் வாய்ப்பினைப் பெற்றிராத எமக்கு, அவர் தமது இறுதிக்காலத்தில் எமது ஊரிலேயே வந்து வசிக்கக்கூடியதும் எமது ஆலயத்துக்கு தினமும் வரக்கூடியதுமான ஒரு சூழ்நிலை உருவானது பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

தமது மகனுக்கு எமது ஊர்ப் பெண்ணை திருமணம் செய்து வைத்ததன் மூலமாக பிற்காலத்தில் செல்லத்துரை அவர்கள் ஏழாலையிலே வந்து வாழ்ந்தார். இங்கு வந்த நாளிலிருந்து இறைபக்தரான அவர் வீட்டிற்கு அருகாமையில் இருந்த கருணாகரப்பிள்ளையார் ஆலயத்திற்கு தினமும் காலையில் வந்து உள்வீதியும் வெளிவீதியும் வலம் வந்து வணங்கும் நியமத்தை தவறாது கடைப்பிடித்து வந்தார். ஞானத்தின் திருவுருவமாக எமது ஆலயத்தில் வந்து உலாவிச் செல்வார். அது எமக்குப் பெரும் பேறாக இருந்தது. அவரிட மிருந்த திறமையான பணிகள் எமது ஆலயத்திற்கும் கிடைக்கும் வாய்ப்பைப் பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை கருணாகரப்பிள்ளையார் மடாலயம் கடந்த நூறு வருடங்களாக புராணபடனங்கள் சிறப்பாக நடைபெறும் ஓர் இடமாகத் திகழ்ந்தது. இங்கே புராணம் படிப்பதிலும் பயன் சொல்வதிலும் விற்பன்னர்களான பல பெரியார்கள் வாழ்ந்து புராணபடனங்களை அவற்றிற்குரிய கால நேரங்களில் சிறப்பாக நடாத்திக் கொண்டிருந்தனர். ஆனால் காலப்போக்கில் அப் பெரியார்கள் இறைவனடி சேர்ந்தும் சிலர் நோய்வாய்ப்பட்டும், சிலர் புலம்பெயர்ந்து போனதுமாக எமது ஆலய புராணபடன நிகழ்வுகளிலே சிறுதளர்வு ஏற்பட்டிருந்த நிலையில், இவ்வூரிலே புராணம் படிப்பதில் ஆர்வமுள்ளவர்கள் புராணபடனம் தடைப் பட்டுப்போக விடாமல் தம்மால் இயன்றளவு அதனை நிகழ்த்தி நிறைவேற்றிக் கொண்டிருந்தனர்.

ஆயினும் முன்பிருந்த பெரியார்களைப் போல புராணங் களுக்கு விரிவாகப் பயன்சொல்லி வழிப்படுத்த ஒருவர் தேவை யாக இருந்தது.

அவ்வேளையில்தான் சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் ஞானசூரியனாக எமது ஆலயத்துக்கு வந்தார். அனை வரிடமும் அன்பாக இனிமையாகப் பழகினார். அதனால் தயக்க மின்றி அவரிடம் எந்தவொரு உதவியும் கேட்கக் கூடியதாக இருந்தது.

கருணாகரப்பிள்ளையார் ஆலயத்திற்குரிய புராணபடன நிகழ்வுகளை தலைமை தாங்கி நடாத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். எமது வேண்டுகோளை ஏற்று பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகிய இரு புராண படன காலங்களிலும் ஆர்வத்தோடு வந்து பங்கு பற்றி சிறப்பாக நடாத்தினார்.

கணீரென்ற குரல்வளம். பாடல்களுக்கு தெளிவான விளக்கமான முறையில் பயன்சொல்வார். இடையிடையே அதற்குச் சம்பந்தமான பலவித ஆன்மிகத் தகவல்களைக் கூறி பக்திப்பரவசத்தோடு சுவாரஸ்யமாகவும் புராணபடனங்களை நிறைவேற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த நாலைந்து வருடங்களாக அவருடைய புராணபடனத்திறனை நுகர்கின்ற அரிய வாய்ப்பு எமக்குக் கிடைத்திருந்தது.

இந்த மடாலயத்தில் புராணபடன நிகழ்வுகள் தொடர்ச்சியாக தடையின்றி நடைபெறுவதற்கான ஆலோசனைகளையும் கூறினார்.

எமது அறநெறிப்பாடசாலையில் கற்கும் தகுதியான மாணவர்களை புராணப் படிப்பில் ஈடுபடுத்தி பயிற்றுவித்தால் புராணபடனங்கள் தடையின்றி நடைபெறும் என்ற கருத்தினைச் சொன்னதோடு மாணவர்களை வரவழைத்து பாடவும் பயன் சொல்லவும் ஈடுபடுத்தி ஊக்கம் கொடுத்தார். மாணவச் சிறார்களை புராணபடனம் நிகழ்த்தும் வகையில் உருவாக்கியவர் செல்லத்துரை ஐயா அவர்கள். இது அவர் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செய்த மகத்தான பணியாகும்.

தமது ஞானத்தினாலும், கல்வியினாலும், பணிகளாலும் கலாபூஷணம், சைவப்புலவர் முதலான பட்டங்களைப் பெற்ற இப்பெரியார் இந்துசமய திணைக்களத்தால் நடாத்தப்பெறும் அறநெறிப்பாடசாலைகளின் வழிகாட்டியாக ஆலோசகராக கடமையாற்றியவர். அவர் ஏழாலைக்கு வந்தபின் எமது ஆலய அறநெறிப் பாடசாலைக்கும் அவரது நேரடி வழிகாட்டல்கள், ஆலோசனைகள் கிடைத்தன. கடந்த வருடங்களில் எமது அறநெறிப் பாடசாலை மாணவரின் ஆக்கத்திறன் வெளிப்பாடுகள் சிறப்புற ஊக்குவிப்பாளராக நின்று வழிப்படுத்தினார்.

அகில இலங்கை திருமுறை மன்றத்தினரால் கருணாகரப்பிள்ளையார் ஆலயத்தில் வியாழக்கிழமை தோறும் பண்ணிசை வகுப்பு நடாத்தப்பட்டது. அவ்வகுப்பு நடைபெறும் வேளைகளிலும் தாமும் வந்திருந்து உற்சாகமூட்டுவார்.

ஏழாலைக்கு வந்த நாளிலிருந்து கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் ஆன்மீக வளர்ச்சிப் பணிகள் ஒவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றிலும் பங்குபற்றி அவை சிறப்பாக நடைபெற அரும் பணியாற்றிய சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் இன்று எம்முடன் இல்லை. இனி அவரது அரும்பெரும் பணிகள் எமக்குக் கிடைக்கமாட்டாது என்பதை நினைக்கும் போது ஆழ்ந்த துயரம் அடைகிறோம். இவ்வேளையில்

"நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்று வள்ளுவர் கூறிய உலக நிலையாமையை நினைத்து மனதைத் தேற்றுகிறோம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக"

என்ற வள்ளுவரின் கூற்றின்படியே செல்லத்துரை அவர்கள் தோன்றி, கல்வியினாலும், நற்குணங்களாலும், ஆற்றிய அளப்பெரும் பணிகளாலும் புகழோடு வாழ்ந்து இறை வனடி சேர்ந்தார்.

சில வருடங்களேயானாலும் கருணாகரப்பிள்ளையார் ஆலயத்தில் அவர் ஆற்றிய காத்திரமான பணிகள் என்றும் எமதுள்ளங்களில் நினைவாக இருக்கும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஏழாலை கருணாகரப்பிள்ளையார்
மடாலயம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவசமயத்தின் முதுசம்"

எமது சைவசமயத்தின் முதுசம் என விளங்கிய சைவப் புலவர் செல்லத்துரை அவர்களது இறைபத செய்தி அறிந்து மிகவும் மனவேதனை அடைந்தோம். அனைவரது அன்புக்குரியரா கவும், மதிப்பார்ந்தவராகவும், போற்றுதலுக்குரியவராகவும் விளங் கியவர் அமரர் செல்லத்துரை அவர்கள். சைவப்புலவர் சங்கத்தினூ டாக இலங்கை முழுவதும் பல சைவப்புலவர்கள் உருப்பெறக் காரணமானவர். புராணபடன மரபில் கைதேர்ந்தவர். புராணபடன மரபு இலங்கையில் தழைக்க வேண்டும் என தன்னுடைய சக்திக்கு ஏற்றவகையில் பல முயற்சிகள் செய்து இயன்ற வெற்றி கண்டவர். தனது சீர்பெற்ற கல்விப்பணி மூலம் பல உயர் பண்பாளர்களை உருவாக்கிய பெருந்தகை. சந்தேகம், ஆலோசனை என யார் கேட்டாலும் எந்த மறுப்பு, தாமதம் எதுவும் இன்றி உயரிய ஆலோசனைகள் வழங்குவதில் வல்லவர். சைவ வாழ்வியலை பாதுகாத்து பேணியதுடன் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்

அமரர் கலாபூஷணம் செல்லத்துரை ஐயா அவர்கள் எமது அச்சுவேலி குமாரசுவாமி குருக்கள் அவர்கள் மீதும் அவர்தம் குடும்பத்தினர் மீதும் அன்பு, பாசம், மரியாதை, கௌரவம், உயர்ந்த எண்ணம், பற்றுறுதி கொண்டவர். குருக்கள் அவர்கள் ஸ்தாபித்த சரஸ்வதி வித்தியாலயத்தில் குருக்கள் காலத்தில் ஆசிரியப்பணி புரிந்துள்ளார். நிறைவாக தனது கல்விப் பணியில் அதிபராக தனது பணியினை நிறைவு செய்து, இறைபதமெய்தும் வரை பல்வேறு கோணங்களில் தனது சமூகப்பணியை விரிவான முறையில் செயல்ப்படுத்தியவர். இத்தகைய பல்வேறு சிறப்புக்களை தன்ன கத்தே கொண்டு வாழ்ந்த சைவப்பெரியார் அவர்களது மறைவு சைவமக்களுக்கு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது. ஆனாலும் என்ன செய்வது இறை நியதியை ஏற்க வேண்டியுள்ளது.

அமரரது ஆத்மசிவப்பிராப்திக்கு இறை பிரார்த்தனை செய்கிறோம். அத்துடன் உறவுகளுக்கு எமது ஆறுதலை பகிர்ந்து கொள்கின்றோம்.

**கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வரக்குருக்கள்.**
**தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சைவமும் தமிழும் வளர்த்த மூதறிஞர்”

இளவாலையைச் சேர்ந்த சைவப்புலவர் கலாபூஷணம் செல்லத்துரையின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

சைவக்குழந்தைகள் அனைவரும் பண்ணோடு தேவாரம் பாடப்பழக வேண்டும் என்ற கருத்தை உடையவராக இருந்தார். இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் தமது ஓய்வின் பின்னரும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பல வழிகளில் முயன்றதுடன் அகில இலங்கை திருமுறை மன்றத்தின் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றி ஆலயந்தோறும் திருமுறைகள் பண்ணோடு ஒலிக்க அயராது உழைத்தவர்.

சிறந்த சமயப் பேச்சாளர், நாடக ஆசிரியர், எழுத்தாளர் எனப்பல பரிமாணங்களுடன் சைவப்புலவர் சங்கம், சைவ சித்தாந்த மையம், சைவப்பரிபாலனசபை, கொழும்பு தமிழ்ச் சங்கம், தெல்லிப்பளை கலை இலக்கியக்களம் என பல அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து பல அரிய சேவை களை ஆற்றியவர்.

சைவப்புலவர் சங்க உபதலைவராக, சைவப்புலவர் சங்கத்தின் செயலாளராக, தேர்வுச் செயலாளராக அரும் பணி யாற்றி பல சைவ சித்தாந்தப் புலவர்களை உருவாக்கி எமக்களித்த பெருமைக்குரியவர்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பணிகின்றேன்.

**நீதியரசர் விக்னேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த
பயிற்சி மையம் – கொழும்பு

THIRUVAVADUTHURAI ADHEENA SAIVA SIDDHANTHA
TRAINING CENTER – COLOMBO

# "சைவத்தமிழ்ச் சான்றோன்"

"ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே"

என்பது புறநானூற்றுப்பாடல்

ஒருவரை பெற்றெடுத்தல் தாய்க்குரிய கடமை. அவரைக் கல்வி கற்று நல்லவனாக, வல்லவனாகச் சான்றோனாக ஆக்குவது தந்தைக்குரிய கடமையாகும். சைவப்பலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்களின் வாழ்க்கையிலே இளமை யிலேயே தந்தையை இழந்தார். தாயின் அரவணைப்பிலே தன்னுடைய முயற்சியாலே கற்பவை கற்றுப் பாண்டித்தியம் பெற்றார்.

இவர் எமது தாய்வழி உறவினர் எமது தந்தை சைவப்புலவர்மணி வித்துவான். வ. செல்லையா அவர்களிடம் பயின்று சைவப்புலவர் பட்டம் பெற்றார். எமது தந்தையார் சைவப்புலவர் சங்கத் தலைவராயிருந்த பொழுது இவர் பணி அமைப்பாளராகவிருந்து பல பணிகள் செய்தார். அக் காலத்தில் சைவப்புலவர் சங்கம், நாடகப்போட்டி, ஓவியப் போட்டி, பண்ணிசைப் போட்டி எனப் பலபோட்டிகளை நடத்தித் தங்கப்பதக்கம் முதலான பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன. இலங்கையின் பல பாகங்களிலும் சைவ மகா நாடுகள் நடத்தப்பட்டன. இவற்றையெல்லாம் எமது தந்தை யாருடன் இணைந்து செயற்பட்டுத் திறம்பட நிகழப்பணி புரிந் தார். இவை கடந்த ஐம்பது வருடங்களுக்கு முந்தியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எம்முடன் இணைந்து இன்றைய சைவ சமூகத்திற்குத் தேவையான பணிகளை முன்னெடுத்தார். திருவாவடுதுறை ஆதீன சைவத் திருமுறை நேர்முகப் பயிற்சிமையம், சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் ஆகியவற்றைக் கொழும்பிலே தொடங்கிய போது விரிவுரையாளராயிருந்து திருமுறை, சித்தாந்தசாத்திர விளக்கங்கள் மாத்திரமன்றி, ஒருவர் எவ்வாறு சைவவாழ்வு வாழவேண்டும் என்பதுவும் போதித்தார். போதனையோடு நிற்காது சாதனையும் வேண்டுமென்று எமது பயிற்சி மைய மூலமாக இலங்கை இந்தியத்திருத்தல யாத்திரை, தீர்த்த யாத்திரை ஏற்பாடு செய்து யாத்திரை ஒழுங்குமுறைகளை எல்லாம் நெறிப்படுத்தி முன்னின்று நடத்தினார்.

யாத்திரை செல்லும் அனைவரும் நாம் சென்ற ஆலயத்தைப் பற்றி முழுமையாக அறியும் வண்ணம் விளக்கிப் பின் அவற்றை எல்லாம் எழுதி எடுத்துத் திருத்தம் செய்தும் கொடுப்பார்.

கன்னியாகுமரி முதல் காசிவரை எமது பயிற்சி மையத்தினர் யாத்திரை செய்துள்ளனர். 2012, 2013, 2014, 2016 ஆகிய ஆண்டுகளில் தென்னிந்திய திருத்தல யாத்திரை யும், 2017இல் வடஇந்திய (காசி, காயா) தென்னிந்திய யாத்திரையும் இடம்பெற்றது.

இவரது முதலாவது கடல் கடந்த இந்தியப்பயணம் எமது தகப்பனார் தலைமையில் 1964ஆம் வருடம் மார்கழி மாதம் ஆரம்பமானது. இப்பயணம் சிதம்பரத்திலே நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ வைரவிழா, சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவிற்கானது. இவ்விழாவிற்கு சிவத்தமிழ்ச்செல்வி, சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை, சைவப்புலவர் இஞ்சினியர் இ. வயித்திலிங்கம் போன்றோர் சென்றிருந்தனர்.

சொல்ல எடுத்த விடயத்தை தெளிவாக அனைவருக்கும் புரியும் வண்ணம் இலகு தமிழிற் பேசுந்திறமுடையவர். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடைய பேச்சு மக்கள் மத்தியில் மதிப்புப் பெற வேண்டு மென்றால் அவர் சொல்லும் செயலும் ஒருமைப்பட்டவராய் இருத்தல் வேண்டும். இத்தன்மை இவருக்குச் சாலப் பொருந்தும் சான்றோனாய், ஆன்மீக வழிகாட்டியாய், எழுத்தாளனாய், புராண வித்தகராய், விரிவுரையாளராய், சொற்பொழிவாளராய் இருந்த இப் பெரியார் இன்று எம்மத்தியில் இல்லை என்பது பெரிய இழப்பாகும். இவர் காட்டிய வழியிலே செயற்படுவதே இவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும். அன்னாரது ஆத்மா சிவபதம் பெறப் பிரார்த்திப்போமாக

சித்தாந்தச்செம்மணி
**சைவப்புலவர் செ. நவநீதகுமார் M.A**
இணைப்பாளர்,
திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்,
கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருக்கைலாய பரம்பரை
## திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த
## பன்னிருதிருமுறைப் பயிற்சி மையம் – இணுவில் கிளை

**Thirukkailaya Paramparai Thiruvavaduthurai Aatheena saivasiththantha panniruthirumurai payichchi maiyam – Inuvil Kilai**

201…/……/……

# "நாம் பெற்றபேறு"

பிறவிகளில் அருமையான மானிடப் பிறவியை இறைவன் நமக்குத் தந்தது முதல்வனாகிய அவனது பணிக்கேயாகும். அதிலும் சைவசமயத்தில் வந்து பிறப்பது மிக அரிதென உரைக்கின்றது. சிவஞானசித்தியார் இத்தகைய பிறவியின் நோக்கம் அவனை தொழுது முத்தியின்பம் பெறுதல் என்பது நாவலர் வாக்கு. அதற்கு ஒரு வழியே ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், பதி,பசு,பாசங்களின் சிறப்பியல்புகளை ஞானாசிரியரிடம் கேட்டல் முதலியன எழில்ஞான பூசை என மேலும் விளக்குகின்றது. சிவஞானசித்தியார் அத்தகைய தகமைசார் ஆசானாகக், குருவாகக் குருமரபு போற்றும் திருவாவடுதுறை ஆதீனத்தால் நடாத்தப்படும் சைவசித்தாந்த திருமுறைப் பயிற்சி மையத்தின் இணுவில் கிளையின் பொறுப்பாளராக அமரர் சைவப்புலவர் கலா பூஷணம் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள் விளங்கினார். இப்பயிற்சி மையத்தின் சைவசித்தாந்த பயிற்சியைப் பூர்த்தி செய்தோருக்கு சித்தாந்தரத்தினம், திருமுறைப் பயிற்சியைப் பூர்த்தி செய்தோருக்கு திருமுறை நெறிச்செல்வர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையில் 19.05.2013ல் இப்பயிற்சிமையை முதலாவது இணைப்பாளராக திரு. ந. பரமேஸ்வரன் அவர்களும் சித்தாந்தப் பயிற்சிமைய ஆசான்களாக சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களுடன் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் அவர்களும் தொண்டாற்றினர். திருமுறைப் பயிற்சிமைய ஆசான்களாகப் பண்டிதர் வை. பேரின்பநாயகத்துடன் பண்ணிசை ஆசிரியர் திரு. வி. சிவஞான சேகரம் அவர்களும் தொண்டாற்றினர். இம்மையம் ஆரம்பமாகக் காரணமாக இருந்தவர் கொழும்புப் பயிற்சி மையத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவரும் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய உளநலக் கல்வியாளர் திரு. கா. வைத்தீஸ்வரன் ஆவார். மேலும் இப்பயிற்சி மையம் இருக்குமிடம் சித்தராகிய குடையிற் சுவாமியார் நடமாடிய புனித பூமியாகும். மேலும் திரு. மு. திரு ஞானசம்பந்தப்பிள்ளை சுகவீனமுற்றதன் பின் இளவாலையைப் பிறந்த இடமாகவும் இணுவையூரில் திருமணம் செய்ததுடன் இவ்வூர் காரைக்கால் சிவன் மீது ஊஞ்சல்பாட்டு இயற்றியவரு மாகிய திரு. சு. செல்லத்துரை அவர்கள் எங்கள் ஆசான் ஆவார்.

அவரது தோற்றமும், பண்பான பேச்சும், நேரம் தவறாமையும், திட்டமிடல், வழிநடத்தல் போன்ற பண்புகளும், சமயம் பற்றிய தெளிந்த அறிவும், காலை 7.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை பயிலுனர்களுடன் தானும் ஒருவராக நின்று பிரதிபலன் கருதாது செய்த சேவை மாணவர்களை அவர்பால் ஈர்த்தது. அவரது சொல்லும் செயலும் ஒன்றாக இருந் ததன் மூலம் போதனையுடன் சாதனை மூலம் வழிகாட்டினார்.

சித்தாந்த சாத்திரங்கள் கற்கமிகக் கடினமானவை என்ற எண்ணத்துடன் வந்த பயிலுனர்களுடன் ஒரளவு கற்ற, அதில் பட்டம் பெற்ற அனைவருக்கும் அவரவர் தரத்திற்கு ஏற்ப கற்பித்து ஊக்குவித்தார். மேலும் பயிலுனர்கள் தாம் கற்றவற்றை ஆய்வுக் கட்டுரையாகவோ அன்றி ஒப்படையாகவோ சமர்ப்பிக்கச் செய்து அதனைக் கணிப்பிட்டு நல்லனவற்றை வெளிப்படையாகப் பாராட்டியதுடன் மற்றையவற்றை அந்நிலையெய்த ஆலோசனை கூறியதுடன் எழுத்துப் பரீட்சை, விநாடிவினா போன்றவற்றாலும் அவர்களை ஊக்குவித்தார். பயிலுனர்களில் அநேகமானவர்கள் ஐம்பது வயது கடந்தவர்கள் என்ற போதும் அவர்களைச் சுறுசுறுப்பாக்கி தம் ஆளுமையால் சிவஞானபோதத்தின் பன்னிரு சூத்திரங்களை கூட மனனம் செய்விக்கச் செய்து அதன் பொருள் விளக்கத்தை அறிதற்குரிய வழிவகைகளை கொடுத்துள்ளார்.

சைவ சமயமே சமயம், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற கொள்கையில் அசையா நம்பிக்கை கொண்ட ஆசான் அதனில் நின்று திசைமாறியவர்களிடம் முரண்பட்டு கொண்டதுடன் அதுபற்றி பயிலுனர்களுடன் அடிக்கடி அளவளாவுவார். இவரது இத்தகைய அசையா நம்பிக்கை, சித்தாந்த அறிவு, தமிழ் இலக் கண அறிவுடன் தென்னிந்திய யாத்திரையின் பலனாகக் கிடைத்த அனுபவம் ஆகியன கொண்டு திருமுறைகளிற்கு கருத்துச் சொல்லும் பாங்கு தனிரகம். இவரது பன்முகத் தன்மை மன்னார், வவுனியா, கிளிநொச்சி, கரவெட்டி, சுழிபுரம், வட்டுக்கோட்டை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருசுவில், சாவகச்சேரி, உசன், மீசாலை போன்ற இடங்களில் இருந்தும் பயிலுனர்களை ஈர்த்ததெனலாம்.

பயிலுனர்கள் அனைவரும் மச்சம் மாமிசம் இன்றிச் சிவ தீட்சை பெற்றிருக்க வேண்டும் என்றபடியால் சிவதீட்சை பெறா தோரை இப்பயிற்சி நடைபெறும் மண்டபத்திலேயே ஒவ்வொரு ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமையிலும் நடைபெறும் நிகழ்வில் தீட்சைபெற வைப்பதுடன் அவர்கள் அணிய உருத்திராட்ச மணியும் கொடுத்திடுவார்.

தான் கற்பித்ததுடன் திரு.ச.முகுந்தன், திருமதி. சிவசக்தி சோமநாதன், திருமதி. சண்முகவடிவு தில்லைமணி, திரு. கந்த சத்தியதாசன் போன்றோரையும் கற்பித்தலில் ஈடுபடுத்தியதுடன் திருமுறைப் பயிற்சிப் பண்டிதர் வை. பேரின்பநாயகம் பண்ணிசை ஆசிரியர் திரு. சி. தில்லைமணி ஆகியோருடன் அதன் பயிற்சிக்கு துணை நின்றார். அத்துடன் அவர் வழிகாட்டலில் மெய்கண்டார், திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாசசுவாமிகள், நாவலர் ஆகியோரது குருபூசைகளை வழி பாடு சொற்பொழிவுகளுடன் நடைபெறச் செய்தார். பயிற்சியின் போது தேநீர், மதியஉணவு வழங்கத் துணை நின்றார். பயிலுனர் களின் குடும்ப சுகதுக்க நிகழ்வுகளில் அனைவரையும் பங்குபற்ற வைத்துள்ளார்.

அத்துடன் காசி யாத்திரைச் சிறப்புமலர், உண்மைக் கருவம், சமயகுரவர் வாழ்விற் கண்ட அற்புதங்களும் சான்றுகளும் ஆகிய நூற்களின் வெளியீட்டு அறிமுக விழாக்களுடன் பட்ட மளிப்பு விழாக்களையும் நடாத்தி அதற்கான வழிமுறைகளையும் காட்டித் தந்தார். 07.08.2017ல் அகில இலங்கை திருமுறை மன்றத்தினரால் இங்கு நடாத்தப்பெற்ற திருமுறை விழாவிற்கும் நூல் வெளியீட்டிற்கும் துணை நின்றார். தனது பாரியாரின் நினைவாக வருடம்தோறும் ஒவ்வொரு நூல் வெளியிடும் ஆசான் 02.08.2020இல் இச் சபையில் இணுவில் - இளவாலை அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரையின் 10ம் ஆண்டு நினைவு நூல் (03.07.2020) என்ற குறிப்புடன் மெய்கண்டசாத்திரம் எனும் சைவ சித்தாந்த நூலை திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த பயிற்சி மையம் கொழும்பு - இணுவில் ஆகியவற்றின் வெளியீடாக அரங் கேற்றினார். அன்று தானும் பயிலுனரில் ஒருவர் என கூறிக் கொள்ளும் சித்தாந்தரத்தினம் சிவஸ்ரீ. சி. குமாரராசக் குருக்களின் பூசையுடன் வெளியீடு, அறிமுகம் வழங்கல் என்பன நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைபோதனையுடன் சாதனையாக இருமுறை நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு இணுவில் திருமந்திரப் பணி மன்றத்தினரையும் சேர்த்துக்கொண்டு திருவாசகம் முற்றோதலில் ஈடுபடுத்தினார். 17.12.2017ல் சிலாபம் ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திருவாசகப் பெருவிழாவில் நம்மையும் பங்குபற்றச் செய்தார். 12.08.2018 முதல் 22.08.2018 வரை காசி, திருவேணிசங்கமம், மானசரோவர் தீர்த்தம், நேபாளம், பசுபதிநாத ஜலநாராயணர் கோயில் முதலான தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பினை வழங்கினார். 13.12.2018 தொடக்கம் 24.12.2018 வரை மலேசியாவிற்குக் கூட்டிச் சென்று தல யாத்திரை யில் பங்குபற்றச் செய்ததுடன் அங்கு இலங்கை சைவசித்தாந்தப் பயிற்சிமைய இயக்குனரான சைவப்புலவர் சித்தாந்தச் செம்மணி செல்லையா நவநீதகுமாருடன் புராண படனத்துடன் சொற் பொழிவு களையும் ஆற்றினார். அங்கிருந்து திரும்பிய நாளாகிய 24.12.2018 தொடக்கம் 27.12.2018 வரை சிலாபம் முன்னேஸ்வரத்தில் திரு வாசக முற்றோதலில் பங்குபெறவைத்துப் பின் திருக்கோணேஸ் வரம், தம்பலகாமம் சிவன் கோயில், திருக்கேதீஸ்வரம் ஆகிய ஆலயங்களுக்கு யாத்திரையின் பொருட்டு கூட்டிச் சென்றார். திருக் கேதீஸ்வரத்தில் மகாலிங்கத்திற்கு அபிடேகம் செய்யும் முறைகள் பற்றிக் கூறி எமை வழிநடத்தினார். 17.01.2020ல் தொடங்கி நான்கு நாட்களாக கிழக்கு மாகாண யாத்திரையில் மயிலம்பாவெளி காமாட்சி அம்பாள் ஆலயந் தொடங்கி உகந்தை முருகன் ஆலயங்களையும் பின்பு கதிர்காமத்தையும் தரிசிக்கவைத்தார். இந்த யாத்திரையின்போது அந்தந்த ஆலயங்களின் அறங் காவலர்களாலும், பொறுப்பு வாய்ந்தவர்களாலும் ஆலய வரலாறு, ஆலயச் சிறப்புகள் பற்றிய விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட வழி வகுத்தார். அங்கு தங்குமிட வசதிகளும் உணவு உபசரணைகளும் தந்துதவியர்கள் அன்னாரது மாணாக்கர்கள் ஆவர். அவர்களின் விருந்தோம்பல் பண்பு எம்மை நெகிழவைத்தது. அதிலும் திரு. சாமித்தம்பி பொன்னுத்துரை அவர்கள் மயிலம்பாவெளி முதல் கதிர்காமம் வரை தலயாத்திரை சிரமமின்றி நடைபெற வழித் துணையாக வந்து உரிய ஏற்பாடுகளைச் செய்து உதவியது குறிப் பிடத்தக்கது. 14.02.2020 தொடங்கி 24.02.2020 வரை இடம்பெற்ற தென்னிந்தியத் திருத்தல யாத்திரையில் எம் ஆசான் உடல் அசதி காரணமாகப் பங்குபற்றாதபோதும் பயிலுனர்களின் யாத்திரைக் குரிய வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார். முப்பதிற்கு மேற் பட்ட ஆலயங்களைத் தரிசித்த பாக்கியம் கிடைக்கப்பெற்றனர். இத்தலயாத்திரையின் போது சிதம்பரம் நடராஜப் பெருமானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருத்த மண்டபத்தில் தில்லைத் திருத்தலத் தொகுப்புப் பதிகங்கள் 451 ஓதக் கிடைத்தமை பெரும்பாக்கியமே.

மேலும் நாயன்மார் குருபூசை, மாகேஸ்வர பூசை எவ்வாறு நடைபெற வேண்டுமென்ற முறைகளைப் பயிலுனர்கள் அறிதற் பொருட்டும் அங்கு திருமுறைப் பாராயணம் செய்தலிற்காகவும் ஏழாலை கருணாகரப் பிள்ளையார் மட ஆலயத்திற்குப் பலமுறை அழைத்துச் சென்றார். அவரது ஆசிரியர் இலக்கிய கலாநிதி மு.கந்தையா அவர்களின் வழிபாட்டிடமான இவ்வாலயத்தைப் பக்திததும்பப் பூசித்ததுடன் அவ்வாலயச் சிறப்புப் பற்றிப் பல முறையும் கூறியுள்ளார்.

அவர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரு நாட்களின் முன் திருமூலர் குருபூசையை வரும் 21.10.2021 வியாழக்கிழமை செய்தல் வேண்டுமென்றும் ஏற்கனவே தொடக்கப்பட்ட திருமந்திர முற்றோதலைப் பூர்த்தி செய்தல் வேண்டுமென்றும் அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட வேண்டுமென்றும் கூறியிருந்தார்.

அவர் எண்ணப்படி 21.10.2021 அன்று இணுவில் இளந் தொண்டர் சபை மண்டபத்தில் திருமூலர் குருபூசை, திருமந்திர முற்றோதல் பூர்த்தி ஆகியவற்றுடன் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். தான் போற்றும் தனக்கு வழிகாட்டியாகக் கருதிய திருமூலரின் குருபூசை அன்று எம் ஆசான் இறைவனடி சேர்ந்தார். அவர் விருப்பப்படி இறுதிக் கிரியையிலும், இறுதி ஊர்வலத்திலும் திருமுறை ஓதக் கிடைத்தமை திருவருட்பேறே. எமக்கு வழிகாட்டியாக இருந்து எம்மை வழிநடாத்திய குருவின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக. எல்லாம் அவன் செயல்

**சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்**
**ஆ. திருநாவுக்கரசு**
**பயிலுனர்**
**இணைப்பாளர் - திருவாவடுதுறை ஆதீன**
**சைவசித்தாந்த, திருமுறைப் பயிற்சி மையம்**
**- இணுவில் கிளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருமந்திரப் பணிமனையில் நம் குருநாதர்"

"உலகமும் உயிரும் வாழும் வண்ணம் திருமந்திரமாகிய நூலைச் செய்யும்படி; இறைவன் அருளியதாக, நம்பிரான் திருமூலர் எனத் திருத்தொண்டர் தொகையில் சுந்தரரால் குறிப்பிடப்பட்ட திருமூலர் அருளியுள்ளார்". மேலும் தமிழ் ஆகமமாகிய இந்நூலைப் படைக்க தான் முற்பிறப்பிற் செய்த தவமே காரணமென அருளியுள்ளார். மந்திரம் என்ற சொல் இருந்ததனாற் போலும் அது விளங்குவதற்குச் சிரமமானதெனப் பலராலும் எண்ணப்பட்டு வந்துள்ளது. ஆனால் அது எட்டாக் கனியல்ல உள்ளங்கை நெல்லிக்கனி, வாழ்வுதர விருந்தாகத் தந்த மருந்து எனக் கூறிய எமது குருவும் தன்னைத் திருமந்திர ஆர்வலர் எனக் கூறிக்கொள்ளும் சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை, தான் கூறியவாறே விருந்தாக எமக்குப் படைத்தார். இப்படையலில் அவர் பங்கும் அதனால் நாம் பெற்ற பயன்களும் பற்றிச் சிறிது நோக்குவோம்.

இலங்கை வானொலியில் நடைபெற்ற இவரது திருமந்திரச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து பலர் வேண்டுகோளிற் கிணங்க ஐயா அவர்கள் வெள்ளவத்தை ஓம் கிரியாபாபாஜி ஆச்சிரமத்தில் 2013ம் ஆண்டு தொடக்கம் திருமந்திர வகுப்பைப் போதனையாகவும் சாதனையாகவும் நடாத்தி வந்தார். அவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபின் தான் தலைமை வகித்த சுகவாழ்க்கைப் பேரவையின் செயலாளரும் உளவளக் கல்வியாளருமாகிய திரு. கார்த்திகேசு வைத்தீஸ்வரன் மேற்படி திருமந்திர வகுப்பைத் திருவருள் வசத்தால் இங்கே நடத்த அவாக் கொண்டார். அதன்படி இணுவில் பெருமஞ்சத்தை அமைக்க காரணமான சித்தர் பெரிய சந்நியாசியார் வாழ்ந்த இணுவில் மஞ்சத்தடியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அருணகிரிநாதர் மண்டபத்தில் 08-04-2017 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் திரு. வைத்தீஸ்வரன் அனுசரணையுடன் மேற்படி வகுப்பு தொடங்கப்பட்டது. எம் ஆசிரியர் போதனையாளராகவும் திரு. கா. வைத்தீஸ்வரன் சாதனையாளராகவும் மாலை 4 மணிமுதல் 6 மணிவரை நடைபெற்ற இவ்வகுப்புக் காலக்கிரமத்தில் ஒவ்வொரு மாதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் மூன்றாம் சனிக் கிழமைகளில் முழுநேர வகுப்பாக காலை 9 மணிமுதல் மாலை 3.30 மணிவரை நடைபெறத் திருவருள் கைகூடியது.

திருமந்திரத்தில் அட்டாங்கயோகம் பற்றி எமது ஆசிரியர் போதிக்கும் போது பிரணாயாமம் ஆசனம் ஆகிய வற்றைச் சாதனையாக திரு. கா. வைத்தீஸ்வரன் நிகழ்த்திக் காட்டுவார். ஒவ்வொரு வகுப்பு ஆரம்பத்திலும் மூச்சுப் பயிற் சியை எம் ஆசிரியர் கட்டாயமாக்கினார். மேலும் மனவளக் கலைப் பேராசிரியரான வைத்தியகலாநிதி க. பாலசுப்பிர மணியம் அவர்களின் திருமந்திரம் பற்றிய ஆழ்ந்த உரையும் அதற்கான விஞ்ஞான பூர்வமான விளக்கமும் நடைபெறும் வேளை தாமும் ஒரு மாணவனாக இருந்து அது பற்றிய ஐயங் களைத் தெளிவு படுத்திக் கொள்வார். பிராணாயாமத்தில் வைத்தியகலாநிதியின் விளக்கம் உடல் மனம் ஆகியவற்றின் எழுச்சி பற்றியதாக நவீன தொழில்நுட்ப முறை சார்ந்ததாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. நம் ஆசிரியர் போதிக்கும் போது வைத்திய கலாநிதி அவர்களும் பயிலுனர்களில் ஒருவரா யிருந்து கற்பது விசேடமாக நோக்கத்தக்கது. உடம்பை வளர்த் தேன் உயிர் வளர்த்தேனே என்ற திருமூலர் வாக்கின் பொருட்டு உடம்பை வளர்க்கும் உபாயம் அறியச் சுகாதாரப் போதனை யாளர்கள் உளவளவாளர்கள் போன்றோரின் அறிவுரையை நாம் பெற ஊக்குவித்தார்.

வகுப்பு ஆரம்பத்தில் பயிலுனர்கள் எல்லோரும் அவரால் இயற்றப்பெற்ற ஹம்சத்வனி இராகத்தில் அமைந்த திரு மந்திரப் பணிமன்றக் கீதம் பாடவழிப்படுத்தினார். எளிய சொற் களும் ஆழ்ந்த கருத்தும் கொண்ட திருமந்திரத்தைப் பலரும் விளங்கிக்கொள்ள இசையும் பொருளுமாக இசைப்பேழை மூலம் வெளிப்படுத்தி வைத்தார். மேலும் சைவ சித்தாந்தசாத்திர, தமிழ் இலக்கண, இலக்கிய அறிவுடன் பன்னிரு திருமுறையில் தெளிவு, தலயாத்திரை மூலம் இந்திய ஆலயங்களில் தான் கண்ட காட்சி, அனுபவப் பொதுஅறிவு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட ஆசிரியர் எத்தகைய கேள்விக்கும் உடன் பதில் தரக்கூடியவராக இருந்தார். நீர் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டியின் எந்தப் "பைப்பை" திறந்தாலும் அதில் உடனே அதிக தண்ணீர் சொட்டும் என்றாற் போல் எந்தக் கேள்வி களுக்கும் சரளமாகப் பதில் தருவார். "யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே" என்ற திருமூலர் வாக்கிலக்கணமாக அவர் உரையாடல் இருக்கும். குறிப்பாகத் தம் மாணவர்களின் சுக நலன்களில் அதிக அக்கறை காட்டியவர். கிளிநொச்சி, மிருசுவில், மீசாலை, சாவகச்சேரி போன்ற இடங்களிலிருந்தும் மாணவர்களை ஈர்க்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார். ஆய்வுக் கட்டுரைகள், ஒப்படைகள் மூலம் பயிலுனர்களின் எழுத் தாற்றலை வளர்த்து நல்லனவற்றை மனந்திறந்து பாராட்டு வதுடன் மற்றவற்றையும் முன்னிலைக்கு கொண்டுவரத் துணை நின்றார். பயிலுனர்களின் வசதி கருதி திரு. ஐ. வரதராஜனின் திருமந்திர விரிவுரை நூல்களை இந்தியாவிலிருந்து வருவித்து வழங்கினார்.

தம்மிடம் முழுமையாகப் பயின்ற மாணவர்களின் ஆக்கங்களை வெளிக்கொணரவும் அவர்களை மென்மேலும் ஊக்குவிக்கவும் வழிவகுத்தார். இவ்வகுப்பிற்கு பொறுப்பான திருமந்திரப்பணி மன்றத்தின் பணிகளைப் பிரதிபலிக்கும் வகை யில் "திருமந்திரவிருந்து - 1" என்ற மலர் வெளிவரவும் பயிலுனர் களின் செயற்பாட்டினை அங்கீகரிக்கும் முகமாக அவர்கட்கு திருமந்திரச்செல்வர் என்ற பட்டத்தை வழங்க வழிசமைத்தார். இம் மலரினை தனது துணைவியாரின் ஒன்பதாம் ஆண்டு நினை வாகத் தொகுத்து தம் செலவில் வெளியிட்டார். அதனால் பெறப்பட்டநிதி அனைத்தையும் இணுவில் திருமந்திரப் பணி மன்றத்திற்கே அளித்தது அன்னாரது கொடையாண்மைக்குச் சான்று.

மலர் வெளியீடும் பட்டமளிப்பு விழாவும் இணுவில் சிவகாமி அம்மன் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தன்னிடம் பயின்ற மாணவர்கள் அனைவரையும் பலவிதமான கலை நிகழ்ச்சிகளில் மேடையேற்றுவித்தார். அவர்கள் அனை வரும் ஐம்பது வயதைக் கடந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இதனைத் தொடர்ந்து "திருமந்திர விருந்து - 2" வெளி யீட்டிற்குத் தொடங்கிய நிலையில் எல்லாம் தலைகீழ் மாற்ற முற்றதற்கு ஆரொடுநோக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் முன்னின்று செய்த திருமந்திர முற்றோதல் கொறோனாப் பெருந்தொற்றால் தடைப்பட்டது பற்றி கவலை கொண்டிருந்தார். 21.10.2021இல் திருமூலர் குரு பூசையும் திருமந்திர முற்றோதலும் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறிய இரண்டு நாட்களில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். அவரின் விருப்புப்படி அவரது மாணவர்கள் குறித்த தினத்தில் குருபூசையும் முற்றோதலும் பிரார்த்தனையும் பக்தியுடன் நடத்தினர். அன்றிரவே திரு மூலரால் நந்தி என அழைக்கப்பட்ட ஞானத் தலைவனை அடைந்துவிட்டார்.

அவரால் தொடங்கப்பட்ட திருமந்திர வகுப்பினையும் திருமந்திரவிருந்து மலர் தொடர்ந்து நடைபெற எமை விட்டுப் பிரிந்த, எம்மை ஆற்றுப்படுத்திய ஆசான் ஆசியையும் இறை யருளையும் வேண்டி நிற்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

**திருமந்திரச்செல்வர்**
**சி. நடராசா**
**செயலாளர்**
**திருமந்திரப் பணிமன்ற**
**இணுவில் கிளை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருமந்திர பணிமன்ற தாபக தலைவர் அவர்களின் பன்முக ஆளுமை"

**அருந்திறலோன்**

செந்தமிழ் வித்தகனாக, சைவத்தின் காவலனாக, சைவ சித்தாந்த திறலோனாக, சொல்லின் செல்வனாக, ஆன்றவிந் தடங்கிய கல்விச் சான்றோனாக வாழ்ந்து திருமந்திரத்தில் ஆழ்ந்த புலமையை ஊட்டி, திருமந்திரப் பணிமன்றத்தைத் தோற்றுவித்து, திருமந்திரம் காட்டிய வழிப்படி வாழ ஆற்றுப் படுத்திய செம்மனச் சீரோன் மறைந்தாலும், அவர் இன்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்; என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். அவர் விதைத்த ஏராளமான வித்துக்கள் முளைத்து செழித்து வளர்ந்து ஆழமாக வேரூன்றி அகலமாக கிளைகள் பரப்பி பெரு விருட்சங்களாகி உலகெங்கும் இனிய கனிகளைத் தந்து கொண்டிருக்கின்றன.

அம் மகானோடு மிக நெருக்கமாக இணைந்து அவர் ஆற்றிய மாபெரும் சேவைகளிலும் என்னை எப்போதும் ஈடுபட வைத்தமையினாலேயே இம்மாபெரும் அருந்திறலோனின் அளப்பரும் தொண்டுகளை நன்கு அறியக்கூடிய பாக்கியம் கிட்டியது.

**பல்துறைவல்லுநர்**

செந்தமிழில், சைவத்தில், சைவ சித்தாந்தத்தில், திருமந் திரத்தில் பேச்சு, நாடகம், புராணபடனம், வில்லுப்பாட்டு, நடனம், கதாப்பிரசங்கம் போன்ற அனைத்துக் கலைகளிலும் சிறந்த சமுதாயத்தை அமரர் உருவாக்கித் தந்ததுடன் அவர் ஊட்டிய அத்தனை ஆக்கப் பொருண்மியங்களையும் இவற்றில் ஆர்வம் கொண்டோர் தொடர்ந்தும் கடைப்பிடித்துவர வழி வகுத்துள்ள மையை துணிந்து மார்தட்டிக் கூறிப் பெருமைப்பட முடியும்.

சைவப்புலவர் சங்கம், திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த பயிற்சிமையம் (கொழும்பு, இணுவில்), சுக வாழ்க்கைப் பேரவை, தெல்லிப்பழை கலை இலக்கியக்களம், திருமந்திரப் பணிமன்றம் போன்ற பல்துறை சார்ந்த நிறுவனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை தலைமைதாங்கி நெறிப்படுத்தி அவற்றின் மூலம் ஆழ்ந்த ஆற்றலுள்ள ஆர்வலர்களையும் அறிஞர்களையும் உருவாக்கம் செய்து, தான் இல்லாத இடைவெளியை நிரப்பி செயலாற்ற வைத்தமை அவரின் தூரநோக்கத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

## திருமந்திரப் பணிமன்றம்

அவரது உன்னத பணிகளில் திருமந்திரப்பணிமன்றத் தின் தோற்றமும் ஒன்று. நீண்டகாலமாக கொழும்பு "ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யத்தில்" வாரந்தோறும் திரமந்திர வகுப் புக்களை அர்ப்பணிப்போடு நடத்தி வந்தார். திருமந்திரப் பணி மன்றத்தின் தலைவராக இருந்து திருமந்திரம் கற்றுத் தேறிய பலரைத் தோற்றுவித்தார். அவர்கள் மூலம் திருமந்திரக் கருத்துக்கள் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகின்றன. அவர்களில் என்னையும் ஒருவனாக்கி திருமந்திர வகுப்புக்களை நடத்துமாறு பணிக்கப்பட்டு கற்பிக்கும் ஆற்றலையும் தந்திருக்கின்றார். திருமந்திரம் காட்டும் நெறிமுறைகளை திருமந்திரத்தைக் கற்றவர்களும் கற்றுக் கொண்டிருப்பவர்களும் வாழ்க்கையில் கடைப் பிடித்து வருவது அமரர் அவர்களுக்கு கிடைத்த மிகச் சிறந்த அங்கீகாரமாகும்.

இத்திருமந்திரப் பணிமன்றத்தை 04.12.2018 இல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்த தோடு, அதற்காக வெள்ளவத்தை கொமர்ஷியல் வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கையும் திறந்து அதன் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு வழிவகுத்திருக்கின்றார். இத்திருமந்திரப் பணிமன்றத்திற்குரிய அலுவலகமாக எனது வெள்ளவத்தை வீட்டையே தேர்ந்தெடுத்துள்ளார்.

## திருமந்திரப் பணிமன்றத்தின் குறிக்கோள்கள்

அமரர் அவர்கள் திருமந்திரப் பணிமன்றத்தினால் பல குறிக்கோள்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்திருந்தார்:

திருமந்திரத்தை மக்கள் வாழ்வியலில் கடைப்பிடித்தல்.

திருமந்திர உரை, இசை ஒலிப்பேழை, திருமந்திரப் பொன் மொழிகள் வெளியிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரக் கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், திருமந்திரம் பற்றிய போட்டிகள், திருமந்திர மகாநாடுகள் நடத்துதல்.

திருமூலர் குருபூசையை நிகழ்த்துதல்.

அறிஞர் மட்டத்தில் இருக்கும் திருமந்திரத்தை சாதாரண மக்களும் அறிந்து பயன்பட ஆவன செய்தல்.

ஏனைய பணி மன்றங்களுடன் இணைந்து சமூகப்பணிகள் ஆற்றுதல்.

## குறிக்கோள்களில் அமரர் ஈட்டிய வெற்றி

இக் குறிக்கோள்கள் அனைத்தும் அவர் வாழும்போதும் நிறைவெய்தின; மறைந்தபின்பும் தொடர்கின்றன. திருமந்திர பொன்மொழிகள் 50 அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. திருமந்திர உரை இசை ஒலிப்பேழைகள் 18.11.2018 இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும், பின்னர் இணுவிலிலும், அதனைத் தொடர்ந்து 11.11.2019 இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் வெளியிடப்பட்டன. வெளியீட்டு விழாக்களின் போது கலை நிகழ்ச்சிகள் பலவும் நிகழ்த்தப்பட்டன. ஐயா அவர்களால் ஆக்கம் செய்யப்பட்ட திருமந்திர கதாப்பிரசங் கங்கள், திருமந்திர வில்லிசைகள், திருமந்திர நடனாஞ்சலி, திருமந்திர ஆடல் பாடல்கள் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. வளர்ந்த பயிலுநர்களால் திருமந்திர கலைவிருந்து, திருமந்திர கதாப்பிரசங்கம், திருமந்திர புராணபடனம், திருமந்திர வினாடி வினா, திருமந்திர அந்தாதிப்போட்டி, வில்லுப்பாட்டு என்பனவும் ஐயாவின் ஆக்கங்களாக விளக்கம் பெற்றன. இவற்றின் மூலம் மாணவர் சமுதாயத்திற்கும் சாதாரண மக்களுக்கும் பெரும் பயன் பெறக்கூடிய வாய்ப்பு கிட்டியது. "திருமந்திரவிருந்து மலர்" திருமந்திர பயிலுநர்களின் ஆக்கங்களுடன் வெளியிடப் பட்டது. "திருமந்திரக் கலைச் செல்வர்" விருதுகள் திருமந்திரக் கலைஞர்களுக்கும், "திருமந்திர செல்வர்" விருதுகள் திருமந் திரத் தேர்வில் திறமை காட்டிய பயிலுநர்களுக்கும் வழங்கப் பட்டன. இவ் விழாக்கள் சம்பந்தமாக நேர்காணல் நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூலமாகவும், நேத்திரா தொலைக்காட்சி மூலமாகவும் பொதுமக்கள் அறியக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அமரர் அவர்களாலும் நான் உட்பட இன்னும் சிலராலும் நிகழ்த்தப்பட்டன.

திருமூலர் குருபூசையைக் கொழும்பிலும், இணுவிலிலும் நடத்தி வருகின்றோம். 10.10.2021, 20.10.2021 கொழும்பு மையத் தால் ஐயாவின் நலன் வேண்டி இணையவழி பிரார்த்தனை செய்யப்பட்டன. இவ்வாறான பிரார்த்தனைகளின் பயனாக திருமூலர் குருபூசை நாளான 21.10.2021 அன்று ஐயா அவர்கள் இறைவனோடு ஐக்கியமாகும் பேற்றைப் பெற்றார்.

அமரர் அவர்களின் குறிக்கோள்கள் தொடர்ந்தும் செயல் வடிவம் பெற்று வருகின்றன. ஐயா அவர்களின் வழிகாட்டலில் கனடா, ஆன்மிக திண்ணை, திருமந்திர திண்ணை, மெய்நிகர் திருமூலர் அறச்சாலை என்பன இணைந்து வெள்ளிதோறும் திருமந்திர வகுப்புக்களை சர்வதேச ரீதியில் கலந்து கொள்ளும் திருமந்திர வகுப்புக்களாகத் தொடர்கின்றன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் திருமந்திர உரை இசை ஒலிப்பேழைகளை அறநெறிப் பாட சாலைகளுக்கு கொடுத்து பயன்படச் செய்து வருவது குறிப் பிடத்தக்கது.

இணையவழி மூலம் திருமந்திரம் கற்கும் ஒருவர் "குருவின் குருவுக்கு அஞ்சலி" என்று குறிப்பிட இன்னுமொரு கனடா பயிலுநர் "உங்கள் ஆசான் எமக்கும் ஆசான்; பண்பு, பயபக்தி உள்ள மாணவர்களை உருவாக்கிய குரு இல்லை என்பதைவிட தங்களைப் போன்ற மாணவர்களை உருவாக்கித் தந்தமைக்கு நாம் தலைவணங்கி அவரின் ஆத்மா இறையருள் பெற நாமும் இறைஞ்சுவோம்" என்று ஐயாவின் குறிக்கோள் வெற்றி பெறுவதற்கு இலக்கணம் கூறியிருக்கிறார்கள்.

**நிறைவுரை**

ஐயா அவர்கள் திருமந்திர விழாவுக்கு அழைப்பு விடுக்கும்போது "தமிழரின் அரும்பெரும் பொக்கிசமான திருமந் திரத்தை உரையும் இசையும் இணைந்த ஒலிப்பேழையாக வெளியிட்டு பாதுகாக்க முன்வருவோம்" என்றும், "தமிழரின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் முந்திய கலைக் களஞ்சியமான திருமூலர் திருமந்திரத்தின் சிறப்பைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்திட வருக" என்றும் குறிப்பிடுவதிலிருந்து அவர் திருமந்திரத்தின் மேல் வைத்திருக்கும் மதிப்பையும், ஈடுபாட்டையும் நன்கு உணர்ந்து கொள்வதோடு மக்கள் மயமாக்கப்படுவதை அவர் ஊக்குவிப் பதையும் கண்டுகொள்ளலாம்.

ஐயா மறைந்தாலும் அவரது எண்ணக் கருவூலங்கள் நிதர்சனமாகின்றன என்பதை காணும்போது அவர் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று நிறைவடைவோமாக.

சைவப்புலவர், திருமந்திரச்செல்வர்
**சாமித்தம்பி பொன்னுத்துரை**
இணைப்பாளர்,
திருமந்திரப் பணிமன்றம்,
கொழும்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
PERSATUAN ARULNERI MALAYSIA
மலேசியா அருள்நெறி திருக்கூட்டம்
MALAYSIA ARULNERI THIRUKKOOTAM
Arulneri Nilayam, 17, Jalan Chekor, Off Jalan Halimahton
3rd Mile Jalan Kelang Lama, 58000 Kuala Lumpur.
Tel : 603-7982 4381

# "சைவசமயத்தின் பேரிழப்பு"

ஈதலறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்து - ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

-ஔவையார்-

கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் கடந்த 21.10.2021ஆம் திகதி அன்று இப்பூவுலக வாழ்க்கையை விட்டு மறைந்த செய்தியை அறிந்து, மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்தின் சார்பாக எனது ஆழ்ந்த வருத்தத்தையும் , இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்கள் சைவ சமயம் சார்ந்த பல அமைப்புக்களிலும், கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் பல பதவிகளை வகித்து, சிறப்பாகப் பணியாற்றிச் சமயத் தொண்டும், சமுதாயத் தொண்டும் ஆற்றியுள்ளார்கள். இலங்கை மற்றும் இலண்டன் மாநகர வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பல நேர்காணல், சொற்பொழிவுகள், கருத்தாடல்களில் பங்கேற்றுள்ளார்கள். திருவாவடுதுறை ஆதீனக் கொழும்பு பயிற்சிமையத்தில் 2010ஆம் ஆண்டு முதல் அவரது இறுதி நாள் வரை திருமுறை மற்றும் சைவசித்தாந்த விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார்கள். ஐயா அவர்கள் திருமந்திரத்தில் மிகவும் ஈடுபாடு உள்ளவர்கள்.

மலேசிய அருள் நெறித் திருக்கூட்டத்தில் ஆண்டு தோறும் திருவெம்பாவை 10 நாட்கள், சைவப்புலவர் உயர்திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநீதகுமார் அவர்களின் விளக்கவுரையுடன் நடைபெறும் கடவுள் மாமுனிவரின் திருவாதவூரடிகள் புராணப்படிப்பு நிகழ்வில், 2018ஆம் ஆண்டு அவர்களுடன் இலங்கை வாழ் சைவ அன்பர்கள் 16 பேர் வருகை புரிந்திருந்தனர். அவர்கள் குழுவில் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். அருள்நெறித் திருக்கூட்டத்தில் "திருமந்திரம்" பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள். அவர்கள் பினாங்கு மாநகரம் செல்லும் வழியில் அருள்நெறி ஈப்போ நகர் கிளையின் ஏற்பாட்டில் ஈப்போவில் ஒரு சிறப்பு சமய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

சைவ சமயத்திற்கு அவர்கள் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது. அவர்களின் மறைவு அவர்களின் குடும்பத்தினருக்கு மட்டும் அன்றி சைவ சமயத்திற்கும் ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவடிகளில் என்றும் பேரின்ப நிலை பெற்றிருக்க வேண்டி எல்லாம் வல்ல தில்லைக்கூத்தன் திருவடிகளை வணங்குகின்றேன். திருச்சிற்றம்பலம்.


அன்புடன்,

**டத்தோ மருத்துவர் வ. கதிரேசன்**

தலைவர், மலேசிய அருள் நெறித் திருக்கூட்டம்

கோலாலம்பூர், மலேசியா.

5.11.2021.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක பணிப்பாளர் Director | 2552643 | ෆැක්ස් தொலைநகல் Fax | 2552825 | ඊමේල් மின் அஞ்சல் E-Mail | hindudir@yahoo.com |
| පොදු பொது General | 2552641 | | | වෙබ් අඩවිය இணையதளம் Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය எனது இல. My No. | | ඔබේ අංකය உமது இல. Your No. | | දිනය திகதி Date | |


# “கலையுலகம் ஈடுசெய்ய முடியாத இழப்பு”

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வரலாற்றில், அதன் செயற்பாடுகளில் அர்ப்பணிப்பானதொரு வழிகாட்டியாக, நல்லதொரு ஆலோசகராகத் திகழ்ந்த பெரு மகனாரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம். அமரர் சைவப் புலவர், கலாபூஷணம் சு. செல்லத்துரை ஐயா அவர்களின் இழப்பு, சைவத் தமிழர்களின் கலையுலகம் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு.

இந்த உலகில், வாக்கும் வாழ்வும் ஒருங்கே கூடிச் சிறப்பான வாழ்வுவாழ்வோர் பலருளர். அவர்களுள் ஒருவராய் வைத்தெண்ணிப் போற்றத்தக்க பெருந்தகையாளனாய் வாழ்ந்தவர் அமரர் சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை ஐயா அவர்கள். ஈழத்திருநாட்டில், சைவப்புலவர் என்றவுடன் எல்லோரும் சொல்லிய நாமம் இவர் பெயரென்பது இவர் வாழ்ந்த வாழ்விற்குக் கிடைத்த பெருமை.

“ஈழத்து நவீன நாடக உலகு, இந்த அரங்கியற் கலைஞருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது” என்று கூறும் அளவிற்கு, அறுபதுகளில் அரங்கக் கலை வளர்த்த பெருங் கலைஞன். வலிகாமம் வடக்கின் அவைக்காற்றுக் கலையின் உந்துசக்தி இவரே! என யாவரும் ஏற்றுநிற்பர். 1969 இல் ஈழத்துச் சிதம்பரத்தின் நிர்வாக நிதிக்காக நாடகம் அரங்கேற்றி இறைபணி செய்த இறை அன்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவரும் நல்லாசானும் நாடக வல்லாளருமாகிய கலாபூஷணம் சு. செல்லத்துரை ஐயா அவர்கள், சமய நாடகம், நாட்டிய நாடகம், இசை நாடகம், கூத்து, பஜனை, வில்லுப்பாட்டு என அத்தனை கலையிலும் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர். கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர் களின் முத்தான படைப்புகளாக திருமந்திரவிருந்து, நற் சிந்தனைகள், வாக்கும் வாழ்வும், வானொலி உரைத் தொகுப்பு, அரங்கப்படையல்கள், தமிழ் நாடகங்கள், கோமாதா, வள்ளல் ஏழூர், வில்லிசைப் பாடல்கள் முதலானவை இன்றும் நின்று நிலைப்பவை.

ஆண்டு தோறும் அமரத்துவமடைந்த தன் மனைவியின் பெயரால் அரிய பல நூல்களை வெளியிட்ட பெருமகன், திரு மூலரின் திருமந்திரத்தில் ஆராக்காதலும் புலமையும் கொண் டிருந்த அன்னார் இறைபதம் அடைந்ததுவும் திருமூலரின் குரு பூசை நன்னாளிலே என்பது இறை அநுக்கிரகம் பெற்ற அழைப்பு என்றே எண்ணவைக்கிறது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா எம்பெருமானின் பாதார விந்தங்களில் சாந்நித்தியமாக வேண்டிப் பணிகின்றோம்.

**அ. உமாமகேஸ்வரன்,**
**பணிப்பாளர்,**
**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
**கொழும்பு - 4**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - கோப்பாய்
යාපනය ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨය - කෝප්පායි
Jaffna National College of Education - Kopay

த.பெ. இல. 01, கோப்பாய். තැ.පෙ.අංකය 01, කෝප්පායි. P. Box No. 01, Kopay.

தொ.பே. இலக்கம் / දුර. අංකය / T.P. Number — Office / President 021 223 0036; Residence :- 021 223 1336
தொ.நகல் இல/ෆැක්ස්/Fax No :- 021 223 0035
மின் அஞ்சல்/ඊ.මේල්/E.Mail :- jaffnancoe@hotmail.com
இணையதளம்/වෙබ් අඩවිය/Web:- www.jaffnancoe.lk

எமது இல. / මගේ අංකය / My No ..............................
உமது இல. / ඔබේ අංකය / Your No ..............................
திகதி / දිනය / Date 20...../...../.....

# "அறிவின் பரிமாற்றம்"

"தோற்றப் பொலிவும் செந்நிறமும் – நிமிர்
ஏற்றம் மிக்களழில் நடையும் – வெற்றிலைச்
சாற்றில் சிவந்த அதரங்களும், – சைவம்
போற்றும் செல்லத்துரை அதிபர்."

ஆம். சைவமும், தமிழும் சிறக்க, சமூக முன்னோடியாக வாழ்ந்து காட்டிய சைவப்புலவர் செல்லத்துரை அதிபரின் இழப்பு சைவ உலகிற்கும் தமிழுலகிற்கும் ஓர் பின்னடைவே. சிந்தனை, சொல், செயல் என்னும் மூன்றினாலும் அவர் ஆற்றிய அளப்பரிய சேவை தமிழினதும் சைவத்தினதும் இருப்பைப் பலப்படுத்தி வந்திருக்கின்றது. ஆறுமுகநாவலர், அன்று ஏற்பட்ட மிக நெருக் கடியான காலகட்டத்தில் தனது மிகவும் அர்ப்பணிப்பான சேவை யின் மூலம் சைவத்தினையும் தமிழையும் பாதுகாத்துவந்தார். அதுமட்டுமன்றி ஒரு சைவப் பாரம்பரியத்தினையும் உருவாக்கி யிருந்தார். அந்தவகையில் உருவாகிய புராணபடனம் வகுப்புகள் மற்றும் சைவப்புலவர் உருவாக்கல், தமிழ் மொழி அபிவிருத்தி என்னும் செயற்றிட்டங்களை பெரிய ஆர்ப்பாட்டங்கள் எதுவுமின்றி அமைதியான வழியில் மேற்கொண்டு நாவலர் பணியினைத் தொடர்ந்த செம்மல் சைவப்புலவர் அவர்கள்.

கல்வியியிற் கல்லூரி, அவரின் ஆற்றல்களையும் தலை மைத்துவ பண்பினையும் மாணவ ஆசிரியர்களுக்கும் பரிமாற்றம் செய்யும் முகமாக, நேரடி நிகழ்வொன்றிலும், இணைய வழி கல்விப் பரிமாற்றச் சந்தர்ப்பத்திலும் அவரின் உரை நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடு செய்து நடாத்தியமையை ஓர் அரிய வாய்ப்பாகவும் பெருமையாகவும் கருதுகின்றது.

வாராந்தம் புதன்கிழமை தோறும் நடைபெற்று வருகின்ற' "சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து" என்ற கருவூற்றுடன் இடம்பெறும் "குருசேத்திரம்" அறிவுப்பகிர்வுத் தொடரான இணைய வழிக் கருத்துரை நிகழ்வின் ஆரம்ப காலத்திலேயே சைவப் புலவர் செல்லத்துரை அதிபரின் "அறிவின் பரிமாற்ற உரை" நடை பெற்றது. "சமகாலக் கல்வி" என்ற தலைப்பில் மூன்றாவது தொடரில் இவர் வழங்கிய கருத்துக்கள். நிகழ்வில் உலகளாவிய ரீதியில் பங்குபற்றும் புத்தி ஜீவிகளினால் வரவேற்கப்பட்ட ஒன்றாக இருந்தது. அந்தளவில் ஓர் சிறிய அளவிலாவது சைவப் புலவரின் செயற்பாடுகளை மாணவ ஆசிரியர்களுக்கும் முன்மாதிரி யாகக் காட்டச் சந்தர்ப்பம் கிடைத்ததனையிட்டு மனம் மகிழ்வடை கின்றது.

தொண்ணூறுகளில், இடப்பெயர்வு காலத்தில் தொடர்ந்து பாடசாலையை தென்மராட்சியில் நடாத்தியதுடன், மாணவர்களை ஊக்குவித்துக் கற்றலைத் தூண்டியமையால், கற்றல் இடைவெளி யின்றி, அன்று பயன்பெற்ற பலர் உயர் பதவிகளில் தாம் இயங்க வழிகாட்டியமையை, இன்றும் நினைவு கூர்கின்றமை, ஆசிரியத்து வத்தின் மகிமையை உணர்த்தி நிற்கின்றது நல்லாசிரியன் ஒருவனின் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் மட்டுமன்றி அவனின் வாழ்க்கை முறைமையே மாணவர்களுக்குப் பாடமாக அமையும் என்பதற்கு புலவரின் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டாகும்.

தலைமைத்துவத்தின் ஒவ்வொரு பரிமாணத்தினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன இவருடைய செயற்பாடுகள். குறிப்பாக முன்மாதிரித் தலைமைத்துவத்தின் பண்பில் அதிபர் எவ்வாறு இருக்க வேண்டும், சமூகத்தலைவன் எவ்வாறு இருக்க வேண்டும், குடும்பத் தலைமைப் பொறுப்பை எவ்வாறு தாங்க வேண்டும், என்கின்ற ஒவ்வொரு இடத்திலும் தனது பல்பரிமாண ஆளு மையை வெளிப்படுத்தி நின்று சைவப் பணியையும் தமிழ்ப் பணியையும் ஆற்றியிருந்தமை அவரது கல்விப்புல வாரிசு களுக்கு ஓர் பாடமாக அமைந்து, எடுத்துக் காட்டாக திகழ்ந்து, ஆன்ம பலத்தினை வழங்கியிருக்கின்றது. அவர் செய்த கல்விப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியின் காரணமாக, அவரின் சந்ததிகள், சிறந்த பண்பாட்டுடன் கூடிய கௌரவமான வாழ்க்கைப் பாதையைக் காட்டி நிற்கின்றனர்.

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் கோட்பாடுகள் மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. இதனால் மனிதன் முன்னைய கலாசார பெறுமதிகளுக்குப் பதிலாக புதிய பெறுமானங்களை உருவாக்கி, அதற்கான மனப்பாங்கு மாற்றங்களை ஏற்படுத்தி தனிமனித கோலத்தினை அல்லது கூட்டுக்குடும்ப நிலையிலிருந்து தனிக்குடும்ப நிலையின் விளைவுகளுக்கு ஆளாகிவிட்டான். அதனால் நிறுவனங்கள் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டன. குறிப்பாக, பாடசாலைகள் அதன் நிறுவன நோக்கத்தினைக் கடந்து குறுகிய வட்டத்திற்குள் இயங்கு தளத்தினை அமைத்து செயற்பட ஆரம்பித்தமையினால், சமூகத் தேவையை நிறைவு செய்யும் பிள்ளைகளை உருவாக்க முடியவில்லை. பல பிள்ளைகள் நாட்டுக்கல்ல, சமூகத்திற்கல்ல, ஏன் வீட்டுக்கே கூடத் தேவையற்றவர்களாக உருவாகும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவர்களின் செயல்களைக் குறிப்பிடும் வெளிப்படையான வார்த்தைப் பிரயோகத்தினை இவ்விடத்தில் குறிப்பீடு செய்தல் பொருத்தமல்ல. மட்டுமன்றி அவை அனைவரும் அறிந்ததே. இந்த நிலைமைகளை செவ்வனே ஆராய்ந்து பார்த்தால் அதன் பின்னணியில் தலைமைத்துவத்தின் இடைவெளி தெளிவாகத் தெரியும். மக்களின் வாழ்க்கை முறைக்கும் சமுதாயத் தேவைகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படுவதனை தடுக்கும் ஆற்றலுள்ள தலைமைத்துவம் மெல்லமெல்ல இழக்கப்பட்டு வருகின்றமை வெளிப்படையாகின்றது. குறிப்பாக பாடசாலைகளிற்கும் சமூகத்திற்குமான இடைவெளியுறவினை பலப்படுத்தி வந்த சைவப்புலவர் போன்றோர் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைகின்றது.

மரபு ரீதியாக பிள்ளைகளின் கல்வியில் மட்டும் அக்கறை செலுத்தி வருகின்ற பாடசாலைகள் சில வேளைகளில் மிக உயரிய ஆற்றலுள்ள ஒரு சில பிள்ளைகளை உருவாக்கக் கூடும். ஆனால் அவைகள் தான் சமூக மனப்பாங்கற்ற பிள்ளைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி ஒருபொறுப்பற்ற சமூகப் பின்னணி ஒன்றை தோற்று வித்து விடுகின்றன. பொதுவாகக் கிராம மட்டப் பாடசாலைகள் அவ்வாறன்று. பிள்ளைகள் சிலவேளைகளில் உச்சம் தொடா விட்டாலும் மிக்க நாட்டுப் பற்றாளர்களாய் உருவாகுவதில் என்றுமே தளர்வடைவதில்லை. ஓர் கிராமியச் சூழல் சேர் பாட சாலை அதிபராக மிளிர்ந்தமை எங்கள் அதிபரின் மாணவ வளப்படுத்தல் பணியில் உச்சம் தொட உறுதுணையாக இருந் திருக்கும் என எண்ணுகின்றேன்.

பாடசாலை ஒன்றின் பொறுப்புகளில் மாணவர்களைக் கருதும்போது தனியாள் அபிவிருத்தியும். கூட்டான முறையில் நோக்குகையில் சமூகஅபிவிருத்தியும் இணைந்து அதன் வெற்றி தீர்மானிக்கப்படுகின்றது. இதற்கு பாடசாலை நிர்வாகம், சமூ கத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு சமூகத்தின் சில எதிர்பார்ப்புகள் அல்லது தேவைகள் நிறை வேற்றப்பட வேண்டும். இதனை நிறைவேற்றுவதற்கு சமூகத்தினை நன்குணர்ந்த ஒருவரால் தான் முடியும். இந்த இடத்தில்தான் அமரர் செல்லத்துரை போன்றோரின் பலம் வெளிப்பட்டு நிற்கின்றது. சமூகம் ஒன்றின் பொருளாதார வகுப்புகள், கல்வியறிவுமட்டம், பொருளாதாரமட்டம், நம்பிக்கைகள், விருப்பு வெறுப்புகள், சமூக அங்கீகாரம், மனப்பாங்கு என்பன மட்டுமன்றி மக்களின் பல்வேறு பிரிவுகள் தொடர்பாகவும் நன்கு பரீட்சையமான ஒருவர் தான் சமூகத்துடன் ஒன்றித்தநிலையில் சூழல் பலங்களை ஒன் றிணைத்து வெற்றிகரமான பாடசாலை ஒன்றிற்குள் நடமாட முடியும்.

பாடசாலையின் அதிபர் என்கின்றரீதியல் தனியாட்களின் உள்ளார்ந்த திறமைகளை இனங்கண்டு பூரண ஆளுமை விருத்தியை ஏற்படுத்த வேண்டும். இங்கு பூரண ஆளுமை விருத்தி என்கையில் பிள்ளைகளின் உடல், உள, சமூக, மனவெழுச்சி, ஆன்மீக, தொழில் சார் விருத்தி என்பன நோக்கப்படுகின்றது, அத்துடன் பாடசாலை ஒன்று பண்பாட்டினை கைமாற்றம் செய்யும் கைங்கரியத்தினையும் செய்தல் வேண்டும். புலவர் அவர்கள் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடசாலை அதிபராக மட்டும் நின்று செயற்படாமல். சமூகத் தலைவனாகவும் நின்று இயங்கிய காரணத்தினால் சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கும் பணிகளில் பாதுகாத்தது மட்டுமன்றி பாடசாலை ஒன்றின் சமூகப் பொறுப்பினையும் செவ்வனே மேற் கொண்டுள்ளார்.

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

என்கின்ற பொருட்பால் வள்ளுவன் வாக்கின்படி அன்னாரைப் பின்பற்றி ஓர் மாணவ சமுதாயம் உருவாகியது மட்டுமன்றி அது நாடாளவிய ரீதியில் பரந்துபட்டுக் காணப்படுதல் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற கூற்றைப் பொய்ப்பித்து நிற்கின்றது. அன்புடன் ஆற்றலை வழங்கி தனக்கென கல்விப் புலத்திலும் ஓர் மாணவவாரிசுப் பரம்பரையைத் தோற்றுவித்த அவரின் பணியினை அவர்கள் தொடர்வர். அதற்கான ஆத்ம பலத்தினை அவர் தோன்றாத்துணையாக இருந்து வழங்குவார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்,
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்,
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே.

- திருமந்திரம்.

சுப்பிரமணியம் பரமானந்தம்.
பீடாதிபதி,
யாழ்ப்பாணம்-தேசிய-கல்வியியற்-கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பற்றித் தொடரும் நினைவுகள்"

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் நிறைவுக் காலத்தலைவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் சிவனடி சேர்ந்துவிட்டார். இறைவனை நோக்கிச் சென்ற போது அவர் செய்த தர்மங்கள், புண்ணியங்கள், நல்ல காரியங்களின் பேறுகள் அவருடனே சென்றிருக்கும் என்பதை நன்கறிந்தவர் அவர்.

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு
கைத்தலை வைத்தழும் மைந்தரும் சுடு காடு மட்டே
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே"

என்ற பட்டினத்தார் பாடலை அவரது துணைவியார் திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நூலாக அவர் படையல் செய்த, "வாழ்வாங்கு வாழ்தல்" (2011) என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார். அவ்வாறு தெளிவுடன் வாழ்ந்த ஒருவரைப் பற்றி நாம் சொல்ல என்னதான் இருக்கிறது?

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் உட்படப் பன்னிரு வரை நிரந்தர மத்திய குழு உறுப்பினராகக் கொண்டு தெல்லிப் பழைக் கலை இலக்கியக்களம் 1986 இல் உருவானது. (இப் பன்னிருவரில் அறுவர் இன்னும் வாழ்கிறோம்) 17.09.1986 இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் தனது முதலா வது ஒன்றுகூடலை நடத்திய களமானது, இயற்குழு, இசைக் குழு, நாடகக்குழு, ஓவியக்குழு என நான்கு பிரிவுகளைக் கொண்டியங்கியது. சைவப்புலவர் அவர்கள் எல்லா நிகழ்வு களிலும், விடயங்களிலும் முக்கிய பங்காற்றி வந்தார்.

1990 முதல் வலி. வடக்கிலும் தொடர்ந்து ஏனைய பகுதி களிலும் இடம்பெற்ற இடப்பெயர்வுகள் களத்தின் தொழிற் பாட்டில் தொய்வுகளை ஏற்படுத்திய போதிலும், இடம்பெயர்ந்த இடங்கள் தோறும் அது தன் பணிகளை ஆற்றியே வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தின் முதலாவது தலைவர் பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள் புலம்பெயர்ந்த பின் தலைமைப் பொறுப்பை எடுத்துக்கொண்ட கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்கள் தனது இறுதிக்காலம் வரை அதை நல்ல முறையில் ஆண்டு வந்தார். 26.01.2019 இல் களத்தின் நூறாவது ஒன்று கூடலும் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் அவருடைய தலைமையில் சிறப்பாக நிறைவடைய வேண்டும் என்ற பிராப் பியமும் அமையப்பெற்றிருந்தது. அவையெல்லாம் இச் சமூகத் தின் பேறுகள்.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்"

என்பதற்கேற்பவே அவர் இந்நிகழ்வுக்குத் தலைமை ஏற்றிருப்பார். நாம்தான் அறிந்திருக்கவில்லை.

1988 இல் திரு. சு.செல்லத்துரை அவர்களின் மணிவிழா வெளியீடாக "அரங்கக் கலைஞர் ஐவர்" என்ற நூலைக் கலை இலக்கியக் களம் வெளியிட்டது. இதனைக் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை (இணைச் செயலரில் ஒருவர்) எழுதி யிருந்தார். அந்நூலுக்கு அணிந்துரை எழுதிய அப்போதைய யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் செ. கிருஷ்ணராஜா அவர்கள் "குரும்பசிட்டி, கட்டுவன், தெல்லிப் பழை ஆகிய மையங்களை உள்ளடக்கிய ஒரு கலாசார முக்கோண வலயத்தினுள் வளர்ச்சி பெற்றிருந்த இயல், இசை, நாடக வடிவங்களின் பண்பு" பற்றிக் குறிப்பிடும் போது, "மிக நீண்டதொரு பண்பாட்டு இருப்பின் தொடர்ச்சியை இப்பிராந்தியம் வெளிப்படுத்தியவாறு உள்ளது" என்கிறார். பல வருடகால அனர்த்த வாழ்வின் பின்னரும் அத்தகைய தொடர்ச்சியைப் பேணும் சில மனிதர்களில் முக்கியமான ஒருவராகத் திகழ்ந் தவர் சைவப்புலவர் அவர்கள் என்பதைக் கலை இலக்கியக் களச் செயற்பாடுகள் காட்டி வந்துள்ளன.

நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், நாடக, கவிதை, சிறுகதைப் பட்டறைகள், பாராட்டு விழாக்கள், இலக்கியப் போட்டிகள், பரிசளிப்புகள், அறிஞர், கலைஞர் கௌரவங்கள், கல்வி வளர்ச்சி உதவிகள் என்று தொடர்ந்து இயங்கிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் தனது முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பைக் "கலை இலக்கியக் களமும் கடந்த காலமும் - 3" என்ற வரலாற்றுக் குறிப்பேடாக வெளியிட்டிருந்தது. அதனை ஆதாரமாகக் கொண்டும் கலாபூஷணம் சு.செல்லத்துரை அவர்கள் கலை இலக்கியக் களத்தின் வழி செய்த நற்காரியங்களைப் பார்க் கலாம். எமது நூறாவது நிகழ்வில் பேராசிரியர் செ.யோகராஜா அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்து களத்தின் கடந்தகாலப் பணிகளை ஆய்வு செய்திருந்தார். எதிர்கால ஆய்வுக்கான பல விடயங்கள் சைவப்புலவர் அவர்களின் வாழ்வு, அவர் விட்டுச்செல்லும் எச்சங்கள் ஆகியவற்றிலிருந்தும் தோற்றம் பெறலாம்.

கலை இலக்கியக் களத்துடன் அவரது வாழ்வை இணைத் துப் பார்க்கையில் உணர்வுபூர்வமான பல விடயங்கள் உள்ளன வாயினும் ஒன்றைமட்டும் உதாரணத்திற்குக் கூறி இப்போதைக்கு நிறைவு செய்யலாம்.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் நிகழ்வுகளை இவர்களது குடும்பம் தமது சொந்த நிகழ்வுகளாகவே கருதுவ துண்டு. நிறைகுடம், மங்கல விளக்கேற்றலுக்குத் தேவையான பொருட்கள், மேசைவிரிப்புப் போன்றவையெல்லாம் பெரும் பாலும் சைவப்புலவர் வீட்டிலிருந்து வந்துசேரும். அவற்றை ஒழுங்கு செய்வது முதல், சந்தனக்கும்பாவுடன் தானும் நின்று வரும் விருந்தினரை வரவேற்பது வரை திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் பங்களிப்பு விரிவு பெறும். தேநீர் பரிமாறுவதா, நூல் வழங்குவதா எல்லாவற்றிலும் இந்தக் குடும்பத்தினர் காணப்படுவர்.

கலை இலக்கியக்களம் ஒரு கூட்டுக் குடும்பம்.
எப்போது காண்போம் இனி?

**கலைப்பிரவாகம்**

**திருமதி கோகிலா மகேந்திரன்**

**இணைச்செயலாளர்,**

29.10.2021 **தெல்லிப்பழை-கலை-இலக்கியக்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவத்திற்கும் தமிழுக்கும் உழைத்த சைவச் சான்றோன்"

சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்களது மறைவு சைவத் தமிழ் உலகிற்கு ஆறாத்துயர் தருஞ் செய்தியாகும். நம்நாடு முழுவதிலும் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் சைவத் தமிழ் வளர்ச்சிக்கும் சைவப்புலவர்களது பெருக்கத்திற்கும் ஆற்றிய சேவை மகத்தானது. சைவப்புலவர் சங்கத்தினை நீண்டகாலமாகப் பற்றுடனும் சிறப்புடனும் வழிநடத்தியவர். அவர் பல பதவிப்படி களில் நின்று நேரங்காலம் பாராது சைவத்திற்கும் தமிழுக்கும் அயராது உழைத்த சைவச் சான்றோன். தான் மட்டுமன்றித் தனது துணைவியாரையும் எமது சங்கப் பணியில் இணைத்துக்கொண்ட உதாரண புருஷன்.

பெரும் மகான் செல்லத்துரை அவர்களது இழப்பானது எமது சைவப்புலவர் சங்கத்திற்கும் சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரது மறைவால் துன்பமுற்றுள்ள மக்களும் மற்றுள்ளோர்களும் இழப்பைத் தாங்கும் சக்தியைப் பெற்று ஆறுதல் பெறவும் அன்னாரது ஆத்மா நித்தியானந்தப் பெருநிலை எய்தவும் தில்லைச் சிற்றம்பலவனைப் பிரார்த்திக் கின்றோம்.

மொழிமதம் இனமெனப் பற்றுடனே
மும்முரமாய்ச் சேவைசெய்தாய் ஐயாநீயும்
வழியற்று நின்றவர்க்கும் நல்லறிவுகாட்டி
வாழவைத்தாய் அனைவரையும் அன்புகொண்டு
வழிதொடரும் சைவப்புலவர்க்கும் குருவுமானாய்
குற்றமற வாழ்ந்துவந்த குணக்கடலே
அழிவற்றுப் போகாதையா உந்தன்நாமம்
அன்றன்று நினைப்போம் நாமவனியிலே

பிறந்தாருட் பெறும்பேறு பெற்றனையே பெருந்தகையே
சிறந்தாய் மற்றூழ்வலியால் சென்றாயே சிவன்பாதம்
பிறந்தார்கள் இறப்பதுவும் இயற்கை எனச்சாற்றிடினும்
மறந்தாலும் மறக்கறியா வகையுறவின் மாண்பிற்றென்றே.

சைவப்புலவர், கலாநிதி சா. தில்லைநாதன்
(பதில் தலைவர்)
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவப்புலவராக சைவத்தமிழ் காவலராக வாழ்ந்து வழிகாட்டியவர்"

ஈழத் திருநாட்டில் சைவப்புலவர் என்ற சொல்லால் அனைவரும் மதித்த ஆற்றலாளர் உயர் பண்பாளர் சைவத்துக் காக தன்னை அர்ப்பணித்து சைவ வாழ்வு வாழ்ந்த பெருந்தகை இறையடியில் பிறவா இறவா நிலை பெற்றார்.

நெஞ்சு கனக்கின்றது ஆற்ற முடியாத துயரம். சைவப் புலவர் சங்கத்தின் செயலாளராக, உபதலைவராக, நீண்ட தசாப்தமாக சங்கத்துக்காகவே தன்னை அர்ப்பணித்து பணி யாற்றி பல சைவப்புலவர்களை உருவாக்கிய ஆலமரம் சாய்ந்து விட்டது. செல்லத்துரை ஐயா ஆழ்ந்த சைவசித்தாந்தப் புலமை யும் சைவ வாழ்வியல் சிந்தனையும் இலக்கிய இலக்கணத்தில் உயர் வித்தகராகவும் எந்த விடயத்தையும் எந்த வேளையிலும் தெளிவுபடுத்தி ஐயம் தீர்க்கும் அறிவுக் களஞ்சியம் ஓய்ந்து விட்டது.

சிறந்த அதிபராக சொல்வன்மைமிக்க பேச்சாளராக, சித்தாந்த வித்தகராக, அரிய நூல்களை ஆக்கிய விற்பன்னராக விளங்கிய பெருமகன் விடை பெற்றார். ஆயிரம் பிறைகண்ட வாழ்வு சித்தாந்த வகுப்பு நடத்திதன் மாணவர் ஐயம் தீர்த்து அறிவுப் பசிபோக்கிய உயர் ஆற்றலாளன். எவர் ஐயத்தையும் தெளிவுபடுத்தும் திறமை இனி இவரைப் போல் யாரைக் காண்பது? என் செய்வது? எப்போதே முடிந்த காரியம் விதியை யார் அறிவார் காலம் தன் கணக்கை முடித்துக் கொண்டது.

திருமூலர் குருபூசைநாளில் விண்ணக அழைப்பு சிவப் பணிக்கு சிவப் பரம்பொருளின் அழைப்பாகும். கண் நிறைந்த சைவப்பொலிவுடைய அகப்புறத் தோற்றம் காலம் கடந்தும் அகம் சுமக்கும் என்றும் மறக்க முடியாது ஐயா உம்நினைவும் உம்பணியும். புன்முறுவலோடு அரவணைத்து ஆற்றுப்படுத்தி அறிவூட்டி ஆலோசனை வழங்கி பலரை வழிப்படுத்தி நல் ஆற்றல் கொண்ட புலவர்களை உருவாக்கினீர். புலவர் எவ்வாறு வாழவேண்டும் என பக்குவமாய்ப் பலருக்கும் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியவர். எடுத்துக்காட்டோடு நில்லாது புலவனாக சைவக் காவலனாக வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார். புலம்பி அழுது புரண்டு கதறினாலும் மறக்க முடியாது உமது அன்பும் அரவணைப்பும்.

எப்போதே முடிந்த காரியம். காலக்கணிப்பு நம்மை நாம் தேற்றுகின்றோம். உயர் சீலரின் ஆத்மா சிவன் தாழ்களில் நித்தியப் பெருவாழ்வு வாய்க்கப் பெற பிரார்த்திக்கின்றோம்.


**சைவப்புலவர் செ. த. குமரன்**
செயலாளர்,
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நடமாடிய பல்கலை வித்தகர்"

இவரைச் சில வாரங்களின் முன்னர் சந்தித்தேன் அவரது உரையாடலின் இடையே உடலோம்பும் நம்முயற்சி பற்றிப் பேசினார். வைத்தியசாலைக்குப் போக வேண்டியும் உள்ள தென்றார். அவ்வாறு கூறியவர் வைத்தியசாலையிலேயே தன்கடைசி நாள்கள் கழியுமென எண்ணியிருக்கமாட்டார். வையக வாழ்வு அங்கேயே ஒடுங்கிவிட்டது. ஆற்றலெல்லாம் அடங்கிய அந்தப் பெரும் பிரிவுத்துயரச் செய்தி எம்மையெல் லாம் கலங்கும்படியாக்கிவிட்டது. கவலையுடன் விரைந்தேன் இளவாலைக்கு, இவரது அன்பர்கள், உறவினர், ஊரவர் எனப் பலரும் கூடிக்கலங்கி நிற்பதையும் கண்டேன். ஏழாலையிலும் இப்படியொரு கூட்டமிருக்கும் என்பதும் என் மானசீகவுணர்வு அந்த உண்மையைப் பின்னர் கண்டேன். அவ்வேளையில்

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிறபின் சாக்காடு
இரந்துகோள் தக்க துடைத்து"

என நினைவு பேசியது. நீர்வார் கண்களையுடையவரான மக்கள் இவர்சேவையை நினைத்து நின்றனர். சூழ்ந்து நின்றவர் களது அமைதியான வாடிய முகங்கள் என் கண்களையும் பனிக்கச் செய்தன. எம்வளவாளர் நம்மை விட்டுப் பிரிந்தமை யால், என்னுணர்வும் இவ்வெற்றிடத்தை யார்தான் நிரப்ப வல்லார்? என மேலெழுந்து நின்றது.

நடமாடிய பல்கலை வித்தகர் புலவர்க்குப் புலவராய் மணியெனத் திகழ்ந்தவர். நம்மோடெல்லாம் இணைந்து பணி செய்தவர் பணியினால் சமூகத்தோடிணைந்தவர். சங்க உறுப் பினராக இருந்து ஆலோசனைகளை வழங்கிச் செயலாக்க உதவியவர்.

மாணவர்களை ஆற்றுப்படுத்தும் வகையில் சமய, இலக்கியப் பாடங்களைப் பனுவல்களை, நூற்பாக்களைச் சுவைபெறப் புகட்டும் பாங்குடையவர். பேச்சு, கவிதை, நாடகம், வில்லிசை முதலாம் பலவேறு ஆளுமைகளும் கொண்ட இவரது அறிவும் பண்பும் உயர்வுகளும் முன்பு பழகிய பழக்கத்தைக் காட்டிலும் மேலும் மேலும் பழகும் ஈர்ப்பை எனக்குத்தர அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார் துணைக்கோடலாயிற்று அதனால் பேறு பெற்றேன். பழகப்பழக இனிப்பதே நல்லுறவு - பழகப் பழகப் புளிக்கும் என்பது இவர் போன்ற பெரியார்க்குப் பொருந்தாது. நல்லுற வுக்கு இவர் எடுத்துக்காட்டு - இலக்கணமுமாகும்.

இவர் என்னைவிடப் பத்துவயது மூப்புடையவராயினும் மறதி ஏதுமில்லாத ஞாபகமுடையவர் அதனாலெல்லாம் என்னோடு நட்புரிமையுடைய பாராட்டுக்குரிய தோழரானார். அவரது அனுபவஞானம், அறிவு யாவும் எனக்குதவும் பாங்கை நான் உணர அவரது நட்பு உதவியது என்பதும் ஒருதலை. என்னைத் தன் உறவுக்குள் ஈர்த்தார் வீட்டுக்கருமங்களிலும் பங்குபெற வைத்தார். எவரையும் அழைக்காத நிகழ்ச்சி களிலுங்கூட என்னை அழைத்து மகிழ்வார். சுகம், துக்கம் எது வானாலும் மனம் விட்டுப் பேசுவார். அந்தரங்கம் காக்கும் தன் மையான அவையென்று கூடப்பார்ப்பதில்லை. நம்பிக்கையின் விளைவது. மூன்றாந்தரமான வீண்பேச்சுக்கள் எம்சந்திப்பில் நிகழ்வதில்லை நல்லம்சங்களே மேலோங்கும்.

**"தேடிச் சோறுநிதம் தின்று – வெகு**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்**
**வாடித் துன்பமிக உழன்று – பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து..."**

என்று வரும் பாரதியாரின் கூற்றுக்கு அமைவாக நல்லவை இலக்கிய இன்பம் நல்கும் பேச்சுக் கலக்கும் பிரிய மனமில்லாமல் விடைபெறுவோம் உவப்பத் தலைக் கூடும் உந்நதம் புலவர் தன்மையே அதனால் பின்னரும் காணவிழைவோம். அதன் விழைவாலே தனித்து வரமுடியாத வேளைகளில் மகன் மாவிரதனுடன் வருவார். உளமலி காதலது.

ஒருமுறை எனக்கேற்பட்ட விபத்தில் என் வலக்கால் முறிந்துவிட்டதையறிந்து வீடுவந்து இவர் காட்டிய பரிவை எவ்வாறு விளக்குவது, பேரன்புள்ள இவரைச் சந்திப்பதில் அலாதியான விருப்பம் கொண்டதன் பயனாக இவர் வாசம் செய்த இளவாலை, கொழும்பு, ஏழாலை என்றெல்லாவிடத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிச்செல்வேன். பிரிவு, மகிழ்ச்சி அனைத்தையும் சாகடித்து விட்டதே! சந்திக்கும் போது உண்டுறவாடி மகிழ்வோம். நான் வேறு அன்பர்களுடன் சென்றாலும் உபசரிப்பில் மாற்ற மிருக்காது

ஒருநாள் செல்லாம்
இருநாள் செல்லாம்
பலநாள் சென்று
பலரொடுபழகினும்
தலைநாள் போன்ற
விருப்பினன் மாதோ,

என்பதற்கொப்பானவர் அந்த உபசரிப்பு நேரங்களில் அன்னை சிவகாமசுந்தரியின் துணை பத்தருக்கேற்ற பதிவிரதைத் தன்மை சொல்லி மாளாது. மனையறத்தில் மனை விளக்காம் இல்லத்தரசி இல்லாதபோது விருந்தேது? விருந்து புறத்தாத் தானுண்டல் சாவாம்...... என்கின்றது வள்ளுவநெறி, "அருந்தும் மெல்லடகாரிட வருந்து மென் றழுங்கும் விருந்து கண்டபோ தென்னுறுமோ வென்று விம்மும்" என்று பேசும் கம்பன் கவி, தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.... என்று பேசும் சிலம்பு இதனாலெல்லாம், தமிழன் பயன்பாட்டில் விருந்தே தலையாயது என்பதும், இல்லத்தரசியின் மாண்பும் ஒன்று சேர்ந்தமையையும் உணரலாம். அன்பெல்லாம் அமைந்த சுந்தரியின்றித் துரைய வர்கள் வாழ்ந்தார். உரிமையை முன்போக்கியே சீவகன் போருக்குப் புறப்பட்டான். என்றுபேசும் சீவகசிந்தாமணி. இவர் வாழ்வும் போர்க்களமானபோது, மாறா அன்பினரெல்லாம் உதவினர் ஏழாலைச் சம்பந்தியார் குலசிங்கம் குடும்பத்தினர் துணையானார்கள்.

இவரை நாடிவருவோரைத் தம்மிடம் வருவதுபோல நினைந்து உபசாரங்கள் செய்து விருந்தளித்தனர். தமிழறங் காத்தனர். இவ்வாறெல்லாம் இவரையும் இவரைச் சார்ந்தோரை யும் இனிது காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பினுக் கெல்லாம் தகத்தக வாகித்
தன்தன்மை யும்வன் மையும்மா றாத

இங்கிதம் இவருக்கு வாய்த்தன. இவ்வாறு வாழ்ந்து சமூக சேவையில் இன்பங்கண்ட புலவர்மணி அவர்களின் அருமை இன்மை மேல் நிற்றலை உலகு நன்கறியும்.

சுருங்கச் சொன்னால்

பாட்டும் பனுவலும் சேர்ந்திடு வாரே
பேச்சுடன் நாடகக் கூத்துமிடு வாரே
காட்டும் வையகப் பொருள்களின் மேன்மை
கண்டு சாத்திரம் சொல்லிடு வாரே
நாட்டி லேயறம் கூட்டிவைப் பாரே
நாடும் இன்பங்கள் நயக்கச்செய் வாரே
தேட்ட மின்றி விழியெதிர் காணத்
தெய்வ மாக விளங்குவர் இனிதே!

என்று என்னுள்ளம் நயத்தல் புகழுரையல்ல ஆகவே, நயப்பீர நலமே! நம்புலவர் வாழ்க்கை எவருக்கும் எடுத்துக் காட்டாகும்.

தோன்றி யழிவது வாழ்க்கை, இதனுள்
துன்பத்தோ டின்பம் வெறுமை யென்னும்
மூன்றில் எதுவரு மேனும், மகிழ்வில்
மூழ்கி நடத்தல் பரசிவ முத்தி
சிவமுத்தி இவரது சித்தி யென்போம்
தெய்வமாய் வாழ்வதே சத்தி யென்போம்
தவவாழ்வு வாழ்ந்தோர் துஞ்சும் நிலையாம்
தளர்விலும் தேர்வது அறிவாம்.

**பண்டிதர். க. நா. கடம்பேசுவரன்**
B.Sc.M.A தமிழ் (சிறப்பு)
செயலாளர்
ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
Colombo Tamil Sangam Society Ltd.

மெய்ப்பொருள் காண்பதறிவு
ஆரம்பம் : 1942

பதிவு இல. 73

07, சங்கம் ஒழுங்கை, கொழும்பு - 06. இலங்கை
07, Sangam Lane, Colombo - 06. Sri Lanka.
Tel : +94 112 363 759 Fax : 112 361 381

E-mail : tamilsangamcolombo@yahoo.com
tamilsangamcolombo@outlook.com
Web : www.colombotamilsangam.com

# "கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்தவர்"

வரலாற்றுக் காலந்தொட்டு தமிழர் தம் அறிவும் ஆற்றலும் பெருகவும் கலைத்துறை செழித்தோங்கவும் பணிபுரிவதற்கென, சங்கங்கள் உருவாக்கப்பட்டுச் செயற்படுகின்றன. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்காலத்தில் எண்ணற்ற அறிஞர்கள் அரும்பணியாற்றியுள்ளனர். அவர்களுள் குறிப்பிட்டுச்சொல்லக் கூடியவர்களுள் முன்னணி வகிப்பவர் அண்மையில் விண்ணுலகு எய்திய பெருந்தகை சைவப்புலவர் அமரர் சு. செல்லத்துரை அவர்களென்றால் மிகையாகாது.

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வண்மை
நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகியல் அறிவொடு உயர்குணம் இணையவும்"
அமைபவன் நூல் உரை ஆசிரியனே.

என்று ஆசிரியர்களுக்கு உரியதாய் நன்னூல் கூறும் இலக் கணத்திற்கேற்ப இலட்சணங்கள் அனைத்தும்பொருந்தியவராய் அவர் வாழ்ந்து காட்டினார். சைவப்புலவர் என்று உரைத்தாலே அவரது தோற்றமும் பண்புகளுமே உள்ளத்தில் தோன்றும். 20ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதி முதல் 21ஆம் நூற்றாண்டுத் தொடக்க காலமான இன்றுவரை தமிழில் வித்துவச் சிறப்புக் கொண்ட ஒரு சிலரில் இவரும் ஒருவரே என்பதில் ஐயமில்லை. தமிழும் சைவமும் ஒருங்கே படிமம் கொண்ட பண்பாளர். சமுதாய நலன் வேண்டி பல துறைகளில் தடம் பதித்துப் பன்முக ஆளுமை பெற்ற வித்தகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கும் தமிழ்ச் சங்கத்திற்கும் நீண்டகாலத் தொடர்புண்டு. நாட்டுச் சூழ்நிலையால் அவர் கொழும்பு வந்தபின் அத் தொடர்பு மேலும் வலுப்பெற்றது. முன்னைய ஆட்சிக்குழுக்கள் சிலவற்றில் கௌரவ உறுப்பினராகவும் நடுப்பு ஆட்சிக் குழுவின் துணைக் காப்பாளராகவும் பதவி வகித்தவர். அத்துடன் சங்கத்தின் சிறந்த ஆலோசகராகவும், புலமைக்குழுச் செயலாளராகவும், பட்டயக்கற்கை நெறியில் விரிவுரையாளராகவும் விளங்கினார். சங்கத்திற்கான அவரது பங்களிப்பு அளப்பரியது.

எமது வேண்டுகோளை ஏற்று விழாக்களில் பங்கு கொள்வார். அவர் தலைமையில் பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

நிகழ்வுகளில் அவரது காத்திரமானதும் ஒழுங்கு படுத்தப் பட்டதுமான தெளிவான அறிவார்ந்த சொற்பொழிவுகள், கம்பீரமான தொனியில் தெள்ளுதமிழில் காதை நிறைக்கும். அவை கேட் போரைச் சிந்திக்கத் தூண்டும். அவர் அங்கம் வகித்த அமைப்புக் களின் நிகழ்ச்சிகளும், அவரது துணைவியாரின் நினைவாக நூல் வெளியீடுகளும் சங்கத்தில் நடைபெற்றன. அவை சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவியதோடு எம்மக்கள் சிறந்த நிகழ்ச்சிகளைக் காணவும் தமது திறனையும் இரசனையையும் வளர்த்துக் கொள்ளவும் துணை செய்தன. நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர் களைப் பாராட்டுவதோடு அவர்கள் ஏற்றமுறுவதற்கான வழிமுறை களையும் கூறுவார். அது அவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத் தையும் ஏற்படுத்தும்.

தமிழ் தன் செம்மைத் தன்மையை இழந்து வரும் நிலையில் தமிழை நியமத் தமிழாக வளர்த்தெடுக்க உருவாக்கப் பட்டதே பட்டயக் கற்கை நெறியாகும். இலக்கணம், பழந் தமிழிலக்கியம், நவீன இலக்கியம், தொடர்பாடல்திறன் என அனைத்தும் இணைந்த பாடத்திட்டத்தை வகுப்பதில் புலமைக் குழுவின் செயலாளரான புலவரின் வகிபாகம் மிகப்பெரியது. அதற்காக அவர் முன்னின்று உழைத்தார். கற்கை நெறியில் வெவ்வேறுபட்ட பகுதிகளை சிறந்த முறையில் கற்பித்தார். கற்பித்தல் பணிபுரிந்த அனைவரும் இலவசமாகவே கற்பித்தனர்.

இடைக்காலத்தில் புலவர் யாழ்ப்பாணம் சென்றபின்பும் அங்கிருந்து கிழமைதோறும் பயணம் மேற்கொண்டு வந்து கற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தார். அதற்கான செலவினைக்கூட ஏற்க மறுத்து மாணவர்க்காய் சேவை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சற்று உடல் தளர்ந்த போதும் அதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் கற்பிப்பதில் உறுதியுடனிருந்தார்.

பல்வேறு வயதினர், தரத்தினர் இணைந்த கற்கைநெறி மாணவர்களுக்கு, மரபுவழி சார்ந்த அவரது கற்பித்தல் பெரும் பயனூட்டியது. அவரது அணுகுமுறை மாணவர்களை வசப்படுத்தியது. பொருள் மயக்கமற்ற சொற்பயன்பாடு, அப்பழுக்கற்ற தமிழ்மொழிக் கற்பித்தல் என்பவற்றோடு, பரந்து விரிந்த அறிவுத் தேடல், சொற்பொழிவாற்றலை வளர்த்தல், நூலகப் பயன் பாட்டினை ஊக்குவித்தல், பாடத்திட்டத்திற்கப்பாலும் தனது தமிழ் அறிவையும் பண்பாட்டையும் மாணவரிடையே புகுத்தல் என அவர் மேற்கொண்ட வழிமுறையால் என்றும் மாணவர் உள்ளங்களில் உயர்ந்து நிற்கின்றார்.

அவரது மாணவர் ஒருவர் "ஏனைய ஆசிரியர்களிலிருந்து வேறுபட்டு, அணுகு முறையைக் கையாள்வார். மாணவர் தரநிலை அறிந்து அந்த இடத்திலிருந்து கற்பிப்பார். வேறுபாடு காட்டாமல் எந்நிலையில் இருந்தாலும் முன்னேற்ற முயற்சிப்பார்" என்றார். இத்தகைய பண்புகளாலும், சமயஅறிவு, கலையறிவு என்பவற்றாலும் அவர், "நல்லாசான்" என்ற சிகரம் தொட்டவர். அதற்கேற்ப, நல்வித்துக்களை விதைத்துச் சென்றுள்ளார். அவர்களது பட்டமளிப்பு விழாக்களிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து தொடரும் வாழ்வுக்கான வழிமுறைகளை எடுத்தியம்புவார். பட்டயக் கற்கை நெறிக்கான சான்றிதழ்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படவும், மதிப்புப் பெறவும் அதிலுள்ள அவரது கையெழுத்தும் காரணமானது.

சங்கத்தில் "தமிழியல் ஆய்வு நடுவகம்" ஆரம்பிக்கப்பட்ட போது "தமிழியல் ஆய்வைத் தரநிலையில் மேம்படுத்தலும் உலகளாவிய தமிழியல் ஆய்வுகளை ஒன்றிணைத்தலும்" என்ற நோக்கத்திற்கேற்ப அவர் வழங்கிய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அந்நடுவகம் சிறப்புறச் செயற்பட உதவின. வெளிநாடுகளில் இருந்து வரும் அறிஞர்களும் இச்செயற்பாட்டைப் பெரிதும் பாராட்டினர். அவ்வகையில், 'இந்து' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. ராம் அவர்கள் விடைபெற்றுச் செல்லும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகச் செயற்பாட்டினைப் பாராட்டியதோடு வெள்ளைக் கலையுடுத்துத் தெய்வீகப் பொலிவோடு இருந்த எம் சைவப்புலவரை மட்டும் கரங்கூப்பித் தலைபணிந்து விடைபெற்ற காட்சி அவரின் மேன்மைக்கு அத்தாட்சியாகும்.

சங்கத்தில் பல்வேறு பதவிகளை வகித்தவர்களுக்கு அவர் உந்து சக்தியாக இருந்தார். மாறுபட்ட குணவியல்புகளோடு உள்ளவர்களை எவ்வாறு கையாள்வது என்பதை அவர் எமக்கு உணர்த்துவார். அவரது ஆலோசனைகளும் செயற்பாடுகளும் சங்கத்தின் நடவடிக்கைகள் தளர்வுறாமல் ஓங்கி நிற்க வழி செய்தன.

அவரது வெற்றிக்குக் காரணமானவர் அவரது இல்லத்தரசி அமரர் சிவகாமசுந்தரி என்பதும் குறிப்பிடுத்தக்கது. புலவர் ஆற்றிய பணிகள் அவர் பெயரை நிலைநிறுத்தும். அவரோடு தொடர்பு பட்டவர்கள், மாணவர்கள் அவரை அடியொற்றி வாழ்வார்கள். "நம்மில் நாம் தமிழை வளர்த்துக் கொள்ளவேண்டும், நாம் தமிழில் வளர்தல் வேண்டும், அது தான் தமிழை வளர்த்தலாகும்" என்ற அவரது கூற்றுக்கிணங்க சங்கத்தின் தமிழ்ப்பணி தொடர அவர் தோன்றாத் துணையாய் இருப்பார்.

ஆற்றொணாத் துயரில் மூழ்கிய குடும்பத்தினரோடும் தமிழ் கூறும் நல்லுலகோடும் நாமும் எமது துயர் பகிர்கின்றோம். அவரது ஆன்மா இறைவனடியில் நிலை பெறப் பணிவோம்.

"ஒல்வது அறிவது அறிந்து அதன் கண்தங்கிச் செல்வார்க்குச் செல்லாதது இல்"

**ஆ.குகமூர்த்தி**
**தலைவர்**
**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழின் செழுமையைப் பேணிய பெருந்தகை"

பாரம்பரியக் கல்வி முறைகளால் தமிழையும், சைவத்தையும் கற்றுத் தேர்ந்த சைவப்புலவர் சு. செல்லத்துரை, தான் கற்றுவந்த பாதைகளின் ஊடாகவே தமிழைப் பாதுகாப்பதிலும் பங்களிப்புச் செய்தவர்.

திருமந்திரத்தை அறிவுப் பாரம்பரியத்தினூடாக தலைமுறைக் கையளிப்புச் செய்வதற்கு தன்னாலியன்ற பங்களிப்பை நல்கியவர். தொழில்சார்ந்து ஆசிரியராக, அதிபராக கல்வித் துறையில் பணியாற்றிய அவர் நேர்மைமிக்க நிர்வாகப் பண்புகளாலும் தலைமைத்துவத்தாலும் அழகுபடுத்தியவர். சைவச் சொற்பொழிவுத் துறையிலும் முக்கியமான கர்த்தாவாக இருந்த அவரது குரல் வன்மையும் கலாசாரமும் தனித்துவமானவை.

இ. சர்வேஸ்வரா
பொதுச்செயலாளர்
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்
සමාජ ප්‍රගතියේ සංගම් සම්මේලනය
FEDERATION OF COMMUNITY ADVANCEMENT SOCIETIES
தலைமையகம்: M.B.M. மன்றக் கட்டடத் தொகுதி, காங்கேசன்துறை வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை
Head Office: M. B. M. Manram - Building Complex, K.K.S. Road, Maviddapuram, Tellippalai.

# "ஆசிரியப் பணியின் அகச்சான்று"

சைவப்புலவர் ஐயா அவர்களை எனது அன்பனாகவும், நண்பனாகவும் வழிகாட்டி அறிஞராகவும், வணக்கத்திற்குரிய தெய்வீக மனிதனாகவும், சமய சமூக கல்வி எழுச்சிக்கு அறிவூட்டியாகவும், 1980ம் ஆண்டு முதல் இற்றை வரை 41 ஆண்டுகளாக எனது வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும். அத்துடன் உலகம் பரந்த எனது சமூக மக்களின் உயர்ச்சிக்கும், உபாயங்களைத் திட்டமிடவும், அமுல்படுத்தவும் நேரம், காலம் பாராது அயராது சேவை புரிந்தவரை கொடிய கொரோனா நோயானது ஒருவரையொருவர் நேரில் முகம்பார்த்து கதைக் காது நாள்தோறும் தொலைபேசிமூலம் பேசி அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் நேரம். கொடிய நோயின் தாக்கம் குறைவ தால் விரைவில் சந்தித்துப் பேசலாம் என்று ஆறதலடைந் திருந்த வேளையில் அவரின் முகத்தைப் பிணமாகப் பார்த்து வெதும்பிக் கண்ணீர் விட்டேன்.

முதன்முதலில் ஐயாவைச் சந்தித்தது 1980ம் ஆண்டில் அவரது இளவாலை இல்லத்தில். அவர் ஒரு சைவப்புலவர், உயர்குலத்தவர் எப்படி எங்களை அணுகுவார் என்ற ஏக்கத் துடன் அவரின் இல்லத்துக்கு எனது இரு நண்பர்கள் சகிதம் சென்றேன். ஐயாவின் இடமோ இளவாலை, அம்மாவின் இடமோ இணுவில். எப்படி வரவேற்பார்கள் என்ற ஏக்கத்துடன் வீட்டு முற்றத்தை அடைந்தோம். ஒரு புறத்தில் புலவர் ஐயாவும், மறுபுறத்தில் அம்மாவும் வாருங்கள், அமருங்கள் என அழைத்ததையும் வெள்ளிக்கோப்பையில் பால் தேநீர் தட்டில் ஏந்தி வந்து உபசாரம் செய்த பண்பையும், பலருக்கும் சொல்லி மகிழ்ந்தேன். அதன்பின் சென்ற காரியத்தை அன்பாகக் கேட்டார். எனது உயிருக்கு உயிராக நேசித்து வளர்த்த மாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் 25வது ஆண்டு விழாவை ஸ்தாபிக்கப்பட்ட திகதியான செப்ரெம்பர் 12ம் நாள் அன்று கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை பெறுவதே எங்களது விஜயத்தின் நோக்கமாகும். தேசம் பரந்த கல்விப் போட்டி, பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, தொண்டர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தல், நினைவு மலர் வெளியீடு - பெரியார் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை, அமரர் வி. வி. வைரமுத்துவின் அரிச்சந்திர மயானகாண்ட நாடகம் உள்ளிட்ட ஏற்பாடுகளை அடுக்கிக் கொண்டே போனேன். சலியாமல் தனது முதிர்ந்த அனுபவத்தை வெளிப்படுத்தி ஒவ்வொரு செயற்பாட்டிற்கான உபாயங்களையும் அடுக்காகக்கூறி அறிய வைத்தார். அதன் மூலம் சிறப்பாக விழாவைச் செய்ய முடிந்ததை மறக்க முடியுமா? முடிவில் ஏதும் இன்னும் தேவைப்பட்டால் தயங்காமல் வந்து கேளுங்கள் என்றார். அவ் வார்த்தைகள் மேலும் என் உள்ளத்தைக் கவர்ந்தது. முதல் சந்திப்பில் வளர்ந்த 41 வருடத் தொடர்பை மறக்க முடியுமா?

இன்னும் பல பல நல்ல அனுபவங்கள் உண்டு. அவற்றில் இன்னும் சிலவற்றைக் கூறி எனது நினைவு அலைகளை நினைவு கூர்ந்து கட்டுரையை நீடிக்காமல் சுருக்க விரும்புகிறேன். நாங்கள் இருவரும் யுத்த காலத்தில் கொழும்பு மாவட்டத்தில் வசித்த காலத்தில் தொடர்பை மேலும் வளர்த்து வந்தோம். அவரது மனைவி அமரர் திருமதி சிவகாமசுந்தரி அவர்களும் போகும் பொழுதெல்லாம் அன்பான உபசரணையும் அவரது இல்லத்திற்குப் போவதற்குத் தூண்டுதலாக இருந்தது. எல்லோரும் திரும்பத்திரும்ப ஐயாவை அழைக்கச் சொல் வார்கள்.

அமரர்களுக்கான ஆத்மசாந்திக் கிரியைகள் பல கொழும்பு தம்பையா சத்திரத்திலும், கல்யாண வைபவங்கள் கொழும்பு கதிரேசன் மண்டபத்திலும், பாராட்டு விழாக்கள் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்திலும் சிறப்பாக நடப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் வருகை, வழிகாட்டல், உரைகள், வந்தோரை மகிழ்ச்சியூட்டியது. மலர்ந்த முகம், தேசிய உடையில் கம்பீரமான தோற்றம், சிம்மக்குரல், அறிவூட்டும் சொற் பொழிவுகள் அனைத்தும் சபையோரைக் கவர்ந்தன. மீண்டும் மீண்டும் விருந்தாளியானார். ஐயா அவர்கள் உயர்வு, தாழ்வு பாராட்டாமல் பந்திபோசனம் உபசரணைகளில் பங்குபற்றும் பண்புகள் மறக்க முடியாத உயர்வான பண்புகளாகும். ஐயாவினதும் குடும்பத்தாரினதும் விருந்தோம்பல் வரவேற்பு, உபசரிப்புப் பண்புகள் முன்மாதிரியானவையாகும்.

2013ம் ஆண்டு யூலை, 28ம் திகதி யாழ் வீரசிங்க மண்டபத்தில் நிறைந்து வழிந்த சபையோர் மத்தியில் பங்குபற்றி சிறப்புரை வழங்கி மகிழ்வித்த பாராட்டு விழாவை மறக்க முடியாது. அவ்விழாவில் வெளியிடப்பட்ட 466 பக்கங்களைக் கொண்ட 'எழுச்சிப்பாதை' என்னும் நூலின் பிரதம ஆசிரியராக இருந்து செயற்பட்ட திறன் பாராட்டுக் குரியதாகும். சைவ உலகுக்குப் பரந்துபட்டுப் பயன்படும் 'மெய்கண்டசாஸ்த்திரம்' என்ற பெருநூலை தனது அன்பு மனைவியின் 10வது ஆண்டு நினைவாக 2020ம் ஆண்டு வெளியிட்டு வைத்தார். இவ்வாறு பல மறக்க முடியாத நூல் களை எழுதியும் தொகுத்தும் அற்புதங்கள் புரிந்து தமிழும் சைவமும் வளர்த்து வந்த மேதையை இழந்தது தமிழுக்கும் சைவத்துக்கும் பெரும் இழப்பாகும். அவரின் பரிசுத்த ஆத்மா எல்லாம்வல்ல ஆதிசிவன் தாழடி சேர எல்லோரும் பிரார்த்திப் போமாக.

இங்ஙனம்

அன்புக்குரிய

எழுச்சிவேந்தர் இ.மு. நாகலிங்கம் J.P

மாவிட்டபுரம், தெல்லிப்பளை

27-10-2021.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவப்புலவர் என்ற சொல்லின் இலக்கணமாய் திகழ்ந்தவர்"

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இடம்பெறும் சமய, சமூக, கலாசார நிகழ்வுகளின் போது சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களைச் சந்தித்து உறவாடும் சந்தர்ப்பம் எமக்கு ஏற்பட்டது. எனதும் மனைவியினதும் நூல் வெளியீடு களின் போதும் அவர் கலந்து உரை நிகழ்த்தியிருக்கிறார். சில விழாக்களில் சக பேச்சாளராக உரையாற்றும் சந்தர்ப்பமும் எமக்குக் கிடைத்திருக்கிறது. பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட தொடர்பு அவருடனானது.

சிறந்த அதிபராக சொல்வன்மை மிக்க பேச்சாளராக, சித்தாந்தவித்தகராக, பன்னூல் ஆசிரியராக, புராணபடன வித்தகராக, தன்னிகரற்ற நாடக ஆசானாக, வில்லிசை வித்த கனாக, மிகச்சிறந்த சமய, சமூகவியல் செயற்பாட்டு ஆளுமை யாக தன்னலம் கருதா சமூகத் தொண்டராக விளங்கியவர் கலாபூஷணம் சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் ஈழத்திரு நாட்டில் சைவப்புலவர் என்ற சொல்லால் அனைவராலும் மதிக்கப் பெற்ற வாண்மையாளர்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நடப்பு ஆட்சிக்கழுவின் துணைக்காப்பாளராகப் பதவி வகித்து வந்த சைவப்புலவர் அவர்கள். ஆட்சிக்குழுக்கள் சிலவற்றில் கௌரவ உறுப்பினரா கவும் அமர்ந்திருந்தார். தமிழ்ச்சங்கப் பணிகளுக்கு ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்கியது மட்டுமன்றி சங்கம் நடத்திய பட்டயக்கற்கை நெறியில் விரிவுரையாளராகவும் அதற்கான புலமைக்குழு அங்கத்தவராகவும் பெரும் பங்களிப்பை நல்கியவர்.

கடந்த காலங்களில் திருமந்திர வகுப்புக்களை இணு விலில் நடத்தி வந்ததோடு நில்லாது அங்கு கற்ற மாணவர் களின் ஆக்கங்களை உள்ளடக்கி "திருமந்திரவிருந்து" என்ற சிறந்த நூலையும் ஆக்கியவர். சைவசித்தாந்த சாஸ்த்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றையும் உள்ளடக்கி மெய்கண்ட சாஸ்த்திரம் என்ற நூற் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.

அவரின் துணைவியார் செல்லத்துரை சிவகாமசுந்தரி அவர்களின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருடமும் அவர் வெளியிடும் நூல்கள் சமூகத்தின்பால் அவர் கொண்டுள்ள அக்கறையை எடுத்துக் காட்டுபவை.

புராணங்களுக்கு உரை கூறும் பொழுது அவரது இறைபற்றினையும் தமிழ்ப்பற்றினையும் கண்டும் கேட்டும் களிக்கலாம்.

யாழ்ப்பாணம், இளவாலை மெய்கண்டான் வித்தியால யத்தின் மாணவனாகத் திகழ்ந்த இவர் அதே பாடசாலையின் அதிபருமாகிப் பாடசாலைக்கு பெருமை சேர்த்த பெருமகன்.

திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையம். திருமந்திரப்பணிமன்றம், தெல்லிப்பழை கலை இலக்கியக்களம், சுகவாழ்க்கைப் பேரவை ஆகியவற்றின் வரலாற்றினை இவரது பெயரை நீக்கி எழுதிவிட முடியாது என்னும் அளவிற்கு இவரது பணிமகத்தானது.

**தி. ஞானசேகரன்**
**ஆசிரியர்**
**ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவவாழ்வியல் நெறியும் சைவப்புலவரும்"

## அறிமுகம்

இந்த மண் பல ஆளுமையுள்ளவர்களை உலகிற்கு தந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுச்சி கண்ட புலமைத்துவ வரவின் எழுச்சி இன்றுவரை நிகழ்ந்திருக்கின்றது. சமயத்தினையும் தமிழினையும் தமது கண்ணென போற்றிய பல அறிஞர்கள் இந்த மண்ணில் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்களில் மிகவும் அண்மையில் இவ்வுலக வாழ்வினை நீத்த சைவப் புலவர் சு. செல்லத்துரையும் ஒருவர். "இலங்கையில் சைவப் புலவர் என்ற அடைமொழிக்கு உரித்தானவர் என்று குறிப்பிடக் கூடியவர் செல்லத்துரை தான்" என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்களே அவரை சிறப்பித்துக் கூறி இருக்கின்றார். அந்த அளவிற்கு சைவப்புலவர் என்றும் புலவர் என்றும் அழைக்கப்படுபவர்தான் சைவப்புலவர் சு.செல்லத்துரை.

அவருடனான எனது உறவு சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக இருந்திருக்கின்றது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம், பண்டிதர் அவர்கள் இருக்கும் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அதன் செயலாளராக சைவப்புலவர் அவர்களும், உப செயலாளராக நானும் தெரிவுசெய்யப்பட்டிருந்தேன். அன்று தொடங்கியபுலவர் அவர்களுடனான உறவு இன்றுவரை நிகழ்ந்திருக்கின்றது.

## சைவமும் சைவவாழ்வியலும்

சைவசமயம் ஒரு சடங்கு நெறியாகவோ, ஒருகிரியை நெறியாகவோ அன்றி அது ஒரு வாழ்வியல் நெறியாகவும் இருக்கின்றது. சைவசமயத்தின் வாழ்வியல் முறைகளை ஈழத்தில் கண்டு கொள்ளலாம். கந்தபுராணக் கலாசாரம் என சிறப்பிக்கும் அளவிற்கு சமயம் சார்ந்த வாழ்வியல் நெறிகளே ஈழத்தில் இன்றும் நிலவி வருகின்றது. உலகில் வேறு எந்த நாடுகளிலும் இல்லாத அளவிற்கு ஈழத்தில்தான் சமயம் ஒரு வாழ்வியல் நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சிறுவயதில் இருந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு சைவசமய வாழ்வியல் நெறிமுறைகள் கற்பிக்கப்பட்டுவருகின்றன. இன்றும் பாடசாலைகளில் வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதப்பட்டுவரும் மரபு தென்னிந்தியாவில் கூட இல்லை. திருவாசகத்திற்கு முதன்மை கொடுக்கின்ற இடமாகவும் ஈழம் இருக்கின்றது. இதனால் தான் இதனை சிவபூமி எனச் சிறப்பித்திருக்கின்றார்கள் ஆன்றோர்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு சடங்கு முறைகளிலும் சமயம் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. சமயம் இன்றி வாழ்வியல் இல்லை எனும் அளவிற்கு சமய வாழ்வியலால் சிறப்புற்று இருப்பதுதான் ஈழத் திருநாடு. இந்த பூமியில் பிறந்த பல சான்றோர்கள் சமயத்தினை வளர்த்ததோடு மட்டுமல்லாமல் சமய வாழ்வியலிலும் வாழ்ந்திருக்கின்றார்கள். உலகிற்கு சைவ சமய வாழ்வியலை அறிமுகப்படுத்தியது இந்த மண்தான் என்று பெருமைப்படலாம். அத்தகைய சமய வாழ்வியலை வாழ்ந்து காட்டிய பெருமகனாராக சைவப்புலவர் விளங்குகின்றார்.

சமயத்தினை துறைபோக கற்றதோடு மட்டும் நின்றுவிடாது சைவசமயம் சொல்லுகின்ற ஒழுக்க விழுமியங்களை இறுதிவரை கடைப்பிடித்திருக்கின்றார். இன்று சமயத்தின் வழி தமது வாழ்வியலை வசதியான வாழ்வியலாக அமைத்துக் கொள்ளும் சில மனங்களுக்கு மத்தியில் உண்மையான சமய வாதியாகவும் அந்தசமயம் குறிப்பிடும் ஒழுக்க வாழ்வியலை இறுதிவரை கடைப்பிடித்தவராகவும் புலவர் அவர்கள் விளங்குகின்றார். பல பட்டங்கள் அவரைத்தேடி வந்தபோதும் அவற்றினை ஏற்றுக்கொள்ளாமல் பட்டங்களின் வழியே செல்லாத மாண்புடையவர் எம்மத்தியில் வாழ்ந்திருக்கின்றார் என்பது எமக்கு பெருமைதரும் விடயம் ஆகும்.

**சைவப்புலவரும் தமிழ்ப்புலமையும்.**

சைவப்புலவர் அவர்களுக்கு சைவசமய புலமைக்கு அப்பால் தமிழ்ப்புலமையும் இருந்திருக்கின்றது. பாபுனைவதில் வல்லவர். தமிழ் இலக்கியங்களை துறைபோகக் கற்றவர். சிறப்பாக சிலப்பதிகாரத்திலும் பெரியபுராணத்திலும் அதிக விருப்புடையவர். சிலப்பதிகாரத்தின் தாக்கம் அவரைப் பல இசைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கள் புனைய வைத்திருக்கின்றது. வீரமணி ஐயருக்குப் பின்னர் ஈழத்தில் நாட்டிய நாடகங்களை அதிகம் எழுதியவராக சைவப்புலவர் அவர்கள் விளங்குகின்றார். தமிழ் இலக்கியத்தின் மீது நேசிப்புக் கொண்ட புலவர். அவர்களது இறுதிக்காலத்தில் மாலை நேரங்களில் அவருடனான உரையாடல்களில் தமிழ் இலக்கியம் தொடர்பாக அவருடன் உரையாடி இருக்கின்றேன். புலவர் அவர்களின் இலக்கியம், இலக்கணம், அறிவியல், இலக்கிய கோட்பாடுகள் எனப்பல இலக்கிய கட்டமைப்புக் களைக் கூட அறிந்தவராக புலவர் அவர்கள் இருந்திருக்கின் றார்கள் என்பது வியப்பாகவே இருந்திருக்கின்றது.

**சைவப்புலவரும் கலைகளும்**

சைவப்புலவர் அவர்கள் தமிழ், சமயம் ஆகியவற்றுக்கு அப்பால் கலைகளின் மீது ஈடுபாடு கொண்டவராகவும் சிறந்த கலைஞராகவும் இருந்திருக்கின்றார். ஒரு நாடக கலைஞராக நாடக எழுத்தாளராக, நெறியாளராக பல நாடகங்களை எழுதி மேடையேற்றி இருக்கின்றார் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளில் அவர் மன்னாரில் பணியாற்றிய காலங்களில் மேடையேற்றிய நாடகங்கள் பற்றிய அனுபங்களை என்னுடன் பகிர்ந்திருக்கின்றார். நாடகத்துறைக்கு அப்பால் வில்லிசைக் கலைஞராகவும் இருந்திருக்கின்றார் பல வில்லிசைகளை எழுதி அவற்றினை அரங்கேற்றியும் இருக்கின்றார். மாணவர்களுக்கான வில்லிசை தொடங்கி பெரியவர்களுக்கான வில்லிசைவரை பல வில்லிசைகளை எழுதி இருக்கின்றார். அவரது வில்லிசைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு அவற்றை வெளியிட்டும் இருக் கின்றார். வில்லிசைக் கலைக்கு அப்பால் சிறந்த நாட்டிய நாடகங்களை எழுதும் புலவராகவும் இருந்திருக்கின்றார். நாட்டிய நாடகங்களை எழுதுவதற்குரிய இசை நுணுக்கங்கள் நடன அடைவுகள், நடன பாவங்கள் என்பவற்றையெல்லாம் அறிந்தவராகவே இருந்து பல நாட்டிய நாடகங்களை எழுதி இருக்கின்றார். இன்றுவரையும் பல பாடசாலைகளில் அவர் எழுதிய நாட்டிய நாடகங்கள் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இதனைவிட ஒரு நாடகக் கலைஞராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கின்றார் பல நாடகங்களை எழுதி தயாரித்து அரங்கேற்றி இருக்கின்றார். பல்துறைப் புலமையாளராக அவரது புலமைகள் கலைகளின் வழியும் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த கலைகளின் வழி அவர் படைத்த படைப்புக்களில் எல்லாம் சைவசமய விழுமியங்கள் பற்றியும் சமய வாழ்வியல் பற்றியும் ஒழுக்க விழுமியங்கள் பற்றியுமே அதிகம் இருக்கின்றன. இலக்கியத்தின் மீது அவருக்கு இருந்த ஆளுமை பல இலக்கிய நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வில்லிசைகள் போன்ற வற்றினை எழுத முடிந்திருக்கின்றது. இன்று கலைச் செயற்பாடுகளுக்கான எழுத்துருக்களை தரமான வகையில் எழுதுபவர்கள் அருகி வருகின்ற இந்த நிலையில் புலவரின் இந்த எழுத்துருக்கள் இன்னும் பல தலைமுறை களுக்கு வழிகாட்டும்.

**சைவப்புலவரும் சமயத்துறையும்**

சைப்புலவர் அவர்களின் பிரதான துறையாகவும் பிரதான இயங்கு தளமாகவும் சைவசமயமே இருந்திருக்கின்றது. சமயத் தினையும் சமய வாழ்வியலையும் தனது இருகண்கள் போன்று செயற்பட்டு வந்திருக்கின்றார். சமய இலக்கியங்கள், புராணங் கள் சைவசித்தாந்தம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமையுடைய வராக இருந்திருக்கின்றார். குறிப்பாக திருமுறைகளிலும் புராணங்களிலும் சைவசித்தாந்தத்திலும் குறிப்பாக திருமந்திரத் திலும் மிகுந்த புலமை உடையவர். இவரது இந்த புலமைத் திறத்தினை பண்டிதர் மு. கந்தையா அவர்கள் பாராட்டி யிருந்ததை நான் நேரில் கண்டிருக்கின்றேன்.

திருமுறைகளில் அதிக ஈடுபாடுகொண்ட புலவர் அவர்கள் திருமுறைகளை அவற்றின் பண்கள் சிதையாமல் ஓத வேண்டும் என்ற பெருவிருப்புக் கொண்டவர். இன்றுவரை திரு முறைகளை அவற்றின் பண்கள் சிதையாமல் மாணவர்களுக்கு பண்ணிசையாக கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற பெருவிருப்பு கொண்டு செயற்பட்டிருக்கின்றார். அவருடைய பிற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலையில் வாழ்ந்திருந்தபோது ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் பண்ணிசை வகுப்பில் ஆசிரியரோடு தானும் இணைந்து பாடிய சந்தர்ப்பங்களை பல தடவைகள் கண்டிருக்கின்றேன். கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் சுமார் அறுபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்ற புராணபடனப்படிப்பு இடையில் தொய்வுநிலை ஏற்பட்டபோது இறை அருளால் புலவரை ஏழாலையில் இருக்கச் செய்து தொய்வு நிலை கண்டிருந்த புராணபடனத்தினை மீண்டும் மிடுக்குடன் எழச் செய்திருக்கின்றது இறையருள். புராண படனத்தில் வல்லுநராக இருந்த புலவர் அவர்கள் எமது புராண படன மரபினை நன்கு பேணி புராணங்களுக்கு பயன் சொல்ப வராகவும் இருந்திருக்கின்றார். பல ஆலயங்களிலும் மலேசியா விலும் சென்று புராணங்களுக்கு பயன் சொல்லியிருக்கின்றார். பெரியபுராணத்தில் அதிக ஈடுபாடு கொண்ட புலவர் அவர்களின் இறுதிக் காலத்தில் ஏழாலையில் பெரியபுராண படனத்தினை தொடர்ச்சியாக பல ஆண்டுகள் செய்திருக்கின்றார். அத்துடன் அதனை ஏனையவர்களுக்கும் கற்றுக் கொடுத்திருக்கின்றார். திருமந்திரப் பாடல்களை பாடல், விளக்கம் எனக் கொடுத்திருக் கிறார், ஒலிப்பதிவு செய்து வெளியிட்டிருக்கின்றார்.

சைவசமயம் சார்ந்த பல சமய அமைப்புக்களில் இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கும் புலவர் அவர்களின் நிர்வாகத்திறனும் இதன் ஊடாக வெளிப்பட்டு இருக்கின்றது. சிறப்பித்துச் சொல்லக்கூடியது அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஊடாக பல சைவப்புலவர்களை உருவாக்கி இருப்பதும், சைவசித்தாந்த பயிற்சிமையத்தின் ஊடாக பல சித்தாந்தரத்தினம் எனும் பட்டங்களை வழங்கி பல மாணவர் களை உருவாக்கியும் இருக்கின்றார். சமய உலகிற்கு பணி யாற்றுவதற்காக பல தலைமுறை மாணவர்களை சமயத்துறை யில் உருவாக்கி இருப்பது அவரது ஆசிரியத்துவத்தினையும் அவரது அதிபராக இருந்த நிர்வாகத்திறனையும் வெளிக்காட்டு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுரை

சமயம், இலக்கியம், கலைத்துறை, சொற்பொழிவு என பல தளங்களில் தடங்களைப் பதித்தவர் சைவப்புலவர் அவர்கள். ஈழத்தின் புலமைத்துவ மரபில் குறிப்பிடத்தக்கவராக இருந்திருக்கின்றார். அவர் விட்டுச்சென்ற அவரது படைப்புக்கள் மூலமாக அவரைக் கண்டு கொள்வதோடு மட்டுமன்றி சைவசமய வாழ்வியல் முறைமைகள் பற்றிய அவரது கருத்துக்களை எதிர்கால உலகம் கண்டு அத்தகைய வாழ்வியல் முறைகளை நாமும் கைக்கொள்வதே இத்தகைய பெரியோர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும். சைவத்தமிழ் உலகம் ஒரு ஆளுமையாளரை இழந்திருக்கின்றது. ஈழத்தின் சைவ சித்தாந்த பாரம்பரியத்தின் அடையாளம், தனது பணியினை நிறைவு செய்து பயணப்பட்டிருக்கின்றது. அவர் கற்றுத் தந்த வழிகளை மறக்காது பயணிப்பதே அவருக்கு செய்யும் மரியாதையாகும்.

சைவப்புலவர் கு. றஜீபன் M.A.
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம்
ஏழாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VAAZHVAHAM

(Home for the visually handicapped)

வாழ்வகம்

(விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்)

Sabapathipillai Road, Chunnakam, Sri Lanka

Established - 29.06.1988

Reg. No: VS/SS/VOR/2004/02
Reg. Date: 22.11.1989,

T.P: 021 224 0146
: 076 828 6331

Website: www.vaazhvaham.org.  Email: vaazhvaham1988@gmail.com


**President:**
Mr. A. Raveendran J.P (WI)
B.A., PGDE (Hons), M.Ed., SLTES - 2

**Secretary:**
Mr. V.K. Raveeharan J.P (WI)
B.Com., PGDE, M.Ed (Hons), M.Com (Hons), SLTS - 1

**Treasurer:**
Rtn. T. Vamadevan J.P (WI)
Spe. Trd (Primary), B.Ed., Dip. in school Mgt., M.Ed (Hons), SLPS

**Vice President:**
Mrs. M.V. Raveendran
B.A (Hons), PGDE, PGDSE, SLTS - 1

**Assistant Secretary:**
Mr. T. Akilan
B.Sc (Computer science, UK)

**Committee Members:**
Mr. P. Kamalanathan
B.Com., PGDE, SLPS - 1

Mr. R. Suththananthan

Mr. T. Shanmuganathan

Mr. P. Thirukumaran

Ms. Dilviya Gnanaseelan
B.A (Hons), Dip. in Counselling.

Ms. Rubeni Selvarajah J.P (WI)


## "நெஞ்சார்ந்த அஞ்சலிகள்"

சைவப் புலவர் கலாபூஷணம் செல்லத்துரை ஐயா அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு சைவத்தமிழ் உலகம் ஒரு கணம் கலங்கித்தான் போனது. தெளிந்த சிந்தனையுடனும் திடமான நெஞ்சுடனும் தீர்க்கமான பார்வையுடனும் அவர் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகள் காத்திரமானவை, காலத்தால் அழிக்கமுடியாதவை. தன் சொல்லுக்கும் செயலுக்குமிடையே தூரமெதுவுமில்லாத இந்தத் தூய மனிதர் எமது வாழ்வக நிறுவனத்தோடு நீண்ட காலமாக மிகுந்த கேண்மை பூண்டொழுகிவந்தார் என்று கூறுவதில் நாம் மிக்க பெருமிதமடைகின்றோம். எமது நிறுவனத்தின் வளர்ச்சியிலும் எமது பிள்ளைகளின் உயர்விலும் அவர் காட்டிய அன்பையும் அக்கறையையும் நாம் ஒருபோதும் மறக்க முடியாது. அவரது இழப்பால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் எம்முன்னே விரிந்து கிடக்கின்றது. **"நீ பூவுலகை அலங்கரித்தது போதும் இனி என் பொன்னுலகை அலங்கரிக்க வா"** என்று வல்ல இறைவன் அவரை வரவழைத்துக்கொண்டானோ என்னவோ.

முழு வாழ்வு வாழ்ந்த பூரண மனிதர்களின் ஆத்ம சாந்திக்காக நாம் பிரார்த்திப்பது அர்த்தமற்றது, அனாவசியமானது. அந்த வகையில், ஐயா அவர்களின் பாதம் பணிந்து எங்கள் நெஞ்சார்ந்த அஞ்சலிகளை சமர்ப்பித்து நிற்கின்றோம். அவரது அருமை மைந்தர்களான நாவரசன், மாவிரதன் மற்றும் உறவுகளோடு நாமும் இணைந்துகொள்கின்றோம்.

இனி ஆண்டவன் மலரடிகளின் கீழிருந்து அவர் அவனி நோக்கித் தன் ஆசிகளை வழங்கட்டும்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

A.Raveendran J.P
B.A, Dip in Ed, M.Ed
President
Vaazhvaham
Sabapathipillai Road, Chunnakam

Bank Account Numbers:

| | | |
|---|---|---|
| 8107009430 | 117010003186 | 7471582 |
| Commercial Bank | Hatton National Bank | Bank of Ceylon |
| Chunnakam | Chunnakam | Chunnakam |

"Education is light, Education is the path"  "கல்வியே ஒளி, கல்வியே வழி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்**
**இளவாலை**
**Ilavalai North Rural Development Society**
**Ilavalai**

ஸ்தாபிதம் Establish } 1949.07.29    பதிவு இல Regd No } NP/DRD/JA12/J-222/0332

| சி.குமாரலிங்கம் | பா.மரியதாஸ் | த.இராஜகுலசிங்கம் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

# "ஊரும் பாரும் போற்றும் பல்துறை ஆளுமை கொண்ட பண்பாளன்"

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலால்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் பெரு வாக்கிற்கிணங்க புகழுடன் தோன்றி பெரும் புகழுடன் வாழ்ந்து இறைபத மடைந்த நாடறிந்த பன்முக ஆளுமை கொண்ட பண்பாளன் அமரர் சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள். இளவாலைப் பிரதேசத்தில் வாழ்ந்த பல பெரியோர்களுடன் இணைந்து இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தை சிறப்பாக வழிநடத்தி சங்கத்திற்கு ஓர் காணியையும் கட்டடத்தையும் அமைத்துக் கொள்வதற்கு முன்னின்று செயற்பட்ட உத்தமர். இந்த செயற்பாடுகளிற்கு தன்னுடன் இணைந்து பயணித்து ஒத்துழைப்பு நல்கி மறைந்த பெரியோர்களை அமரர் அவர்கள் கடைசிவரை நினைவு கூர்ந்து வந்தவர்.

சங்கத்தின் செயலாளராகவும் தலைவராகவும் அரும் பணியாற்றியதுடன் தற்போது போசகராகவும் இருந்து சங்கத்தை சிறப்புடன் வழி நடத்தியதுடன் சங்கத்தின் வர லாற்றுக் கண்ணோட்டத்தையும் செயற்பாட்டு அறிக்கை யையும் தானே முன்னின்று தயாரித்து இவற்றை வருங் கால சந்ததிற்கு எடுத்துக் கூறவேண்டும் என்ற பெருநோக்கோடு கடந்த 13.08.2017இல் இவ் அறிக்கையானது வலிவடக்கு பிரதேசசெயலாளர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்கால சூழ்நிலையில் நீதிமன்றங்கள் பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப் பட்டிருந்த நிலையில் இந்த பிரதேச மக்களிற்கு ஏற்படுகின்ற பிணக்கு களைத் தீர்ப்பதற்கு ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இவர் மனதில் உதித்தது.

அப்போதிருந்த கிராமசேவையாளர் திரு. க.க.வேலாயுத பிள்ளை அவர்களுடன் இணைந்து சமாதான நீதிச்சபை என்ற அமைப்பை உருவாக்கி அதன் செயலாளராக இருந்து பல நூற்றுக்கணக்கான பிணக்குகளை வெகு சிறப்பாகத் தீர்த்து வைத்தவர். அவரின் இந்த செயற்பாடு அவருடைய நிர்வாகத் திறமையையும் மக்கள்மீது அவர் கொண்டிருந்த அன்பையும் அக்கறையையும் எடுத்துக் காட்டியது. சமாதான நீதிச்சபை யின் பொதுக் கூட்டத்திற்கு அப்போதைய மல்லாகம் மாவட்ட நீதிபதியாக இருந்த நீதியரசர் உயர்திரு C.V. விக்கினேஸ் வரன் அவர்களை அழைத்து மக்கள் தமது பிரச்சினைகளை தமக்குள்ளே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உயரிய கருத்தை நீதியரசர் மூலமாகவே சொல்ல வைத்ததுடன் அதனைச் செயற்படுத்தியும் காட்டிய பேரறிஞர். கல்லூரி அதிபர் கடமையுடன் பல பொதுப் பணிகளிலும் சமயப் பணிகளிலும் தமது நேரத்தை ஒதுக்கியபோதும் தனது பாரம்பரிய தொழிலான விவசாயத்தையும் செய்து ஒரு சிறந்த விவசாயியாகவும் திகழ்ந்தார். அமரத்துவம் அடைந்த இவரது துணைவியார் இவரது அனைத்துச் செயற்பாடுகளிலும் தனது பூரண ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் வழங்கிய தனால் இவர் தலைசிறந்த சேவையாளராக மிளிர்ந்தார். பல பதவிகளை வகித்து பல்வேறு பட்டங்களைப் பெற்று பல்வேறு படைப்பாக்கங்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு தந்து ஊரும் பாரும் போற்றும் சான்றோனாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த அமரர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் மானிட உள்ளங்களில் என்றும் அழியாது வாழ்ந்து கொண்டே இருப்பார்.

"வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

**இளவாலை வடக்கு**
**கிராம அபிவிருத்திச் சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

**J/ILAVALAI MEIHANDAN MAHAVIDYALAYAM**

இளவாலை வடக்கு
இளவாலை

Ilavalai North
Ilavalai

**Priincipal**
Mr.R.Kanesananthan
SLPS - 1

**Vice Priincipal**
Mr.B.E.Sujeevan
SLTS - 2

# "மெய் கண்ட ஒளி"

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இளவாலைப் பதியிலே அறிவுக்கோயிலாக உயர்ந்தோங்கி நிற்பது மெய்கண்டான் மகா வித்தியாலயம். வள்ளல் ஏழுர் இராசரத்தினம் அவர்களின் தூய சிந்தனையில் வந்துதித்த இவ்வித்தியாலயம் தனது நூறாவது அகவையை நோக்கி வீறுநடை பயிலும் இந்த வேளையில் அமரர் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களுக்கும் இந்தப் பாட சாலைக்கும் இடையிலான பிணைப்பை நோக்குவது சாலப் பொருத்தம் என நினைக்கின்றேன்.

இந்தப் பாடசாலையில் 1974ஆம் ஆண்டு தொடக்கம் 1998ஆம் ஆண்டு வரை ஏறத்தாள கால் நூற்றாண்டு காலம் அதிபராக இருந்து அர்ப்பணிப்போடு அல்லும் பகலும் அயராது உழைத்தார். இவரது துணைவியார் சிவகாமசுந்தரி அவர்கள் தோளோடு தோள் நின்று புலவரின் பணிக்கு வலுச் சேர்த்தார். புலவரின் நிகரற்ற நிர்வாகத்தின் கீழ் பாடசாலையின் பொற்காலம் மலர்ந்தது. இந்தக் கிராமத்து பாடசாலையை அகில இலங்கையும் திரும்பிப்பார்ப்பதற்கு புலவரின் தலைமைத்துவம் வழிவகுத்தது.

"வாழக்கல்மின்" என்ற பாடசாலையின் மகுட வாசகத்துடன் கல்வியிலும் இடைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பாடசாலை சாதனை படைத்தது. அகில இலங்கை நாடகப் போட்டியில் வெற்றி பெற்று மெய்கண்டான் அன்னை பூரிப்படைய வழிவகுத்தார்.

மக்களின் அறிவுப் பசிக்கு விருந்தளிப்பவை நூல்கள் ஆகும். இவர் இதுவரை பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்ய 1979 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் நூலகத்தை அமைத்தார். பாடசாலையின் வளர்ச்சி கண்டு கல்வி திணைக்களத்தினால் இந்தப் பாடசாலை 1980ஆம் ஆண்டில் மகாவித்தியாலயமாக தரமுயர்வு பெற்றது. தொடர்ந்து க.பொ.த. உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் செல்வதற்கு வழியமைத்துக் கொடுத்தார்.

“ஏழூரரைப் போல் எடுத்த கருமத்தை வாழ்வூரச் செய்யும் வலிபடைத்தோர் யாழ் ஊரில் யாரையுமே காணோம்” என்ற பண்டிதர் கணபதிப்பிள்ளையின் கூற்றுக்கு யாருளர் என எண்ணும் போது மெய்கண்டானின் பொற்காலத்தில் ஏழூரரின் கனவை நினைவாக்கிய செயல்வீரன் செல்லத்துரை அதிபர் அவர்கள் தான் மனக்கண்முன் வருகிறார்.

நனவிலும் கனவிலும் புலவர் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சி பற்றியே சிந்தித்தார். இதன் பயனாக பாடசாலையில் பௌதீக வளங்கள் பெருகின. ஞானாமிர்த மண்டபம், ஏழூர் அரங்கு, தாமரைத் தடாகமும் சரஸ்வதி சிலையும் அமைப்பு எனப் பாடசாலை விஸ்தீரனமும் அழகும் பெற்றது.

மாணவர்களின் உடற்றிறன்களை விருத்தி செய்ய உடலுக்கும் உளத்திற்கும் வலுச்சேர்ப்பு விளையாட்டாகும். விளை யாட்டுத் துறையிலும் மாணவர்கள் மேலும் சாதனை படைக்க வேண்டும் என்ற பேரவா புலவரின் மனதில் உந்தவே 1988ஆம் ஆண்டில் நிறுவுனரின் செல்வமகள் திருமதி கிருபாசக்தி தர்மதாசன் அவர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் விளையாட்டு மைதானத்தை சிரமதானம் மூலம் மாணவர்களின் பயன்பாட்டுக்கேற்றதாக மாற்றி மாணவர்கள் கல்வியிலும் விளை யாட்டுத்துறையிலும் சாதனை படைக்கக் காரணகர்த்தாவாகச் சைவப்புலவர் விளங்கினார்.

பாடசாலையில் மாதா பிதா குரு தெய்வ வழிபாட்டினை ஆரம்பித்து வைத்த பெருமை புலவரையே சாரும். பாடசாலையில் மாணவர்களின் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளான ஆங்கிலம், பேச்சுத் திறன் போன்றவற்றை பாடசாலை மட்டத்தில் இருந்து அகில இலங்கை ரீதியில் மாணவர்களை முதலிடம் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து பாடசாலையின் செயற்றிறனை அகில இலங்கையில் பதித்த பெருமைக்குரியவராக புலவர் திகழ்ந்தார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழல் இப்பாடசாலையையும் விட்டுவைக்கவில்லை. பல்வேறு இடப்பெயர்வுகளையும் சந்திக்க நேர்ந்தது. இதன் காரணமான நிலைமைகளிலும் கூட அதிபர் அவர்கள் பாடசாலைச் சொத்தைக் கட்டிக்காத்தார். 1992இல் இடம் பெயர்ந்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் பின்பு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் பின்பு உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் மீண்டும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் இந்தப் பாடசாலை இயங்குவதற்கு மூலச் செயற்பாட்டாளராக விளங்கினார். பாட சாலை பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்த போதிலும் பாட சாலையின் பீடும் பொலிவும் குறையவில்லை. 1997 இல் மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு சொந்த இடத்திற்கு பாடசாலை மீண்டது. இளவாலைக் கிராமம் புத்தெழுச்சி பெற்றது. இப்பெருமைக்குரியவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை என்றால் அது மிகையாகாது.

இன்று பாடசாலை முன்றலில் எழுந்து நின்று அழகு சேர்ப்பது ஸ்தாபகர் ஏழுரர் சிலை, இச்சிலை அமைத்து, நிறுவியவர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி மகிழ்ந்த பெருமை சைவப்புலவர் அவர்களையே சாரும். 1976 இல் ஆரம்பக்கல்வி முன்னோடி வேலைத்திட்டத்தினை ஆரம்பித்ததுடன் 1978 இல் பாடசாலையின் பொன் விழா மலரையும் வெளியிட்டு வைத்தார். அத்துடன் 1995 இல் மெய்யொளி 04 சஞ்சிகையையும் வெளி யிட்டார். 1998 இல் பாடசாலைப் பவள விழாவினைச் சிறப்பாக நடாத்தி அந்த வருடமே அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்ற போதிலும் சைவப்புலவரின் தமிழ், சமய, சமூகப்பணிகள் இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டே இருந்தன.

2018 ஆம் ஆண்டு பாடசாலையில் புலவரின் 80ஆவது அகவை நிறைவு அமுதவிழாவும், அவரின் மனையாள் அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரையின் ஞாபகார்த்தமாக எட்டாம் ஆண்டு நினைவு நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தொகையான பங்கேற்பாளர்களால் சைவப்புலவர் கௌர விக்கப்பட்ட செயற்பாடு அவர் மீது கிராமத்து மக்கள், கல்வி மான்கள் கொண்டுள்ள அன்பையும் புலவரின் செயற்றிறனையும் அறிந்து கொள்ள முடிவதுடன் அவரின் அர்ப்பணிப்பான பணிக்குக் கிடைத்த அங்கீகாரமும் ஆகும்.

அன்னார் இன்று இந்தப்பூவுலகை விட்டு நீத்தாலும் அவரிடம் கற்ற மாணவர்களின் பேச்சிலும், மூச்சிலும் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் வீசும் காற்றிலும் என்றும் நிலைத்திருந்து மெய்யொளி பரப்பிக் கொண்டிருப்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

**திரு. இ. கணேசானந்தன்**
அதிபர்,
யா/இளவாலை மெய்கண்டான்
மகாவித்தியாலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன்"

தக்கோரும் தாழ்விலாச் செல்வரும் வாழும் பேறுபெற்ற ஊர் இளவாலை. இவ்வூரின் மாண்புறு மைந்தனாய்த் தோன்றி, "தெய்வம் மறவார் செய்யுங்கடன் பிழையார்" என்ற பாரதியாரின் அருள் வாக்கிற்கு இலக்கணமாய் வாழ்ந்த சீராளர். செல்வம், இளமாண்பு, சீர்சிறப்பு, நற்கீர்த்தி, கல்வி, அறிவு, கவிதை, தெளிவே வடிவாம் சிவயோகம் இத்தனையும் அவர்தம் வாழ் நாளில் பெற்ற பெரும் பேறுகள் என்பேன்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்."

எனும் வாக்கிற்கு அடையாளமாய் தன்னலமற்ற சேவை யால் உயர்ந்த உத்தமர். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது... பிறந்த காலையும் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது; ஞானமும் கல்வியும் நயந்த காலையும் தானமும் தவமும் தான் செயல் அரிது; தானமும் தவமும் தான் செய்வராயின்; வானவர் நாடு வழி திறந்திடுமே" என்ற ஔவைப் பிராட்டியின் அருள் வாக்கிற்கு ஏற்ப தமக்குக் கிடைத்த அரிய மானிட வாழ்வை இந்த மாநிலம் பயனுற வாழ்ந்து பரமன் தாளே பலமென்று சிக்கெனப் பற்றி நின்றார் நீடு வாழ்ந்தார்.

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, மகிழ்ச்சி ததும்பும் மாசறுவதனம், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், வீரம், விவேகம், கனிவான பேச்சு, மனதிலே தெளிவு, வாக்கினிலே உறுதி முதலான இலட்சணங்களைத் தன் அணிகலன்களாகக் கொண்டு முகத்திலே பொலிவு, அகத்திலே அழகு, பணிவொடு துணிவு, துணிவோடு கனிவு நிறையப்பெற்று, காட்சிக்கு எளிய வராய், நடையிலே ஒழுங்கு, ஆடையிலே அழகு, நெற்றியிலே நீறு அணிந்து எம்மவர்க்கு உதாரண புருசராய் வாழ்ந்து காட்டிய பெருந்தகையாளன்.

"ஒழுக்கமளிப்பது, மனவலிமை தருவது, புத்தியை விரிவாக்கம் செய்வது, ஒருவனைத் தன்வலிமை கொண்டு நிற்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வது ஆகிய தன்மைகளுள்ள கல்வியே நமக்குத் தேவை" என்ற சுவாமி விவேகானந்தரின் அருள் வாக்கை நாம் எய்திட "வாழக்கல்மின்" என்று வழிகாட்டி நின்ற நல்லதிபர். மெய்கண்டான் அன்னையின் மேன்மையெல்லாம் பெருகிடச் சேவையாற்றிய செம்மல்.

பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி. பலரின் வாழ்வு இறப்புடன் முற்றுப்புள்ளி எய்தி விடுகிறது. ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே நந்தா விளக்கனைய நாயகர்களாக, நானிலம் போற்றும் மகான்களாக மறைந்த பின்பும் மதிப்புறு நிலையை எய்துகிறார்கள். அத்தகைய பேறுபெற்ற பெருந்தகை யாக நம் சைவப்புலவர் திகழ்கின்றார்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்"

எனும் வள்ளுவன் வாக்கிற்கு உரைகல்லாய் உழைத்த உத்தமர். ஓய்வுக்கு ஓய்வு கொடுக்காமல் உழைத்து வந்தவர். நல்லாசானாக, நல்லதிபராக, ஆக்க இலக்கியவாதியாக, நடிகனாக, சித்தாந்தியாக எனப் பன்முக ஆளுமையாளனாக பல்வேறு தளங்களில் முகவரி தந்த மூதறிஞராகத் திகழ்ந்தார். இவ்வாறு வாக்கும் வாழ்வும் ஒன்றாகி இலட்சியத்திற்காக வாழ்ந்த நம் சைவப்புலவர் என்றும் மரணிக்கவில்லை. எம்தேச ஆன்மாவில் என்றுமே நீங்காத நினைவுகளாக காலமெல்லாம் நிலைத்திருப்பார். நிறைவாக உலகுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று எவன் ஒருவன் எண்ணுகிறானோ அவனுக்கே கனவு வரும். கனவை மெய்ப்படுத்தக்கூடிய வல்லமை உண்டாகும். நீர்கொண்டு இள வாலை மண்ணில் ஊற்றெடுத்து "நதியொன்று ஓடியது; பயிர் வளர நல நற்றொண்டு மாணவர்க்கு, சைவர்களுக்கு, ஏழைஎளியவர்க்கு என எல்லோர்க்கும் நல்லின்பம் தந்தது. அவ்வாறு பெருக் கெடுத்தோடி கல்வி, சமூக, சமயப் பணியாகப் பேரின்பமளித்த பேராறு நின்று விட்டது. ஆனாலும் அதன் ஊற்று என்றுமே வற்றாத நதியாகி பெருக்கெடுத்தோடும்" என அமைதி கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

த.தயானந்தன் (மாணவன்)
அதிபர்
யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்,
காங்கேசன்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஏழை" மாணவர்களின் "கல்வியை" ஒளிர்வித்த "சூரியன்" மறைந்தது,,,,

"சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் பிறருக்கு ஒளியாய் இருங்கள் நிறைவாய் பெற்றுக் கொண்டீர்கள் நிறைவாய் கொடுங்கள்" எனும் இறை வார்த்தையை தன் வாழ்வாக்கிய பெருந்தகை அமரர் மதிப்பிற்குரிய ஆசான் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் மிக நீண்ட காலம் தலைமை ஆசானாகத் தன்னை அர்ப்பணித்த பெருந் தகை. எமது பங்கிற்கும் இவருக்குமிடையேயான நெருங்கிய தொடர்பாடலும் 1979, 1983 காலப்பகுதிகளில் இருந்தது எனலாம். இளவாலையில் அமையப் பெற்ற பாடசாலைகளில் புதிதாய் சேர்வதற்கான விண்ணப்பக் கட்டணங்கள் இல்லாத வறுமைக் கோட்டில் வாழும் மாணவர்களுக்கு, நான் இருக் கின்றேன் என்னிடம் வாருங்கள் என பல மாணவர்களுக்கு வழிகாட்டியவர். எம்மூரைச் சேர்ந்த பலர் இப்பெருந்தகையின் ஆசிரியத்துவத்தின் தலைமையில் உருவாக்கப்பட்டதை மறந்து விட முடியாது. இவ்வாறு பல ஏழை மாணவர்களின் கல்வியின் அடைக்கலமாய் எப்பாகுபாடுமின்றி எல்லா மாணவர்களின் எதிர் காலத்திற்குமான வழிகாட்டியாய் திகழ்ந்தார். இப்பெருந் தகையின் பணிக்காலத்தில் தான் 1979 ஆண்டு முதல் முறையாக உதைபந்தாட்ட அணியும் உருவாக்கப்பட்டது. மாணவர்களுக்கான எதிர்காலத்தை சாத்தியமாக்கிய பெருந் தகையின் முயற்சியால் 1983இல் அவ்வுதைபந்தாட்ட அணி வெற்றிக் கோப்பையையும் தனதாக்கியது. இவ்வுதைப் பந்தாட்ட அணியில் அன்று எம்மூரைச் சேர்ந்த மூன்று மாணவர்களும் இடம் பெற்றிருந்தனர் என்பது மறக்க முடியாத ஒன்றே. 1986ஆம் ஆண்டு பாடசாலையின் ஆண்டு விழாவில் எம்மூரின் அருளானந்தம் வசந்தா அவர்களிடத்தில் பரதநாட்டியம் ஒன்றை அரங்கேற்றும்படி அழைப்பு விடுத்தார். அவ்வாறே எம்மூரில் இருந்து இப் பாடசாலையில் அரங்கேற்றமும் நிகழ்ந்தது. எல்லா மாணவர்களுக்கும் சமமான கல்விமுறை என்ற தத்துவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பிரதிபலனும் எதிர்பாராமல் எல்லா மாணவர்களையும் ஆதரித்த ஆசான் இவரே. இவரின் பணிக் காலத்தில் கத்தோலிக்க மாணவர்களுக்கான காலை வழிபாட்டிற்காய் எல்லா வசதிகளும் செய்தே கொடுக்கப்பட்டன என்பதையும் நினைவுறுத்த வேண்டும்.

கொடிய யுத்தத்தால் இடம்பெயர்வுகளைச் சந்தித்த போதும் மானிப்பாயில் இயங்கிய பல கல்லூரிகள் மாணவர் களுக்கான புதிய அனுமதிக்கான விண்ணப்பக் கட்டணங்களை அப்போதும் நிறுத்தவில்லை. ஆனாலும் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் மாலைநேர பாடசாலையாகவும். பின்னர் இப்பாடசாலையின் பின்னால் உடுவில் வீதியில், உள்ள காணி ஒன்றில் கொட்டகை அமைத்து எல்லா மாணவர் களுக்குமான கல்விச்சேவையை தொடர வழிவகுத்தார். வறுமை யின் காரணமாக பாடசாலைக்கு பாடசாலை உபகரணங்களோ கொப்பிகளோ கொண்டுவராத மாணவர்களுக்கு, தனது அதி பருக்கான அலுவலகத்தில் அவற்றை வாங்கி வைத்து, அதை மாணவர்களுக்கு இலவசமாக கொடுத்து, மாணவர்களின் மனதளவில் வீழ்ச்சியையும் இல்லாமை என்ற தாழ்வையும் உருவாக்கிவிடக் கூடாது என்பதில் அக்கறையாகவே இருந்தார். பாடசாலை சீரமைப்பில் அதிக அக்கறை கொண்ட ஆசான் மாணவர்களின் கல்வி எழுச்சிக்கான தடையாய் ஏழ்மை இருந்து விடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறையோடே செயற்பட்டார். கல்விக்கான ஏழ்மையின் ஏக்கங்கள் மறுக்கப்பட்ட அத்தனை எளிய உள்ளங்களையும், மதிக்கத்தக்க கல்வியாளர்களாக உருவாக்கினார். எம்மூர் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்த ஆசான் அவர்கள், எம்மூர் மாணவர்களை நெருங்கி வந்து பழகுமளவிற்கு எம்மூரின் மாணவர்களை மரியாதைக்குரிய ஊரின் மாணவர்களாகவே கண்ணோக்கினார். இளவாலை மெய் கண்டான் மகாவித்தியாலயத்தின் இன்றைய எழுச்சியானது இப்பெருந்தகையின் வியர்வையாலும் விழிப்பாலும் உருவானது என்றே கூற வேண்டும் தமிழின் பண்பாட்டுவியலை ஆடையாக அணிந்தவர் அத் தமிழ்தாயின் அமுதத்தை அல்லும் பகலுமாய் அத்தனை மாணவர்களுக்கும் ஊட்டினார் இளவாலை மெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டான் மகாவித்தியாலமானது இவ்வாறான ஓர் இனிய கனியின் மகத்துவத்தை இனியொருதலைமுறை பெற்றிருக்காது என்பதே உண்மை. சில பாடசாலைகளில் மாணவத்தலை வியாய், எம்மூர் வருவதற்கே இரகசியமாய் தடைவிதிக்கும் ஆசானாய் இருக்க தகுதியற்ற சிலருக்கு மத்தியில் "நான் திராட்சைக் கொடி நீங்கள் அதன் கிளைகள்" எனும் இறை வார்த்தைபோல் இளவாலையின் மாபெரும் விருட்சமாய் எல்லோர் மாணவரின் ஆறுதலாய் அவதரித்த ஆசானிற்காய் தலைவணங்குகின்றோம்.

பெருந்தகையிடம் நாம் கண்டதும் கற்றுதுமாய் அறிந்தவற்றையே பதிவிடுகின்றோம். இவற்றையெல்லாம் கடந்து காலாண்டுக்கு மேல் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை விருட்சமாக்கிய பெருந்தகையின் பணி யானது அக்கால மாணவர்களின் மனங்களிலேயே உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலத்தால் என்றும் மறக்கமுடியாத இளவாலையின் கல்விமான் எம்மோடு இன்று இல்லையென்பது அவரிடம் கல்வி பயின்ற மாணவர்களுக்கு பெரும் துயரமே, அவரின் ஆன்மா இறைவனின் நித்திய ஒளியில் என்றென்றும் பிரகாசிக்கக் கடவது.

**திராட்சையூர் விடுப்பு**
**(முகப்புத்தகம்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமது வாழ்க்கையைச் சைவத்துக்கும் தமிழுக்குமுரிய தவமாகவும், செய்தியாகவும் வழங்கியவர்"

நவீன உலகமயச் சூழலில் தமிழும், தமிழரின் செவ்வழி நயனச் சமயமும் எதிர் கொள்ளும் நெருக்கடிக்கு ஈடுகொடுக்கக் கூடியநேர் நிலைவினைப்பாட்டாளராய் (ACTIVIST) விளங்கியவர் தமிழ்நிதி சைவப்புலவர் ஐயா அவர்கள்.

திருமந்திரம் பொதுவாசிப்புக்குரிய நிரல் எழுகையும், பொருள் நிலையில் அருள் நிலை (MYSTIC) ஆழமும் கொண்ட தமிழ்ப்பனுவல். அதில் முன்னிலைப்படுத்தப்பட்ட குறியீடுகள் சைவமெய்யியலின் கட்புலனாகாப் புதிர்களுடன் இணைந்தவை. அதன் ஆழச் சுழிப்பைவிளங்கியும் நேர்க்கோடலான அறிவுச் சுவறலுக்கு தந்த அவரின் கற்பித்தல் முறைமை, சமகால அழுத்தங்களுக்குரிய செவ்வழிப்படுத்தலாக அமைந்தது.

"சைவப்புலவர்" என்ற கற்கையைப் பரீட்சைத் தடத்துக்குள் அடக்கிவிடாது வாழும் வகை சொல்லும் வாழ்வுக் கனியாக மாற்றிய அவரது பணி, பரீட்சை என்பதற்குப் புதிய மந்திரத்தைக் கொடுத்தது. அதன் நீட்சியில் இளைஞர்கள் அக் கற்கை நெறியில் ஈடுபாடு கொள்ளும் செயல் விசை எழுகோலம் பெற்றது.

"சைவப்புலவர்" கற்கை நெறியை மகிழ்நிலை அனுபவமாகவும், கல்விக் கனியாகவும் மாற்றியமை அவரின் நீண்ட நெடிய கற்பித்தல் அனுபவத்தின் எழு செயலாயிற்று.

நவீன உலக விசையோடும், மொழிச் சுவையோடும், தமிழ் கற்றலை ஈடுபடவைக்கும் பழைமைப் பொலிவும் புதுமை முகையவிழ்ப்பும் கொண்ட "தமிழ்ப்பட்டயக்" கற்கை நெறியைக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நிறுவியவேளை, அதன் செயற்பாட்டிலும், மதிப்பீட்டிலும், பின்னூட்டலிலும் எம்மோடு உறுகரமாக நின்று உழைத்தவர் சைவப்புலவர் ஐயா அவர்கள்.

அறிவு, சந்தைப் பொருள் அற்றது. அது விற்பனைப் பொருள் அன்று. தமிழ்க் கல்வியை வழங்குவோர் கைம்மாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதாத பெருவள்ளல்களாக இருக்க வேண்டும் என்ற அவரின் கல்விக் கோட்பாடு அவரால் வழங்கப் பெற்ற செயல் நிறைந்த செய்தியாயிற்று.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் செவ்வியற் கல்விமரபில் வந்த சைவப்புலவர் ஐயா அவர்கள், இலக்கியக்கல்வியைச் சுவையேற்றம் செய்யும் கனிப் பரவலாக்கினார். இலக்கிய ஈடுபாடு மாணவரிடத்துக் கிளர்ந்தெழுந்து செம்பரவல் கொள்ளும் செயற்பாட்டுக்கு அவர் பலம் கொண்ட விசை வடிவினராகத் தொழிற்படலானார்.

அவரிடத்துக் காணப்பெற்ற ஆழ்ந்த இலக்கணப் புலமை, எழுத்திலும் இயம்பலிலும் கூர்ந்த விசையாக மேற்கிளம்பியது. தமிழ்ச் சொற்களை இலக்கண விதிகளுக்கு உட்பட்ட நுண்ணிய ஒலியலகுச் சுவையுடன் கையளித்தல் அவருக்கே உரிய தனித்துவமாகின்றது.

அவரின் எழுத்துப்பணி பன்முக ஆளுமையின் செவ்வழிக் கலை வெளிப்பாடாயிற்று. சமயம், கல்வி, சான்றோர் வரலாறு, இலக்கியச் செழுங்காட்சிகளை நயம்படத் தருதல், ஒழுக்க நெறிபரவல், நடிக்கவும் படிக்கவும் வல்ல நாடக எழுத்துருக்களைத் தருதல், சிறுவர் வாசிப்புக்கான செழுங்கனிகளைத் தருதல், ஆழ்ந்த மெய்யியற் கருத்து வினைப்பாடு முதலாம் பல துறைகளில் நீட்சி கொண்டிருந்தது.

வாசித்தல், எழுதுதல் என்ற இருநிலைப் பரிமாணங்களால் அவரது எழுத்துக்கள் கால விசையோடு நெடுங்காட்சி கொடுத்தது.

கற்றல், தொடர்ந்து கற்றல், வாழ்க்கை முழுவதும் கற்றல் என்ற இடைவிடாத அவரது செயற்பாடுகள், எழுத்துக் கலையிலும் பேச்சுக் கலையிலும் பொருட் பொதிவைச் செறிவு படுத்திநின்றன.

தமது வாழ்க்கையைச் சைவத்துக்கும் தமிழுக்குமுரிய தவமாகவும் செய்தியாகவும் கையளித்தார்.

**பேராசிரியர் சபா. ஜெயராசா**
**வவுனியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழ்ச்சங்கச் சான்றோன்"

சைவமும் தமிழும் ஓங்கத்
தன்னையே தந்த மேதை
வையத்தில் நின் போலுண்டோ
வான்புகழ் கொண்டீர் ஐயா!
தெய்வமே உவந்து நின்னைத்
தன்வசங் கொண்ட தாமோ!
பொய்யிலை நெஞ்சம் நொந்தோம்
பிரிந்தனை எம்மைஏனோ!

பன்னூறு மாணவர்கள்
பயின்றிடக் காலாய் நின்றீர்
தன்வய நற்பண் பாலே
சீரிய ராகச் செய்தீர்
பொன்மனங் கொண்டஐயன்
புலமையின் குன்றுயார்க்கும்
நன்மையே செய்தீர் ஓரார்
நரரிலை நீரோ சீலர்

தலைநகர் தமிழ்ச்சங் கத்தின்
சான்றோரில் ஒருவராகத்
தலைதாங்கி நடத்தி வைத்தீர்
தமிழ்கற்க வழியுஞ் செய்தீர்
பலரின்று தமிழைக் கற்றுப்
புலமையுங் கொள்ள நீரும்
பலமானீர் புலவர் ஐயா
பண்பினில் புதைந்த வேந்தே!
காலனென் செய்கு வானோ
கடவுளின் ஆணை கொண்டான்
ஞாலமே இருண்டாற் போன்று
நாமுளோம் அடங்காச் சோகம்
சீலத்தின் உருவே எங்கள்
செல்லத் துரையே தெய்வம்
மேலுல கேற்றிட் டாலும்
மனங்களில் நிறைந்து வாழ்வீர்!

**– காப்பியக் கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புலவர் செல்லத்துரை அவர்களின் சொல்லையும் செயலையும் பின்பற்றுவோம்"

சில ஆசிரியர்களின் வரலாறு அவர்களின் கல்லூரி காலத்துடன் பூர்த்தியாவதுண்டு. சில ஆசிரியர்களின் வரலாறு அவர்களது மாணவர்களாலும் அந்த மாணவர்களின் பெற்றோ ராலும் காலம் காலமாக நினைவு கூரப்பட்டு வருகிறது.

என்னைப் பொறுத்தளவில் புலவர் செல்லத்துரை அவர் களின் வரலாறும் அவர் ஆற்றிய சேவைகளும், அவரது மாண வர்களாலும் அந்த மாணவர்களின் பெற்றோராலும் மாத்திரமன்றி காலமெல்லாம் தமிழ் மக்களின் மனதில் நிலைத்திருக்கும்.

பலரது நெஞ்சங்களை நெகிழ வைத்த அந்த மாபெரும் மேதையின் மறைவு எல்லோர் மனங்களையும் வருத்தியது ஒருபுறமிருக்க, அவரது அறிவுரைகளும் அவர் வாழ்ந்து காட்டிய வழிமுறைகளும் பலபேரை வாழவைக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை.

அவர் தனது நினைவாற்றலுக்கு மேலாக எல்லா விடயங்களிலும் மிகவும் நிதானம் கவனம் மிக்கவராக கடமையாற்றியதை நான் பலமுறை அவதானித்துள்ளேன். அவர் கற்பித்த கல்லூரியில் படிக்கவில்லை., ஆனாலும் மாணவனாக இருந்த காலமுதல் அவரை அறிந்துள்ளேன் என்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும். கற்பித்தலில் மாத்திரமன்றி கலை இலக்கியங்களிலும் ஆன்மீக விடயங்களிலும் அதிக ஈடுபாடு கொண்டவராக, பல பரிசுகளை பல மாணவர்கள் பெறுவதற்கு மாணவர்களை இயக்கியவராகவும் அவரை அறிந்து கொள்ள முடிகிறது.

பல்துறை ஆளுமை, செயலாற்றல், வினைத்திறன் மிக்க கல்லூரி அதிபர் புலவர் செல்லத்துரை நானறிந்த வகையில் கல்லூரியின் அபிவிருத்திக்கும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960களின் ஆரம்பத்தில் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் ஈழகேசரி பொன்னையா நினைவாக மாணவர்கள் கலந்து கொள்ளும் பேச்சுப் போட்டியில் அரைக்கை சட்டையுடனும் கட்டை காற்சட்டையுடனும் மாணவனாக நான் கலந்து கொண்ட போது சைவப்புலவர் செல்லத்துரை, கவிஞர் அம்பி, தமிழன் பத்திரிகை ஆசிரியர் இ. நாகராஜன் போன்ற வர்கள் மதிய இடைவேளை நேரத்தில் பேச்சுப் போட்டி நடைபெற்ற மண்டபத்துக்கு வெளியே இலக்கியம் மற்றும் நாடகம் தொடர்பாக உரையாடியதை உன்னிப்பாகக் கேட்ட நினைவுகள் இன்னும் என் மனதில் உள்ளது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு புலவர் செல்லத்துரை தயாரித்து கலைக்கழக நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற "ஆதவனே மன்னிப்பாய்" போன்ற நாடகங்களையும் பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளேன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தில் கடமையாற்ற வந்தநாள் முதல் புலவருடன் நெருங்கி ஒன்றிணைந்து பணியாற்றவும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

கொழும்பிலுள்ள பிரபல மகளிர் கல்லூரி ஒன்றில் நாடகப் போட்டிக்கு நடுவர் குழுவில் பணியாற்ற சென்றபொழுது- ஒரு சிலரால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட நாடகங்களை அப்படியே பிரதி பண்ணி மேடை ஏற்றிய பொழுது, நடுவர் குழுவுக்கு நாடகங்களில் பங்கேற்ற மாணவிகளுக்கு வேறு நாடகங்களை பழக்கினால் அவர்களின் ஆற்றுகை மேலும் சிறப்படையும் என்ற எண்ணம் தோன்றியது.

கல்லூரி அதிபர் மற்றும் மாணவிகளுடன் கதைத்து சைவப்புலவர் செல்லத்துரையின் வழிகாட்டலை ஒழுங்கு செய்தேன். புலவர் பல இலக்கிய நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து சிறப்பித்தார். நாடகங்கள் நடிப்பதற்கு மாத்திரமல்லாமல் படிப்பதற்கும் ஏற்றதாக அமைந்ததால் அந்த நாடகங்கள் நூல்வடிவில் வெளியானது.

நல்லதொரு கலை வடிவமான வில்லிசையை தேவை இல்லாத வகையில் சிரிப்பதற்கு மட்டும் பயன்படுத்துவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். அதிலிருந்து வேறுபட்ட வகையில் புலவர் செல்லத்துரை அவர்கள் வில்லிசை மூலம் நல்ல அறிவுரை சொல்லும் கதைகளை இசையுடன் இணைந்த பாடல்கள் வழியாக அமைத்ததும், அவை நூல் வடிவம் பெற்றதும் பலராலும் பாராட்டப்பட்டது.

நூல்களை வாசிக்கவும் பத்திரிகைகளுக்கு எழுதவும் ஒரு வகையில் வழிகாட்டியவர் இரசிகமணி கனக செந்திநாதன் என்று குறிப்பிட்டு இருந்தேன். அப்போது புலவர் கனக செந்திநாதனின் நூற்றாண்டு விழா நடைபெற இருப்பதாகவும் அவருடனான மனப்பதிவுகளை எழுதித் தரும்படி கேட்டார். ''சாதாரண தமிழ் ஆசிரியரின் சாதனைகள்'' என்ற தலைப்பில் இரசிகமணி கனக செந்திநாதன் தொடர்பாக சிறு கட்டுரை ஒன்றை எழுதி கொடுத்தேன். பின்னர் அந்த நூல் வெளியீட்டு விழாவுக்கும் வந்தால் நல்லது என தெரிவித்தார். நான் விழா வுக்கு பார்வையாளனாக போன பொழுது, முக்கிய இடம் வழங்கி அழைத்துச் சென்று மேடையிலும் இடம் தந்து பேசவும் பணித்தார். அன்று எனது எழுத்தும் ரசிகமணி நூற்றாண்டு விழா மலரில் இடம்பெற்ற கட்டுரையும் பலரால் பாராட்டப்பட்டது,

சிலர் நன்றாக பேசுவார்கள்., ஆனால் எழுத வராது. சிலர் எழுதுவார்கள்., மேடையில் ஒலி வாங்கி முன்னால் பெரிதாக பேச வராது. ஆனால் புலவர் செல்லத்துரை எழுதுவார், பேசுவார், நாடகங்களில் அத்தனை பொறுப்புகளை நிறை வேற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

புலவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த் தித்து அவரை நினைவு கூர்ந்து, சொன்னவற்றை செய்த வற்றையும் நாங்கள் தொடர்வது புலவர் செல்லத்துரைக்கு செய்யும் அஞ்சலியாக அமையட்டும்.

**உடுவை. எஸ். தில்லை நடராசா**

**மேனாள் கல்வி அமைச்சு மேலதிகச் செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த புண்ணியவாளன்"

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"

எமது சைவசித்தாந்தப் பேராசான் கலாபூஷணம், சைவப் புலவர் அமரர் செல்லத்துரை அவர்கள் ஆசிரியராக, அதிபராக, சைவசித்தாந்தப் பேராசிரியராக ஆற்றிய சேவைகள் அளப்பரியன. கொழும்பிலுள்ள திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தின் ஆணிவேராக நின்று அதன் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டவர். அங்கு அவர் சைவ சித்தாந்த பேராசிரியராக இருந்தது மட்டுமன்றி, அதன் தலைவருக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் உறுதுணையாக நின்று, அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளார்.

கொழும்பிலிருந்து சேவையாற்றிய அவர், யாழ்ப்பாணத் திற்கு செல்ல வேண்டியேற்பட்ட போது அங்கும் எமது பயிற்சி மையத்தின் இணுவில் கிளையில் தனது பணியை தொடர்ந்தார். அத்தோடு, அங்கு திருமந்திர பணிமன்றம் மூலமாகப் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தி, பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கியும் வந்தார். திருமந்திரவிருந்து மலரையும் திருமந்திர உரையும் இசையும் என்ற ஒலிப்பேழையையும் வெளியிட்டு அவர் ஆற்றிய சேவைகள் சொல்லில் அடங்கா.

ஆண்டு தோறும் எமது பயிற்சி மையம் நடாத்தி வந்த தென்னிந்திய சிவத்தல யாத்திரையில், ஒரு இளைஞன் போல நின்று வழிகாட்டி, எமது யாத்திரைகளை சிறப்பித்தமை எம் நினைவை விட்டு அகலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்களஞ்சியமாகத் திகழ்ந்து தமிழும், சமயமும் தழைக்க எழுதிய நூல்கள் பலவாம். தம் துணைவியார் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் ஒவ்வொரு நூலை வெளியிடுவார். அவை சைவத்திருமுறைகளிலும் சைவசித்தாந்த சாஸ்திரங் களிலும் அவருக்கிருந்த புலமையை வெளிப்படுத்துவனவாக இருக்கும். அவரது இறுதி வெளியீடான மெய்கண்ட சாஸ்திரங்கள் பதின்னான்கும், இவரின் உரையுடன் மூலமும் உரையுமாக திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்து நான்காவது குருமகா சந்நிதானத்தின் அருள் வாழ்த்துடன் வெளிவந்தமை அவரது வெளியீடுகளுக் கெல்லாம் ஒரு மகுடமாக அமைந்ததென்றால் அது மிகையாகாது.

தன்னை முழுமையாகச் சிவப்பணிக்கே அர்ப்பணித்து மறைந்த பெருந்தகையாளன் தனது இல்லற வாழ்க்கையை மிகுந்த நிறைவுடன் வாழ்ந்து தான் பிறந்த மண்ணான இளவாலைக்கு பெருமை தேடித் தந்துள்ளார். தனது இறுதிக்காலத்தில் ஏழாலை மண்ணிற்கும் ஒரு வழிகாட்டியாக வாழ்ந்து வந்துள்ளார். ஏழாலை சாது சங்கம மடத்தில் இடம்பெறும் அவரது புராணபடனச் சிறப்பு இளைஞர்களை புராணபடனம், திருமுறை பாராயணம், தெய்வ வழிபாடு என்பவற்றில் ஊக்குவிக்கும் முறைமை போற்றத்தக்கன வாகும். சைவசித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம், இலக்கிய கலாநிதி, பண்டிதமணி மு.கந்தையா போன்றோர் உலாவித்திரிந்த மண்ணில் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பிக்கொண்டிருந்த செல்லத்துரை ஐயாவின் மறைவு ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும், திருநீற்று பூச்சும், உருத்திராக்க மாலையும் அணிந்து, நாவலர் வழி நின்று, சமயத்திற்கும், தமிழுக்கும் ஆற்றிய சேவை, எம் மனக்கண் விட்டு என்றும் நீங்காது.

அடியேன் ஒவ்வொரு தடவையும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் போது, அன்னாரைச் சந்திக்கத் தவறுவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. அப்போது அவர் கூறும் அருளுரைகள், எப்போதும் இனித்துக் கொண்டே இருக்கும். அவர்தம் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்ளக் கிடைத்தமையை ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன்.

அவரொரு சீவன் முத்தராக வாழ்ந்தார். திருமூலநாயனார் குருபூசை தினத்திலே இறைவனடி சேர்ந்த அன்னாரது ஆத்மா பேரின்பப் பெருவாழ்வு வாழ வேண்டி, ஏழாலை மடாலயத்தில் வீற்றிருக்கும் கருணாகரப்பிள்ளையாரது பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றோம்.

சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
வே. கனகசபாபதி
(திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப்
பயிற்சி மைய பொருளாளர்,
யாழ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "மாசறு மனிதம் – எங்கள் ஆசான்"

தெய்வத் திருவருளால் எங்கள்
மண்ணுக்கு வரமாய்க் கிடைத்த
சைவப்புலவர் - பலருக்கு
உய்யும்வழி சொல்லி நின்ற
உத்தம ஆசிரியர் உண்மையெனும்
மெய்யன்பர் - மேலான
சைவசித்தாந்த வாழ்வியலை
வாழ்ந்து காட்டிய எம்
ஐயா அன்புடையோர் - தாமென்றும்
செய்த பணியெல்லாம் சிறப்பாக்கி
சிவநெறியும் தமிழும் வளர்த்து
பெய்மழையாய் பொழிந்த பெரியோன்...
தமிழை சைவத்தை
தன்னிரு கண்களாக்கி - என்றும்
கமழ்கின்ற மலர்போல
கனிவுமனம் படைத்து - அறிவு
திகழ்கின்ற பெரியாராய் எம்
திசை வெளிக்கச்செய்து - உலகம்
புகழ்கின்றவாறு தன்வாழ்வை
புதுப்பித்த புண்ணியத்தோன்...
சைவசித்தாந்த வகுப்பில் - எமை
கைப்பிடித்து வழிநடத்தி
தெய்வச்சிவன் அருளை - எங்கள்
மெய்யறிவில் மிளிரவைத்து
பொய்யகற்றி பொறுமையாய் - ஞானப்
புண்ணியத்தைப் போதித்து
வையகத்தில் எம்வாழ்வை - என்றும்
வளப்படுத்திய வாண்மையாளன்...
அருமருந்தன்ன ஆயிரமாய்
அனுபவங்கள் சொல்லி - மூலர்
திருமந்திரப் பனுவல்களின்
திரள்விளக்கம் செய்து - நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவெனவே எங்களுக்கு
குறைதீர்த்து வழிகாட்டி - சிவ
பெருமானின் சீரடிகளில்
சேர்ந்துவிட்ட செம்மையாளன்....
பண்பு சொல்லி பயன் சொல்லி
படிப்பித்து வாழ்வியலின் - பல
உண்மை சொல்லி உயர்வுதனை
எண்ணம் செயல் எனவாக்கி
எடுத்த தெல்லாம் சிறப்பாக்கி - இந்த
மண்பெருமை வெளிப்படுத்தி
கண்ணியத்தை கைப்பிடித்து
காலப் பணிகள் சாதித்து - புகழ்
விண்ணயெட்டும் விநயமுடன்
தன்னளவில் அறத்துடனே
தமிழுக்கும் சைவத்துக்கும் - தினம்
எண்ணரிய பணிபுரிந்த இறையாளன்....
நிலவும் வாழ்வியலின் நிறைவான புதல்வர்களாய்
உலகத்தமிழரை ஈர்த்து வென்ற நாவரசன்
பலவிதமாய் பண்புகளில் மிளிரும் மாவிரதன்
கலகலப்பாய் மருகர் பேரருடன் களித்திருந்த கடமையாளன்...
ஆசிரியப் பெருந்தகை செல்லத்துரை ஐயாவின்
ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம் - விழிநீர்ப்
பூச்சொரிந்து புண்ணியராம் அவருக்கு சிவப்பேறுகிட்ட
புவியாளும் சிவன்பாதம் சேவிக்கின்றோம்
காத்திரமான அவரை இழந்துள்ள குடும்பத்தினரின்
கரங்களுக்கு அன்போடு ஆறுதல்சொல்கிறோம் - சிவனை
தோத்திரம் செய்து துதிசெய்து அவன்பாத நீழற்கீழ்
தொண்டாற்றி அவரென்றும் இளைப்பாறட்டும்.
திருச்சிற்றம்பலம்.

பணிவுடன்,
பிரார்த்தனையுடன்,
மாணவன்,
**கவிஞர் கு. வீரா.**
22.10.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒல்லுடை மண்ணின் கலங்கரை விளக்கம்"

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

என்பது திருமூலர் திருமந்திரம். திருமூலர் காட்டிய வழியில் நின்று சிவகதி சேர்ந்தவர் எமது சைவப்புலவர் செல்லத்துரை ஐயா அவர்கள். இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞான பூசை செய்தவர்.

"ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், ஈனம் இல்லாப் பொருள்தனை சிந்தித்தல் நன்றாம் ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை..." (சித்தியார் 275) இதன் வழி நின்று சிவகதி சேர்ந்தார்.

இத்தகைய மகான் எமது கிராமத்தில் பிறந்து வளர்ந்து இளமைக் காலம் தொட்டே தமிழ் மீதும் சைவப் பாரம்பரியத்தின் மீதும் அளப்பிலாப் பற்றுக் கொண்டு வாழ்ந்து எமது கிராமத்தில் ஒரு விடிவெள்ளியாகத் திகழ்ந்தார். அவர் எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும், ஆலய பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் தமது வாழ்நாளையே அர்ப்பணித்த ஒரு பெருமகன்.

எமது ஒல்லுடை ஞானவைரவர் ஆலயத்தில் எம்மை ஆன்மீக வழியில் நின்று வழிகாட்டி சிறந்த பேச்சு வன்மையும், ஆளுமையும் கொண்டவர்களாக வளர்த்து ஆளாக்கினார். இன்று உயர் பதவிகளில் (இலங்கை நிர்வாக சேவையில்) மிளிர்ந்து பணியாற்றி நாட்டுக்கு சேவை ஆற்றுவதற்கு என்னை ஆளாக்கிய பெருமை சைவப்புலவர் அவர்களையே சாரும்.

நெடிய மெல்லிய தோற்றம், சைவ ஆசார ஆடையும் தனது தனித்துவ அடையாளமாகக் கொண்டிருந்த அவர். பல்துறைகளில் மலர்ச்சியும், வளர்ச்சியும் பெற்றமையோடு தனது திறமைகளையும் ஆளுமையையும் மீண்டும் மீண்டும் சமூகத்துக்கே அளிப்பதில் நிகரற்றவராக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பேச்சாற்றல் மிகவும் அற்புதமானது எடுத்துக் கொண்ட தலைப்பிலிருந்து விலகாது முழுமையாகத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதோடு "கேட்பார் பிணிக்கும்" வண்ணம் பேசுவது அவருக்குக் கைவந்த கலையாகும். அதேவேளை விரிவாகவும் விளக்கமாகவும் ஆழ்ந்த கருத்துக்களை தெளிவுபடுத்துவார். இதிகாச புராணங்கள், சைவசித்தாந்தம், திருமுறைகள், திருமந்திரம், தமிழ் இலக்கியம், நவீன படைப்புகள், நாடகம், வில்லிசை என்ற எந்தத்துறையையும் இவர் தனக்குள் ஈர்த்து வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டிருந்தார்.

ஐயா அவர்கள் தமது பதவியினின்றும் ஓய்வு பெற்றபின் சில ஆண்டுகள் தமது குடும்பத்தாருடன் கொழும்பிலே வாழும் காலம் அமைந்தது. "கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு" என்பது வழக்கு. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகளுக்கு மிகப் பெரும் உந்து சக்தியாக விளங்கினார். அறநெறிப் பாடசாலை கல்வித் திட்டம், ஆசிரியர் பயிற்சி, பண்ணிசை வகுப்புகள், சைவசித்தாந்த வகுப்புகள், இந்துக்குருமார் பயிற்சி, அருள்நெறி விழாக்கள், சமய விழாக்கள், கலை விழாக்கள், ஆக்கத்திறன் போட்டி என திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வுகள் அனைத்திற்கும் தனது முழுமையான அர்ப்பணிப்பான பங்களிப்பை நல்கி சிறந்த ஒரு வளவாளராக மிளிர்ந்தார். இந்து சமய ஆய்வு அரங்கு மலர் இந்து கலைக் களஞ்சியம் ஆகியவற்றுக்குச் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அறநெறி மாணவர்களுக்கு தேவையான பாட நூல்களும் சிறந்த எளிமையான மொழிநடையில் இவரால் எழுதித் தரப்பட்டவை நினைவு கூரத்தக்கது. பாடசாலை மாணவர்களுக்கும், அறநெறி மாணவர்களுக்கும் நாடகம், வில்லிசை, கதாப்பிரசங்கம் ஆற்று வதற்குத் தேவையான பிரதி ஆக்கங்களை நூல் வடிவில் ஆக்கித் தந்து மறைந்து போகும் இக்கலைகளை புத்தியில் பெறுவதற்கும் மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கும் உந்துசக்தியாக இவர் விளங்கினார் என்றால் மிகையாகாது. திணைக்களம் வெளியிட்ட பல நூல்களுக்கு பொழிப்புரை எழுதியுள்ளார்.

புலவர் அவர்கள் "கலாபூஷணம்" விருது உட்பட பல விருதுகளையும், கௌரவங்களையும் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். பல அறிஞர் பெருமக்களின் அன்பினையும், பாராட்டினையும் பெற்றவர். அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துமே அன்னாரின் சான்றாண்மைக்கு கிடைத்த வெகுமதிகளாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்" என்கிறது வள்ளுவம். அத்தகைய ஒரு வாழ்வாங்கு வாழ்ந்து நிறைவாழ்வு கண்டவர் புலவர் செல்லத்துரை அவர்கள். அவர் பழகிய சக அறிஞர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், சுற்றம், ஊரவர், சமூகத்தினர், மாணவர்கள் அனைவராலும் அவரது நினைவுகள் என்றுமே போற்றப்படும். நினைத்துப் பார்க்கப்படும்.

எல்லாம் வல்ல இறைவன் திருவடியில் அவர் தம் ஆன்மா சாந்தி பெறுவதாக!

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
முன்னாள் பணிப்பாளர்
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தேவர் குலம் சென்றாயோ”

பேருக்குப் பேராசான்
என்று பலர் இருக்கின்றார்
சீரான செந்தமிழின்
தேன் சுவையை நுகராதார்

பாராண்ட பைந்தமிழின்
பான்மையினை
உன்னைப் போல்
நேராக நெஞ்சுருக
நெகிழ்ந் துரைப்பார்
யாரு மில்லை

கம்பனை இழந்திட்ட
கலைமகளும் நூலிழந்தாள்
உன்னை இழந்து இங்கேநாம்
உயிரோடு இருக்கின்றோம்

திருமந்திரத்தை
தேன் சொட்டத்
தந்திட்டத் திருமகனே
அருமையாய் நாடகங்கள்
அவனியிலேவில்லிசையும்

பெருமையாய்ப் படைத்திட்ட
பேராசான் செல்லத்துரையே
கருவிழிகள் கதறியழ
கலங்கியே நிற்கின்றோம்

“கோ” காத்த கோமகனே
குறைவற்ற பெருநிதியே
“சோ” காக்க வைத்திட்டு
தேவர் குலம் சென்றாயோ!

**தமிழ்மணி கே. வெள்ளைச்சாமி**
**கண்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவத்தொண்டு செய்த ஆளுமை மிக்க சாதனையாளன்"

எனது அன்புக்கும், பாசத்துக்கும், நட்புக்கும் உரிய எனது மைத்துனர் செல்லத்துரை மாஸ்ரர் இப்போது எங்களோடு இல்லை. எங்களது வாழ்வோடு அவர் ஒன்றாகக் கலந்திருந்த நினைவுகள் என்றும் எம் நினைவுகளை விட்டகலாது. எங்களுக்கு பேரிழப்பு, ஆற்றமுடியாத பெருந்துயரம் ஆனாலும் ஒரு மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர் எங்கள் குடும்பத்திற்கு கிடைத்த பெரும் பொக்கிஷம். அவரது புகழை, சிறப்புகளை ஒவ்வொருவரும் கொண்டாடும் போது பார்த்து பார்த்து இறும்பூதெய்துகின்றோம். அவர் எங்கள் குடும்பத்தினரோடு உயிரோடு கலந்து விட்டவர்.

அயலாராக இருந்தபோது நான் எனது இளமைக் காலத் திலிருந்து வாசிகசாலை, கோயில், நாடகமன்றம், பாடசாலை என்று அவரோடு உறவாடி வந்தவன். பின்னர் அவரது தங்கை செல்வமணியை திருமணம் செய்த நாள்முதல் குடும்பத்தோடு ஒன்றிணைந்து அனைத்து நன்மை தீமைகளிலும் எனக்கு தோள் கொடுத்த பெருமகன். எனது குடும்பத்தோடு அவரது உறவு மற்றும் ஒல்லுடை ஞானவைரவர் கோயிலுக்கு அவர் ஆற்றிய தொண்டுகள் என இரண்டு வகை நினைவுகள் என்னோடு கலந்துவிட்டவை.

செல்வமணி இளமைக்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந் தார். தனது தங்கையை மீட்கவேண்டும் என்று அவரெடுத்த அசாத்தியமான முயற்சிகள் செல்வமணியை மீட்க உதவி யதைக் கண்டு நான் ஆச்சரியப் பட்டிருக்கின்றேன். மணி என்று அவர் அழைக்கும் அன்பான அழைப்பு எனது மனைவியின் உயிர் வரை பாயும் அன்பான வார்த்தை. அது இப்போதும் எங்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டு இருக்கின்றது.

திருமணம் முடித்து எங்களுக்கு நான்குபிள்ளைகள் பிறந்தார்கள். பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். அவர் எந்தவொரு நிகழ்வை இலங்கையில் எங்கு நடத்தினாலும் எங்களை அழைத்துக் கொண்டு போவார். எனது ஆண் பிள்ளைகள் இருவரையும், ஏன் பெண் பிள்ளைகளையும் கூட தனது பிள்ளைகளாகவே கருதி வந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இரண்டு ஆண் பிள்ளைகளான இளஞ்செல்வன், இளங்குமரன் ஆகிய இருவரையும் நாங்கள் இழந்து தவித்துத் துவண்டு போனபோது அவரும், அவரது மனைவியுமாக இணைந்து எங்களைத் தாங்கிப்பிடித்து தூக்கி நிறுத்தியவர்கள். அவர்கள் இல்லாவிட்டால் அந்தப் பெருந்துயரிலிருந்து மீண்டிருப் போமா என்பது எங்களுக்கே தெரியவில்லை.

நாங்கள் அதிலிருந்து மீண்டு எங்களது பெண்பிள்ளை களான இசைச்செல்வி, திருச்செல்வி ஆகிய இருவருக்கும் திருமணம் செய்து கொடுத்து, சிறந்த மருமக்கள் இருவரையும் பெற்று பேரப்பிள்ளைகளையும் கண்டு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்ததைக் கண்டு பேரானந்தம் கொண்டவர். தனது இனிய நண்பர்களிடம் எல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தவர்.

அவர் என் மைத்துனராக இருந்தாலும் ஒரு தடவை யேனும் மச்சான் என்று அழைத்ததில்லை. கோயில், வாசிக சாலை அலுவல்களாக யார் சென்று கேட்டாலும்சரி இராசேந் திரம் மாமாவிடம் சொல்லுங்கள் அவர் எல்லாம் செய்து முடிப் பார் என்று சொல்லிவிடுவார். அதனைக் கேட்டு எனது திறமை யில் அவர் வைத்திருந்த அதீத நம்பிக்கையை கண்டு வியந் திருக்கின்றேன். அவரது இறுதிக் காலம் வரை நான் அவருக்கு இராசேந்திரம் மாமாவாகவே இருந்திருக்கின்றேன் என்பதனை நினைக்க நினைக்க என்மனதை என்னால் ஆற்ற முடியவில்லை.

இளங்குமரன் நாடகமன்றத்தின் மிகப் பிரமாண்டமான தயாரிப்பு, வாழ்க்கைப்புயல் என்னும் நாடகமாகும். அந்த நாட கத்தில் எனக்கு நகைச்சுவைவேடம் தந்து என்னை நகைச்சுவை நடிகனாக ஊரரறியச் செய்தவர். எனக்கு இயல்பாகவே இருக்கக் கூடிய நகைச்சுவைப் பேச்சுவழக்கை கவனமாக கவனித்து என்னை உயர்த்தியவர்.

ஒல்லுடை ஞானவைரவர் ஆலயம் என்பது செல்லத்துரை மாஸ்ரருடன் ஒன்றறக் கலந்த கோயிலாகும். எங்களது இளமைக் காலத்தில் கோயிலில் கூட்டுப்பிரார்த்தனையை தொடக்கி நீண்ட காலமாக நிலைபெறச் செய்தவர். இப்போது கூட அது தொடர் கிறது என்றால் அதற்கு அவரே முழுமுதல் காரணம். அதனால் எமதூரில் உள்ள இளைஞர்கள், பெண்கள் அனைவரும் பஞ்ச புராணங்களையும், சிவபுராணத்தையும் பாடக்கூடிய வல்லவர் களாகத் திகழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இளைஞர்களாக இருந்தபோது, இந்தியாவிலிருந்து வந்திருந்த யோகாசன விற்பன்னர் ஒருவரை எமது கோயிலுக்கு அழைத்து வந்து எமதூர் இளைஞர்களுக்கு யோகாசன வகுப்புகள் நடாத்தியவர்.

எமது ஆலயத்தில் பிரசங்கம் என்ற ஒன்றைத் தொடக்கி வைத்தவரும் அவரே. கோயிலின் திருவிழாக் காலங்களில், தானே பிரசங்கங்களை நிகழ்த்தியுள்ளார். கணீர் என்ற குரலில் அவரது பிரசங்கங்கள் எல்லோர் மனதிலும் ஆழப்பதிந்து விடும். பத்து திருவிழாக்களிலும் பத்து சைவப் பெரியார்களை அழைத்து பிரசங்கம் செய்யவிடுவார். அதனால் யாழ்குடாநாட்டில் எமது ஆலயத்தின் பெருமை பரவியதற்கு காரணமாக இருந்தார். திருவிழாக்காலங்களில் ஒலி பெருக்கியில் ஆபாசப் பாடல்கள் எதுவும் ஒலிபரப்பக்கூடாது என்பதனை கண்டிப்பாக நடைமுறைப் படுத்தியவர்.

பத்து திருவிழாக்களிலும் ஒன்பது திருவிழாக்களுக்கும் உபயகாரர் உண்டு. ஆனால் எமதூரைச் சேர்ந்த இளைஞர் களுக்கு ஒரு திருவிழா கொடுக்க வேண்டும் என்ற ஆலோ சனையை கொண்டு வந்து நடைமுறைப்படுத்தியவர்.

அவரது இழப்பு என்பது என்னைத் தனிமரமாக்கியுள்ளது. எனது குடும்பத்தினருக்கு பெரு இடைவெளியை ஏற்படுத்தி யுள்ளது. எமது ஊருக்கு பேரிழப்பைத் தந்துள்ளது. சைவப் புலவராக வாழ்ந்து அவர் சைவத்துக்கு செய்த தொண்டுகள் கணக்கிலடங்கா. அவரது ஆன்மா இறைபதம் அடையும் என்று ஆறுதல் கொள்கிறோம்.

**க. இராசேந்திரம் குடும்பத்தினர்**
**(மைத்துனர்)**
**காடிவளை,**
**இளவாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பன்முக ஆளுமைப் பண்பாளர்"

"தோன்றிற் புகழொடு தோன்றுக" எனும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க, பன்முக ஆளுமையும் திறமையும் ஒருசேரப்பெற்று நன்மதிப்புடன் வாழ்ந்து தமிழுக்கும், சைவத்துக்கும் நற் செயலாற்றி தான் சார்ந்த உறவுகளுக்கும், பிறந்த ஊருக்கும், புகுந்த ஊருக்கும் பெருமை சேர்த்தது மட்டுமன்றிக் கடமை நிமித்தம் வாழ்ந்த மன்னார் மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களிலும், இடப்பெயர்வால் வாழ்ந்த இடங்களிலும் பெருமகனாக சமூகத்திற்குச் சேவையாற்றி என்றென்றும் எல்லோரது இதயத்திலும் நீங்கா இடம் பிடித்துள்ள சிறந்த பண்பாளர் எங்களுக்கு தாய் மாமனாராக வாய்க்கப் பெற்றமை நாங்கள் செய்த பூர்வ புண்ணியமாகவே எண்ணுகின்றோம்.

அத்துடன் பலரும் தங்களது பல்வேறு அனுபவங்களை இங்கே பதிவு செய்துள்ள இச்சமயத்தில், நான் இளவாலையில் இவரின் குடும்பத்துடன் வாழ்ந்த காலத்தில் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் பாலர் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை கல்விகற்ற போது என்னைச் சிறந்த மாணவனாக, நல்ல நடிகனாக, மேடைப் பேச்சாளனாக, பட்டிமன்றவாதியாக, வில்லிசைக் கலைஞனாக, முறையாக பயின்ற காவடியாட்டக் கலைஞனாக, சிறந்த சாரணராக இவரால் நெறிபடுத்தப்பட்டதனால் தான் இன்று இவரது பெருமைக்குரிய மருமகனாக உள்ளேன் என்பதை மறுக்க முடியாது.

மேலும் நல்லாசானாக, நல்லதிபராக, ஆயகலைகளையும் கற்பித்த குருவாக, எனது தந்தையை இழந்தபின் தந்தையாக, தாயின் இழப்பிற்குபின் தாயுமானவராக எங்கள் குடும்பத்தை நல்வழிப்படுத்திய பெருந்தகை எங்களுக்கு மட்டும் உதாரண புருஷராக வாழவில்லை அவருடன் பழகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் பெருங் கொடையாகத் தனது அன்பையும் ஆளுமைப் பண்புகளையும் வாரி வழங்கிய பெருமகனாவார்.

விஷேடமாக இவரது நெறியாள்கையில் "கர்வபங்கம்" எனும் நாடகத்தில் நடித்தமையால் 1977ம் ஆண்டில் அகில இலங்கை நாடகப் போட்டியில் பரிசு பெற்றதுடன் சிறந்த நடிகருக்கான விருது எனக்குக் கிடைத்தமை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கும் அவரது கலைத் திறனுக்கும் கிடைத்த வாழ்நாள் சாதனையாகும். அது மட்டு மன்றி மைந்தன் நாவரசனையும் என்னையும், கலை மேதை அளவையூர் அண்ணாவியார் பொன்னுச்சாமி அவர்களிடம் முறையாகக் காவடியாட்டத்தைப் பயில வைத்து, 1975ம் ஆண்டு இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் ஆலயத் திருவிழாவில் அரங்கேற்றி அக மகிழ்ந்தமை இன்றும் பசுமையான நினைவு களாக இருக்கின்றன.

மேலும் எங்களைப் போன்று பல மாணவர்களின் மேடைக் கூச்சத்தைப் பாடசாலைக் காலத்திலேயே அகற்றிய துடன் மட்டுமல்லாது தனது கலைப் பயணத்தில் எல்லோ ரையும் இணைத்துக் கொண்டு களப்பயிற்சியும் வழங்கினார். விஷேடமாக தெல்லிப்பழைக்கலை இலக்கியக் களத்தில் அவரது தலைமையின் கீழ் அவருடன் இணைந்து பொருளாள ராகச் சேவையாற்றிய காலத்திலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தில் அவரது ஏற்பாட்டால் நடைபெற்ற சகல நிகழ்வுகளிலும் வரவேற்புரை அல்லது நிகழ்ச்சித் தொகுப்புரை அல்லது நன்றியுரை என ஏதாவது ஒரு வகிபாகத்தை எனக்கு வழங்கி களப் பயிற்சி வழங்கியமையை என்றுமே என்னால் மறக்க முடியாது.

சுருங்கக்கூறின் நேர்கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, புன்னகைபூத்த முகம், வெள்ளை மனம், வெள்ளை யுடை தரித்த சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தின் அடையாளம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் பழகியவர்களது உள்ளங்கவர் கள்வன், ஆளுமையின் வெளிப்பாடு என்பவற்றின் உருவே வடிவானவர். இவரது சிறப்புக்கும் பெருமைக்கும் துணையாக நின்ற இவரது துணைவியார் எங்களது மாமியார் திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களையும் இத்தருணத்தில் நன்றி அறிதலுடன் நினைவு கூறுகின்றேன்.

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சாண்றாண்மைக்கு
ஆழி எனப்படுவார்"

எனும் குறளிற்கு ஏற்றாற் போல் வாழ்ந்து காட்டிய பெருமைக்கும் அன்பிற்கும் உரிய எங்கள் தாய்மாமனார் அவர்கள் விண்ணுலகம் சென்றாலும் அங்கிருந்தும் என்றென்றும் எங்களைச் சரியான வழியில் வழிநடத்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**S.U. சந்திரகுமாரன்,**
மேலதிகபணிப்பாளர் நாயகம்,
திட்டப் பணிப்பாளர் (e - GP),
பொதுத் திறைசேரி,
நிதி அமைச்சு,
கொழும்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாக்கும் வாழ்வுமாய்"

வான் மழைபொழியும் வரத்தால் வயல் சூழ்
மேன்மை இளவாலை பதிதனில் இனிது வாழ்
தேன் நிகர் மொழியேத்தும் தெள்ளிய
சான்றோன் சைவப்புலவர் செல்லத்துரை

காலத்தின் கோலத்தால் சிறுவயதில் தந்தையை இழந்தும்
சாலவே தாய் பத்தினிப் பிள்ளையுடன் பசு பயிர் வளர்த்து
ஞாலம் புகழ் நற்சகோதரிகள் மூவருடன்
சீலமாய் வாழ்ந்து உயர்ந்தனன் சிவப் பொலிவாய்

மெய்கண்டான் மாணவனாய் அறிவு கூட்டி
செய்ய பயன்மிகு திறத்தால் அதிபராகி
ஐயன் செல்லத்துரை சைவப்புலவர்க்கு தனிஅடையாளமாகி
பொய்மை கடிந்து போதித்தனன் ஞாலத் தோர்க்கு

திருவே எங்கும் மிகும் இணுவை பதிதனில்
அரும்மங்கை சிவகாமசுந்தரியை மணந்து - இன்பம்
தரு இல்லறம் துய்த்து தன்சோதரி செல்வநாயகியை
உருவே சமூகபணி சண்முகலிங்கத்தின் துணைவியாக்கி
இருதிறத்து உறவானீர் எந் தனக்கு நன்றே

நிறைவான வாழ்வும் வாக்குமாய் - சைவ
துறை தோய்ந்த செல்லத்துரையெனும் தூயனாய்
முறையான சைவசித்தாந்த தெளிவின் தேறலாய்
இறைசிவன் பதம் நாளும் ஏத்தும் ஏந்தலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழின் சுவையும் சைவத்திறனும் ஒருங்கே
சந்தநிறை மொழிவும் தனக்கே உரித்தான குரலும்
சிந்தனை உயர்வும் செப்பரிய சேவை சிறப்பும்
வந்தனர் உம்வழி சான்றோர் பலர் சகத்தில்

ஒளிரும் நீறும் வெள்ளுடையும் எம் மனக்கண் துய்க்க
மிளிரும் இருமைந்தரும் உடன் பிறப்புக்களும் உறவுகளும்
விழிநீர் சொரிய விண்ணுலகம் எய்தினிரே - எம்தனக்கு
வழிதெரியவில்லை மனவாட்டம் தீர்ப்பதற்கு
ஏங்குகிறோம் நாளும்

எல்லையிலா புகழ் மேவும் மேதா விலாசமே
தில்லைசிவன் பாதமதில் சிவப்பேறு பெற்றீரே.

**சைவப்புலவர் சண்முகலிங்கம் முகுந்தன்**
NDT, BA, MA, M.Ed.
**ஆசிரியர். யா/யூனியன் கல்லூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் வளர்த்த செல்லத்துரை என்னும் சைவப்புலவன்"

எனது அன்புக்குரிய அண்ணை செல்லத்துரை அவர்கள் வாழ்ந்த காலம் பொற்காலம். அவரோடு நாமும் வாழ்ந்தோம் என்பது நமக்குப் பெருமை. நான் அவரது ஒன்றுவிட்ட சகோதரனாக இருந்தும் தனது சொந்தத் தம்பிபோல வாழ்ந்தது, என்னால் மறக்கமுடியவில்லை. ஆசானாக, குருவாக, சகோதரனாக, நல்ல நண்பனாக, அண்ணனாக என்னோடு வாழ்ந்தவர் அண்ணை. என்னை ஒரு எழுத்தாளனாக, மேடைப் பேச்சாளனாக உருவாக் கியதில் அவருக்கு பெரும் பங்குண்டு. சைவப்புலவராக பட்டம் பெற்றபின்பு அயல் ஊர்களில் உள்ள அனைத்துக் கோயில் களிலும் பிரசங்கம் செய்ய அழைத்தார்கள். அப்போதெல்லாம் ஈருருளியில் அவரை கூட்டிச் சென்ற காலங்கள் மறக்க முடியா தவை.

தனது இறுதிக் காலத்தில் தொலைபேசி மூலம் மணித் தியாலக் கணக்கில் பல விடையங்களையும் என்னோடு பகிர்ந்து கொண்டது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. அதுவும் நான் தனித்துப் போனேன் என்பதனை உணர்ந்து வாரம் தோறும் இறுதி நாட்கள் வரை தொலைபேசியில் உரையாடியதை நினைத்து நினைத்து நெகிழ்ந்து போகின்றேன். அந்தத் தொலைபேசி அழைப்பு இட்டு நிரப்பமுடியாத வெற்றிடமாகிப் போய்விட்டது.

காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையம், ஒல்லுடை ஞானவைரவர் கோயில், இளங்குமரன் கலாமன்றம், மெய்கண்டான் வித்தியாலயம் என அவருக்கு ஊருக்குள் பல முகங்கள் உண்டு. ஆனாலும் வாசிகசாலையிலும், நாடகமன்றத்திலும் அவரது செயற்பாடுகளை எனது நினைவலைகளிலிருந்து எழுத விழை கின்றேன்.

ஒரு மனிதனின் பன்முக ஆளுமை என்பது அவனது இளமைக் காலத்தில் அவனது பிறந்த ஊரிலிருந்தே ஆரம்பிக் கின்றது. தான் பிறந்த ஊரில் உள்ள ஆலயம், சனசமூக நிலையம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, ஊர்மக்கள், உறவுகள் என்று பல்வகைப்பட்ட தளங்கள் அவரது ஆளுமையை வெளிக் கொண்டுவரும் களங் களாக அமைந்து விடுகின்றன.

இவ்வாறு பரிணமித்தவர்கள் பிற்காலத்தில் பெருந்தலைவர் களாகவும், சமூகத்தில் மதிக்கப்படுபவர்களாகவும், ஊர்மக்களால் போற்றப்படுபவர்களாகவும் ஆகியுள்ளதை வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகிறது. இவற்றிலிருந்து ஒதுங்கி இருந்து விட்டு பிற் காலத்தில் தனது ஆளுமையை வெளிப்படுத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமில்லாத ஒன்றாகவே போய்விடுகிறது.

அந்த வகையில் மேற்குறிப்பிட்ட அத்தனை தளங்களிலும் தனது ஆளுமைகளால் குன்றின் விளக்காய் திகழ்ந்தவர் கலா பூஷணம் சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள்.

தனது இளமைக்காலத்தில் இவரது ஆளுமை என்பது காடிவளையில் உள்ள வாசிகசாலையிலேயே தொடங்கியது எனலாம்.

திரு. சு. செல்லத்துரை தலைவராகவும், திரு. சி. வாம தேவன் செயலாளராகவும், திரு. வ. சுப்பிரமணியம் பொருளாள ராகவும் காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் முதலாவது நிர்வாகசபை உருவாக்கப்பட்டது. க.இ.வேலுப்பிள்ளை, ஆனந்தத்துரை, மூ.கந்தையா ஆகியோர் போஷகர்களாக இருந்து வாசிகசாலையை ஆரம்பித்து வழிநடத்தினர்.

நீண்டகாலம் தலைவராக இருந்த செல்லத்துரை அவர்கள் பின்னர் போஷகராக இருந்து என்போன்ற அடுத்த தலைமுறை யினருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

வாசிப்பதன் பயன், நிதிப் பயன்பாட்டுமுறை, நிர்வாக ஒழுங் குகள், சபைகளில் பேசும் முறை, கூட்டங்களின் அறிக்கைகளை தயாரிக்கும் முறை, தானும் வாழ்ந்து மற்றவர்களுக்காகவும் வாழும் வாழ்வியல் ஒழுங்கு, போட்டிகள், தூய்மையான நட்பு வெளிப்பாடு, ஒற்றுமை, நிறுவன மயப்படுதல் போன்ற பல விடையங்களை எமக்குக் கற்றுத் தந்தவர். அன்றைய நாட்களில் யாழ் சனசமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களின் சமாசம் நடாத்தும் போட்டிகளில் வில்லுப்பாட்டு, நாடகங்கள், கிராமியப் பாடல்களை பழக்கித் தந்து பரிசுகள் வாங்க வைத்திருக்கிறார். "நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே" என்ற ஔவையின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்.

அடுத்து இவரின் ஆளுமை வெளிப்படுத்தப்பட்ட களம் இளவாலை இளங்குமரன் கலாமன்றம் என்னும் நாடக மன்றமாகும். இந்து இளைஞர் சனசமூக நிலைய இளைஞர்களின் நடிப்புத் திறனை, கலையாற்றலை வெளிக்கொணர உருவாக்கப்பட்டதே இந்நாடக மன்றமாகும். இதன் ஸ்தாபகராகத் திகழ்ந்த செல்லத் துரை அவர்கள் பல வெற்றிபெற்ற நாடகங்களின் ஆசிரியராக, இயக்குனராக, நடிகராகத் திகழ்ந்து பல நடிகர்களை வெளிக் கொண்டு வந்தார். உரை நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், தாளலய நாடகம், சிந்துநடைக்கூத்து, தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்ற கலைப் படைப்புகளை ஆக்கியுள்ளார்.

வாழ்க்கைப் புயல், மண்ணாசை, ஆதவனே மன்னிப்பாய், கண்ணீர், மெய்ப்பொருள் போன்ற நாடகங்களை அவர் இயக்கி வெற்றி கண்டார். இந்த நாடகங்கள் காலத்தால் அழியாதவை. ஆதவனே மன்னிப்பாய் என்ற நாடகம் இவருக்குப் புகழைத் தேடித் தந்தது. காரைநகர் சிவன் கோவிலில் நடந்த மணியோசை என்ற நாடகத்தில் பாரதியாராக நடித்திருக்கிறார். உடுவிலில் நடந்த நாடகப் போட்டி ஒன்றில் மெய்ப்பொருள் நாடகத்தில் கிழப்பிராமணராக நடித்து சிறப்புப் பெற்றவர்.

மண்ணாசை என்னும் ஓரங்க நாடகம் பார்ப்பவர்களுக்கு மிகுந்த விறுவிறுப்பை ஏற்படுத்திய நாடகம். யாழ்ப்பாணத்தில் பல மேடைகளைக் கண்டது. பல பரிசுகளை பெற்றது. இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது. சி. வாமதேவன், கா. தம்பு, சூரிய குமார் என்ற நடிகர்களின் சிறந்த நடிப்பாற்றலை வெளிக் கொணர்ந்த பெருமை இவருக்கே உண்டு. எம்.ஜி.ஆர். வீரப்பாவின் சினிமாவாள் சண்டையை நாடக மேடையில் சிறப்பாகக் கொண்டு வந்து எமது கிராமத்து மக்களை ஆச்சரியப்பட வைத்தவர். ஓரங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் என்றால் எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது மண்ணாசை.

இவரது வாழ்க்கைப்புயல் என்ற நாடகம் எமக்கு பல விடையங்களை கற்றுத் தந்தது. மூன்று மணிநேரம் கொண்ட இந் நாடகத்தில் வாமதேவன், தம்பு அவர்களுடன் லங்கா, தருமராச சிங்கம் போன்றோரின் நடிப்புதிறன் வெளிப்பட்டது. இந்நாடகத்தின் மூலம் க. இராசேந்திரம் சிறந்த நகைச்சுவை நடிகராக அறியப் பட்டார். லங்கா அவர்களின் கலைத்திறன் இந்நாடகத்தின் மேடையமைப்பு மூலம் எல்லோராலும் பாராட்டப்பட்டதோடு, அவரது ஓவியத் திறமையை வெளிக்கொணர்ந்தது. இளவாலை மெய் கண்டான் வித்தியாலயத்தில் அரங்கு நிறைந்த காட்சியாக பலத்த கைதட்டல்களுக்கு மத்தியில் மேடையேறியது வாழ்க்கைப்புயல் என்னும் நாடகம்.

இந்நாடகங்களின் மூலம் தம்பு அவர்கள் சிறந்த ஒப்பனைக் கலைஞராக அறியப்பட்டார். பின்நாட்களில் ஜெயந்தி புரடக்ஷ்ன் என்ற பெயரில் நாடக திரைச்சீலைகளும், ஒப்பனையும் என எல் லோராலும் அறியப்பட்டார். இலங்கைநாதன் (லங்கா), தருமராச சிங்கம் (தருமர்) ஆகிய இருவரும் அன்று கதாநாயகன், கதாநாயகி யாக மேடையில் தோன்றி ஓ வெண்ணிலா ஓ வெண்ணிலா என்ற பாடலுக்கு வாழ்க்கைப்புயல் நாடகத்தில் நடனமாடியது பெரும் வரவேற்பைப் பெற்றது. ஒவ்வொருவரினதும் திறமைகளை அறிந்து அதனை வெளிக்கொணர்வதில் வல்லவராக செல்லத்துரை அவர் கள் திகழ்ந்தார்.

பின்னாட்களில் வாசிகசாலையினூடாக யாருக்குச் சொந்தம் என்ற நாடகத்தை எழுதி இயக்கினார். அது பல போட்டிகளில் பரிசுகளை வென்றது.

சிந்துநடைக்கூத்தான மாங்கனி பெற்ற பிள்ளை, ஐந்திணை என்ற நாட்டியநாடகம், இரண்டாம் சுயம்வரம் என்ற இசைநாடகம் போன்றவை புகழ் பெற்றவை.

அவருக்கு சிலப்பதிகாரத்தின் மீது நிறைந்த ஈடுபாடு இருந்தது. அது தமிழர்களின் ஐம்பெருங் காப்பியங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையானது. அதனால் அதனை மேன்மைப்படுத்த வேண்டும் என்று எப்போதும் கூறுவார். சிலப்பதிகாரத்திலிருந்து கோவலன் பிரிவு, கண்ணகி வழக்குரை, கற்புக்கனல், பத்தினித் தெய்வம் என்ற நான்கு நாடகங்களை எழுதி, இயக்கி, மேடையேற்றியுள்ளார். இந்த நான்கு நாடகங்களையும் வில்லிசையாக எழுதியுமுள்ளார்.

அவர் ஆசிரியர், அதிபராக இருந்த காலத்தில் உரை நாடகங்களையும், சிந்துநடைக் கூத்துக்களையும், இசை நாடகங் களையும், நாட்டிய நாடகங்களையும், தாளலய நாடகங்களையும், வில்லிசைகளையும் எழுதி இயக்கியும் தமிழுக்கும், சைவத்துக்கும் தொண்டாற்றிய செல்லத்துரை அவர்களின் செயற்பாடு அனை வருக்கும் ஒரு வழிகாட்டியாகும்.

**கலாபூஷணம் அருந்தவராஜா**
**(மேழிக்குமரன்)**
**இளங்குமரன் கலாமன்றம்,**
**காடிவனை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தொண்டு நிறுவனங்களின் தீபஒளி”

எமது மதிப்பிற்குரிய செல்லத்துரை அவர்கள் தமிழ்த் தாயின் தவப்புதல்வர் ஆவார். தமிழும் சைவமும் எவ்வாறு ஒன்றை ஒன்று பிரிக்க முடியாததோ, அவ்வாறே இவ்விரண்டி லிருந்தும் சைவப்புலவர் செல்லத்துரை அவர்களை எக்காலமும் எவராலும் பிரிக்கமுடியாத அளவிற்கு அவரது சைவத் தமிழ் பற்று இருந்தது. இவரின் பேச்சும் மூச்சும், நடை உடையும், தமிழின் சைவத்தின் பிரதிபலிப்பாகவே இருந்தது. தெளிவு நிறைந்த ஆற்றல், பணிபுரியும் தன்மை, தமிழ் சைவப்பற்று என்பன யாவும் நிறைந்த பெருமகனாக விளங்கியவர்.

அன்னாரின் வாழ்க்கைப் பயணத்திலே இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஓய்வுபெற்ற அதிபராக விளங்கி மிகச் சிறந்த சேவையினைச் சமூகத்திற்கு வழங்கியதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கை நெறியின் வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். ஈழத்திலே சைவசித்தாந்தத்தை வாழ்வியல் நெறியாகக் கொண்டு அதனை வளர்த்து வந்தவர்களுள் சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் தனக்கென ஓரிடத்தினை வகித்து வந்தவர். அத்துடன் நின்றுவிடாது ஈழத்தின் பல்வேறு சமூகசமய தொண்டு நிறுவனங்களிலும் அவரது அர்ப்பணிப்பான சேவைகள் தொடர்ந்தன. இவ்வகையிலே எடுத்துக்காட்டாக சிலவற்றை இங்கு சுட்டிக்காட்ட முடிகின்றது.

திருமந்திரப்பணி மன்றத்தின் தலைவராக, சுகவாழ்க் கைப் பேரவைத் தலைவராக, திருவாவடுதுறை சைவ சித்தாந்த, சைவத்திருமுறை பயிற்சி மையத்தின் விரிவுரையாளராக, தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் தலைவராக விளங்கியதுடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் புலமைக்குழு ஆலோசகராகவும் நிர்வாக சபை உறுப்பினராகவும் செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மற்றும் சைவப்புலமைமிக்க செல்லத்துரை அவர்கள் 83 வருடங்கள் வாழ்ந்து அரியபல மகத்தான சேவை களை எமது சமூகத்திற்கு வழங்கியமை கால வெள்ளத்தால் என்றும் அழியாது. சிறந்தகுடும்பத் தலைவனுக்குரிய ஒழுகவாறு களாகிய அன்பு, எளிமை, அடக்கம், பிறர்நலம் பேணுதல் ஆகியகுணவியல்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய திரு. செல்லத்துரை அவர்கள் அனைவரதும் அன்புக்கும் பாத்திரமானார். இவ்வகையில் சிறந்த வாழ்க்கை வாழ்ந்து அனைவரதும் அன்புக்குரியவராய் விளங்கிய திரு. செல்லத்துரை அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லை. தமிழ் உணர்வும், சைவசித்தாந்தப் புலமையும் நிரம்பியபெரியார் செல்லத்துரை அவர்கள் தமது சுயநலத்தினைப் பொருட்படுத்தாது பொதுநலம் பேணும் தகைமையாளராக விளங்கியவர்.

**"அரியவற்றில் எல்லாம் அரிதேபெரியாரைப்**
**பேணிதமராகக் கொளல்"**

என்பது வள்ளுவர் வாக்கு. இந்த அடிப்படையில் அரியபல சமய சமூக சேவைகள் புரிந்த ஒரு பெரியாரை நாம் என்றென்றும் மனதில் நிறுத்தி வாழவேண்டும்.

**தேடிச் சோறு நிதந்தின்று - பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்**
**வாடித் துன்பமிக உழன்று - பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து - நரை**
**கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்**
**கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல**
**வேடிக்கை மனிதரைப் போலே - நான்**
**வீழ்வே னென்று நினைத்தாயோ?**

என்ற பாரதியாரின் கருத்துக்கு இலக்காக வாழ்ந்துதன் காலத்தை, வாழ்வை, மகத்தான பணிகளை முடித்த ஒருவரை நாம் என்றென்றும் மறவாது வாழ்வோமாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் செல்லத்துரை அவர்கள் இன்று எம்மிடையே இல்லாது விடினும் நம்மைச் சார்ந்தோரிடையே அவர் ஏற்படுத்திய அன்புணர்வு, அவர்களது உள்ளங்களில் அணையாத தீபமாக ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அதுவே அவரை இழந்து தவிக்கும் புதல்வர்களுக்கும் உறவினர் களுக்கும் அன்புள்ளங்களுக்கும் உரியஆறுதல் ஆகும்.


ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

**கலாநிதி திருமதி. விக்னேஸ்வரி பவனேசன்**
தலைவர்,
இந்துக்கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்தத் துறை,
இணைப்பாளர்,
உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் சைவசித்தாந்த முதுகலைமாணி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "வறிய மாணவரை உயர வைத்தவர்"

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

சிவபூமியாம் மன்னார் மாவட்டத்தில் இந்து மாணவர்கள் ஏனைய பாடசாலைகளில் பட்ட துன்பங்களையும் அடக்கு முறைகளையும் கவனத்தில் கொண்டு தீர்க்க தரிசனமாக குமரையா முத்துக்குமாரு எனும் நற்கொடையாளரின் காணியில் 14.05.1959 இல் அமைக்கப்பட்டதே சித்திவிநாயகர் இந்துக் கல்லுரி ஆகும். இது பிற்காலத்தில் பெருவிருட்சமாக பரிணமிப் பதற்கு வித்திட்டவர்களில் சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை அவர்களும் ஒருவராவர். 1960ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கு நியமனம் பெற்ற இவர் அளப்பரிய தொண்டாற்றியுள்ளார். அருகாமையிலுள்ள சித்திவிநாயகர் ஆலயத்தின் மடத்தில் தங்கியிருந்து வறிய, தூர இடங்களிலிருந்து இக்கல்லூரிக்கு வந்து சேரும் மாணவர்களை அதில் தன்னுடன் தங்கவைத்து உணவளித்து பாதுகாத்து இரவு வேளைகளில் இலவசமாக கற்பித்தும் வந்தார். முதன்முதலாக இக்கல்லூரியில் சாரணர் இயக்கத்தினை ஆரம்பித்து திறம்பட நடாத்தியவர். க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு சைவசமயமும், தமிழ் இலக்கியமும் கற்பித்தவர்.

சைவமும் தமிழும் இரண்டறக் கலந்தவை. மாணவர் களை செல்லமாக அழைக்கும் இந்த செல்லத்துரை அவர்கள் இந்துக் கல்லூரியுடன் இரண்டறக் கலந்தே பணியாற்றினார். அந்த சந்தர்ப்பத்திலேதான் க.பொ.த. சாதாரணதர மாணவனாக இக்கல்லூரியில் சேர்ந்தேன். எனக்கும் பல தடவைகள் மதிய வேளையில் உணவளித்துள்ளார். மேலும் இவர் சைவப்புலவராக இருந்தமையினால் இவரது புலமையை எங்களது சைவ, தமிழ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய பாடங்களை சிறப்பாக பல உதாரணங்களுடன் விளக்கிக் கூறுவதில் சாணக்கியராக இருந்தார். நாடகத்துறை யிலும் அவரது கைங்கரியம் கொடிகட்டிப் பறந்தது எனலாம். சிறந்த பல சமூக, சரித்திர நாடகங்களை மாணவர்களுக்கு பயிற்றுவித்து புகழ் பெற்றவர். மாணவர்களின் ஒழுக்க விடயங் களிலும் அக்கறை காட்டியவர். அந்த வகையில் வல்லினம் மெல்லினம் ளகர, ழகர எழுத்துக்கள் எந்தெந்த இடங்களில் வருமென்ற தெளிவான விளக்கங்கள் இன்றும் எமக்கு உதவுகின்றன.

நான் இன்று பேசும் தமிழ், எழுதும் எழுத்து அத்தனையும் அவர் தந்தது. நான் இவரது மறைவு வரை எங்கு நேரில் சந்தித்தாலும் காலில் விழுந்து வணங்குவதை தவறவிட வில்லை.

எனவே சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் சார்பில் அவர் ஆற்றிய தெய்வீக பணிக்காக உளம் நிறைந்த நன்றியறிதலை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா இறைவனின் பாதங்களைச் சென்றடையப் பிரார்த்தித்து நிறைவு செய் கின்றேன்.

இவ்வண்ணம்
திரு. சு. பிருந்தாவனநாதன்
உறுப்பினர்
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நடமாடும் நூலகம்"

உலகச் சைவத்தமிழ் மக்களின் அடையாளமாகத் திகழ்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறை நிழலில் ஒன்றித்த கலாபூஷணம், சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, இந்துக்கற்கைகள் பீடத்தின் சார்பாக இதயபூர்வமான அஞ்சலி செலுத்துகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட சைவசித்தாந்த முதுகலைமாணி வருகைதரு விரிவுரை யாளராக கடமையாற்றியவர் எமது மதிப்புக்குரிய அமரர் கலாபூஷணம், சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை ஆவார். இவரின் போதனையின் திறமை அவரிடம் பயின்ற மாணவர்களின் சாதனைகள் எடுத்துக்காட்டுகின்றன.

சைவம், பண்பாடு, தத்துவம், வாழ்வியல் மற்றும் விழுமியங்களை இளம் சந்ததியினர் மத்தியில் விதைத்து சிறந்த சமூகத்தை உருவாக்க தனது இறுதிமூச்சு வரையும் பாடுபட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீடம் ஒன்று உருவாக வேண்டும் என்பதிலும், அப்பீடத்தில் சைவசித்தாந்தம் ஒரு துறையாக இடம்பெற வேண்டும் என்பதும் அன்னாரது நீண்டநாள் கனவாகும். அதன் ஒரு அங்கமாக குறித்த பீட உருவாக்கத்திற்காக தயாரித்த முன்வரைபினை (Proposal) இந்தியாவிற்கு அன்னாரே நேரில் சென்று காசி விஸ்வநாதர் பாதத்தில் வைத்து இறையாசி பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்து நாகரிகத்துறையினால் 2017ஆம் ஆண்டு நடாத்தப் பெற்ற இரண்டாவது சர்வதேச சைவ மாநாட்டின் போது ஈழத்தின் சைவசமயப் பணியாற்றி வருபவர்களை பாராட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவம் செய்திருந்தனர். அவ்வாறு கௌரவிக்கப்பட்டவர் களில் கலாபூஷணம், சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களும் ஒருவராவர் என்பதில் பெருமையடை கின்றோம்.

நடமாடும் நூலகமாக போற்றப்பட்ட கலாபூஷணம், சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள்பீடம் தமது ஆழ்ந்த இரங் கலைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா இறைநிழலில் ஒன்றிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கலாநிதி. (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்,**
பீடாதிபதி,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலை
வருத்தப்படாத வாலிபர் சங்கம்
பதிவு இல:JF/VN/VOL/2021/94


த. சுபராம்
தலைவர்

சு. திலக்ஷன்
செயலாளர்

ந. கிரிஷாந்
பொருளாளர்

## "இளவாலையின் ஓர் அடையாளம்..."

பத்தாவத்தை இளவாலையில் பிறந்து பின் இளவாலையின் ஓர் அடையாளமாக வலம் வந்தவர் சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள். இவருடைய காலங்களிலே தன்னுடைய பல்வேறுபட்ட திறமைகளினால் இளவாலையின் பெயரை வெளி உலகு அறியச் செய்தவர். ஆசிரிய ராக, அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியிலே பல நற்பண்புகள் மிக்க மாணவர்களை உருவாக் கியவர். இன்றும் இவருடைய மாணவர்கள் பல துறைகளில் சிறந்தவர்களாக விளங்குகின்றமை இதற்கான சான்றாகும்.

இவருக்கும் எமது சங்கத்திற்குமான தொடர் பானது என்றும் அழியாதது. எமது சங்கத்தின் கீதத்தை எழுதியவர். இவர் மறைந்தாலும் என்றும் இவருடைய எழுத்து கீதமாய் ஒலித்துக்கொண்டே இருக்கும். இது மட்டுமன்றி சைவத்தமிழை இளை யோரிடம் கொண்டு சேர்த்தவராக, இளையோரை நல்வழிப்படுத்துபவராக, எமது சங்கத்தில் அதீத அக்கறையுடையவராக என்றும் எமது சங்கத்தை உயர்த்தி வைப்பவராக சிறந்த ஆலோசகராக இருந்து எம்மை வழிநடத்தியவர்.


Kalaimahal padippakam,
Navolady junction
www.ivvsangam.com
www.fb.com/ivvsangam





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சொற்பொழிவாளராக, நாடகாசிரியராக, கவிஞராக, நூலாசிரியராக, உரையாசிரியராக, எழுத்தாளராக, வானொலி தொலைக்காட்சிக் கலைஞராக, கல்வி வளவாளராக, பல திறமைகளை கொண்ட இவர் கலைஞானகேசரி, கலாபூஷணம், சித்தாந்தச்செல்வன், சிவநெறிப்புலவர், கலைச்சுடர் முதலான கௌரவப் பட்டங்களைப் பெற்று இளவாலையின் ஓர் அடையாள மாக இருந்தார். இவரை இன்று இறைவன் தன்னுடன் அழைத்துக் கொண்டான். இவருடைய இழப்பானது என்றும் எமக்கும் எமது இளவாலை கிராமத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறிக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்
பதிவு இல : JF/VN/VOL/2021/94





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## எமதுகுலமுதல்வர்
## யாழ் இளவாலை, கலாபூஷணம், சைவப்புலவர்
## சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களின்
## சிவப்பேறு குறித்தான
## வணக்கப் பா!

### காப்புவெண்பா

அணியுஞ் சிவமுமாகி அலர்முகிழ் செல்லத்துரை
தணியும் இகவாழ்வுதான் வணங்கி மணிவாசக
சொல்லெடுத்து ஏழ்சீராய் சாற்றுகவி எழுந்துவர
வல்லவனே கணபதி வந்து முன்னிற்க!

### இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!

நஞ்சுண்ட கண்டனவன் நச்சுநாக் கினியனவன்
நித்தில மொன்றைப் படைத்தான்
விஞ்சிடும் தமிழாகி வியந்திடும் சிவமாகி
வந்தெழில் ஒளியாகும் அமுதே
வெஞ்சினம் அறிந்திடா அஞ்சுக மொழியாளன்
வேதனே வடிவாகி வந்தனன்
நெஞ்சிலே நீங்காத அஞ்செழுத்துப் பொருளே
நமச்சிவாயன் தாள் வாழ்க!

பிறைசூடும் பெருமானின் பிரியாத உணர்வாகி
பிறர்வாழக் கலை தந்தகுருவே
மறையோதும் பொருளாகி மாண்புகள் பலவாகி
மங்கலமே வாழ்வான மலர்வே
நிறைவாகும் பேரின்ப நிம்மதியில் நிலைகொண்டு
நிறைவான சிவகாம சுந்தரனே
இறையாகும் பெருமானே இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காத நின்தாள் வாழ்க!

திருவாவடு துறை திருவாலங் காட்டானின்
திருக் கைலாய திருவருளன்
மருவாத நெறிநின்று மெய்கண்டர் பரம்பரையின்
முறையான சிவநெறி முதல்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவான சித்தாந்தக் கதிராகி முதிர்வாகி
கனிவாகி இனிதான திருவே
குருவாகி நிறைவாகி கோகழி ஆண்டுகொண்ட
குருமணிதன் தாள் வாழ்க!

வரமாகித் திருமூலன் வார்த்தெடுத்த மந்திரமும்
விருப்போடு நாமொழிந்த சிந்தனையும்
பரனேதான் அன்பென்று பல்லோரின் உணர்வாகி
பாராய்ந்த வாழ்விலே பதியாகி
நரனான போதுஞ் சிவகரனாக கண்மொய்த்து
நின்தாள் மனமோடி ஏகுதையா
அரனோடு அணியேகி ஆகமம் ஆகிநின்று
அண்ணிப்பான் தாள் வாழ்க!

தாயான தந்தையாகி தாரத்தின் இறையாகி
தாய்வழி மாமனான தேவே
ஓயாத குருமாண்பே ஒப்பாரில்லா குலமுதல்வே
ஓதிமத்தின் அணியுடை நோன்பே
தேயாத சிவநாதன் தேன்நிறைக்கும் தீந்தமிழன்
தாராள மனமுள்ள தயவாளன்
நேயத்தின் மொழியாளன் நியாயத்தின் நிழலாளன்
ஏகனனேகன் இறைவனடி வாழ்க!


பகலிடம் சேர்பரிதி பனியுறை மேய்வதுபோல்
பசுவினிற் பாசமது அகல
அகலிடம் அறியாத அறிவொளிச் சூழ்பரப்பி
இறையியல் நிறைவான திறையே
புகலிடம் சிவமேதான் புரிதலும் அதுவேதான்
போதனையும் சிவமான குருவே
அகலிடம் நிலையாத அறிவிலார் தன்வேகம்
கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மருமகன் : சு.சிவசங்கரன்**
**திருக்கோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"காசிக்கு சென்று கடமைகள் செய்து
ஆசிபெற்று வந்தீர்கள் அகவை எண்பதிலே
காசிக்குச் சென்றால் முத்தி என்பார்கள்
வீடுபேறு பெறுவதற்காய் சக்தி பெற்று வந்தீர்களோ
சக்தி கிடைத்ததனால் தெய்வமாய் ஆனீர்களோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி நிகழ்வுகள் - 22-10-2021
## இளவாலை இல்லத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி நிகழ்வுகள் - 22-10-2021
## இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி நிகழ்வுகள் - 22-10-2021
ஏழாலை இல்லத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி நிகழ்வுகள் - 22-10-2021
## ஏழாலை இல்லத்தில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி நிகழ்வுகள் - 22-10-2021
## ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில்





## கீரிமலை தீர்த்தக்கரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் தந்தை சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் சிவனடி சேர்ந்த போது.

- ஓடோடி வந்து உயிர் காக்க முயன்ற வைத்தியர்கள், தாதியர்கள், வாகன ஓட்டுனர்கள் மற்றும் ஏனை யோர்க்கும் -
- ஆன்ம விடுதலைக்காக திருமுறைகள் ஓதித் துதித் தோர்க்கும் -
- நேரில் வந்து கூட இருந்து ஆறுதல் தந்தோர்க்கும் -
- சமூக ஊடகங்கள், குறுந்தகவல், தொலைபேசி, தந்தி, கடிதம், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், மலர் மாலைகள், அஞ்சலிப் பதாதைகள் மூலம் அனுதாபம் தெரிவித்து மதித்தோர்க்கும் -
- இரங்கல் உரை நிகழ்த்தியோர்க்கும் -
- உணவு, தேனீர் தந்து உபசரித்தோர்க்கும் -
- அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த குருமார்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர் களுக்கும், பல்வகை மன்றங்கள், பாடசாலைகளின் பிரமுகர்களுக்கும் -
- "மூலவிருட்சம்" நூலுக்கு நினைவுப் பதிவுகளைத் தந்தவர்க்கும், அதை அழகுறப் பதிப்பித்த அம்மா அச்சகத்தினர்க்கும் -
- பல்வேறு வகையில் உதவிய அனைவர்க்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**மைந்தர்கள்**
**செல்லத்துரை நாவரசன்**
**செல்லத்துரை மாவிரதன்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதா குலம் காப்போம்

ஆக்களினுறுப்பெலாம் அமரர் வைகுவார்
ஆக்களே இம்மையில் அமுததேனுவாம்
ஆக்களே இறைவனுக்குஐந்துநல்குமற்(று)
ஆக்களேபூதியும் அளிக்கும் அன்பினால்



கோமாதாவில் சகல தெய்வங்களும் கொலுவிருக்கிறார்கள்.
ஆதலால் கோமாதவைப் பராமரித்து வணங்கினால்.
எல்லாத் தெய்வங்களின் அருளும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org